தமிழர்தம் மறு பக்கம்

க.ப.
அறவாணன்

, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय, हरिद्वार

वर्ग संख्या.........   आगत संख्या...............

पुस्तक—वितरण की तिथि नीचे अंकित है। इस तिथि सहित २० वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए। अन्यथा १० पैसे के हिसाब से विलम्ब-दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
D-7324

The Other Side of the Tamils

FORWARDED FREE OF COST, AND WITH THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF EDUCATION, GOVERNMENT OF INDIA. NEW DELHI"

DONATION
पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

K. P. ARAVAANAN
Professor & Head
Dept. of Tamil Studies
Pondicherry University
R. Venkataraman Nagar
PONDICHERRY
605 104

Selling Right :
PAARI NILAYAM
184, PRAGASAM SALAI
MADRAS-600 108
INDIA

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரிமை : ஆசிரியருக்கே

முதற் பதிப்பு : அக்டோபர் 1989

விலை ரூ. 35

Printed at : SRI YESES PRINT HOUSE, Madras-14, Phone. 83 32 31

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7324

தமிழர்தம்
மறுபக்கம்

DONATION
7324
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

க. ப. அறவாணன்
தமிழியல் துறைத் தலைவர்
புதுவைப் பல்கலைக் கழகம்
ஆர். வேங்கடராமன் நகர்
புதுச்சேரி 605 104

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர்தம் பிற நூல்கள்

The Serpent Cult
Research Papers on Tamilology
Dravidian and Africans
Anthropological Studies on the Dravido - African.

தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்
அற்றைநாட் காதலும் வீரமும்
கவிதையின் உயிர் உள்ளம் உடல்
எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்
பாம்பு வழிபாடு
மர வழிபாடு
,தொல்காப்பியக் களஞ்சியம்
தமிழரின் தாயகம்
சைனரின் தமிழிலக்கண நன்கொடை
பாதையாகும் பாறைகள்
கல்வித்துறை உருப்பட
முதலாய 32 நூல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயிலும் பருவத்து நெருங்கிப் பழகிய
என் கெழுதகை நண்பர்கள்

கோ. கலிவரதன் (கங்கை கொண்ட சோழபுரம்)
பல்லடம் மாணிக்கம் (விருத்தாசலம்)
இரா. இளவரசு (இலால்குடி)

ஆகியோர்க்குப்
படையல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளே...

1 என் பக்கம் VII

2 பெருமை எனும் மயக்கம் 17

3 சொந்த நலனையே நாடும் 'சுக' நலம் 28

4 ஒற்றுமை கூடாது எனும் கோட்பாடு 45

5 சாதி எனும் சோதி 52

6 ஏசலிலும் கொச்சை 71

7 கற்கையினும் பிச்சை நன்றே 79

8 விளம்பரம் எனும் வாணவேடிக்கை 94

9 சுவரொட்டிப் 'பண்'பாடு 107

10 இராசிபலன் எனும் ஊசிபலன் 124

11 தற்கொலைக் கலாச்சாரம் 152

12 தலைமை வழிபாடு 171

13 வழிபாட்டில் தடுமாற்றங்கள் 192

14 இவர்தம் தமிழ்க் கல்வி 199

15 பொருளடைவு 204

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1

என் பக்கம்

'தமிழர்தம் மறுபக்கம்' என்ற இந்நூலில் தமிழ் இனத்தைப் பற்றி உலகியல் கண்ணோட்டத்தோடு சில செய்திகள் சமூகவியல் பார்வையில் அலசி ஆராயப் பெறுகின்றன. புரையோடிப் போன புண்ணை வெட்டிச் சீழை அகற்றி மாந்தனைத் தேற்றும் மருத்துவனைப் போலத் தமிழ் இனத்தின் புரையோடிப் போன சிலவற்றை விண்டுரைப்பதே இந்நூலின் நோக்கம். மருத்துவனுக்கு நோயாளியின் நலத்தின் மேலும், உயிரின் மேலும் அக்கறை இருத்தல் போல, தமிழர் நலத்தின் மேலும், தமிழ் இனத்தின் நிலைப்பின் மேலும் எனக்குப் பேரக்கறை இருப்பதாலேயே இந்த முயற்சியை நான் மேற்கொண்டுள்ளேன். இந்த வரிசையில் 1987இல் 'தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்' என்ற என் நூல் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து அதே போக்கிலும், நோக்கிலும் இந்நூல் உருவாக்கப் பெற்றுள்ளது.

இந்நூலில் உள்ள கருத்துகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் உருவானவை. பல்வேறு களப் பணிகள், நூற் பயிற்சிகள், உரியவற்றைக் கண்டறிவதற்காக மேற்கொண்ட சிந்தனை முயற்சிகள் ஆகியனவே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

தமிழர்தம் பெருமைகள் ஒப்புக் கொள்ளத் தக்க வரலாற்று உண்மைகள். அவை மறுக்கத் தக்கன அல்ல. ஆனால் அப்பெருமைகள் கடந்த இருபது நூற்றாண்டுகளில் பல்வேறு காரணங்களால் தேய்ந்து கொண்டு வந்திருக்கின்றன. இத்தேய்வைக் காண மறுப்பதும், கண்டு திருந்த மறுப்பதும் போட்டி உலகில் நல்லன அல்ல. அவை நம்மை வீழ்ச்சிப் பாதையில் விரைவில் கொண்டு சேர்க்கும்; தீர்க்கும்.

மலைப் பாம்பு பெரியது; நீண்டது; வலிமையானது; யானையையே தன்னுடைய நீண்ட உடலால் பின்னி எலும்புகளை நொறுக்கிக் கொல்லும் ஆற்றல் வாய்ந்தது. ஆனால் தன்னைச் சூழ்ந்து மூட்டப் பெற்றிருக்கும் நெருப்பையும் தீயை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும் அறியாமல் மலைப்பாம்பு வாளா இருந்துவிடுமேயானால், காலப் போக்கில் அருமையும், வலிமையும் வாய்ந்த அம் மலைப் பாம்பு தீயால் வாடிச் சுருண்டு செத்துப் போகும் (நீதிநெறி விளக்கம் 34). தமிழர்தம் பெருமைகள் அவ்வாறு ஆகிவிடக் கூடாதே என்ற ஆர்வத்தாலும் ஆதங்கத்தாலும் இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் எழுதப்பெற்றுள்ளது. நான் தமிழன். தமிழையும், தமிழனையும் நேசிப்பதில் முதலாவதாக இருந்தவன்; இருப்பவன். அதே சமயத்தில் உலக மனித நேயத்தையும், ஒருமைப்பாட்டையும் நாம் எய்தல் வேண்டும் என்பதனை இறுதி இலக்காகக் கொண்டிருப்பவன். எனவே, தமிழரைத் தட்டி எழுப்பி விழிப்புறச் செய்து ஞானக் குளிப்பாட்டி உழைக்கும் மக்கள் கூட்டமாக மாற்றி, உலக மனித இனத்தோடு இணையாகக் கொண்டு செல்லவேண்டும் என்ற வேட்கை என் நெஞ்சில் துறுதுறுக்கின்றது. இஃது ஓர் தூசு தட்டும் முயற்சி. மாசு கூட்டும் முயற்சி அன்று; காட்டும் முயற்சியும் அன்று.

1. தலையாய பகை: பின்பற்றாமை

தமிழரை இருபது நூற்றாண்டுகளாக வீழ்த்திக் கொண்டிருக்கும் பெரும் எதிரி அவர்களிடையே உள்ள பின்பற்றாமை தான். எப்படி மக்களினம் உறுதி பெற வேண்டும்; உயர்வுற வேண்டும் என்பன பற்றியெல்லாம் தமிழ் முன்னோர் காலந்தோறும் நன்கு சிந்தித்துள்ளனர்; எழுதி வைத்துள்ளனர். ஆனால், அவர்தம் கருத்துகள் காலந்தோறும் மக்களால் புறக்கணிக்கப் பெற்றும், மறக்கடிக்கப் பெற்றும் வந்துள்ளன. பேசுவது காதலாக இருக்கும்; பேணுவதோ காமமாக இருக்கும். ஆற்றல் வாய்ந்த துப்பாக்கி இருந்தாலும் அதனைச் சுடத் தெரியாதவனிடம் அஃது இருந்து பயன் என்ன? எதுவும் இல்லை. அதனைப் போலவே தமிழ் முன்னோர் கண்டு காட்டிய கருத்துகள் எல்லாம் பின்பற்றத் தெரியாத, செயலாற்ற விரும்பாத, செயலாற்ற முடியாத மக்களிடம் இருந்து பயனற்றுப் போய்க் கொண்டிருக்கின்றன; பயனற்றுப் போயின. எனவே, தமிழரிடம் உள்ள தலையாய பகை, நன்னெறிகளை அலசிப் பார்த்துப் பின்பற்றாமைதான்.

2. இரசிக மனோநிலை

இன்னொரு பக்கம், நன்னெறிகளையும், சிந்தனைகளையும் அவர்கள் அறியாது இருக்கிறார்கள் என்பது அன்று கருத்து. அவர்கள் அறிந்தே இருக்கிறார்கள். ஆனால் அவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாம் இலக்கியப் பொருளாகவும், மேடைப் பொருளாகவும், பேச்சுப் பொருளாகவும் காட்சிப் பொருளாகவும் இரசனைப் பொருளாகவும் இருந்து வந்துள்ளன. திருக்குறளை அவர்கள் இலக்கியமாகப் பயின்றனர். ஆனால், இலட்சியமாகப் பயிற்சி செய்யவில்லை. அவ்வப்போது தோன்றிய அறிஞர் முயற்சிகள் அனைத்தும் தமிழர்களைப் பொறுத்த அளவிற்குக் காட்சிப் பொருளாகவே, பொருட்காட்சிப் பொருளாகவே இருந்து வந்துள்ளன; இருந்து வருகின்றன. தமிழர் முதல்நிலை இரசிகர்களாகவே இருந்துள்ளனர்; இருந்து வருகின்றனர்.

3. மக்களைச் சென்று சேராமை

பிறிதொரு பக்கம், மேலோர் சிந்தனைகள் நாற்புறமும் பொது மக்களிடம் ஏற்புறப் பரவுவது இல்லை; பரப்பப் படுவதும் இல்லை. தமிழர்கள் திட்டுத் திட்டுகளாக வாழ்ந்துள்ளனர். தெருத் திட்டுகளாகவும், ஊர்த் திட்டுகளாகவும், சாதித் திட்டுகளாகவும், மதத்திட்டுகளாகவும் அவர்கள் தமக்கிடையே சுவர்களைக் குறுக்கே எழுப்பிக் கொண்டு வாழ்ந்து வந்தனர். மொழி என்ற பொதுச் சங்கிலியின் கீழ் அவர்கள் ஒன்றுபடாது ஒழிந்தனர். ஒன்றுபடுங் காலமே பெரியது என ஒன்றுபட்ட போது அவர்கள் வென்றுள்ளனர்; அவர்களால் வெல்ல முடியும். சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவனின் வெற்றி இதனையே காட்டுகிறது. பிற்காலச் சோழன் இராஜராஜசோழனின் வெற்றியும் இதனையே காட்டுகிறது.

4. மன்னர் - மக்கள் இடைவெளி

சமுதாய நலனுக்காக எண்ணப்பெறும், எழுதப்பெறும் கருத்துகள் பொதுமக்களிடத்திலே சென்று சேருவதே இல்லை, சென்று சேர்ந்திருந்தாலும் அவர்கள் வாழ்க்கையோடு ஒன்றுவதே இல்லை. அரசு, ஆளவந்தார்கள், அறிஞர்கள் ஆகியோர்க்கும் சிற்றூர், பேரூர், நகர்ப்புற மக்களுக்கும் இணைப்பும், பிணைப்பும் மிகக் குறைவாகவே இருந்துள்ளன. எனவே, கருத்துகள் பரவ முடியாமல் அங்கங்கே தேங்கிவிட்டன. ஏற்றப் பெற்ற விளக்குகள் எரியலாம்; அடைக்கப்பட்ட இடைக் கதவுகள் திறக்கப் பெற்றால்தானே ஒளி பரவும்; இருள் விலகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. கருத்துப் புரட்சியின் அருமைப்பாடு

பழங் காலத்தில் இருந்த தொடர்புச் சாதனங்கள், கோயிற் சுவர்கள் முதலானவை அரசுக் கட்டுப்பாட்டில் இருந்தமையால், அவை பொதுமக்களுக்காகக் கருத்தைப் பரப்புவதைவிட, அரசின் பெருமையையும், ஆளவந்தார் களின் பெருமையையும் எடுத்துச் சொல்லவே பயன்படுத்தப் பெற்றன. இன்றும்கூட வலிமை வாய்ந்த தொடர்புச் சாதனங்கள் அரசின் கைகளிலும் ஆளவந்தார்களின் கை களிலும், பெரும் செல்வந்தர்களின் கைகளிலும் இருந்து வருகின்றன. எனவே, கருத்துப் புரட்சி தமிழரிடையே நிகழுவது கடினமான அருமையான செயலாகவே இருந்து வருகிறது.

6. மதவழி இடைவெளி

சிந்தனைகள், கருத்துகள், வழிமுறைகள் அனைத்தும் தமிழரைப் பொறுத்த அளவிற்கு மதங்களின் வழியாகவே பரவின; பரப்பப் பெற்றன. இதனால் மதங்கள் செயல் அடிப்படையான கோட்பாட்டிற்கு முதன்மை கொடுப்பது இல்லை. சடங்கு, சம்பிரதாயங்களுக்கே முதன்மை கொடுத்தன; கொடுக்கின்றன. ஒருவன் மத நெறிகள் அகத்தில் பின்பற்றுகிறானா என்பதைவிட, மத அடையாளங் களோடு புறத்தில் தோன்றுகிறானா என்பதே பார்க்கப் பெற்றது. அன்பே சிவம் என்பது போதிப்பு; அன்பு காட்டாமல் பசுவைக் கொன்று, உரித்துத் தின்று உழலும் ஒருவன் குறிப்பிட்ட மதச் சின்னம் உடையவனாக இருந்தால் போதும் என்று எதிர்பார்க்கப் பெற்றது.

> ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவாழ்
> சடைக் கரந்தார்க்கு
> அன்பராகில் அவரன்றே யாம் வணங்கும்... (தேவாரம்)

இங்கே அடையாளம் வற்புறுத்தப்படும் அளவிற்கு மத அடிப்படை வற்புறுத்தப் பெறவில்லை. ஒரு கோட்பாட்டைப் பின்பற்றும் ஒருவன் அந்தக் கோட்பாட்டிற்குரிய செயல் களைச் செய்யவேண்டும் என்பது கட்டாயம் இல்லை. சில அடையாளங்களை அணிந்தாற் போதும் எனக் கருதப் பெற்றது. பெறவே, சொல்லுக்கும் செயலுக்கும் பெரிய இடைவெளி தோன்றி நிலை பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. சித்தாந்தம் பரப்பப் பெறாமை

இந்தியாவில் ஏனைய பகுதிகளில் அமைந்தமை போல, இன்னபிற நாடுகளில் அமைந்தமை போல, மனித நெறிகள் அறிஞர்களால் கண்டுபிடிக்கப் பெற்று உலகத்திற்கு அறிவிக்கப் படுகிறபோது அவை அரசர்களால் போற்றி வளர்க்கப் பெற்றன. சான்றாக, புத்தருடைய பகுத்தறிவுச் சித்தாந்தத்தை அசோகப் பேரரசனும், இன்னபிற அரசர் களும் நாடெங்கும், உலகு எங்கும் எடுத்துச் சென்றனர். பாலத்தினத்தை வெற்றி கொண்ட ரோமானியர்கள் அங்கே கருக் கொண்டிருந்த கிருத்துவக் கோட்பாட்டால் ஈர்க்கப் பெற்றுத் தம் மதம் விட்டு அம்மதம் தழுவினர். தழுவிய ரோமானிய அரசர்கள், தாங்கள் வெற்றிகொண்ட இடங்களில் எல்லாம் அன்பு மயமான கிருத்துவத்தைப் பரப்பினர். சீன அரசர்கள் தம் கருத்தைப் புறக்கணித்த போது கன்பியூசியஸ் சீற்றம் கொண்டு வெளியேறியதைச் சீன நாட்டு வரலாறு எடுத்துரைக்கிறது. அதனைப் போலவே, சிறந்த சிந்தனை யாளனும், எழுத்தாளனுமாகிய பிரான்சு நாட்டு அறிஞர் வால்டேர் செருமனியை ஆண்ட அரசன் பிரடெரிக்கால் அழைக்கப் பெற்று அறிவுரைகள் வழங்க வேண்டப் பெற்றார். கருத்து முரண் வந்தபோது வால்டேர், செருமனி நாட்டை விட்டு வெளியேறினார். ஜெர்மானியச் சிந்தனையாளர் காரல் மார்க்சு கண்டறிந்த பொதுவுடைமைச் சித்தாந்தத்தை உருசிய நாட்டு லெனின் கடைப்பிடித்துத் தம் நாட்டிலும், உலகெங்கிலும் பரப்பினார்; சீனநாட்டு மாசேதுங், மார்க்சியச் சித்தாந்தத்தைத் தம் மண்ணிற்கு ஏற்பத் தழுவிக் கொண்டார். அக்பருடைய வரலாற்றில் கூடப் பேரறிஞர் பீர்பால் ஆற்றிய பங்கு தலைமையானது. இந்து இசுலாம் மதங்களிடையே ஒருங்கிணைப்பை உண்டாக்கி உயர்த்த முடியும் என்பதைப் பீர்பால் வடபுலத்தில் அக்பர் உறுதுணை யுடன் நிறுவிக் காட்டினார். தமிழ் நாட்டில் கூடப் பழங் காலப் புலவர்கள் கவிதை பாடுநராக மட்டும் விளங்கவில்லை. அதனினும் மேலாக அறிவுரை வழங்கும் பெரியோராகவும் (Intellectuals) அன்னோர் விளங்கியுள்ளனர். சான்றாக அதியமானுக்கு ஔவை அறிஞராக அமைந்திருந்தமையும், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதன் அறிஞராக அமைந்திருந்தமையும், பாரி வள்ளலுக்குக் கபிலர் அறிஞராக அமைந்திருந்தமையும் நினைவுகூரத் தக்கன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே, பெரியோர்தம் அறிவுரைகள் செவி வாயாக, சிந்தை களனாக அரசர்கள் தம்மகத்து வாங்கி மண்ணுக்கும் மக்களுக்கும் வழங்கியதை மேற்கண்டவை காட்டுகின்றன.

திருவள்ளுவ மேதை அரசியல் சார்புள்ள அமைச்சருக்கு இடம் கொடுத்தமையுடன் (அதிகாரம் அமைச்சு: 64) நிற்க வில்லை, அரசியலில் பெரியாரைத் துணைக்கோடல் (45) என்ற அதிகாரத்தையும், பெரியாரைப் பிழையாமை (60) என்ற அதிகாரத்தையும் அவர் அமைத்துள்ளமை ஆழ்ந்த சிந்தனைக்குரியது. அரசியல் நிருவாகத்திற்கு அமைச்சர்களை ஏற்றதற்கு அப்பால் அறிவுரைகளை வழங்கவும், பிழை இழைக்கும் போது இடித்துக் காட்டவும் பெரியாரை (Intellectuals) அரசர் துணையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. எனவேதான், பெரியாரைப் போற்றித் தமக்குச் சுற்றத்தார் ஆக்கிக் கொள்ளுதல் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் பெரியதும் அரியதும் ஆகும் (443) என்றும், தம்மைவிட அறிவு முதிர்ந்தவற்றில் பெரியார் தமக்குச் சுற்றத்தார் ஆகுமாறு நடத்தல், வலிமைகள் அனைத்திலும் மிகத் தலையாயது என்றும், அறிஞர்களின் உறவை அறுத்துக் கொள்ளுதல், பகைவரின் பகைத் தீமையை விடப் பத்து மடங்கு தீமையுடையது ஆகும் (450) என்றும் அவர் கூறுவன கருதத்தக்கன.

8. அறிஞரும் அரசரும்

சில சமயங்களில் அரசனுக்கும் அறிஞர்களுக்கும் இடையே பூசல் மூண்டதையும் அஃது ஊடலாகவும் புலத்தலாகவும் வளர்ந்து துனியாக இரண்டுபட்டுப் போனதையும் தமிழர்தம் வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தப் பூசல் நீங்கி அறிஞர்களை அரசர்கள் அரவணைத்துப் போனதையும் சங்க காலச் செய்திகள் சில காட்டுகின்றன. சான்றாக, அரசனை 'அவன்' எனப் படர்க்கை ஒருமையால் சுட்டினர். 'அவர்' (புலவர்) அவனைப் (அரசனைப்) பாடியது என்பது புறநானூற்றுக் குறிப்பு. அறிஞர்கள் அரசர்களை நெறிப் படுத்தும், சரிப்படுத்தும் எசமானர்களாக இருந்தமையைக் கோவூர் கிழார், ஔவையார் முதலானோர் வரலாறுகள் நினைவுறுத்துகின்றன.

புவிச் சக்கரவர்த்திக்கு இணையாகக் கவிச்சக்கரவர்த்திகள் என்ற பெயர் கொண்டு அறிஞர்கள் வாழ்ந்தனர். கம்பர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் ஆகிய கவிஞர்கள் கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டத்துடனேயே போற்றப் பெற்றனர். குலோத்துங்கச் சோழப் பெருமன்னனிடம் நேருக்கு நேராக 'நீ புவிச் சக்கரவர்த்தி என்றால் நான் கவிச் சக்கரவர்த்தி, என்று செயங்கொண்டார் கூறியதாக வரலாறு ஒன்று வழங்கு கிறது. சோழப் பெருமன்னன், ஒட்டக்கூத்தர் திருவடியைத் தன் தோள்களில் சூடியுள்ளதாகச் சோழ மன்னனே பாடிய பாட்டு ஒன்று குறிப்பிடுகிறது. சோழன் உலா வரும்போது அவனைப் புகழ்ந்து முதல் இரண்டு அடிகளைப் பாடுகிறார். மன்னவன் புலவரைத் தொடர்ந்து இரண்டு அடிகளைப் பாடுகிறான்.

'ஆடும் கடைமணி நாஅசையாமல் அகிலம் எங்கும்
நீடும் குடையைத் தரித்த பிரான்—இந்த நீள்நிலத்தில்
பாடும் புலவர் புகழ் ஒட்டக்கூத்தன் பதாம் புயத்தைச்
சூடும் குலோத்துங்கச் சோழன் என்றே என்னைச்
சொல்லுவரே)
(தனிப்பாடல் திரட்டு)

மேற்கண்ட பாடலில் உள்ள பின் இரண்டு அடிகள் 'இந்த நீள் நிலத்தில்...சொல்லுவரே' என்பன சோழ மன்னனாலேயே பாடப் பெற்றன.

அறிஞர்களாகத் தொண்டாற்றிய புலவர்க்கு அவைக் களத்தில் தனி இடமே சோழர் காலத்தில் வழங்கப் பெற்று இருந்தது. ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று பெருமன்னர்களின் காலத்தும் தலைமைப் புலவராக அரசனின் அவைக்களத்தில் தொண்டாற்றியுள்ளார்.

அரசன் இடத்தும், அரச நிகழ்ச்சிகளிலும் அறிஞர்கள் பெரும் பங்கு பெற்றிருந்தனர். சோழன் மகள் அமராவதியைக் கம்பர் மகன் அம்பிகாபதி காதலித்த நிகழ்ச்சி புலவர் குடும்பத்திற்கும், புரவலர் குடும்பத்திற்கும் இடையே இருந்த நெருக்கத்தைக் காட்டுவதாகும். அமராவதியைச் சோழப் பெருமன்னன் கொன்ற போது கம்பன் பாடியதாக அமைந்துள்ள பாட்டு அக்காலத்துப் புலவருக்கு இருந்த செம்மாப்பை எடுத்துரைக்க வல்லது.

'மன்னனும் நீயோ வளநாடும் உன்னதோ!
உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்? என்னை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரைந்து ஏற்றுக்கொள்ளாத வேந்து உண்டோ? சோழா!
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு

(தனிப்பாடல் திரட்டு)

9. அறிஞர்தம் முதன்மை வீழ்ச்சி

சோழ மன்னரின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ் அறிஞர்களின் தலைமையும், முதன்மையும் குன்றிப்போய்க் கால அடைவில் அற்றுப் போயின. ஆந்திரத் தெலுங்கரும், வடபுலத்துத் துலுக்கரும், மராட்டியரும் தமிழ்நாட்டை மாறி மாறிப் பந்தாடியபோது நாட்டுடன் சேர்ந்து கற்றவர்கள் பந்தாடப் பட்டதோடு நற்பண்புகளும் பந்தாடப் பெற்றன. அறிஞர்கள் சோற்றுக்காக அலையாய் அலைந்தார்கள். கற்றதை எண்ணிக் கலங்கினார்கள். கழைக் கூத்தாடத் தெரிந் திருந்தாலாவது பிழைத்திருக்கலாமே, வேசையாகப் பிறந்து இருந்தாலாவது வாழ்ந்து இருக்கலாமே, பெண்களுக்காகத் தூதுபோய்ப் பழகினாலாவது துன்பம் இருந்திருக்காதே, சனியான தமிழைக் கற்று அல்லல் படுகிறோமே என்று வருந்தினர். கி.பி. 1686—1723இல் வாழ்ந்த படிக்காசுத் தம்பிரான் இக்காட்சியைத் தெளிவுறப் படம் பிடித்துக் காட்டுகிறார். *1

அடகெடுவாய்! பல தொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்
திடமுளவோ கனமாடக் கழைக் கூத்தாடச்
செப்பிட வித்தைகள் ஆடத் தெரிந்தோம் இல்லை;
தடமுலை வேசையராகப் பிறந்தோம் இல்லை;
சனியான தமிழை விட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூது சென்று பிழைத்தோம் இல்லை;
என்ன சென்மம் எடுத்து உலகில் இரக்கின்றோமே!

(தனிப்பாடல்)

அறிஞர்களின் சிந்தனை, அதனை ஒட்டிய அரசியலார் ஆட்சி, அதனை ஒட்டிய கருத்துப் பரவல் சிறப்புற நிகழ்தல் வேண்டும். இதுபோன்ற நிகழ்வு திருவள்ளுவர் காலம் தொடங்கித் தமிழகத்தில் நிகழவில்லை. அரசியல், சமுதாயம் ஆகிய இரண்டையும் பற்றி உரக்கச் சிந்தித்து

*1 க. ப. அறவாணன், கவிதையின் உயிர் உள்ளம் உடல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயர்ந்த வழிகளைத் திருவள்ளுவர் அமைத்துக் கொடுத்தார். ஆனால் திருவள்ளுவச் சிந்தனைகள் அரசியலாரால் ஏற்கப் பெற்றதற்குச் சான்று எதுவும் தமிழ்நாட்டு வரலாற்றில் கிடைக்கப் பெறவில்லை. மாறாக, சாதியை அடிப்படையாகக் கொண்டு வட இந்தியப் புலத்தில் வகுக்கப்பட்ட மனுஸ்மிருதியைத் தமிழர்களும் தமிழ் அரசர்களும் ஏற்றுக் கொண்டு போற்றினர் என்பதைப் பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலான நூல்களும் கல்வெட்டுகளும் தெளிவுபடுத்துகின்றன. எனவே, பின்பற்றப் பெற வேண்டிய சிந்தனைகள் பிறந்தும், அவை பிறந்த இடத்திலேயே பலராலும் பரப்பப் படாமல் இருந்தமையும், மக்களுக்குப் புறம்பான சிந்தனைகள் தமிழர்க்குப் புறம்பான இடத்தில் பிறந்தபோதிலும் தமிழ் அரசர்களால் பின்பற்றப்பட்டுப் போற்றப் பட்டதையும் அறிகிறோம்.

காலப்போக்கில் அறிஞர்கள், அரசனிடம் அஞ்சாதிருந்த நிலை மாறி, அஞ்சும் நிலையாக, அண்டும் நிலையாக வளர்ந்து விட்டதை நிகழ்ச்சிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. பிரபந்தங்கள் அனைத்தும் அரசனையும், ஆண்டவனையும் துதி பாடுவதாக மாறிவிட்டன. பரவிப் பாட மறுக்கும் புலவர்கள் வெற்றி பெறவில்லை. நந்திவர்ம பல்லவன் வரலாற்றில் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு) காணப்படும் குறிப்பைத் தவிர ஏனைய குறிப்புகள் எல்லாம் அறிஞர்கள் மன்னவனை அண்டிப் பிழைப்பவர்களாக ஆகிவிட்டதைத் தெளிவுறுத்துகின்றன.

10. பண்பாட்டுத் திட்டுகள்

மொழி அடிப்படையிலான அல்லது இனஅடிப்படையிலான அல்லது மனித குல அடிப்படையிலான பார்வை இல்லாமல் 'குடி' அடிப்படையில் மக்கள் மனம் சுருங்கி விட்டதைச் சங்க இலக்கியமே காட்டுகிறது. சேரர் குடி, சோழர்குடி, பாண்டியர் குடி, வேளிர் குடி எனத் தமிழரசரிடையே பிரிவுகள் இருந்தன. காலப்போக்கில், குடி மேலும் குறுகிச் சாதி என்ற குறுகிய வட்டத்துள் சுருங்கி இறுகி முன்பே மக்களிடம் இருந்த பிளவும் பிரிவும் உரம் பெற்றன. மக்கள், குடித் திட்டுகளாகவோ, சாதித் திட்டுகளாகவோ, பிளவுண்டு போயினர். இவர்களிடையே சாதிச் சடங்கு சம்பிரதாயப் பின்பற்றுதல் இடம் பெற்றது போல—கோட்பாட்டைப் பின் பற்றுதல் இடம் பெறவில்லை. எனவே, ஓர் இனத்திற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குள்ளாகவே ஒரு மொழிக்குள்ளாகவே பல்வேறு 'பண்பாட்டுத் திட்டுகள் (Cultural Islands) உருவாகி நிலை பெற்று விட்டன.

11. கல்வியின்மை

பூங்குன்றன், திருவள்ளுவன், இளங்கோ, திருமூலர், சித்தர்கள் முதலானோர் மிக உயரிய அளவில் சிந்தித்தனர்; கருத்துகளை வெளியிட்டனர்; எழுதினர். ஆனால் அவர்தம் எழுத்து எண்ணங்கள் மக்களிடத்துப் பரவவே இல்லை. மன்னவர்கள் பின்பற்றாமையும், பரப்பாமையும் காரணம். எல்லாவற்றிற்கும் மேலாக எழுத்து வழிப் புலப்படுத்தப் பட்ட சிந்தனைகளை எல்லாரும் வாங்கிக் கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும், வாய்ப்பான கல்வியறிவைப் பொதுமக்கள் பெற்றிருக்கவில்லை. தமிழ்நாட்டு வரலாற்றில் தமிழ் மொழிக் கல்வியைப் பயிற்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டனர் என்பதற்குச் சான்றே இல்லை. தமிழ்ப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு நடத்தப் பெற்றதற்கான கல்வெட்டுச் சான்றுகளும் இல்லை. கருத்தைப் பரப்புவதற்கான மிகப் பெரிய சாதனம் கல்விக் கூடம். கல்விக் கூடம் இல்லாத நிலையில், கல்லாமை பெருகிய நிலையில் அறிஞர்களின் சிந்தனைகள் பின்பற்றப்படாமல், அறியப் படாமலேயே குறிப்பிட்ட சில இடங்களிலேயே அடங்கி விட்டன; முடங்கிவிட்டன.

12. தமிழர் மதங்கள் நிறுவனமாக இல்லாமை

தமிழ்நாட்டில் பரவிய புத்தம், சைனம் ஆகிய மதங்களைத் தவிர அக்காலத்தில் சிறப்பு நிலையில் இருந்தவைணவ சமயம், சைவ சமயம் ஆகியன மத நிறுவனங்களாக (Religious Institutions) இல்லை. அவை நிறுவனங்களாக இல்லாமையால் எந்தவிதச் செயல் ஒருமைப்பாட்டையும் மக்களிடையே கொண்டு வர முடியவில்லை; செயல் ஒருமைப்பாட்டிற்கான முயற்சிகளையும் அவர்களால் செய்ய முடியவில்லை. காரணம், மத அமைப்பு வெறும் திருவிழாக் கூட்டமாக மட்டும் செயல் பட்டமைதான். கிருத்துவம் இசுலாம் மதங்கள் நிறுவன மதங்களாக இருந்தன; இயங்கின; இயங்குகின்றன. எனவே, மதக் கோட்பாடுகளை ஞாயிறு, வெள்ளிக் கிழமைகளில் பொதுமக்களுக்குப் பின்பற்றுமாறு அவற்றால் பரப்ப முடிகிறது. எனவே, செயல் ஒருமைப் பாட்டை அம்மதங்களால் உருவாக்க முடிகிறது. தமிழர்தம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்வில் நெடுங்காலம் பின்பற்றப் பெறும் வைதீக சமயங்களில் நிறுவன அமைப்பு இன்மையால், இரயில் பயணச் சந்திப்புப் போலவும், பேருந்துச் சந்திப்புப் போலவும் கோயில்களில் ஆண்டுக்கு ஒரு முறை, இரு முறை சந்தித்து அறிமுகம் இல்லாமல் செல்வதே வழக்கமாக இருந்தது. எனவே, தமிழர் பின்பற்றிய சமயங்களில் எழுதப் பெற்ற இலக்கியங்களில் சிறந்த கோட்பாடுகள் இருந்த போதிலும் அவை மக்களை எட்டவில்லை; மக்கள் வாழ்வில் இடம்பெறவில்லை.

தமிழர் பின்பற்றிய மதங்கள் சமூகப் பொதுமைகளைப் பரப்பாததுடன், ஆக்கம் கெடுக்கும் செயல்முறை ஒன்றை ஏற்றுப் பரப்பி வற்புறுத்தின. அச்செயல், சாதி வழி நீதிமுறை ஆகும். பிறப்பு அடிப்படையில் குற்றங்களுக்குரிய தீர்ப்பு கூட அமையும் என்று ஆக்கப்பட்டமையால் செயலைப் பற்றிய பேச்சையோ பின்பற்றுதல் பற்றிய பேச்சையோ அன்னோர் எழுப்பவே இயலாது போயிற்று. ஒவ்வொன்றிற்கும் சாதியே அடிப்படையாகப் போனமையால் நேர்ந்த கொடும் விளைவு இது.

மதம், சாதி ஆகியன தமிழரிடையே தமிழ் என்ற மொழி வழியாகவோ, தமிழ் இனம் என்ற இனம் வழியாகவோ இணைப்பை உருவாக்குவதற்குப் பதிலாக வெறுப்பை உருவாக்கின. தமிழராகவே இருப்பார். ஆனால் அவர் வேறு மதத்தினர் வேறு சாதியினர் என்ற அடிப்படையில் பிற மதத்தினரால், சாதியினரால் ஒதுக்கப் பெற்றார்; ஒழிக்கவும் பெற்றார். இங்கேயும் சடங்கு சம்பிரதாயம் போன்ற புறக் கோலங்களையே மதமும், சாதியும் வற்புறுத்தின. மாறாக, மனித நீதிக்குரிய அகக் கோலங்கள் கருதப்படவே இல்லை. சாதி, மத அடையாளங்களைப் பின்பற்ற வற்புறுத்திய அளவிற்குச் சமூக நீதி, சமூக அறம், மனித நீதி, மனித அறம் பின்பற்றப் பெறவேண்டும் என்ற கோட்பாடு வளர்க்கப் பெறவில்லை. குலத்தளவே ஆகுமாம் குணம் என்ற புறம்பான கோட்பாடு வளர்க்கப் பெற்றது.

13. பொய்மைக்கு முதன்மை

சொல்லுக்கும் செயலுக்கும் இடையே உள்ள தூரம் காலம்தோறும் நீண்டுகொண்டே இருந்தது. காலப்போக்கில் இரண்டும் எதிர்த் துருவங்கள் ஆகிவிட்டன. செய்வது வேறு; சொல்வது வேறு; சொல்லியபடி செய்ய முடியாது என்று இரட்டை வேடம் வந்து விட்டது. திருவள்ளுவர் காலத்திலேயே இந்நிலை வந்துவிட்டதை, வளர்ந்து விட்டதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''சொல்லுதல் யார்க்கும் எளியவாம் அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்பதன் (திருக்குறள் 664) மூலம் அறிய முடிகிறது. ஆக, திருவள்ளுவர் காலத்திலேயே சொல்லிற்கும் செயலுக்கும் பேரிடைவெளி தோன்றி விட்டதை அறிய முடிகிறது. இந்த இடைவெளி காலந்தோறும் வளர்க்கப்பட்டதைப் பல சான்றுகளில் காணலாம். உண்மை சொல்வதற்கு எத்துனைத் துன்பப்படுகிறான் அரிச்சந்திரன் என்பதை அரிச்சந்திர நாடகம் எடுத்துரைக்கிறது. உண்மையே சொல்லி வாழ்ந்த அரிச்சந்திரன் சுடுகாட்டில் வாழ்ந்தான் என்று அல்லவா அந்தக் கதையில் காட்டப் பெறுகிறது. உண்மை, உலகியல் வாழ்வுக்கு (Practical) இந்தியச் சமுதாயத்திலேயே எளிதானதாகப் பின்பற்றத் தக்கதாக இல்லை. பேரறிஞர் திருவள்ளுவர் கூடப் 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' (292) என்று எழுத நேர்ந்தது. ஆணும் பெண்ணும் சேர்ந்து திருமணம் செய்து குழந்தைகளை ஈன்று வளர்த்துப் பல ஆண்டுகள் வாழ வேண்டி இருக்கிறது. இந்தியச் சமூகத்தில் குடும்பம் நடத்துதல் என்பது எளிய ஒன்று அன்று; மிக அரிய ஒன்று. அப்பேர்ப்பட்ட குடும்பத்திற்கும் மூலாதாரமான திருமணத்தை ''ஆயிரம் பொய் சொல்லி நிகழ்த்தலாம்; குற்றமில்லை'' என்ற கருத்து உருவாகிப் பழமொழியாகத் தமிழரிடையே நிலைபெற்று விட்டது என்று சொன்னால் பொய்மைக்கும், வாய்மைக்கும் இடையே உள்ள காத தூரத்தை நாம் கணித்துக் கொள்ளலாம்.

14. வேண்டாமைகளின் நிலைப்பு

திருக்குறள் முதலான சமுதாய அறம் பயிற்றும் நூல்களை இக்காலத்துக்கும் உரிய நூல் என்று கருதுவதுகூடச்சமூகவியல் பார்வையிலும் கோட்பாட்டைப் பின்பற்றுதல் என்ற பார்வையிலும் பொருத்தம் அற்றது ஆகும். திருவள்ளுவத்தில் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வேண்டாதன என்று சுட்டிக் காட்டப்பெற்ற கள் உண்ணாமை, பிறனில் விழையாமை, பொச்சாவாமை முதலிய எதிர்மறைப் பண்புகள் பதினெட்டு நூற்றாண்டுகளாகியும் பின்பற்றப்படவில்லை என்றுதானே பொருள். திருவள்ளுவர் வேண்டா என்று விலக்கிய பண்புகளும், வேண்டும் என்று விரும்பிய பண்புகளும், பின்பற்றப்பட்டிருந்தால் காலந்தோறும் திருவள்ளுவத் தேவையை எப்படி வலியுறுத்தமுடியும்? எனவே, பின்பற்றாமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பார்வையில் திருவள்ளுவம் போன்ற நூல்கள் அமரத்துவம் பெற்றன என்று கூறலாம். பண்பின்மையை அமரத்துவம்உடையதாக நாம் ஒப்புக் கொண்டோம் என்றே அதற்குப் பொருள்.

15. கூட்ட உணர்வும் கூட்டுணர்வும்

நாம் வளர்த்த மதங்களும், சாதிகளும் நம்மிடையே கூட்ட உணர்வை வளர்த்த அளவிற்குக் கூட்டு உணர்வை வளர்க்கவில்லை. கூட்ட உணர்வு, சமுதாயத்தை வளர்க்காது; தளர்த்தும்.*2 மதம் என்ற சொல்லுக்கு அடிப்படை 'மத், என்பது ஆகும். மத் என்றால் அபிப்பிராயம்/கருதுதல் என்று பொருள். குறிப்பிட்ட ஒருவரைப் பற்றிய பலர்தம் கருத்து என்பதே அடிப்படைப் பொருள். சமயம் என்ற சொல்லுக்கு ஆன்மா என்றே பொருள். மக்களிடையே அடிப்படை ஆன்மீகத்தை நெறிப் படுத்துதல் என்பதே கருத்து. மக்களின் பண்பே மதத்தின் அடிப்படைச் சாரங்கள் ஆகும். கண்ணுக்குப் புலப்படும் மதச் சின்னங்கள் மதத்தின் சாரங்கள் ஆகா. நாம் சாற்றை விட்டு விட்டுச் சக்கையைப் பற்றிக் கொண்டோம். சான்றாக, சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றுதல் மக்களுக்கு எளிது. சத்தியம் முதலான மதத் தத்துவங்களைப் பின்பற்றுதல் மக்களுக்கு எளிது அன்று. எனவே, எளிதான சடங்குகள் ஏற்கப் பெற்றன. எளிதல்லாத பிற புறக்கணிக்கப் பெற்றன.

16. அயல் ஆதிக்கங்களின் தொடர்ச்சி

நல்ல பண்புகளைப் பின்பற்றஇயலாத அரசியல் சூழல்கள், சமுதாயச் சூழல்கள், பொருளாதாரச் சூழல்கள் காலந் தோறும் தமிழகத்தில் இருந்து வருகின்றன. தொடர்ந்து அயல் மொழி, அயல் இன ஆதிக்கங்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தமிழர்கள் இருட்டு வாழ்க்கை வாழ வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருந்தது. யார் பகைவர், யார் நண்பர், யார் ஆளுகிற அயல் புலத்தைச் சார்ந்தவர், யார் சாராதவர் என்று அடையாளம் கண்டறிய முடியாத சூழலில் தமிழர்கள் காலம் தோறும் வாழ வேண்டிய கட்டாயத்தில் வாழ்ந்தனர். எனவே மனந்திறந்து பேசுவது சிக்கலுக்கு ஆளாக்கும் நிலையாகவும், ஆளாகும் நிலையாகவும் இருந்து வந்துள்ளது. இதனால்

---

* 2 P. Gisbert Fundamentalsof sociology: The crowd pp. 39—43.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசன், அவன் சார்ந்த மதம், மொழி ஆகியவற்றுக்குத் தகப் புறத்தே தலையாட்டி வாழவேண்டிய நிலையும், தம் தலை முறை தலைமுறையாகச் சார்ந்துவரும் மொழி, மதம், இனத் திற்குத்தகவும் வேறுபட்டு அகத்தே ஒழுகும் நிலையும் என வாழ்க்கை வாழ்வது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது. இதனாலும் தமிழர்களிடையே பின்பற்றுதல் பின்னுக்குத் தள்ளப்பெற்றது.

17. இரட்டை வாழ்க்கைக்குப் பயிற்சி

இச்சூழலால் இரட்டை வாழ்க்கைக்குப் பயிற்சி அளிக்கப் பெற்றது. திட்டமிட்டோ, திட்டமிடாமலோ இது தொடர்ந்து நிகழ்ந்து வந்தது. வீட்டிற்குள்ளே உறவின ரிடையே பொய் சொல்லக் கூடாது. ஆனால், வெளியே தேவைப்படும்போது பொய் சொல்ல வேண்டும். அப்பாவை வீட்டிற்கு உள்ளே வைத்துக் கொண்டே அப்பா வீட்டில் இல்லை என்று பொய் சொல்ல வேண்டும். அந்தரங்கமாகப் பொய்ம்மை வளர்க்கப் பெற்றது; வளர்க்கப் பெறுகிறது. 'வியாபாரம்' என்ற காமதேனுவின் உயிரே பொய்ம்மைதான். விருந்தினராகச் சென்று இருக்கிறபோது வயிற்றை முற்றும் நிறைக்காத நிலையிலும், பசி முற்றும் அடங்காத நிலையிலும் 'போதும் போதும்' என்று உணவு போடும்போது பொய் சொல்ல வேண்டும். விருந்தோம்பும்போது இன்னும் வைத்துக் கொள் என்று பொய் சொல்லவேண்டும். கிட்டத்தட்ட அனைத்துப் பணிகளிலும் இப்படிப்பட்ட இரட்டை வாழ்க்கை வளர்க்கப் பெற்றது; பெறுகிறது. குறிப்பாக மூக்கு மூச்சை விடுவதற்காக மட்டுமே அமைந்த ஒன்று. ஆனால் அது முகர் வதற்காக அமைந்த உறுப்பாகவும் வளர்க்கப் பெற்றது. வாய் உண்பதற்காக அமைந்த உறுப்பு. ஆனால் அது பேசுவதற்காக வும், சிரிப்பதற்காசவும் என்று வளர்க்கப் பெற்றது. கண்ணின் நோக்கம் காண்பதற்கு மட்டும்தான். ஆனால் அது அழுவதற் காகவும், படிப்பதற்காகவும் பயன்படுத்தப் பெற்றது. மெய் உறுவதற்காக மட்டும் படைக்கப் பெற்றது. ஆனால் அது பலவேறு செயல்களுக்கு மூலமாக்கப் பெற்றது. மூளை, குணங் களை இயக்க முறையான புலச்சோற்றிடமாக அமைந்தது. ஆனால் அதுவே புலச்சேற்றிடமாக்கப் பெற்றது.

18. அனைத்திலும் பின்பற்றாமை

சமுதாய ஒழுங்கிற்கு வேண்டிய பண்புகள் மட்டும் பின்பற்ற படாமல் புறக்கணிக்கப் படவில்லை. இலக்கியக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டுபிடிப்புகள் கூடத் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. சான்றாக, ஓர் அறிஞரால் கண்டறியப்பட்ட இலக்கணச் செய்தி அக்கால அறிஞரால் ஏற்றுக் கொள்ளப் பெறுவது இல்லை. வகுப்புகளிலோ, நூற்களிலோ போற்றப் பெறுவது இல்லை. வரலாற்றில் கூட அப்படித்தான். பாண்டிச்சேரி என்ற பெயர் தவறு; அமெரிக்கக் குடியினரை இந்தியர் எனல் தவறு, இப்படிப் பல தவறுகள் நம்மால் தவறுகள் என்று ஒப்புக் கொள்ளப் பெற்றவை. ஆனால் பின் பற்றுகிறோமா; திரும்பத் திரும்ப முன்பே சொல்லப்பட்ட தவறான செய்திகள் மீண்டும் மீண்டும் சொல்லப் பெற்றுப் பொய்க்காட்சி மெய்க் காட்சியாக நடிக்க வைக்கப் பெற்றது. இதனால் மெய்க்கும் பொய்க்கும் இடையே உள்ள இடைவெளி விரிந்துகொண்டே போயிற்று.

அரசியல்/மதக் கோட்பாடுகள் மறக்கப் படுகின்றன அவை, சடங்கு, சம்பிரதாயங்களுடன் நின்றுவிடுகின்றன. அவை மட்டுமன்றி அறிஞர்களின் கருத்துகள் கூடப் பின்பற்றாமல் புறக்கணிக்கப் படுகின்றன. அல்லது கட்சி, படம், சிலை வைப்பு, நினைவு நாள் கொண்டாடுதல் என்ற புறக்கோலங் களுடன் ஒழிந்துபோகின்றன. சான்றாக, பெரியார் ஈ.வே.ரா. வின் சிந்தனைகள் கருதத் தக்கன. அவர்தம் சிந்தனைகள் புறக்கணிக்கப் பெற்று மறக்கப் பெற்றன. அவர் வெறும் நினைவு நாளில், கட்சி நாளில் நினைக்கப்படும் பொருளாக மட்டுமே அடங்கி விட்டார். காந்தி கூட அவ்வாறுதான். அண்மைக் காலத்தில் தமிழ்ச் சமுதாய நலம் வேண்டி வழங்கப் பெற்ற அறிஞர் மு. வரதராசனாரின் கருத்துகள் பெரிய அளவிலும், உரிய அளவிலும் பயன்கொள்ளப் பெற்றிருத்தல் வேண்டும்; பெறவில்லை. அவை பாடப் பொருளாக முடக்கப் பெற்றன; மறக்கப் பெற்றன. பாரதியார், பாரதிதாசன் ஆகியோர்தம் ஆவேசப் பாடல்கள் அரசியலுக்கும் கட்சிக்கும் மட்டுமே பயன்படுத்தப் பெற்றன. அவர்களுடைய ஆத்மார்த்த நோக்கம் எளிதே கைவிடப்பெற்றது. எனவே, அறிஞர்களின் கருத்தைப் புறக்கணித்தல், மறத்தல், பின் பற்றாது இருத்தல் என்பன தமிழர்களின் தொடர் பழக்கங் களாக இருந்து வருகின்றன.

பின்பற்றாமை என்ற என் கட்டுரைத் தலைப்பைப் பார்த்து விட்டுப் பேராசிரியர் ம. இலெ. தங்கப்பா அவர்கள் தம் கருத்தாகச் சிலவற்றை எனக்கு மடல் வழி எழுதிப் பகிர்ந்து கொண்டார்கள். அதனை வாசகர்களாகிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உங்களிடமும் பகிர்ந்துகொள்ளுதல் கருத்துப் பரவ வழி வகுக்கும். அவர் தம் மடல் வழி தெரிவித்தன வருமாறு:

''சொல்லுக்கும் செயலுக்கும் நம்மிடையே ஏன் இந்த இடைவெளி என்று பலமுறை என்னையே வினவிக் கொண்டிருக்கின்றேன். பொதுவாக நம்மிடம் உள்ள தன்மைகளுள் ஒன்று மாய்மாலம் (Hypocrisy). இல்லாததை இருப்பதாகக் காட்டிக் கொள்வது. நாம் மிக இழிவாக நடந்து கொண்டாலும், உயர்ந்த கொள்கைப் போர்வை களால் நம்மைப் புனைந்து கொண்டு நம்மையும் பிறரை யும் ஏமாற்றிக் கொள்கிறோம். காந்தியடிகளின் ''உண்மை, ஊறு செய்யாமை'' ஆகிய கொள்கைகளைப் பேடைகளிடம் வாய் கிழியப் பேசி ஊருக்கு அறிவுரை வழங்கும் இந்நாடு உலகிலேயே வன்முறையும் கொலை வெறியும் மிக்கதொரு நாடாகி, இலங்கையிலுஞ் சென்று தமிழரைக் கொலை புரிகின்றது. கொலைத் தொழிலுக்கு அமைதிக்காப்பு என்று பெயர் கூறி மகிழ்கின்றது. இப் படிப் பொது வாழ்வில் பொய்மைகள் பற்றிப் பல கூறிச் செல்லலாம்.

''மக்களிடையும் படித்தவர்களிடையும் இவ்விடை வெளி இருப்பதற்கு மற்றொரு காரணம், சில தவறான உள்ளப் போக்குகளில் நாம் வளர்ந்திருப்பதே. பிறருக்குத் தீங்கிழைக்க நாம் தயங்குவதில்லை என்றாலும் பிறர் உள்ளம் நோகச் செய்தல் கூடாது என்ற போலிக் கொள்கை சிலவேளை நம்மை ஆட்கொள்கின்றது. பிறரிடம் 'இல்லை' என்றோ 'முடியாது' என்றோ சொன்னால் அவர்கள் வருந்துவார்களே என்று 'ஆம், சரி, இருக்கிறது' என்றும், 'முடியும்' என்றும் அந்த நேரத்துக்குக் கூறி விடுகின்றோம். நமக்குள்ளேயே தெரியும் நாம் நிறை வேற்றப் போவதில்லை என்று. பிறர் நோகக் கூடா தென்றும் போலிக் கொள்கையோடு சொந்தக் கோழைத் தனமும் காரணம். உள்ளத்திற் பட்டதை நேரில் சொல்ல அச்சம். நாம் வாழ்க்கையில் இயல்பாகவும் நேருக்கு நேரா கவும் வாழ்வதே மிகக் குறைவு. தப்பித்துக் கொள்ளுதலே (Escapism) பலரின் வாழ்க்கையாக இருக்கின்றது. வாழ்வு பற்றிய அறியாமை இதற்கொரு காரணம்; ஏமாற்றுக் காரர் நம்மிடம் கடன் கேட்டால் ''உனக்குத் தருவதற் கில்லை'' என்று முகத்தெதிர் கூறுவதில் பிழை என்ன? நாம் பொய் கூறுவோம்; பொய்ச் சாக்கும் கூறுவோம்; மறுநாள் வந்தால் கிடைக்கும் என்போம்; வரும்பொழுது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒளிந்து கொள்வோம்... இஃதொருவகை அச்சம்... மற்றொன்று, நாம் சொன்னபடி செய்தல் வேண்டுமே என்ற அக்கறையின்மை. ஐந்து மணிக்கு வருகிறேன் என்று சொன்னால் ஐந்து மணிக்குப் போக வேண்டும் என்று பலர் நினைப்பதில்லை. வாழ்வில் அழுத்தமின்மை, பற்றின்மை, ஒழுங்கைவிடத் தன்னலமே பெரிதாகின்றது. ஒழுங்கா, தன்னலமா என்று வருகையில் தன்னலத்துக்கே முதன்மை வழங்குகின்றோம். பின்பற்றாமை என்பது பெரிய செய்தியாக நமக்குத் தோன்றுவதில்லை... ''அதனால் என்ன... உலகம் என்றால் அப்படித்தான் இருக்கும்!'' என்று போலி அமைவுகட்குள் புகுந்து கொள்கின்றோம். நம் அகச்சோம்பலும் நாம் ஒன்றைப் பின்பற்றவோ நிறைவேற்றவோ தடையா யிருக்கின்றது. சொல்லும் பொழுதிருக்கும் ஆர்வம், செயல் என்று வருகையில் தணிந்து விடுகின்றது... தடைகளுக்குப் பணிந்து விடுகின்றோம். இப்படி எவ்வளவோ கூறிச் செல்லலாம்... நமக்கு அடிப்படை வாழ்வியற் கல்வி வழங்கப்படவில்லை... நம் கல்வியே நம்மைப் போலிகளா கவும் பொறுப்பற்றவர்களாகவும் கோழைகளாகவும் ஆக்கி வைத்திருக்கின்றது''.

இவற்றை எவ்வாறு போக்குவது? பின்பற்றுதல் என்ற ஒழுங்கு நெறியைக் கொண்டுவருவது எவ்வாறு? இதற்கு வழி முறைகளாகப் பின்வருவனவற்றைச் சிந்திக்கலாம்.

1. குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கம் கடந்த நாற்பது ஆண்டுகளாக அனைத்து வழிகளிலும் பிரச்சாரம் செய்யப் பட்டது போல நல்லொழுக்கப் பிரச்சாரம், நல்லெண்ணப் பிரச்சாரம் அனைத்து வகைகளிலும் தொடர்ந்து நெருக்கடி நிலை வேகத்தில் நிகழுதல் வேண்டும்.

2. ஒவ்வொரு துறைக்குரிய சிக்கலைத் தீர்க்கும் முயற்சியை அந்தந்தத் துறைகளில் இருக்கும் அறிஞர்களைக் கொண்டே செய்தல் வேண்டும். சான்றாக, சாதி அடிப்படை ஒதுக்கீட்டைத் தொடருவதா வேண்டாமா என்பதை அரசியல் வாதியோ, அந்தச் சலுகையை நுகர்வோரோ முடிவு செய்தல் ஆகாது. சமூகவியல் அறிஞர்களே அது வேண்டாமா, வேண்டுமா என்பதை முடிவு செய்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு துறையிலும் அறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துகள்/ முடிவுகள் ஏற்கப் பெற்று அந்த முடிவுகளை அனைத்துத் தொடர்புச் சாதனங்களாலும் எல்லாத் தரப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களும் ஏற்கும் வண்ணம் எடுத்துச்சொல்லப் பெறவேண்டும், எடுத்துச் செல்லப் பெற வேண்டும்.

4. நல்லொழுக்கங்களையும், சட்ட நெறிமுறைகளையும் பிறழாமல் பின்பற்றுவோர் பாராட்டப் பெறுதல் வேண்டும். பிறழ்வோர், தண்டிக்கப் பெறுதல் வேண்டும். சிங்கப்பூர் நடவடிக்கைகள் இதற்குத் தகுந்த வெற்றிச் சான்று.

5. கல்வி, பள்ளிக்குதவாப் பள்ளிக் கல்வியாக வெள்ளைக் காரன் காலத்தைப் போலத் தொடர்ந்து பயிற்றுவிக்கப் பெறுவது உடனே நிறுத்தப் பெறுதல் வேண்டும். செயல்முறை சார்ந்த (Application Oriented) கல்வியே கற்பிக்கப் பெறுதல் வேண்டும். மிதிவண்டி ஓட்டும் முறையை வகுப்பறையில் விரிவுரையாக விளக்குதலைவிடச் சாலையில் நேர்முகமாகக் கற்றுக் கொடுத்தலே சாலவும் நன்று.

'தமிழர்தம் மறுபக்கம்' என்று நூலில் மறுபக்கத்தில் சுட்டப் பெறும் இருட்டு விலகத் தமிழர் பின்பற்ற வேண்டிய ஒரே வழி—ஒரே நெறி அறிஞர்கள் கருத்தைப் பின்பற்றித் தனி மனிதரைப் பாராமல் தத்துவத்தைப் பார்க்கும் பழக்கம் வருதல்தான்.

மாற்ற வேண்டியவற்றை மனத்துள் கொண்டு செயல்படு வோமே யானால் நம்முள் பெரும்முன்னேற்றத்தை உண்டாக்க முடியும்; உண்டாக்க வேண்டும். அவ்வாறு உண்டாக்கும் திருநாள் வருவதாக; இன்பம் தருவதாக.

க.ப. அறவாணன்

தி.ஆ. 2020, புரட்டாசி 30
16.10.1989.

நன்றி : கட்டுரைகள் உருவாகவும், அவை அச்சேறவும் துணை நின்ற என் மாணாக்கர் **சிலம்பு நா. செல்வராசுவுக்கு**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

பெருமை எனும் மயக்கம்

ஒரு சமுதாயத்தின் வெற்றி அதன் பலத்தை அறிந்திருப்பதில் மட்டுமன்று; அதனது பலவீனத்தை அறிந்திருப்பதிலும், அதனை நீக்குவதிலும் அடங்கியிருக்கிறது. சில சமயம், சில சமுதாயத்திற்கு இருக்கின்ற பலத்தைவிடப் பலவீனங்கள்தாம் மிகுதியாக இருக்கும். பலம் இருப்பதாக நினைத்துக்கொண்டு இருக்கின்ற மயக்கத்தில், மிகுந்த பலம் வந்து மோதும்போது அந்தச் சமுதாயம் வீழ்ந்துவிடும். சான்று : ஆப்பிரிக்க நாடுகள். சில சமுதாயம் தன்னிடமுள்ள பலவீனத்தைப் பலமாகத் தவறாகப் புரிந்து கொண்டு, முன்னெச்சரிக்கையும் தொலை நோக்கும் இன்றி நடப்பதால் வீழ்ந்துவிடும். சான்று : தமிழ்நாடு. சில சமுதாயங்கள் தமக்கிருக்கும் பலத்தையே செருக்காகக் கொண்டியங்குவதால் வீழ்ந்துவிடும். சான்று : அமெரிக்கா, தென் வியட்நாம், கியூபா, ஜெர்மனி-இரண்டாம் உலகப்போர், சப்பான்-முதல், இரண்டாம் உலகப் போரில் பெற்ற தோல்வி.

தமிழ்ச் சமுதாயம் மேற்கண்ட மூன்று வகைகளிலேயும் தன்னைத் தவறாகக் கணக்கிட்டு அவ்வப்போது வீழ்ந்து கொண்டே வந்திருக்கிறது. அல்லது வீழ்ந்துவிட்டது என்பது என் கருதுகோள். தமிழர்களுக்குத் தற்போதிருக்கும் பலம்-ஒரே பலம் அவர்களிடமுள்ள பழைய பெருமையே. ஆனால், இது உண்மையில் தமிழக மக்களுக்குப் பலமாக அமையாமல், பலவீனமாக அமைந்து அவர்களை முடமாக்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். தாத்தா போர் வீரனாக இருந்தால் மட்டுமே பேரன் போர் வீரனாக இருப்பான் என்று நம்புவதற்கு இடமில்லை. தமிழ்ச் சமுதாயத்தில் நடந்த இன்னொரு பெருந் தவறு தன் பழம் பெருமையைத் திரும்பிப் பார்த்துப் பெருமிதம் கொள்ளுகிற அளவிற்குத் தன்னிடம் உள்ள குறைகளையும் ஆராய்ந்து அறிந்து ஒப்புக்கொண்டு நீக்கும் முயற்சி இல்லை. நோயே இல்லை என்று நினைக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருநோயாளி விரைவில் வீழ்வான். தமிழர் பழமைநோய், பொய்ப்பெருமை நோய், பொய்ப் பெருமித நோய் பற்றிய வர்களாக இன்று இருக்கிறார்கள் என்பது என் கணிப்பு.

Anthropology in India என்ற நூலை எழுதிய எச். ஏ. கிருஷ்ணய்யர், பாலரத்தினம் என்ற இருவரும் தமிழர் உள்ளிட்ட தென்னிந்தியர்களைப் பற்றிக் கூறுகின்ற குறிப்பு நம் கவனத்திற் குரியது. தமிழர் உள்ளிட்ட திராவிட மக்கள் ஆரியர்களைப் போலப் போர்க்குணம் வாய்ந்த மக்கள் அல்லர் என்று குறிப்பிடுகின்றனர். (India owed much of her civilization to people who were more peaceful than their fore-fathers. The Dravidians were not war-like, like the Aryans : they lacked the mobility so characteristic of the great warrior peoples of history. They were agricultural; (p. 91)

அறிஞர் கார்ல் மார்க்ஸ் தமிழரைப் பற்றி எழுதிய குறிப்பும் இங்கே சுட்டிக் காட்டத் தக்கது.

''ஆங்கிலேயர்களின் வணிகவரவு, அரசியல் ஆதிக்கவரவாக எல்லாவிடங்களிலும் இந்தியாவில் விரிந்தது. அயல் ஆதிக்கத் திற்கு ஏதுவாக-எளிதாக அடிபணிந்த நாடுகளுள் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. கடைசிவரை அடிமைப்படாமல் எதிர்த்து நின்ற பட்டியலில் பஞ்சாப் இடம் பெறுகிறது. 1845-இல் பிரிட்டிஷாருக்கும் பஞ்சாபியருக்கும் போர் நிகழ்ந்தது. பிரிட்டிஷ் பேரரசின் கவர்னர் ஜெனரல் ஆர்டின்ஞ் (Hardinge) தளபதியாக இருந்த குகா கூப் (Huga Gough) ஆகிய இருவரும் 20,000 போர் வீரர்களுடன் சிக்கியப் படைகளை எதிர்த்தனர். ஆங்கிலேயர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை, தோற்றனர், சீக்கியர் வென்றனர். இதனை 'Notes on Indian History' என்ற நூலில் மார்க்சு பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

"To be noted that the Mishaps of the English were mostly due, besides the Sikhs, bravery to the asinine stupidity of Gough who imagined he could do anything to the Sikhs in the same way as to the easily frightened Hindus of the South by charging them with the bayonet" (Marx-Notes on Indian History - 1664-1858).

மேற்கண்ட குறிப்பு தமிழர் உள்ளிட்ட தென்னிந்தியரைக் கார்ல் மார்க்சு எவ்வளவு கவனமாக, துல்லியமாகக் கணித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துள்ளார் என்பதைக் காட்டுகிறது. இக் குறிப்பு தமிழர்கள் அஞ்சும் குணத்தினர் என்பதையும், புதிய படைக் கருவிகளுக்கு அஞ்சி அடங்குகிறவர்கள் என்பதையும் காட்டுகிறது.

1311-இல் தமிழ் நாட்டின்மீது தில்லி இசுலாமிய அரசு, முதல் படையெடுப்பை நிகழ்த்தியது. படையை நடத்தி வந்தவன் மாலிக்காபூர். மகாராட்டிர அரசின் அடிமையாக இருந்தவன் அவன். தில்லி சுல்தானால் படைத் தளபதியாக ஆக்கப்பட்டவன். தளபதி மாலிக்காபூர் தென்னிந்திய மாநிலங்களை ஒவ்வொன்றாக வெற்றி கொண்டான். முடிவில் தமிழகத்தின் மீதும் அவன் தாக்குதல் நிகழ்ந்தது. இசுலாமியப் படைகள் தம்மூரை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்ற செய்தி கேட்டுத் திருச்சிக்குப் பக்கத்திலுள்ள ஊர்மக்கள் செய்த செயலை நேரில் பார்த்து ஐரோப்பியத் துறவி ஒருவர் எழுதிய குறிப்பு நமக்குப் பெரும் அதிர்ச்சியைத் தருகிறது.

''ஊர்மக்கள் அனைவரும் ஊரின் திறந்த வெளிக்குத் திரண்டனர். ஆண்களும், பெண்களும், முதியோரும், இளையோரும், குழந்தைகளும் ஒன்று கூடினர். தம்முடன் தாம் வளர்த்த ஆடுகள், மாடுகள் அனைத்தையும் கொண்டு வந்து சேர்த்தனர். அனைவரையும் சுற்றிப் பெரிய விறகு களைக் கொண்டு வந்து விறகு வேலியை அவர்களே அமைத்தனர். உள்ளே திரண்டிருந்த ஊராரே விறகுகளுக்குத் தீயிட்டு அத் தீயில் வெந்து செத்தனர்''.

மேற்கண்ட மூன்று சான்றுகளும் தமிழர்களைவரலாற்றுப் பார்வையில் வீரமற்ற கோழைகள் எனக் கணிக்க வைக்கின்றன. எனவே நம்மைப் பற்றிய நம் பழம் பெருமைகளை நாம் மறுபார்வை செய்ய வேண்டியுள்ளது. மறுபார்வை செய்வதன் மூலமே நம் வருங்கால வாழ்வாவது திருத்தமும்-வளமையும் பெறும். பொருளியல், சமுதாயவியல், அரசியல் என்ற மூன்றின் அடிப்படையில் இன்றைய தமிழ்ச்சமுதாயத்தை ஒரு மானுடவியல் ஆராய்ச்சியாளன் என்ற முறையில் கண்டறிந்து, நோய்களைச் சுட்டுவது என் கடமை என்று எண்ணுகிறேன். இதற்கு முன்பு என் நூல்களிலும், கட்டுரை களிலும், பிற ஏடுகளிலும் எழுதப்பெற்ற செய்திகளைத் தவிர்த்துப் பிறவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளியல்

1. இந்திய மாநிலங்களில் வேலையில்லாதோர் மிகுதியாக உடைய இரண்டாவது மாநிலமாகத் தமிழ்நாடு இருந்து வருகிறது. (முதலாவது - கேரளம், இரண்டாவது பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம், மூன்றாவது தமிழ்நாடு).

2. ஏனைய தென்னிந்திய, வடஇந்திய மாநிலங்களுக்குக் கொத்தடிமைகளாகச் செல்கின்ற மக்கள் தமிழ் நாட்டிலிருந்து செல்வோர்தாம் மிகுதியாக இருக்கிறார்கள்.

3. இந்தியரின் சராசரி வருவாயைக் கணக்கிடும் குழு அறிக்கை, சராசரி வருவாய் குறைவாக உடையவர்கள் தமிழ் நாட்டினர் என்ற குறிப்பை நல்குகிறது.

4. இந்திய மாநிலங்கள் அனைத்திலும் அச்சாகும் மொத்தப் பரிசுச் சீட்டுகளில் ஏறத்தாழ எழுபது விழுக்காடு பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் மட்டும் விற்பனையாகின்றன.

5. இந்திய மாநிலங்களிலேயே மிகுதியாகத் திரையரங்குகள் தமிழ்நாட்டில்தான் (2,500) உள்ளன.

6. இந்தியாவிலேயே மிகுதியான தொழுநோயாளிகள் இந்த மாநிலத்தில்தான் உள்ளனர்.

7. இந்தியாவிலேயே மிகுதியான கசாப்புக் கடைகள் இங்கேதான் உள்ளன.

8. அண்மையில் அசைட் (Aside) என்ற இதழில் வந்த கட்டுரை சென்னை நகரில்தான் மிகுதியான தற்கொலைகள் நிகழ்கின்றன என்று விவரிக்கிறது. தற்கொலைகள் மிகுதியாக உள்ள மாநிலம் தமிழர் வாழும் புதுச்சேரி மாநிலமாகும்.

9. மிகுதியாக இளஞ்சிறார்களை வேலைக்கு வைத்துக் கொடுமைப் படுத்தும் மாநிலம் இந்த மாநிலம்தான்.

10. இவையன்றிப் பிச்சைக்காரர்கள், திருட்டு, பொய் இவை பற்றிய பட்டியல்கள் நீண்டுகொண்டே போகின்றன.

தமிழகத்தில் நேர்ந்துள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு அகன்று கொண்டேபோகிறது. தமிழகத்தை ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடுவதுடன் சிங்கப்பூர் போன்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுவது நல்லது. அதனால் நமக்கு உலகப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்வை கிடைக்கும். உலக வளர்ச்சியில் நாம் எங்கே இருக்கிறோம் என்றும் நம்மால் கணிக்கவும் இயலும்.

சமுதாய நிலை

தமிழகத்தைச் சாதிப் பிரிவு மிகக் கடுமையாகப் பாதித்துள்ளது. இந்தியன் என்ற உணர்வும், இந்தியா என்ற நாட்டுணர்வும், தமிழன் என்ற மொழி சார்ந்த இனவுணர்வும் நம் மக்களைப் பாதித்திருப்பதைவிட, ''இந்தச் சாதியான்'' என்ற உணர்வு குருதியில் கலந்து, நரம்பு நாடிகளில் ஏறிப் போய் உள்ளது. இலங்கைத் தமிழர் ஒடுக்கப்படுதலையொட்டிப் பேரெழுச்சியை உண்டாக்க முடியாத தமிழ் நாட்டில், சாதியை ஒட்டிப் பெரும் கிளர்ச்சியையே மூட்டி விட முடிகிறது.

ஏனைய நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கிற போது ஆண், பெண் சமத்துவ நிலை நம் பகுதியில் அரிச்சுவடி நிலையிலேயே உள்ளது. வரதட்சணை முறை நாம் பெண்களை எவ்வளவு இழிநிலையில் வைத்திருக்கிறோம் என்பதற்குத் தலைமையான சான்றாகும். நம் நாட்டில் நிகழும் குற்றங்களுள் பல ஆண், பெண் பாலுறவைச் சார்ந்தே அமைந்துள்ளன.

மக்கள் அடிப்படைச் சிக்கல்களிலிருந்து திட்டமிட்டுத் திசை திருப்பப்படுகிறார்கள். இந்தத் திசை திருப்புதலுக்கு வணிக நோக்குடைய தனியாரும், அரசியலாரும் பெருந் துணையாக இருக்கிறார்கள். மக்களைத் திசை திருப்பும் முயற்சியில் அரசுத் தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகியன பேரீடுபாடு கொண்டிருக்கின்றன. இதற்குத் தனிப்பெருஞ்சான்று, கடந்த பத்து ஆண்டுகளாக வளர்க்கப்பெற்ற கிரிக்கெட் இரசிகத் தன்மை ஆகும். 1987 மார்ச்சு எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு நிகழ்கிறபோது, அரசு ஆதிக்கத்திலுள்ள வானொலியும், தொலைக் காட்சியும் கிரிக்கெட் விளையாட்டை நாள் முழுவதும் வருணித்துக் கொண்டிருந்தன. ஓராண்டிற்குரிய 365 நாட்களில் அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள் 171 நாட்களே பணியாற்றுகிறார்கள் (தில்லி அமைச்சர் ப. சிதம்பரம் பேச்சு). அந்த நாட்களிலும் கிரிக்கெட் விளையாட்டிற்காக அரசே விடுமுறை அறிவிக்கிறது. கல்கத்தாவில் வங்க அரசுச் செயலக ஊழியர்கள், கிரிக்கெட் விளையாட்டைப் பார்ப்பதற்காகவே, தொலைக்காட்சிப் பெட்டிகளை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் வைக்க வேண்டுமென்று போராடினார்கள். அரசும், செல்வந்தர்களும் மோனமினுக்கிகளும் தெரிந்து திட்டமிட்டு நடத்திய ஒரு திசை திருப்புதல் இது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரையரங்குகளின் பாதிப்புச் சொல்லலாகாது. தமிழக அரசு, ஆந்திர அரசு இவற்றைத் திரைப்பட இரசிகத்தன்மை பாதித்து வெற்றிகொண்டதுபோல இந்திய அரசையே திரைப் படக் கலைஞர்கள் பாதிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். திரைப்படத்தால் பாதிக்கப் பெற்ற மாநிலங்களில் முன் வரிசையில் இருப்பது தமிழ்நாடு என்று சொல்லலாம்.

இந்தியாவில் மொத்தம் 26 மாநிலங்கள் உள்ளன. இவையனைத்திலும் இருக்கும் திரையரங்குகள் மொத்தம் 12,000. தமிழ்நாட்டில் மட்டும் 2,500 திரையரங்குகள் (23 விழுக்காடு) உள்ளன. தமிழ்நாட்டைவிட மும்மடங்கு அளவிலும், மக்கள் தொகையிலும், எம்.பி., எம்.எல்.ஏ., எண்ணிக்கையிலும் பெரியதான உத்தரபிரதேச மாநிலத்தில் 800 திரையரங்குகள்தாம் உள்ளன. சென்ற ஆண்டு சென்னையில் உருவாக்கப் பெற்ற திரைப் படங்களின் எண்ணிக்கை 126 ஆகும். சென்னையில் உள்ள திரை யரங்கு 98. அங்குள்ள இருக்கைகள் 78,808. ஒரு நாளைக்கு 3,14,828 பேர் திரைப்படம் பார்க்கிறார்கள். ஒரு வாரத்தில் 24,03,796 பேர் திரைப்படம் பார்க்கிறார்கள். இந்திய சராசரி ஒரு வாரத்திற்கு மட்டும் 7 கோடி. சென்னை மாநகரில் மட்டும் 24,03,796 பேர் ஒரு வாரத்திற்குத் திரைப் படம் பார்க்கின்றனர். திரைப்படத்தால் பாதிக்கப்பெறுவது படிப்பறிவில்லாத பொதுமக்கள் மட்டும்தாம் என்று கருதி ஒதுக்கவும் இடமில்லை. சென்னையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று படித்தவர்கள், கல்லூரி மாணாக்கர்கள் எப்படித் திரைப்படங்களால் அழிகிறார்கள் என்று காட்டுகிறது. (இந்து 4-12-86).

மயிலாப்பூரில் இருந்து பாரிமுனை நோக்கி வரும் 3ஏ பேருந்து அண்ணாசாலை காவல் நிலையத்திற்கு 2-12-86 செவ்வாய்க் கிழமையன்று கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. பேருந்தில் இருந்த 9 கல்லூரி மாணாக்கர்கள் கைது செய்யப்பட்டனர். காரணம் பேருந்து நிறுத்தம் அல்லாத நிறுத்தத்தில் ஆயிரம் விளக்கில் உள்ள திரையரங்கின் முன்னால், பேருந் தைத் தங்களுக்காக நிறுத்தவேண்டும் என்று ஓட்டுந ரிடமும், நடத்துநரிடமும் கேட்டு வற்புறுத்தி 9 கல்லூரி மாணாக்கர்கள் சண்டையிட ஓட்டுநர் மறுக்க, சன்னல் கண்ணாடிகளையும், மின்னிணைப்பு களையும் உடைத்துப் பிரித்து நொறுக்கினர். இவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்ற பல நகவல்கள் இதழ்களில் வெளிவருகின்றன.

மக்களைத் திசை திருப்பும் அடுத்த பெரும் பேராற்றல் தமிழ் ஏடுகள் ஆகும். பொய்க் கற்பனையும், திரைப்பட நடிகை, நடிகர்களுடைய வாழ்க்கைகளையும் வெளியிட்டு வாசிப்போரைக் கற்பனைக் கனவுகளில் மூழ்க அடிப்பது தமிழ்நாட்டு இதழ்களின் தனிப்பெரும் பணியாகும். மலையாள மொழிகளில் வெளியாகும் இதழ்கள் மிக விரிவான ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாள்தோறும் தாங்கிவருகிற போது, தமிழ் இதழ்கள் கற்பனை உலகில் மூழ்கிக் கிடப்பதும், மூழ்கவைப்பதும் அனைவருக்கும் நன்கு தெரியும்.

அரசியல்

அரசாங்க அலுவலர்களா அரசியல் பேசுதல் கூடாது. தனியார் அலுவலர்களா அரசியல் பேசுதல் கூடாது. ஆசிரியர் சமூகமா அரசியல் பேசுதல் கூடாது. தொழிலாளியா அரசியல் பேசுதல் கூடாது. மாணவர்களா அரசியல் பேசுதல் கூடாது. பிறகு யார்தான் அரசியலைப் பேசுவது? ஒரு மக்களாட்சி நாடு என்பது எல்லாத் தரத்து மக்களையும் உள்ளடக்கியது. அனைவரும் அரசை நடத்த வரி தருகின்றனர். வரி தரும் அவர்கள் வாய் திறத்தல் கூடாது. அரசியலைத் தொழிலாகக் கொண்டவர்கள் மட்டும் அரசியலைப் பேசுவது, அரசியலை நடத்துவது, அரசியலை இயக்குவது என்று நாம் முடிவு செய்து விட்டால் அரசியல்வாதிகளை அரசராக்கிவிட்டு நாம் பழையபடி அடிமைகளாகி விடலாம். இந்த நாட்டில் மக்களாட்சி போதிய அளவிற்கு வெற்றி பெறாமல் போனதற்குக் காரணம் எல்லாத் தரப்பு அறிஞர்களையும் அதிகாரத்தினால் அச்சுறுத்தி ஊமைகள் ஆக்கியதுதான். அவர்களை ஊமைகள் ஆக்குவதும் தவறு. அவர்களே ஊமைகள் ஆகியதும் தவறு.

தமிழர்கள் அரசியலைப் பொறுத்த அளவிற்கு எவ்வளவு பெரிய ஏமாளிகள் என்பதற்கு 'இமாலயச் சான்று' இன்று நடக்கும் ஈழப்போர் ஆகும். ஈழப்போர் நிகழலாகாது என்று தமிழ் மக்கள் பெரும்பாலோர் விரும்புகின்றனர். அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஈழத்திற்குப் பதிலாக வங்காளியரைச் சார்ந்து அல்லது பஞ்சாபியரைச் சார்ந்து ஈழம் போன்றதொரு சிக்கல் தோன்றியிருக்குமே யானால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியாவில் மீண்டும் ஒரு வங்கப்போர் தொடங்கியிருக்கும். இந்தக் கருத்தை நான் சொல்லவில்லை. இந்திய அரசு அயல் உறவுத்துறைச் செயலாளராக இருந்து தாமே பதவி விலகிய ஏ.பி. வேங்கடேசுவரன் எடுத்துச் சொல்லுகிறார் :

"He said that the Central Government was not as sensitive to the problems of the Southern States as to those of the northern heartland, had any linguistic group of North India been persecuted like the Tamils in Sri Lanka theCentral Government would have certainly reacted more decisively"

(Hindu, April 26, 1987)

நாம் எவ்வளவு தூங்குமூஞ்சியாக இருந்திருக்கிறோம் என்பதற்கு 1947-50ஆம் ஆண்டு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் கண்ணெதிர் சான்றுகளாக இருக்கின்றன. நேற்றும் இன்றும் உலுக்கிக் கொண்டிருக்கும் அனைத்துச் சிக்கல்களுக்கும் மூல விதை 1947-50ல் உருவான நம் அரசமைப்பில் விதைக்கப் பட்டிருக்கிறது. நாம் இந்தியன் ஆகவும் உருவாக முடியாமல், தமிழன் ஆகவும் நிலைக்க முடியாமல் குறிப்பிட்ட மதத்தின ராகவும், குறிப்பிட்ட சாதிக்காரராகவும் என்றும் நிலைத்து நிற்கவும் அரசமைப்பு வழி வகை செய்துள்ளது. சிறுபான்மை மத உரிமைகள், சாதி அடிப்படை ஒதுக்கீட்டு முறைகள், மொழி அடிப்படை ஆதிக்கங்கள் அனைத்திற்கும் ஆதிமூலமாக நம் அரசமைப்பு அமைந்துள்ளது. சோவியத் ஒன்றியம் சுவிட்சர்லாந்து, கனடா, பெல்ஜியம், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள மொழி உரிமைகளையும், இன உரிமை களையும் அரசமைப்பு வழி காப்பாற்றிக் கொள்ள நாம் தவறி விட்டோம்.

சுவிட்சர்லாந்து, தான்சானியா போன்ற நாடுகளில் உள்ளது போன்று சுழற்சி முறையை அறிமுகப்படுத்தாமல், திட்டமிட்ட வட்டார ஆதிக்கம் இடம் பெற முன்னோர் வழி செய்து விட்டனர். நமக்கு நாமே பூட்டிக்கொண்ட நம் அரசமைப்பின் விலங்கின்படி, இனிமேல் சாதிச் சிறையில் இருந்தும், மதச் சிறையில் இருந்தும், மொழிச் சிறையில் இருந்தும், இனச் சிறையில் இருந்தும், வட்டார ஆதிக்கச் சிறையில் இருந்தும் விடுபடுவோமா என்பதை எதிர்காலந் தான் தீர்மானிக்க வேண்டும். அந்த எதிர்காலத்தை நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

25 தமிழர் தம் மறுபக்கம்

தமிழுக்குப் பழைய இலக்கியப் பெருமைகள் இருப்பினும் தற்காலப் புதிய இலக்கியப் பெருமைகள் ஏனைய உலக இந்திய மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது போதிய அளவிற்கு உள்ளனவா என்பது கேள்விக்குரியது. குறிப்பாகப் பிரெஞ்சு, ஆங்கிலம், சீனம், உருசியம் ஆகிய உலக மொழி களுக்கு இணையான புதிய இலக்கிய வளமையைத் தமிழ் இன்று பெற்றிருக்கவில்லை. வங்காளம், மலையாளம், இந்தி ஆகிய இந்திய மொழிகள் இன்று சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை இலக்கியங்களில் வளர்ந்த அளவிற்குத் தமிழ்மொழி வளரவில்லை என்பது இந்திய மொழிகள் பல அறிந்த அறிஞர் களின் கணிப்பு. சுருக்கமாகச் சொல்லப்போனால், இன்றைய தமிழ்மொழியின் இலக்கியத்தரம் தேசியத் தரத்தையோ, உலகத் தரத்தையோ இன்னும் எய்தவில்லை. இந்தியாவின் நோபல் பரிசு என்று கூறத்தகும் பாரத ஞானபீட பரிசை இந்தி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் இரண்டு முறைக்கு மேல் பெற்றுள்ளன. எனினும் தமிழ் ஒரே ஒரு முறை மட்டும் பெற்று அங்கேயே நிற்கிறது.

நோபல் பரிசைத் தமிழ்ப் படைப்பாசிரியர்கள் யாரும் பெறவில்லை; அன்றியும் நோபல் இலக்கியப் பரிசுக்குப் பரிந் துரைக்கப்படும் பெயர்களில் வங்காளம், இந்தி, மலையாள மொழிப் படைப்பாசிரியர்கள் இடம் பெறும் பெருமையை —நிலையை அடையவில்லை.

அறிவியல் மொழி என்ற பார்வையில் ஆங்கிலம், செர்-மானியம், சப்பானியம், உருசியம் ஆகிய மொழிகள் இமாலய கொடு முடியை எட்டிவிட்டன. தமிழ் பரங்கிமலையின் தலையைக்கூடத் தொட முடியாமல் பாதியில் நிற்கிறது.

இக் குறைகளை எப்படிப் போக்குவது? குறைகளைப் பேசுவதைவிட, குறை நீக்க வழிகளைச் சுட்டிக் காட்ட வேண்டும் என்று அனைவரும் விழைவது இயல்பு. எனக்குத் தோன்றும் சில வழிகள் :-

1. பொருளியல்

பொருளியல் அடிப்படையில் நாம் அனைவரும் சம நிலையை அடைய வேண்டும் என்றால் தற்போதைய பணத்தை முதலாவதாக வைத்துப் பின்னப்பட்டுள்ள இந்திய அரசமைப்பை முற்றிலுமாக மாற்றியமைத்தல் வேண்டும்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனை மாற்றியமைத்து அனைத்து மக்களையும் கரையேற்றும் திட்டங்களை நெஞ்சப் பூர்வமாகக் கொண்டுவந்து, நிறைவேற்றுகிற வரையில் ஏழை, பணக்காரன், என்ற இமாலய இடைவெளி இருந்தே தீரும். அதனால் அமைதியின்மை, பொறாமை, பொய், போட்டி, திருட்டு, வன்முறை கொலை எனக் கொடுமைகள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டேயிருக்கும், அவற்றைக் குறைக்கவே இயலாது.

2. சமுதாய இயல்

சாதி, மதம், இனம் மொழி ஆகியவற்றை முன்னிறுத்திச் சலுகைகள் அளித்தும், சிறுபான்மை உரிமைகளை அளித்தும் மக்களிடையே சாதி, மத, இன, மொழி வேறுபாட்டைப் பெருக்கி நிலைப்படுத்தும் அரசமைப்புச் சட்ட விதிகளை முற்றும் தூக்கி எறிதல் வேண்டும். நாம் தமிழர், நாம் இந்தியர் என்ற எல்லைகளைக் கடந்து நாம் மனிதர், நாம் உலகச் சகோதரர்கள் என்ற மனித நேயத்தை வளர்த்தல் வேண்டும்.

3. அரசியல்

அண்ணல் காந்தியும் அவரை அடியொற்றித் தமிழ்ச் சான்றோர் டாக்டர் மு. வரதராசனாரும் (அறமும் அரசியலும்) வகுத்துக் காட்டும் கீழ் இருந்து மேல் செல்லும் (சிற்றூர் ஆட்சியில் இருந்து தில்லி அரசு ஆட்சிவரை) அரசமைப்பைத் தேர்தல்அமைப்பைஉருவாக்குதல் வேண்டும். கட்சி அமைப்பை ஒழித்தல் வேண்டும்.

தம் தாய்மொழியைப் பேச மட்டுமே அறிந்த படிப்பறிவு இல்லாத பெரும்பான்மை இந்திய மக்கள் உய்யவேண்டும். சமவாய்ப்பை எய்தவேண்டும்என்பது உளப்பூர்வமான நோக்கமாக நமக்கு இருக்குமே யானால். அந்தந்த மக்கள் பேசும் வட்டார மொழியைப் பள்ளி, கல்லூரி, அரசாங்கம், தனியார் அலுவலகம், நீதிமன்றம், கோவில், வங்கி முதலான அனைத்து இடங்களிலும் இடம்பெறச் செய்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெறச் செய்தல் மூலமே பெரும்பான்மை மக்கள் பங்கேற்கும் ஓர் உண்மையான மக்களாட்சியை நாம் உருவாக்க முடியும்.

கட்சி அமைப்பும், கட்சியைச் சார்ந்த தேர்தல் அமைப்பும், தேர்தலைச் சார்ந்த அதிகார அமைப்பும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணத்தையே அல்லது பணக்காரர்களையே சார்ந்து இருக்கு மாறு அமைக்கப்பட்டு விட்டன. இவற்றிலிருந்து விடுபட்டா லொழிய நமக்கு விடிவுகாலம் இல்லை, எனவே, இந்தக் கட்டத்தில் மிகக் கவனமாக அனைத்தையும் ஆலோசிக்க வேண்டியவர்களாக நாம் தள்ளப்பட்டுள்ளோம். சிந்தனை எண்ண அளவில் உருவாகி, கருத்தளவில் பரவிச் செயல் அளவில் உருக்கொள்ளவேண்டும். அதிகாரக் குவியல்அரசாக, காந்தியத்திற்கு எதிராக மைய அரசும், மாநில அரசுகளும் அமைக்கப் பெற்றுள்ளன. எனவே கட்சி ஆட்சிக்கு வரும் அரசினர் ஆளும் அதிகாரத்தைக் காப்பாற்றுவதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

எனவே, காவல்துறைக்கும், இராணுவத்துறைக்கும் செலவிடும் தொகை மிக அதிகமாகிவிட்டது. நம்முடைய நிதி நிலை அறிக்கையின் பெரும்பகுதி மேற்கண்ட இரண்டு துறைகளுக்கும் தான் செலவாகிறது. இந்தியா உட்பட உலகத்தின் இராணுவச்செலவு 1986இல் 90,000 கோடி ரூபாய். ஒரு நிமிடத்துக்குப் போர்க்கருவிகளுக்காக (ஈழத் தமிழர்களை அழிப்பது உட்பட) செலவாக்கப்படும் தொகை 160 கோடி ரூபாய். ஒவ்வொரு மனித சராசரி வருவாயி லிருந்து ஒரு விழுக்காட்டை அரசு, வரியாகக் கவர்ந்து அவனை அழிக்கும் போருக்காகச் செலவழிக்கிறது. எனவே, அமைதியை நோக்கிச் செல்வதை விட்டு அழிவதை நோக்கி நம் பயணம் விரைந்துசென்று கொண்டிருக்கிறது. இதில் உள்ள உண்மையை நாம் உணர்வோமாக.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

சொந்த நலனையே நாடும் 'சுக'நலம்

புகழ்பெற்ற சமூகவியல் அறிஞரும் பிரான்சு நாட்டவரு மாகிய எமில் துர்க்கேம், தன்னுடைய அரும்பெரும் படைப்பாகிய "Suicide" என்ற நூலில் பின்வருமாறு சமூகக் கட்டு ஒருமைப்பாட்டைப் பற்றி (Social Solidarity) விளக்கம் தருகிறார் :

''பிரான்சு நாட்டில் அவர் கால அளவில் நிகழ்ந்த தற்கொலையின் எண்ணிக்கையைத் தொகுத்தும், வகைபடுத்தியும் ஆராய்ந்தார். ஒரு புதிய உண்மையை அவ்வகைப்படுத்தல் மூலம் அவர் கண்டு பிடித்தார். கத்தோலிக்கக் கிருத்துவர்களைவிட, புராட்டஸ்டண்டு கிருத்துவர்கள் தற்கொலைக்கு மிகுதியாகப் பலியாவதையும், அதற்குரிய காரணங்களையும் அவர் கண்டுபிடித்து விளக்கினார். (P. 27. Region and Evaluation)

கத்தோலிக்கச் சமயத்தாரிடையே வளர்க்கப் பெறும் கூட்டுணர்வும், 'நாம் உணர்வும்' குடும்ப உணர்வும் மிகுதி. புராட்டஸ்டண்டு மதத்தாரிடையே வளர்க்கப் பெறும் ''தானுணர்வு'' (Individualism) மிகுதி. கூட்டுணர்வு இன்மையும், தானுணர்விற்கு முதன்மையும், சலிப்பை (Frustration) உண்டாக்கிப் புராட்டஸ்டண்டு மதத்தாரிடையே தற்கொலை எண்ணிக்கையை மிகுதிப் படுத்துகின்றன''[1]

நம் நாட்டில் தற்கொலை பற்றிய புள்ளிவிவரம் காட்டும் உண்மை, அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது. இந்தியாவில் புதுவை மாநிலமும், தமிழ்நாடும் தற்கொலை எண்ணிக்கையில் முன்னிலை வகிக்கின்றன. அதற்குக் காரணங்கள் பல. அவை யனைத்தும் ஆராயத் தக்கன. எனினும், ''நாம் உணர்வு''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழர்களிடையே குறைவா என்பதும், அஃதொரு காரணமா என்பதும் ஆராயத்தக்கன. சமூகக் கூட்டு ஒருமைப்பாட்டிற்கு அடித்தளமான சமுதாய உணர்வு (social awareness) தமிழரிடம் எந்த அளவு உள்ளது என்பதும் ஆராயத் தக்கது. இதுபற்றிப் புதுவையை மையமாகக் கொண்டு கள ஆய்வும், அதனை யொட்டித் தமிழர்தம் தற்கொலைப் பண்பாட்டு வரலாற்று நிலையும் கணிக்கப் பெறும்.

புதுச்சேரி நகரில் மக்கள் மிகுதியாக நடமாடும் மருத்துவ மனை, கடைவீதி, நகரச் சந்தை, கடற்கரை, பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் கள ஆய்வு மேற்கொள்ளப் பெற்றது. இரண்டு இளைஞர்களை ஒருவருடன் ஒருவர் போலியாக வாய்ச் சண்டையும், கடுமை இல்லாத கைகலப்பும் செய்யுமாறும் அப்போது அவ்வழியே செல்லும் பொது மக்களின் தலையீட்டைக் கணிக்குமாறும் பணிக்கப் பெற்றது. அந்த அடிப்படையில் கிடைத்த தகவல்கள் :

1. பொதுவாக ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளும் போது மற்றவர்கள் தலையிடுவது இல்லை; ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

2. சில மணித் துளிகள் கழித்துச் சண்டை தொடர்ந்து நிகழும் நிலையிலும் கூடப் பக்கத்திலிருந்தும், சுற்றி யிருந்தும் மக்கள் வேடிக்கை பார்ப்பது மிகுதியாக உள்ளது.

3. ஒரு சில இடங்களில் சற்று நேரம் கழித்துத் தலை யிடுபவர் பெரும்பாலோர் இளைஞர்களாக உள்ளனர்

4. இவ்விளைஞர்களும் நூற்றுக்கு 99% விழுக்காடு உள்ளூர்க்காரராக இருப்பது இல்லை. அயலூர்க் காரர்களாகவே உள்ளனர்.

5. பெண்கள் சமாதான முயற்சியில் இறங்குதல் இல்லை.

6. முதியவர்களும் தலையிடுவது இல்லை.

7. **போலீஸ்காரர்களும் தலையிடுவது இல்லை.**

8. இருவரிடையே சண்டை நிகழ்வதைப் பார்த்துக் கொண்டிருந்த 'ஹோம் கார்டு' ஒருவர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''ரோட்டில் நின்று சண்டை போடுகிறீர்களே; ஓரமாக ஒதுங்கிப் போய், சண்டை போடுங்கள்'' என்று சண்டை போடுவோரிடம் தெரிவித்து இருக்கிறார்.

9. சுற்றியுள்ள கடைக்காரர்களோ அல்லது வேடிக்கை பார்ப்பவர்களோ சமாதானம் செய்ய ஏன் முயலவில்லை என்று அருகில் உள்ளவர் களிடையே வினாவியபோது, அவர்கள் அளித்த விடைகள் வருமாறு:

1. நமக்கு எதற்கு வம்பு என்று விடை அளித்த வர்கள் பலர்.

2. அது வேலையில்லாதவனுடைய வேலை; நம் முடைய வேலை இல்லை.

3. ''எப்போதும் அப்படித் தாங்க; யாராவது சண்டை போட்டுக் கொண்டு இருப்பாங்க, நம்ம வேலையை விட்டுவிட்டு அதிலே போய்த் தலையிட முடியுமா?'' என்ற மனப்போக்கு.

மேற்கண்ட தகவல்களிலிருந்து நாம் கருத வேண்டியன வருமாறு:

1. யார் அடித்துக் கொண்டால் என்ன, நமக்கும் அவர் களுக்கும் என்ன தொடர்பு என்று கருதுகிற மனப்போக்குத் தமிழர்களிடம் மிகுதியாக உள்ளது. (தொடர்பு என்பது இங்கே அழுத்தமாகக் கருதத் தக்கது).

2. சிற்றூர்—உறவுப் பண்பாட்டை, கிராமியச் சகோ தரப் பண்பாட்டை நகர்ச் சார்பாலும், பொருள் நோக்குப் போக்கின் (Material Culture) பாதிப்பாலும் இழந்து வரும் தமிழர்கள் அடுத்தவர் நலம், பொதுப்பணி, பொதுத் தொண்டு ஆகியவற்றிலிருந்து வெகு தூரம் விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

3. இந்த எண்ணத்தின் பாரித்த ஆபத்து வடிவமாகப் பொதுப்பணிக்கெனவே அமர்த்தப்பட்ட காவலர்களும் இது போன்ற தகராறுகளிலிருந்து விலகி இருக்கவே விரும்பு கிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. சாகிற அளவிற்கு ஒருவருக்கு ஏதேனும் நேர்ந்தால் கூட அதில் தலையிடாது ஒதுங்கி இருக்கின்ற கொடும் தன்னலப் போக்கு மிகுந்து வருகிறது என்பதற்கு அண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒரு சான்று :

எங்கள் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் பகுதிநேரப் பிஎச். டி. பட்டத்திற்கு ஆய்வு செய்து வந்தார் ஆர்வமிக்க இளைஞர் ஒருவர். ஒரு நாள் தம் வேலையை முடித்துக்கொண்டு தமக்குரிய மொபட்டில் தம் இல்லம் நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது, கம்பன் நகர்—விழுப்புரம் சாலையில் பேருந்தால் அடிபட்டுத் தலை நசுங்கி இரத்தம் கொட்டோ கொட்டு என்று கொட்டக் கீழே மயங்கி விழுந்து கிடந்துள்ளார். நேரில் பார்த்தவர்கள் அனைவரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, அவரைத் தொடவோ, தூக்கவோ செய்யவில்லை. ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவரை அறிந்த ஒருவர் அவர் வீட்டிற்குச் செய்தியைத் தெரிவிக்கவே, அந்த இளைஞனுடைய மனைவி இரண்டு குழந்தைகளின் தாய் — ஓடிவந்து தம் கணவரை அள்ளி ரிக்சாவில் வைத்து, மருத்துவமனையில் சேர்த்து இருக்கிறார். மருத்துவமனையில் சேர்த்த நான்காவது நாளே (நாள் : 29-12-1888) அந்த இளைஞர், தம் மனைவியையும், இரண்டு குழந்தைகளையும், எங்களையும் விட்டுவிட்டு இறந்து போய்விட்டார்.

அவருக்கு மருத்துவம் செய்த மருத்துவர் சொன்னது :

''விபத்து நடந்த உடனேயே அவர் மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டிருந்தால் அவர் பிழைத்து இருக்கக் கூடும்'' என்பதாகும். தமிழர்கள் கண்ணுக்கு முன்னேயே நடக்கும் கொடும் சாவைக் கூடப் பார்த்துக்கொண்டிருக்கும் அளவிற்குக் கல்லாகிப் போய்விட்டார்கள் என்பதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே போதும்.

இதனைப் போலவே பக்கத்து வீடுகளில் திருட்டு நடக்கும் போது பார்த்துக் கொண்டிருப்பதும், பக்கத்து வீட்டில் கொலை நிகழ்ந்தால் கூடப் பார்த்துக்கொண்டிருப்பதும் இது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்ற எத்தனையோ நிகழ்ச்சிகள் இதழ்களில் வந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாட்டு நகரங்களில் தெருவில் பலர் முன்னிலையில் எத்தனையோ பேர் அடித்துக் கொண்டிருப்பதைக் கண்ணால் காணலாம். பலர் அறிய நகைப் பறிப்பும், பணப் பறிப்பும் நிகழ்வதையும் காண்கிறோம்; கேட்கிறோம்; படிக்கிறோம்.

தமிழில் வெளியாகும் திரைப்படங்களைக் கவனிப்போர் ஒன்றை ஆழ்ந்து கவனித்து இருக்கலாம். கதாநாயகனுக்கும், வில்லனுக்கும் சண்டை நிகழும், அல்லது கதாநாயகனுக்கும் வில்லன் கூட்டத்திற்கும் இடையே சண்டை நிகழும். இச் சண்டை பலர் முன்னிலையில் நிகழும். அனைவரும் சுற்றி இருந்து வேடிக்கை பார்ப்பது போலக் கிட்டத்தட்ட எல்லாத் திரைக் காட்சிகளிலும் காட்சிகள் காட்டப்படுவதைக் கண்டிருக்கலாம். சண்டைக்குக் காரணமாக இருந்த கதா நாயகி கூடத் தொலைவிலிருந்து கைகளையும், கால்களையும் உதறிக்கொண்டு பயந்த பார்வையுடன் அடிபட்டுக் கொண்டிருக்கும் தன் காதலனைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் திரைக் காமிராக்கள் மிக அருமையாகப் படம் பிடித்துக் காட்டுவதை நீங்கள் பார்த்து இருக்கலாம். பக்கத்தில் உள்ளவர்கள் பொறுத்துப் போகும் மன நிலையை இக்காட்சிகள் வளர்ப்பது தெளிவு. இதுவே காலப்போக்கில் அநீதிகளால் தாமே பாதிக்கப்படுகிறபோது, அனுபவித்துப் பொறுத்துப் போகிற நிலையாக வளர்ந்துவிட்டதை; வளர்க்கப்பட்டு விட்டதைத் தமிழக மாநிலங்களில் வளர்ந்துள்ள இலஞ்ச வாழ்வு தெளிவுபடுத்துகிறது.

கட்டபொம்மன் முதலான நாட்டு நலத்திற்காகத் தம்மை காணிக்கை ஆக்கிக் கொண்டோர், பொது இடங்களில், ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்ட போது கிளர்ச்சி எதுவும் தோன்றாமையும் கருதத் தக்கது. அடுத்த வீட்டுத் தீயை அணைக்காதபோது, அந்தத் தீ தம் வீட்டையும் அழிக்கும் என்பதை மக்கள் மறந்து விட்டார்கள். அதன் விளைவை அவர்கள் இன்று நுகர்கிறார்கள்,

மொழி அடிப்படையிலோ, இன அடிப்படையிலோ மனிதன் என்ற பொது அடிப்படையிலோ போர் இயக்கம் எதனையும் தமிழ்நாட்டில் கட்டி எழுப்ப முடியாமல் போனமைக்குக் காரணம்: தமிழர்களிடம் தொடர்ந்து வரும் சமுதாய விழிப்புணர்வு இன்மையும், சமூகக் கட்டு ஒருமைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டு உணர்வு இன்மையும் ஆகும். இதற்குரிய வித்து இன்றைய அரசியல் சூழலில் மட்டும் அன்று; திரைப்படக் காட்சிகளில் மட்டும் அன்று; நம் வரலாற்றிலேயே விதைக்கப் பெற்று; வளர்க்கப்பெற்று முள் மரமாகச் செழித்து விட்டதை ஒரு சில சான்றுகளின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

1. இரண்டுஅரசர்களிடையே போர் வருகிறபோதுஇரண்டு அரசக் குடும்ப மக்களும், குடும்பத்தினரும் தம் வீட்டில் உள்ள ஆண் மக்களைப் போருக்கு விடுத்து வைப்பதைப் பழைய இலக்கியங்கள் காட்டுகின்றன. வீட்டிற்கு ஓர் ஆண் என்ற பங்களிப்பு முறை நின்றது. குடும்பம் ஒவ்வொன்றின் பங்களிப்பும் பங்கேற்பும் (Participation & Involvement) நிகழ்ந்த போர் முறை சிதைந்து, போர் வீரர்கள் (சத்திரியர்கள்) மட்டும் போரில் பங்கேற்பது என்ற நிலை தோன்றியது. இவ்வாறு தனிமைப்பட்ட நிலையில் பொது வாழ்வில் பொது மக்களின் பங்கேற்பும் பங்களிப்பும் சங்க காலத்தை ஒட்டியே நின்று போய்விட்டதைத் தமிழர் வரலாறுகள் காட்டுகின்றன,

ஒண்டிக்கு ஒண்டிச் சண்டை இடுவதையும், சண்டை செய்வதையும், மற்றவர்கள் அதனைப் பார்த்துக்கொண்டு இருப்பதையும், அதன் முடிவைக் கொண்டே அரச முடிவை மேற்கொள்வதையும் பாரியின் நிலை நமக்குக் காட்டுகிறது.

2. கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டுக் கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடம் நீதி கேட்கச் செல்லுகிறபோது குமுறி உரைப்பன :

> ''பெண்டிரும் உண்டுகொல்
> பெண்டிரும் உண்டு கொல்'' என்றும்
>
> ''சான்றோரும் உண்டுகொல்?
> சான்றோரும் உண்டுகொல்'' என்றும்

கதறுவன நம் கவனத்திற்கு உரியன. அவள் கூவி அழைத்த பிறகும் கூடக் கண்ணகியின் கண்ணீர் காரணத்தைக் கேட்கப் பெண்டிரோ, சான்றோரோ முன் வரவில்லை. வாயால் விசாரிக்கவே வாராதபோது, செயலால் நீதி கேட்க யார் வந்திருக்க முடியும்? அவளே நீதி கேட்டு, அவளே தீர்ப்பும் வழங்குகிறாள். கண்ணகி போன்ற துணிச்சலும், நகரையே தீக்கிரையாக்கும் ஆற்றலும் இல்லாத பாமரர்களின் அன்றைய அவல நிலையைக் கண்ணகி வாழ்க்கை மறைமுகமாக நினைவூட்டுகிறது.

த.—2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. கோவலனின் மகள் மணிமேகலை ஆவாள். கோவலன் இறந்த பிறகு, செப்புச் சிலையான மணிமேகலையைப் புத்த மதத்தில் சேர்க்கிறாள் மணிமேகலையின் தாயாகிய மாதவி. ஒரு நாள் புதிய மலர்கள் பறித்து வருவதற்காக உவவனம் என்ற பூங்காவிற்குத் தன் மகளையும், அவளுடன் தோழி சுத மதியையும் அனுப்புகிறாள் மாதவி. மணிமேகலையும் சுதமதியும் பூங்காவிற்கு மலர்கள் பறிக்கச் செல்லுகின்றனர். மணிமேகலையின் மேல் மையல் கொண்ட சோழ அரசனின் மகன் உதயகுமாரன் மணிமேகலையைக் கடத்திவர நினைக் கிறான். அவன் கூறுவதாவது :

ஆங்கவள் தன்னையென் அணித்தேர் ஏற்றி
ஈங்கியான் வருவேன் என்று

உதயகுமரன் வஞ்சினம் கூறி மணிமேகலையைத் துரத்து கிறான். உதயகுமாரன் மணிமேகலையைத் துரத்திக்கொண்டு தேரில் வருகிறான் என்பதை அவன் தேர் ஓசை மூலம் உணர் கிறாள் தோழி சுதமதி. உடன் அவனிடம் இருந்து மணி மேகலையைக் காப்பதற்காக மணிமேகலையைப் பூங்காவில் உள்ள பளிங்கு அறையில் மறைந்து கொள்ளச் செய்கிறாள். அங்கு வந்து சேர்ந்த உதயகுமாரனுக்கும், சுதமதிக்கும் கடுமையான வாக்குவாதம் நிகழ்கிறது. யாரும் தலையிடுவார் இல்லை. கடைசியில் பளிங்கு அறை மண்டபத்தில் மயங்கி விழுந்த மணிமேகலையை மணிமேகலா தெய்வம் காப்பாற்றி மணிபல்லவத் தீவிற்குக் கொண்டு செல்வதாக 'மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை' விளக்குகிறது.

இது போன்று பொது இடத்தில், நிகழும் அவல நிகழ்ச்சி களிலும் கூடப் பலர் பார்வையாளர்களாக இருந்து வந்துள்ள னர் என்பதைச் சுதமதியின் சொந்த வரலாறும் காட்டுகிறது. சுதமதியே தன் சொந்த வரலாற்றை எடுத்துரைக்கிறாள். (மலர்வனம் புக்க காதை).

''பூங்கா ஒன்றில் மலர்களைக் கொய்து கொண்டிருந் தேன். அப்போது இந்திர விழா நடந்து கொண்டிருந் தது. அவ்விழாவிற்கு வந்த மாருதவேகன் என்ற விஞ்சையன் என்னைக் **கடத்திச்** சென்று விட்டான். நானும் அவன் விருப்பத்திற்கு இசைய நேர்ந்தது; என்னை நுகர்ந்த பின்னர் என் ஊராகிய சண்பை என்ற ஊருக்குப் பல கல் தொலைவில் என்னைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்னந்தனியாக விட்டு விட்டு அவன் சென்று விட்டான்''.

மேற்கண்ட இரண்டு நிகழ்ச்சிகளும் அரச குமாரர்களும், 'தேவ குமாரர்களும் எப்படி நடந்து கொண்டனர் என்பதைக் காட்டுகின்றன. அதனுடன் இரண்டு நிகழ்ச்சிகளும் நிகழ்ந்த இடம் பூங்கா ஆகும். பலரும் வந்திருந்து பேசி உசாவுகின்ற பொது இடமாகும். அப்பொது இடத்தில் மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்பதிலிருந்து நம் முன்னோர்களுடைய பழைய சமூக உணர்வின் பங்களிப்பை உய்த்துணரலாம்.

அடுத்தவனுக்கு என்ன நேர்ந்தால் என்ன என்ற மனப் போக்கு, அடுத்த வீட்டில் என்ன நடந்தால் என்ன என்ற மனப்போக்காகி, அடுத்த தெருவில் என்ன நடந்தால் என்ன என்ற மனப்போக்காகத் தழைத்து, முடிவில் என்ன நடந்தால் என்ன என்ற முழுச் சுயநலப் போக்காகச் சுருங்கிவிட்டது.

இந்தப் போக்கே யார் ஆண்டால் என்ன? இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்று தன்னை ஆளும் அரசாட்சியிலிருந்து தன்னையே அந்நியப் படுத்திக்கொள்ளும் போக்காகத் தமிழகத்தில் வளர்ந்து விட்டது.

இந்தப் போக்கே வேறுவேறு அயல் ஆதிக்கங்கள் எளிதாகத் தமிழரை ஆதிக்கம் கொள்ளவும், அடக்கவும் வாய்ப்பாகவும் வசதியாகவும் வழிவிட்டது எனலாம்.

நம்மைச் சரியாக மதிப்பிட்டுக் கொள்ள ஒரு சான்று நிகழ்ச்சி: கடை வணிகர் ஒருவர் விளம்பரத்திற்காக ஒன்றைச் செய்கிறார். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றே ஒன்றை வரும் ஞாயிறு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பூங்கா, சந்தை, அல்லது பேருந்து நிலைய வாயிலில்— ஏதாவது ஒன்றன் வாயிலில் வைத்து விடுகிறார். முதலில் பெட்டியைத் தொடுபவர் இலவசமாக எடுத்துக் கொள்ள லாம்.

நம் மக்களின் அக்கறை எவ்வளவு இருக்கும்? கற்பனை செய்து பாருங்கள்.

இன்னோர் அறிக்கை : பொது நலத் தொண்டர் ஒருவர் பொதுவிடத்தில் கிடக்கும் அனாதைப் பிணத்தை எடுத்துச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்ல ஞாயிறு மாலை 4 மணிக்கு வருமாறு அழைப்பு விடுகிறார்.

நம்மில் எத்தனை பேர் கூடுவோம்?

நாம், நம் வீட்டில் நம் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதை விரும்புவதில்லை; குறுக்கிடுகின்றோம்: விலக்கி வைக்கிறோம். ஒருவர் ஒருவர் மேல் பகை கொள்ள, பழி வாங்க நாம் கோள்மூட்டி ஊக்குவதும் இல்லை; தூண்டுவதும் இல்லை. காரணம் அவர்கள் ''**நம்**'' பிள்ளைகள் என்ற நாம் உணர்வு.

இவ்வுணர்வுடன் நாம் ஒரு நிகழ்வுகளில், ஊர் நிகழ்வுகளில், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை. இங்கே நாம் நம்மையே அந்நியப் படுத்திக் கொள்கிறோம். நமக்கு நாமே வேலி அமைத்துக் கொள்கிறோம். கட்டப்படும் ஒவ்வொரு வேலியும், எழுப்பப்படும் ஒவ்வொரு சுவரும் நம்மை மற்றவரிடமிருந்தும் மற்றவற்றிடமிருந்தும் அந்நியப் படுத்துகின்றன. நானுணர்வு கருவுறும் இடமும், நாமுணர்வைக் கருவழியும் இடமும் இதுதான்.

நாம் உணர்வுக் குறைப்பாலும், நானுணர்வுத் தழைப்பாலும் இழப்பு அவரவர்க்கே; அவரவர் குடும்பத்திற்கே; அவரவர் கூட்டத்திற்கே. பணம், அதிகாரம் அவை வழி நலனை முதன்மையாகக் கொண்டுள்ள அரசைஆளுவோர்க்குப் பணமுடையார்க்குப் பொது மக்களிடையே நாமுணர்வுக் குறைவு நன்மை அளிப்பதாகும்.

நான்கு மாடுகள் சேர்ந்திருப்பதை விடப் பிரிந்திருப்பது தான் சிங்கத்திற்கு நன்மை. ஒரு மாட்டைச் சிங்கம் அடித்துக் குதறித் தின்னும்போது அடுத்த மாடு ''நல்லா வேணும்; சாகட்டும்'' என்று தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருக்கும். அடுத்த நாளில் அடுத்த வேட்டை தான்தான் என்பதை மறந்திருக்கும்; அறியாதும் இருக்கும்.

பண நோக்கும், போட்டிச் சமூக அமைப்பும், அரசும் ஆளுமையும், மனிதர்கள் மேலும் மேலும் தனித் தீவாகப் போவதையே விரும்புகின்றன; விரும்பும்.

இதனால்தான் காவலர்களே இல்லாத சமுதாயத்தையும், அனைவரும் அவரவர்க்கும், அடுத்தவர்களுக்கும் காவலன் என்ற நிலையையும் கோட்பாடாகச் சீனா போன்ற நாடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் உருவாக்கியுள்ளனர். தமிழரிடையே இது போன்ற சமுதாய உணர்வையும், கூட்டு உணர்வையும் சமூகக் கட்டு ஒருமைப்பாட்டையும் சரிவரக் கட்டி எழுப்பாமல் போனால், தமிழர்களுக்குரிய வீழ்ச்சி வெகு தொலைவில் இல்லை; மிக அண்மையில் இருக்கிறது. அதற்கும் நீண்ட காலம் ஆகாது; குறுகிய காலத்திலேயே அது நிகழ்ந்துவிடும்.

நன்றி

இக்கள ஆய்விற்குப் போலிச் சண்டையிட்டுக் கொண்ட புதுவைப் பல்கலைக் கழக எம். ஏ. மாண வர்கள் திரு. பழனிவேலு, திரு. புகழேந்தி, திரு. இளங்கோ ஆகியோர்க்கும், சண்டைக் காட்சிகளையும், மக்களின் போக்கையும் நேரில் கண்டு குறித்து வந்து உதவிய புதுவைப் பல்கலைக் கழக தமிழியல் துறை முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்கள் திரு. பாரதிதாசன் செல்வராசு, திரு. சிலம்பு செல்வராசு ஆகியோர்க்கும்.

பின்னிணைப்பு

மணக்குள விநாயகர் கோவில்

குறைந்தது	:	20 பேர்
ஆண்	:	12 பேர்
பெண்	:	8 பேர்
தம்பதியர்	:	3 பேர்

சிலர் : ''ஆம்பிள தானே இடிச்சிக்கினதுக்குப் போயி சண்டை போடுகிறாங்களே'' இவ்வாறு சிலர் பேசினார்கள்.

தம்பதியர்கள் ஆண் தன் துணையைக் கவனமாக அழைத் துக்கொண்டு ஓரமாக ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருத்தல்.

20 வயதிலிருந்து 35 வயது வரை உள்ளவர்கள் 15 பேர்; 40 வயது மதிக்கத்தக்கவர்கள் 4 பேர்.

25 வயது மதிக்கத்தக்க இளைஞன் சண்டை போட்ட இரு வரையும் சமாதானப் படுத்தி விடல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(சமாதானப் படுத்திய இளைஞர் எதிரில் தேங்காய் பழம் பூ வத்தி வைத்து வியாபாரம் செய்பவர்).

ஒருவர்கூட (இளைஞனைத் தவிர) ஏன் கோயிலின் வாசலில் சண்டையிடுகிறீர்கள் என்று கேட்கவுமில்லை. அதில் தலையிடவுமில்லை. அவரவர்கள் வேலையை அவரவர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எந்தவிதமான பரபரப்பும் அங்கு நிலவவில்லை. அவர்களின் வழிபாடு என்னவோ? அவர்கள் என்னவோ? இவ்வாறு பிறரைப் பற்றிய பொறுப்பு இன்மை அங்குக் காணப்பட்டது.

மருத்துவமனை

சுற்றிலும் குறைந்தது 15 பேர்.

மிதிவண்டியிலிருந்தபடியே சண்டை. அதனால் ஒருவருக்கொருவர் வாயளவில் திட்டிக்கொண்டே யிருந்தனர். பாதுகாப்பிற்கு நின்றிருந்த ஊர்க் காவல் படையினர் (ஹோம் கார்டு) வந்து அப்புறப்படுத்தினர். ஏனையவர்கள் ஓரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். எவரும் நெருங்கவில்லை.

ஹோம் கார்டு

அடித்துக் கொள்கிறவஙுங்க அப்பாலே போய் அடிச்சிக்கக் கூடாது. ரோட்டிலே டிராபிக்க எடைஞ்சல் பண்றானுங்க. (வண்டிகளுக்குத் தடங்கலாக இருப்பதால் தான் இவர் அப்புறப்படுத்தினார்.)

மிதி வண்டிகளைப் பாதுகாப்போர்

நானும் ஒதுங்கிதான் பார்த்துக்கிட்டிருந்தேன். நான் போய் மறிச்சா இங்க வர்ற சைக்கிளுக்கு யாரு டோக்கன் கொடுப்பாங்க.

(வியாபாரம் பாதிக்கும் என்பதால் இவர் செல்லவில்லை என்பது இவரைத் தனியே பேட்டி காணும்போது தெரிந்தது)

காந்தி சிலை (கடற்கரையோரம்)

மூன்று இணைத் தம்பதியர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் நேரு சிலையைப் பார்த்தபடி. அவர்களுடன் வயதானவர்கள் 4, 5 பேர் இருந்தார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐஸ் விற்பவர், சுண்டல் விற்பவர் இருந்தார். மற்றும் 20க்கு மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள், இளையவர்கள் இருந்தார்கள்.

இந்த இடத்தில் ஐயங்கார் இளைஞர் (23 வயதிருக்கும்) மறித்து விட்டார். உடன் சுண்டல் விற்கும் (20 வயதிற்குள்) இளைஞரும் இருந்தார்.

55 வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவரும் விரைந்து வந்து மறித்து விட்டார். (இவர் சென்னையைச் சேர்ந்தவர்.) மற்றவர்களெல்லாரும் கவலையின்றி உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

பெரியவர்

காலம் அப்படிப்பா! இப்பல்லாம் எதுக்குத்தான் அடிச்சிக் கணும்னு இல்லப்பா. ஒரு தம்பி பொறுமையாயிருந்தது. அதுக்குத்தான் நன்றி சொல்லணும். அந்தப்புள்ள கூடத் தப்பான புள்ள மாதிரி தெரியல. ஆனால் அந்த மாதிரி செஞ்சுது.

நான் சண்டை போட்டுக்கணா விட்டுட்டுப் போக மாட் டேன். உனக்கென்ன, நீ பாட்டுக்கினு போ என்னுவாங்க அவ்வளவுதான். இதுக்கெல்லாம் கவல படக்கூடாது.

கடைத்தெரு (மகாத்மா காந்தி வீதி)

சுற்றியிருந்த கடைகளிலுள்ளோர் கடைகளில் வாயிற் படியில் நின்றபடி பார்த்தல்.

குறைந்தது 50 பேருக்குமேல் கூடிவிட்டார்கள். அதில் ஒரு இளைஞர் மட்டும் துணிந்து முன் வந்து தடுத்தார்.

'பேண்ட்டும் சர்ட்டும் போட்டுக்கினு இருக்கிறீங்க விட்டுக் கொடுத்துப் போக முடியல' என்று சொல்லிக் கொண்டே வேகத்துடன் இழுத்து விட்டார். அதன்பின் வேறொரு இளைஞன் அருகில் வந்தார். அவர் எதுவும் பேச வில்லை.

இதற்குள் மகாத்மா காந்தி சாலையும் நேரு சாலையும் சந்திக்குமிடத்தில் இருந்த காவலர் இங்கே யார் சண்டை போட்டது? என்று கேள்வி கேட்டுக் கொண்டே வந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதற்குள் கூட்டம் கலைந்துவிட்டது. அந்த வாலிபர் (22 வயது) தஞ்சையைச் சேர்ந்தவர் என்பதும் முத்துவேலு என்பதும் தெரியவந்தது, கடைக்காரரிடம் கேட்டபோது.

கடைக்காரர்

அங்கிருந்த கடைக்காரர் இது என்னா சண்டை, போன வாரம் 2 பேர் கராத்தே சண்டை போட்டாங்க. சுற்றிலும் கூட்டம் வட்டமா நின்று வேடிக்கை பார்த்தது. சுமார் 10 நிமிடம் பயங்கரமான க்ராத்தே சண்டை போலீசுக்காரங் களும் பேசாம நின்று வேடிக்கை பார்த்தாங்க. கடைசியா ஒருத்தன்கீழே விழுந்திட்ட பிறகு போலிசுகாரங்க 2பேரையும் ஸ்டேசனுக்கு இழுத்துக்கினு போனாங்க.

(பொதுவாக அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு அவரவர் இருந்தார்கள்.)

1. மணக்குள விநாயகர் கோவில்

மாலை 6.00

கூட்டம் சுமார் 15 பேர்கள்

விலக்கியவர் — ஒருவர் — வயது சுமார் 25

மற்றவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்

சிலர் கவனிக்கவே இல்லை.

விலக்கியவர் கூற்று:

எப்படி நம்ம வேலை என்று பெருமைப்பட்டுக்கொண்டார் தம் நண்பரிடம்

2. மருத்துவமனை

மாலை 6.15

1. கூட்டம் சுமார் 15 பேர்களுக்கு மேல்

ஹோம் கார்ட் விலக்கினார்

2. கார்கள் நிற்குமளவிற்குப் போககுவரத்துக்குத் தடை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேடிக்கை பார்த்தோர் கூற்று:

1. சைக்கிள் டோக்கன் கொடுப்பவர்-என் வேலை என்னாவது-இதனைப் பார்த்தால்.

2. (வயது 30) கைகலப்பு வந்தபிறகாவது தடுக்கலாம்.

3. கடற்கரை

மாலை—6.35

1. கூட்டம் சுமார் 50 பேர்களுக்குமேல்

2. விலக்கியவர் மூவர்—ஒருவர் ஐஸ் விற்பவர் (25)

3. மற்றவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். பலர் கவனிக்கவே இல்லை.

4. மார்க்கெட்

இரவு — 7.45

1. கூட்டம் சுமார் 20 பேர்

2. விலக்கியவர் இளைஞர் (25) இருவரையும் மிக அதிகமாகக் கடிந்து கொண்டு விலக்கிவிட்டார்.

3. ஒருவர் கூற்று: சென்ற வாரம் 10 மணித்துளிகள் சண்டை (கராத்தே) காவலர் முதற்கொண்டு வேடிக்கை பார்த்த பின்னர் இறுதியில் பிடித்துச் சென்றனர்.

ஐயங்கள்

1. முரடர்கள் சண்டையிடும்போது இவர்கள் நிலை தெரிதல் வேண்டும்.

2. சண்டையிட்ட இருவரும் நாகரிகர் எனவே விலக்கத் துணிவு வந்திருத்தல் வேண்டும்

3. ஆயுதங்கள் பயன்படுத்தும் போது இவர்கள் நிலை?

1. நம் மக்களிடம் சமுதாய உணர்வு முழுவதும் இல்லையென்று கூறிவிட முடியாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''துஷ்டரைக் கண்டால் தூர விலகு'' என்ற பழமொழி மக்கள் மனதில் பதிந்துள்ளமையே இதற்குச் சரியானதொரு காரணமாகும்.

2. நம் மக்களிடம் ''மானம்'' என்ற சொல்லிற்கான பொருள் குழப்ப நிலையில் உள்ளது. இதுவே அவர்தம் ''போர்க் குரலு''க்குத் தடையாக உள்ளது. தம் உறவினன் ஒருவன் ஏதேனும் சிக்கல்களில் இடர்படினும், அவரை அவ்விடத்திலேயே காக்காமல், மறைவிடத்தில் கண்டிக்கும் தமிழர் தம் நிலைக்கும் 'மானம்' என்ற சொல்லின் உண்மைப் பொருள் புரியாமையே காரணமாகும்.

தமிழரிடம் சமூக உணர்வு இல்லை என்று கூறிவிட முடியாது. பொருளாதார ஏற்றமும், கல்வியும் இதற்குத் தடையாக இருக்கின்றனவோ என எண்ண வேண்டியுள்ளது. நிகழ்த்திய ஆய்வில் கிடைத்த அனுபவத்தில் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்பவர்களே முன் வந்து சமாதானம் பேசினர். இவர்களில் யாரும் 10ஆம் வகுப்பிற்கு மேல்படிக்க வில்லை என்பதை நோக்கும்போது கல்வி இதற்குத் தடையாக உள்ளதோ என நினைக்க வேண்டியுள்ளது.

ஆய்வு நிகழ்த்தப்பட்ட இடங்களில் பெற்றவை!

1. பிள்ளையார் கோவில்

கோவில் வாசலிலேயே சண்டை நடைபெற்றது. தடுத்து விட யாரும் இல்லை. சுற்றிலும் 15 அல்லது 20பேர் ஆண்களும் பெண்களுமாக நின்றிருப்பர். எங்களின் எதிரே சாமி கும்பிட்டு விட்டு 'உண்டியலில், பணம் போட்டனர். ஒரு தம்பதியர். அங்குப் பழக்கடை வைத்திருந்த இளைஞர் தலை யிட்டே எங்களை விலக்கினார்.

'கோவிலுக்கு வந்திருக்கிறீர்கள் இங்குக் கூடவா விட்டுக் கொடுத்துப் போகக் கூடாது' என்பதே அவரது வார்த்தைகள்.

2. மருத்துவமனை

மருத்துவமனையின் எதிரில் சைக்கிளால் இடித்துக் கொண்டோம். அங்கு இருந்த ஊர்க்காவல் படையினரைத் தவிர வேறு யாரும் விலக்கவில்லை. எங்களுக்குப் பின்னால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதன் 'நான்' உணர்வால்

விலக்கப்பட்ட / விலகிய நிலை



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓர் ஆட்டோரிக்ஷாவும் ஒரு மகிழ் உந்தும் வழி கேட்டு நின்றிருந்தன. விலக்கிவிட வந்தவனும் ரோட்டில் சண்டை போட்டுக் கொள்கிறீர்களே ஓரமாய் நின்று சண்டை போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறியே விலக்கினார்.

3. கடற்கரை

ஐஸ் வண்டிக்காரர்கள் மட்டுமே தலையிட்டு விலக்கினார்கள். இருவரும் வெளியூர்க்காரர்கள் எதற்காகச் சண்டையிடுகிறீர்கள் விட்டுக் கொடுத்துப் போகக் கூடாதா எனக் கேட்டார். 60 வயது மதிக்கத்தக்க பணக்காரர் ஒருவர் 'ஒழியிது விடுப்பா' என்று சொன்னதோடு விட்டுவிட்டார். ஆனால் ஐஸ் வண்டிக்காரர்கள் இருவரும் பிரிந்து செல்லும் வரை இடையில் நின்று சமாதானம் செய்தார்கள்.

4. கடைத் தெரு

பாட்டா செருப்புக் கடையின் எதிரில் நிகழ்ந்தது ஏறக்குறைய 25 பேருக்கு மேல் சுற்றி நின்றிருப்பர் யாரும் சமாதானம் செய்ய வரவில்லை. சண்டை கொஞ்சம் வேகமாகவே, 26 வயது இளைஞர் ஒருவர் இருவரையும் தடுத்து நிறுத்தினார். இருவரையும் திட்டினார். அவரது வார்த்தைகள் பேண்ட் போட்டுகிட்டு இருக்கீங்க. படிச்சவங்க போல இருக்கீங்க உங்களுக்கு இதெல்லாம் அசிங்கமாத் தெரியல, எவ்வளவு பேர் உங்களைப் பார்க்கிறாங்க. கொஞ்சங்கூட ஓங்களுக்கு அறிவில்லை என்றவைகள் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

ஒற்றுமை கூடாது என்ற கோட்பாடு

ஒற்றுமை இன்மை என்பது மனித இனத்தின் பொதுக் குணங்களுள் ஒன்று. உலக மக்கள் இன வரலாற்றை உற்றுப் படிக்கிறவர்க்கும், பார்க்கிறவர்க்கும் இந்த உண்மை தெளிவாகப் புலப்படும். எனினும், சமுதாயத் தோற்றத்திற்கான காரணங்களை ஆராய்கிறபொழுது இந்த ஒற்றுமை இன்மைக் குணம் ம்னித இனத்தில் குறைதல் வேண்டும் என்ற வேட்கை தோன்றும். ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கிற சிக்கலான சமுதாய உறவுமுறைத் தொடர்புகளைத்தான் சமுதாயம் என்கிறோம். இரண்டு அல்லது மேற்பட்ட மனிதர்கள் ஒருவர் இருப்பதை மற்றவர் உணர்ந்து தங்களுக்கிடையே பொதுவான எதுவோ ஒன்று இருப்பதைக் கண்டு அதன் வழி ஏற்படுத்திக் கொண்ட தொடர்பே சமுதாயத் தொடர்பாகும். இதனைச் சமூகவியல் அறிஞர்கள் வகை உணர்ச்சி (Consciousness of Mind) என்றும், நாம் உணர்ச்சி (We Feeling) என்றும் குறிப்பிடுவர். எனவே, சமுதாய வாழ்க்கை என்பது அதன் வளர்ச்சியுள்ள முறையில், பரிமாற்றச் செயல்களாகவும், தன்னலத்தைத் தாண்டிய முறையில் விட்டுக் கொடுக்கவும் பெற்றுக் கொள்வதுமான ஒரு நடவடிக்கை முறையாகும். அதன்கண் ஒத்த தன்மைகளும், வேற்றுத் தன்மைகளும்; கூட்டுறவும், பூசலும், ஏற்றுக்கொள்ளுதலும், மறுத்தலும் போன்ற அனைத்தும் காணப்பெறும். அவை அனைத்தையும் அறிந்தால்தான் சமுதாயத்தை விளங்கிக்கொள்ள இயலும். என்றாலும் அவை அனைத்திற்கு மேலாக மனிதர்களிடையே அமைந்துள்ள ஒத்த தன்மைகளும், பொதுவான தன்மைகளும் கூட்டுறவும்தான் ஒரு சமுதாயத்தின் அடையாளங்கள் ஆகும். குறிப்பிட்ட பொது நோக்கங்களை அடைவதற்காக ஒரு சில நிலையான உறவுமுறைகளினால் உண்டாக்கப்பட்டுள்ள மனிதக் கூட்டுத்தொகுப்பே சமுதாயம். ஆகவே, ஒற்றுமை, பலவேறு தன்மைகள், நிலைபேற்றுத் தன்மை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமுதாய உணர்ச்சி (Social Awareness) ஆகியவைதாம் உண்மையில் சமூகத்தின் ஒரு சில பண்புகளாகும். ஒரே வகையான எண்ணங்களையுடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடையச் சேர்ந்து முயல்கின்றபோது சமுதாயம் உருவாகிறது.

சாதி, மதம், இனம், மொழி, நாடு, சமுதாயம் என்ற அமைப்புகள் எல்லாம் மனிதன், அவன் அளவில் அவனது பாதுகாப்பிற்காக அமைத்துக் கொண்ட சிறுசிறு தன்னல அமைப்புகள்தாம். இவற்றுள் சாதி முதலான குறுகிய படிநிலைகளைத் தாண்டிச் சமுதாய உணர்வை அவன் பெறுகிறபொழுதுதான் உண்மையில் மனிதன் விலங்கு நிலையிலிருந்து மனித நிலையை எய்துகிறான். தனக்கென்று மட்டும் எண்ணுவதும், பேசுவதும் செயல்புரிவதும் விலங்கு நிலை. மற்றவர்க்காக நினைப்பது, மொழிவது, செயல்புரிவது மனிதநிலை. இந்த அடிப்படையை உணர்ந்த மக்கள் இனங்கள் தம்மிடையே இடைக்காலத்தில் அமைந்துவிட்ட குறுகிய பிரிவுகளை உடைத்துக்கொண்டு விரிந்த மனத்தோடு செயல்படுகின்றன. சில இனங்களின் விரிந்த மனம் நாடு என்ற அளவில் சுருங்கி விட்டது; சில இனங்களின் விரிந்த மனம், இனம் என்ற அளவில் சுருங்கி விட்டது; சில இனங்களின் விரிந்த மனம், மதம் என்ற அளவில் சுருங்கி விட்டது; சில இனங்களின் விரிந்த மனம் சாதி என்ற அளவில் சுருங்கி விட்டது. அனைத்திலும் சிறுத்துப்போன மனிதர்கள் தன்னளவில் நிற்கிறார்கள். உலக இன மக்கள் அனைவரையும் மேற்கண்ட நிலைகளில் பகுத்து விடலாம்.

இப் படிநிலைகளில் தமிழர்கள் எந்தப் படிநிலைகளில் இருக்கிறார்கள் என்பது ஆராய்ச்சிக்குரியது. பெரும்பான்மைத் தமிழர்களிடம் சமுதாய உணர்ச்சியே இல்லை (Social Awareness) என்பது சமூகவியல் அறிஞர்களின் கருத்து (சிறந்த சமூகவியல் அறிஞர் அருள்திரு வரப்பிரசாதம் அடிகளார் தம் கருத்து) தமிழர்களிடையே நாடு (Nation) என்ற கோட்பாடோ, இனம் என்ற கோட்பாடோ, மொழி என்ற கோட்பாடோ அவ்வளவாக இல்லை. பெரும்பான்மையான தமிழர்கள் சாதி என்ற ஆரம்ப நிலையிலோ, மதம் என்ற அடுத்த நிலையிலோ குறுகி நிற்கிறார்கள். தமிழ் மக்களிடையே ஒற்றுமை இன்மைக்குத் தலையாய காரணங்கள் இவை எனலாம்.

மொழி, இன, நாடு, சமுதாய உணர்வு தமிழர்களிடம் குறைவாக இருப்பதே தமிழ் இனத்தில் இடம் பெற்றுள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒற்றுமை இன்மைக்கு மூல காரணங்கள். இவை தமிழர் களிடம் அருகிக் காணப்படுவதற்குக் காரணங்கள் எவை என்பது ஆராய்ச்சிக்குரியது.

1. சாதி மதப் பிரிவினைகள்

தமிழர்கள் ஏறத்தாழ 20 நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பலவேறு சாதிகளாகப் பிளவுண்டு கிடக்கிறார்கள். சிலர் தாம் சார்ந்த மதங்களால் பிளவுண்டு கிடக்கிறார்கள். மேற் கண்ட இரண்டும் தமிழர்களைச் சாதிக்கு அப்பால், மதத் திற்கு அப்பால் பொதுநலன் நோக்கில் நிற்காமல் தடுத்துக் கொண்டே வந்திருக்கின்றன.

2. படிப்பின்மை

ஐரோப்பியர் வரவு வரை தமிழருள் பலர் பொதுக் கல்வியைப் பெறவே இல்லை. அவரவர் தொழிலைச் செய்து கொண்டு வயிற்றை நிரப்பிக் கொண்டு வாழ்ந் தனர். அன்றிப் பொதுக் கல்வியைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் பொது மக்களிடமோ, பொது மக்களுக்குக் கல்வி அறிவு ஊட்ட வேண்டும் என்ற ஆர்வம் தமிழ் அரசர் களிடமோ இருந்த தாகச் சான்றுகள் இல்லை. இதனால் தமிழரிடம் அனுபவ அறிவும் தொழில்சார்ந்த அறிவும் இருந்த அளவிற்கு ஏனைய நுண்ணறிவோ, நூல் அறிவோ பெருக வில்லை. இதனால் தமிழர்கள் எளிதாக அயல் ஆதிக்கங் களுக்கு அடிமைப்பட நேர்ந்தது. அதனால், நூற்றாண்டு தோறும் தொடர்ந்து அடிமைகளாக இருந்து வந்திருக்கிறார் கள். அடிமைத் தனம் மனத்தைச் சிறுமைப்படுத்தி விடும் என்பது வெளிப்படை. அன்றியும் அடிமைத்தன விளைவுகளுள் குறிப்பிடத்தக்கவை உளவியல் போக்குகளாகும், அவை தமிழரிடம் ஊறிப்போன தாழ்வு மனப்பான்மையும், தன்னம்பிக்கையின்மையும் ஆகும். இவ்விரண்டு மன நோய் களால் அவர்கள் தன் நலம் மிக்கவர்களாக ஆக நேரிட்டது,

3. பொதுமக்களுக்கும் அரசர்களுக்கும் தொடர்பு குறைவு

தமிழர்களுடைய சமுதாய வரலாற்றையும், அரசியல் வர லாற்றையும் அணுக்கமாக ஆராயும்பொழுது ஓர் உண்மை தெளிவாகிறது. சங்க காலத்தில் மன்னர்களுடைய வெற்றி தோல்விக்கு மக்களின் பங்கு காரணமாக இருந்தது; காலப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போக்கில் அரசனுக்கு எனத் தனிப்படை உருவான பிறகு பொதுமக்களின் பங்கு குறைந்தது. பொது மக்களுக்கும், அரசனுக்கும் இடைவெளி பெருகியது. அயல் புலத்திலிருந்து வரக்கூடிய ஓர் அரசன், தமிழ் நாட்டைக் கைப்பற்ற வேண்டுமானால், தமிழ் மக்களைச் சந்திக்க வேண்டும், சமாளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அரசனை வென்றால் போதும்; அல்லது அரசனைக் கொன்றால் போதும். விளைவில் ஒரு பகுதியை வரியாக வாங்கிக்கொண்டு ஆளுகின்ற அதிகார வர்க்கம் கொழுத்து இருந்தது. இதனால் யார் ஆளுகிறார்கள் என்பதுகூடத் தெரியாமல் பெரும்பான்மையான சிற்றூர்கள் தமிழகத்தில் இருந்து வந்துள்ளன. 'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன' என, ஆளுகின்ற அரசில் இருந்து தம்மைத் தாமே தனிமைப் படுத்திக் கொள்ளும் கோட்பாடு மக்களிடையே முகிழ்த்து இருந்தது. சாதி அளவில் பிரிந்து கிடந்த மக்கள் மொழி, இனம் என்று எண்ணுவதினின்று விலகிக் கிடந்தார்கள். பின்னர் மொழி, இன, நாடு, சமுதாய உணர்வுத் தேவை என்று வந்தபொழுது அவற்றை விரைவாக ஈர்த்துக் கொள்ளும் பக்குவத்தைத் தமிழர்கள் அன்று எய்தி இருக்கவில்லை; இன்றும் எய்தவில்லை.

மேற்கண்ட இடைவெளி அரசனுக்கும் மக்களுக்குமிடையே இருந்தமையாலும், நாளும் பெருகி வந்தமையாலும் நாட்டை ஆளும் பொறுப்பில் பொதுமக்களின் பங்களிப்பு (Involve) மிகக் குறைவாக இருந்தது அல்லது இல்லாமலே போய் விட்டது.

4. அயல்மொழி மக்களின் வரவும், வாழ்வும்

மேலே கண்ட காரணங்களால் தமிழர்கள் சங்க காலம் தொட்டு ஐரோப்பியர் வரவுக்கு முன்பு வரை தொடர்ந்து வட இந்திய, வடமேற்கு இந்திய ஆதிக்க அரசர்களின் ஆட்சிக்கு உட்பட நேர்ந்தது. காகேசியர் (ஆரியர்) செமித்திக் (Semitic) இனத்தினர் முதலானவர்களுடைய வரவு, காலம் தோறும் தமிழர்களை மிக எளிதாக ஆதிக்கம் செய்து கொண்டு இருந்தது. இதனால் வடஇந்தியா வழியாக, தென் இந்தியா வந்து சேர்ந்த வேறு வேறு மொழி மக்களின் வரவும், காலம் தோறும் நிகழ்ந்து கொண்டு இருந்தது. பௌத்த, சமண சமயம் சார்ந்த மன்னர்களின் ஆட்சி, தென்புலத்தில் பரவி இருந்த பொழுது அந்த மதங்களோடு அயல் மொழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேசும் மக்கள் வந்து சேர்ந்தனர். அவர்களை அடுத்துக்குப்தர் ஆட்சிக் காலத்தில் வேத சமயத்தின் பெயரால் வடஇந்திய வைதிகர்கள் தமிழகத்திற்கு வந்தனர். இராச இராச சோழன் காலத்தில் நூற்றுக்கணக்கான புரோகிதக் குடும்பங்களும் காசுமீரிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டு வரப்பெற்றன. நாயக்கர்கள் காலத்தில் ஆந்திராவிலிருந்து தெலுங்கு புரோகிதர்கள் தமிழகத்திற்குக்கொண்டு வரப்பட்டனர். இசுலாமியர் காலம், மகாராட்டிர மன்னர் காலம் முதலான வேறு வேறு மொழி பேசும் அரசர்கள் தென்னிந்தியாவை ஆண்டபொழுது வேறு வேறு மொழி மக்களும் தமிழகத்திற்கு வருகை தந்து நிலைபெற்றனர். அந்த அந்த அரசர்கள் காலத்தில் வந்தோர் களின் செல்வாக்குப் பெரிதாக இருந்தது. எனவே, அரசன் சார்பால் அயல் இனத்து மக்கள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தமிழர்கள் அதிகாரத்திற்கு அஞ்சி அடங்கி ஒடுங்கி, ஒதுங்கி இருப்பதே பழக்கமாகிவிட்டது. ஆளுகின்ற அதிகார வர்க்கத்திற்குத் தகத் தமிழர்கள் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்துச் சலுகைபெற வேண்டியது அவர்கள் வாழ்க்கையில் அன்றைய நிலையில் கட்டாயமாக இருந்தது. தமிழர்களின் ஒற்றுமை செழிக்காமற் போனமைக்குரிய காரணங்களுள் இதுவும் ஒன்றாகும். செல்வத்திலும்,செல்வாக்கிலும் உயர்ந்திருந்த ஏனைய இனத்தவர் தமிழர்களைஎளிதில் அடக்கியாள முடிந்தது. இப்போக்கால் தமிழ் நாட்டிலே கலப்பினங்கள் பல்கின. இக்கலப்பின மக்களிடம் அதிகாரமும், பொருளாதாரமும் இருந்தன. இந்த இரண்டும் அவர்களிடம் தொடர்ந்து இருக்க வேண்டுமானால் தமிழர்கள் தொடர்ந்து பிளவுபட்டு இருப்பது, அயலார்க்கு வசதியாக இருந்தது. எனவே தமிழர்களிடையே இருந்த சாதிப் பிளவை அயலார் தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டு வந்தனர்; வளர்த்து வந்தனர்.

5. தலைமை இன்மை

தமிழக வரலாற்றில் முதலாம் இராச இராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகிய இருவருக்குப் பிறகு தென் இந்தியாவை அல்லது தென்கிழக்கு ஆசியாவை அசைத்துப் பார்க்கும் தலைமை எந்த அரசருக்கும் இல்லாமல் போய்விட்டது. மொழி, இனம் தழுவிய ஏனையவற்றைப் போலத் தன்னலமே இல்லாத அல்லது குறைந்த பொது நலத் தலைவர்கள் தமிழ் நாட்டில் தோன்றவில்லை அல்லது தமிழ் நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் போதியவர்களாக இல்லை. இந்த வகையில் உருவான தலைவர்களுள் குறிப்பிடத்தக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரே ஒருவர் பெரியார் ஈ.வே.ரா. ஆவார். ஆனால் பெரியாரின் செயல் எல்லைகூடத் தமிழக அளவில் சுருங்கி நின்றுவிட்டது. காலப் போக்கில் தமிழகத்தில் இருந்த சாதி, மதம் சார்ந்த அரசியல் சிக்கல்களால் பெரியாரின் இயக்க எல்லைகூட எல்லோரையும் சென்றடையும் பான்மைபெற இயலாது போயிற்று. பெரியாரின் இயக்கம் தோற்றமைக்குக் கூட மேலே கூறப்பட்டவை முதன்மைக் காரணங்களாகும்.

பல நூற்றாண்டுகளாக அடிமைக் குருதியில் ஊறிப்போய்த் தாழ்வு மனப்பான்மையால் நலிந்து போன தமிழ் இன மக்களை விழிப்பூட்டத் தலைவர்கட்கு நெடுங்காலம் தேவைப் பட்டது. அதற்கேற்ப நெடுங்காலப் பொறுமையும், நிதானமும் தேவைப்பட்டன. ஓர் அளவு உழைக்கிற தமிழகத்தின் தலைவர்களுக்கு நெடுங்காலத் தமிழ் மக்களின் விழிப் பின்மை, சோர்வை உண்டாக்கி வருகிறது. இதனால் அருமையாக உருவாகி வந்த பல அரசியல் இயக்கத் தலைவர்கள் ஐம்பது வயதைத் தாண்டியபொழுது சோர்வுற்று ஒடுங்கி விடுகின்றனர் அல்லது ஒதுங்கி விடுகின்றனர்.

6. பின்பற்றுதல் இல்லாமை

தமிழர்களுடைய இலக்கிய வரலாற்றையும், சமுதாய வரலாற்றையும் இணைத்து ஆராயும்பொழுது ஓர் உண்மை கிடைக்கிறது. அறிவாளிகளின் குறிக்கோள்களும், பொது மக்களின் நடைமுறை வாழ்க்கையும் தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டாமல் இருப்பது தமிழக வரலாற்றில் காணப்படும் ஓர் உண்மையாகும். அரும்பெரும் அறிஞர் திருவள்ளுவர் தமிழரிடையே 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய பொழுதும் அவர் தம் குறிக்கோள்கள் பொது மக்களைச் சென்று சேரவே இல்லை; ஏசுவின் கருத்தும், நபியின் கருத்தும், புத்தரின் கருத்தும், மகாவீரரின் கருத்தும் பொதுமக்களிடம் அவர்களாலும், அவர்களது சீடர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்ட அளவிற்கு அல்லது எடுத்து செல்லப் பட்ட அளவிற்குத் திருவள்ளுவம் போன்ற சமுதாய நலச் சிந்தனைகள் தமிழர்களிடம் எடுத்துச் செல்லப்படவும் இல்லை; எடுத்துச்சொல்லப்படவும் இல்லை. அவர்கள் மதத் தலைவர்களாக இருந்தார்கள். அவை மதங்களாக இருந்தன. திருக்குறளும், திருவள்ளுவரும் அவ்வாறு இல்லை என்று கூறப் பெறலாம். திருவள்ளுவத்தை ஒரு மத நெறியாக ஆக்குவதை யார் தடுத்தார்? திருவள்ளுவர் பிறந்த மண்ணிலேயே அவர் கருத்திற்கு எதிரான ஆட்களும், கோட்பாடுகளும் பரவின; பரப்பப்பட்டன. ஆளுகின்ற அரசருள் பெரும்பாலோர் அயல்

FORWARDED FREE OF COST, AND WITH THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF EDUCATION, GOVERNMENT OF INDIA, NEW DELHI"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனத்தவராகவும், திருவள்ளுவர் தமிழராக அமைந்துவிட்டதும் காரணமா என்பது மேலும் ஆராயத்தக்கது.

7. கட்சிகள்

சிறுசிறு இன, மொழி, மக்கள், சாதி, மத, வட்டார அடையாளத்தை வைத்து எவ்வாறு பேதங்கள் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தன. அப்பேதங்கள் கட்சிகளுக்குள்ளும் புகுந்து விட்டன. தொடக்கத்தில் அடிமைத் தனத்தில் தாழ்வு மனப்பான்மையும், தன்னம்பிக்கை இன்மையும் தன்னலப் பார்வையாகத் தமிழர்களிடம் குடி கொண்டன. இவற்றால் சிறுசிறு குழுக்களாகத் தனிக் குழுக்களாகத் தமிழர்கள் காலம் தோறும் துண்டுபட்டு இருந்தனர். எனவே, இத்துண்டு மனப்பான்மை கட்சி அமைப்பிலும் தொடர்ந்தது. ஆகவே, குறிக்கோளை வைத்துத் தமிழ் நாட்டில் கட்சியைத் தலைவர்களால் வளர்க்க முடியவில்லை. குறிக்கோள் மேல் எழாதவாறு சாதி, மதப் பிரிவுப்போக்குகள் அமுக்கிக் கொண்டே இருந்தன; இருக்கின்றன. இவற்றில் இருந்து வெளிவர முடியாமல் கட்சி இயக்கங்கள் திணறுகின்றன. மொழி, இனம், சமுதாயம் என இலட்சிய நோக்கை நோக்கிக் கட்சிகளை இட்டுச் செல்ல முடியாமல் நல்ல தலைவர்கள் கூடத் திணறுகிறார்கள்.

8. பண நோக்கு

1947இல் தமிழர்களுக்குக் கிடைத்த சுதந்திரம் உருசியா, சீனா, கியூபா, எகிப்தோப்பியா, அல்ஜீரியா, வியட்நாம் முதலான நாடுகளில் கிடைத்தது போலப் பெரும் புரட்சிக்குப் பிறகு கிடைத்தது அன்று. சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவில் அமைந்த அரசியல் அமைப்பு, பணக்காரர்கள் செல்வாக்கை அடியொற்றியே அமைக்கப் பட்டதாகும். எனவே, இங்கே சம உடைமை அமைப்போ அல்லது பொதுவுடைமை அமைப்போ காலூன்றமுடியவில்லை. தனியுடைமை வாதமும், முதலாளித்துவ வாதமும் கொண்ட அமைப்பே இங்கே உருக் கொண்டது. வெற்றிக்குப் பணம் முதன்மை, அடித்தளச் சமுதாய, தேசிய உணர்வு, மொழி உணர்வு அடித்தளங்கள் அல்ல. இத்தனி உடமைச் சக்திகள் மொழி அடிப்படையில் அல்லது இன அடிப்படையில் உருவாகும் ஒற்றுமைக்கு ஊறு செய்து கொண்டே இருக்கும்; ஊறு செய்துகொண்டே இருக்கின்றன. இவற்றின் கழுத்தை நெரித்தால் அன்றி ஒற்றுமை என்பது மொழி அடிப்படையிலோ, இன அடிப்படையிலோ தோன்றுவது இந்திய நாட்டில் வெறும் கனவாகவே இருக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5

சாதி எனும் சோதி

1947-இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு அரசியல், பொருளாதார, சமுதாய அமைப்புகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடியொற்றியே இவ்வுரை வரையப்பெறுகிறது. அதற்கு முன்பு நிகழ்ந்த சாதிகளின் தோற்றம், வளர்ச்சி முதலானவற்றைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையாளனின் நோக்கம் இல்லை.

1946ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 9ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபை கூடியது. புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சியில் அது இறங்கியது. அப்பணியில் மூன்று ஆண்டுகள் செலவாயின. 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் நாள் இந்திய அரசியல் சாசனம் இறுதியாக்கப்பட்டுக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றது. பின்னர் 1950ஆம் ஆண்டு சனவரி மாதம் 20ஆம் நாள் முதல் அது நடைமுறைக்கு வந்தது.

இவ்வரசியல் சாசனத்திலேயே இன்று வளர்ந்து, நம்மை விழுங்கிக் கொண்டிருக்கும் மத, சாதி வெறிகளுக்கு விதை இடப்பட்டது. நெல் மூட்டையில் கட்டப்பெற்ற எலியைப் போல அரசியல் சாசனத்திற்கு உள்ளேயே மத எலிகளுக்கும், சாதி எலிகளுக்கும் இடம் கொடுக்கப்பெற்றது. இது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்வு அன்று; வேண்டும் என்றே நிகழ்ந்தது; வேண்டும் என்றே வற்புறுத்தப் பெற்று நிகழ்ந்தது.

இந்தஅரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்தது முதல் 10 ஆண்டுகள் வரையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், மலை சாதியினருக்கும், அவர்களுடைய மக்கள் தொகை அடிப் படையில் சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் இடம் வகை செய்யப்பட்டது. ஆங்கிலோ—இந்தியச் சமூகச் சாதியைச் சேர்ந்த இருவரை நாடாளுமன்றத்தில் எம்.பி.யாக அமர்த்தக் குடியரசுத் தலைவருக்கு உரிமை வழங்கப்பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இச்சலுகைகள் பத்தாண்டுகளுக்குப் பின்பும் நீட்டிக்கப் பெற்றது. சலுகை பெற்றவர்கள், எளிதாகச் சலுகைகளை அனுபவிக்கப் பழகியதாலும், அச்சலுகை காலத்தில் ஓரணியாகத் திரண்டமையாலும், காலப்போக்கில் நாட்டையும், சமூகத்தையும் அச்சுறுத்தும் அணிகளாகத் திரண்டனர்; சங்கங்கள் அமைத்தனர்; இயக்கங்கள் நடத்தினர். சிற்சில சமயங்களில் கலவரங்களையும் விளைவித்தனர். எனவே, சலுகையை அரசியல் சாசனம் கூறியது போல முதல் பத்து ஆண்டுகளில் நிறுத்த முடியவில்லை. அது தொடர்ந்து நீட்டிப்பைப் பெற்றுக்கொண்டே வந்தது; பெற்றுக்கொண்டே வருகிறது; பெற்றுக்கொண்டே வரும்.

1. அரசியல் சாசனப் பிரிவில் மத சிறுபான்மையினருக்கு அளிக்கப் பெற்றிருக்கும் உரிமை,

2. ஒடுக்கப்பெற்ற சாதியினருக்கும், ஆதி வாசிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கும் சலுகைகள்,

3. மாநில அரசுகள் தம் சட்ட உரிமைகளைப் பயன் படுத்தி, பிற்பட்ட சாதியினருக்குச் சலுகை வழங்க அரசியல் சாசனத்தில் வழங்கப் பெற்றிருக்கும் உரிமை

ஆகியன அரசியல் சாசனத்தில் சேர்த்துக் கட்டப் பெற்ற எலிகளாகும்.

இந்திய அரசியல் சாசனம் மதச் சார்பற்றது என்று கூறப் பட்டபோதிலும், ஒவ்வொரு மத நிலைபாட்டையும் அஃது அடிப்படையில் ஒப்புக் கொண்டது. மத உரிமைகளையும் வழிபாட்டு உரிமைகளையும் உறுதி செய்தது. அன்றியும், திருமண முறை, மணவிலக்கு, நிலச் சொத்துரிமை முதலான மிக அடிப்படையானவற்றுள் கூட நம் அரசியல் சாசனம் மதங்களுக்கிடையே சமத்துவத்தை உறுதி செய்யவில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் வேறு வேறு வகையான திருமணச் சட்டங்களும், நிலவுரிமைச் சட்டங் களும் இயற்றப்பட்டன. இதனால் வேறு வேறு அளவும், அளவுகோலும் சாசனத்தில் இடம்பெற்றன. சான்றாக, இசுலாம் மதத்தைச் சார்ந்த ஓர் இந்தியர் ஒன்றுக்கு மேற் பட்ட பெண்களை மணந்து கொள்ளலாம். அரசியல் சாசனம் தடை ஒன்றும் சொல்லவில்லை. எளிதாக மணந்த பெண்ணை மணவிலக்குச் செய்து கொள்ளலாம். அதற்கும் அரசியல் சாசனம் தடை ஒன்றும் சொல்லவில்லை. ஓர் இந்தியர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்துவாகவோ, கிருத்துவராகவோ இருந்தால், அவர் ஒருவருக்குமேல் திருமணம் செய்து கொள்ள முடியாது. எளிதில் மண விலக்கும் பெற முடியாது. எனவே, மதச் சார் பற்றது என்று சொல்லப்பட்டதே தவிர, முழுக்க முழுக்க மதச் சார்பையும், சாதிச் சார்பையும் நம் அரசியல் சாசனம் ஏற்றுக் கொண்டு உறுதிப்படுத்தியது.

இந்திய அரசியல் சாசனம் அடிப்படை உரிமைகள் எனும் தலைப்பில் வழங்கும் உறுதிமொழி வருமாறு :

> ''சமய, இன, சாதி, பால், பிறப்பிட வேறுபாடின்றி எல்லாக் குடிமக்களும் சட்டத்தின் முன் சமமாகக் கருதப் படுவார்கள். எவ்வகைக் குறைபாடுகளும் நேராதபடி அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்''

மேற்கண்ட உறுதிமொழி, மத உரிமைகள் சாதிச் சலுகைகள் அளிக்கப்பட்டதன் மூலம் முற்றுமாகப் பொய்யாக்கப்பட்டது.

இந்திய அரசியல் சாசனம் 21 வயது எய்திய அனைவருக் கும் 1950இல் வாக்களிக்கும் உரிமையை வழங்கியது. 1989 முதல் பதினெட்டு அகவையே வாக்குரிமைக்கு வரையறுக்கப் பெற்றது. அதே நேரத்தில் மத அடிப்படையிலான / சாதி அடிப்படையிலான ஒதுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளு மன்ற தொகுதிகளைச் சட்டபூர்வமாக உருவாக்கியது. இவ்வுருவாக்குதல் மூலம்மத பேதமும், சாதி பேதமும் இந்திய நாட்டில் நிலையாக வாழ்வை எய்தவும், அப்பேதம் நிலைக்க வும் தொடரவும் வழி வகுக்கப்பட்டது. ஆங்காங்கே மதச் சிறுபான்மை என்ற பெயரில் மதத்தையும் சாதியையும்காட்டி எம்.எல்.ஏக்களும் எம். பிக்களும் தெரிவு செய்யப்பெற்றனர்.

இஃதன்றி, 21 வயது எய்திய அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்ட நிலையில் இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு தலைக்கும் வாக்கு மதிப்பும் வழங்கப் பெற்றது. கொத்துக் கொத்தாக அல்லது குவியல் குவியலாக நூற்றுக்கணக்கான வர்களாகவோ ஆயிரக்கணக்கானவர்களாகவோ வாக்குகள் கிடைக்கும் சாதிக் கூட்டம் தேர்தலில் நிற்கும் வேட்பாளருக்கு வேட்டைக் களமாக அமைந்தது. வாக்கு அடிப்படையிலான தேர்தலில் இந்நிலை தவிர்க்கவே முடியாதது ஆகும். சுதந்திரம் பெறுகின்ற காலக் கட்டத்தில் இந்தியாவில் கட்டுக்கட்டாக இருந்தவை சாதி நிறுவனங் களும், மத நிறுவனங்களும் ஆகும். குறிப்பிட்ட சாதியார் அடங்கிய தெரு, குப்பம், ஊர் ஆகியன பெரும்பாலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைக்கட்டு அல்லது நாட்டாண்மைக்காரர் கைக்குள் அடங்கி இருந்தது. அவர்கள் உண்மையில் வாக்கு வங்கிகளாக இருந்தார்கள். எனவே தேர்தலில் வெற்றி பெற விரும்பும் வேட்பாளர், மத, சாதித் தலைக்கட்டுகளை அணுகுவது கட்டாயத் தேவையாக இருந்தது. வேட்பாளர்கள் அல்லது வேட்பாளர் அடங்கிய கட்சிப் பெரியவர்கள் தம்மை அணுகுவதும், வாக்கிற்காகக் கெஞ்சுவதும் சாதித் தலைக்கட்டுகளுக்கும், சாதி நாட்டாண்மைகளுக்கும் தொடர்ந்து வலிமையையும் நிலை பேற்றையும் நல்கின. அன்றியும் இச்சூழலில் மறு விளைவாக ஒன்று நம் சுதந்திர நாட்டில் நிகழ்ந்தது. அந்தந்தச் சாதியார் அல்லது மதத்தார் அந்தந்தப் பகுதியில் மிகுதியாக இருக்கிறவர்களே அந்தச் சாதியைச் சார்ந்தவர்களே வேட்பாளராக நின்றனர், அல்லது வேட்பாளராகத் தேசியக் கட்சிகளாலும், வட்டாரக் கட்சிகளாலும், ஏனைய அனைத்துலகக் கட்சிகளாலும் கூடத் தெரிவு செய்யப் பெற்றனர். எனவே, இச்சூழலில் சாதி வாக்காளர்களும் சாதி வேட்பாளர்களும் ஒருவருக்கொருவர் மிகப் பெருமையுடன் கட்டிக் கைகோத்துக் கொண்டார்கள். இதன் அடுத்த விளைவு இவ்வாறு சாதி அல்லது மத அடிப்படையில் தெரிவு செய்யப் பெற்ற வேட்பாளர்களைக் கொண்ட சட்ட மன்றத்திலும், சட்டமன்ற உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்ற மாநில / நாடாளுமன்றப் பேரவைகளிலும் சாதி அல்லது மதத்தின் செல்வாக்குத் தவிர்க்க முடியாததாயிற்று. எனவே, கணிசமான செல்வாக்கையுடைய சாதி எம். எல். ஏக்களும் அல்லது எம்.பிக்களும் குழு உணர்வோடு, தம் சுயநலம் நோக்கிச் சாதி / மதக் குடைக் கீழ் ஒன்றுபட்டு நின்றனர். அதனால் அமைச்சரவையை அமைக்கும் மாநில முதலமைச்சரும், தில்லித் தலைமையமைச்சரும் ஒவ்வொரு சாதிக்கும் அல்லது மேற்கண்ட சட்ட / நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய சாதிக்கும், மதத்திற்கும் தம் அமைச்சரவையில் இடம் கொடுத்தே தீர வேண்டியது இன்றியமையாததாயிற்று. இவ்வாறாக, தெருவில் தொடங்கிய சாதியும் மதமும் அரசியல் சாசனத்தின் அரவணைப்புடன் நாட்டையே ஆளும் சட்டமன்ற / நாடாளுமன்றங்களையும், நிருவாக அலுவலகங்களையும் நீதிமன்றங்களையும் ஆட்டிப் படைக்கும் சக்தியாக உருப்பெற்று நிலைபெற்றன. (The Caste and religion decide the fate of Legislature, Executive and Judiciary)

· சாதி அடிப்படையில் தெரிவு செய்யப்பெற்ற எம்.எல். ஏக்களும், எம்.பிக்களும், அமைச்சர்களும் தம் சாதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களுக்குக் கட்டுப்பட வேண்டியவர் ஆயினர். தம் சாதி / மத மக்களுக்கே படிப்பதில் முன்னுரிமை தருவது, வேலை வாய்ப்பில் முன்னுரிமை தருவது, பதவி உயர்வில் முன்னுரிமை தருவது, அனேகமாகத் தமக்கு எட்டிய அனைத்து வழிகளிலும் முன்னுரிமை தருவது வழக்கமாயிற்று. இப்படி முன்னுரிமை தரத் தவறினால் மீண்டும் தான் சாதி / மதத்தாருடைய வாக்குகள் பெற்று வர முடியாது என்ற நிலை உருவாயிற்று. சாதி / மதங்களுக்கு அப்பாற்பட்டு வாழ விரும்பும் ஒரு சில வேட்பாளர்களைக் கூட மேற்கண்ட இக்கட்டு, கீழ் இறக்குவது ஆயிற்று. எனவே, சாதி வங்கி, வாக்கு வங்கிகளாக, வாக்கு வங்கி, எம்.எல்.ஏ. எம்.பி., அமைச்சர் பதவி வங்கிகளாக இந்தியாவில் நிலை பேறு அடைவதை யாராலும் தடுக்க முடியவில்லை. இதனை நன்கு அறிந்து கொண்ட சுயநலவாதிகளை உள்ளடக்கிய அரசியல் கட்சிகள் அனைத்தும் தத்தம் பதவி நிலை பேற்றிற்காகச் சாதிமத உணர்வைத் தொடர்ந்து தூபம் போட்டு வளர்த்து வந்தன. அரசியல் சாசனம் அளிக்கும் உரிமையைக் கையாண்டு அவை வளர்த்து வந்தன. ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையாக அவை சாதி / மதவுணர்வை வளர்த்து வந்தன; வளர்த்து வருகின்றன.

இந்நிலையில் அரசியல் கட்சிக்காரன் என்ற ஒருவன் தம் சாதிக்காரனாக இருந்து அதிகாரம் செலுத்துவதை விட, தம் சாதிக்காரனே அரசியல்காரனாக ஆனால் என்ன என்ற உணர்வு அந்தந்தச் சாதியிலுள்ள படித்த மக்களிடம் ஏற்படத் தொடங்கியது. சாதி பேதத்தை வைத்து நிகழ்த்தும் அரசியலில் அப்பேதத்தையே வைத்துத்தான் முன் நிலைக்கு வந்தால் என்ன என்ற உணர்வு வளர்ந்தது. இது முறையான தவிர்க்க முடியாத உணர்வாகும். இதனையே பஞ்சாபில் மதவாதிகளும், தமிழ் நாட்டில் சாதிவாதிகளும் செய்வதைக் காணலாம். அரசனுக்குத் தளபதியாக இருந்த ஒருவன் அரசனையே அகற்றிவிட்டு அவனே அரசனானது போல, சாதித் தளபதியினர் அரசியல் தலைமை வாழ்வு பெறுகின்ற நிலை உருவாகி விட்டது.

பொது வாழ்வில் பொதுத் தொண்டுத் தகுதி வாழ்விழந்தது. தொடர்ந்து கொள்கை அரசியல் என்பதும் வாழ்விழந்தது. அதனைத் தொடர்ந்து கட்சி அரசியல் என்பதும் வாழ்விழந்தது. முடிவில் சாதி அரசியல் வாழ்வு பெற்றது: வாழ்வு பெறுகின்ற நிலை உருவாகி விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய அரசியல் / அமைப்பு ஆங்கில அரச முறையைப் பின்பற்றிச் சட்டமன்றம், நீதிமன்றம், அரசாங்க அலுவலகங்கள் (Legislative, Judiciary and Executive) என்று அமைக்கப்பெற்றது. இம்மூன்றும் தன்னிச்சையானவை, வேறு வேறானவை என்று பேசப்பெறுகின்றன. ஆனால் சட்டமன்றத்தை அல்லது நாடாளுமன்றத்தை அதிகாரம் செய்யும் கட்சி எம்.எல்.ஏ., எம்.பி., அமைச்சர், அரசியல்வாதி ஆகியோர் கையில் நீதிமன்றமும், அரசாங்க அலுவலகங்களும் அகப்பட்டுக்கொண்டு திணறுவது வெளிப்படை. இன்று இந்தியாவில் அரசு அலுவலக நியமனங்களும், கல்வித்துறை நியமனங்களும், நீதித்துறை நியமனங்களும் முற்றுமாக ஆளுகின்ற அரசியல் வாதிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. விடுதலைக்குப் பிறகு மாநில அளவிலும், மைய அரசு அளவிலும் நிகழ்ந்த நீதிபதி நியமனங்கள் பெரும்பாலான சாதி / மத அடிப்படையிலேயே நிகழ்ந்தன. அதனைப் போலவே அரசாங்க அலுவலர்/ஊழியர் நியமனங்கள் ஒடுக்கப்பட்ட அல்லது பின்தங்கியோராக ஒதுக்கப்பட்டவர் எனச் சாதி அடிப்படையில் அமர்த்தப் பெறுகின்றன. எனவே முறையாக / நிலையாக வருமானம் வரும் வேலை நியமனத்தில், சாதி மதக் குறுக்கீடும் பங்கீடும் வெளிப்படையாகவே அரசியல் சாசனப்படி சட்டப்படி ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன.

வெளிப்படையாக வாய்ப்புப்பெறாத சிறுபான்மைச் சாதியார் தமக்குக் கிடைக்கும் பதவியைக் கொண்டு ஏனைய சாதியாரைப் பார்த்து ஊக்கம் பெற்று அவர்களும் சாதி வழியே இயக்கமாக இயங்கத் தொடங்கினார்கள்.

இந்திய அரசியல் சாசனம் சாதி'அடிப்படையில் வழங்கிய சலுகைகளைத் தாழ்த்தப்பட்ட சாதியினரும், மலைசாதியினரும் நுகர்ந்து வந்தனர். அவர்களுள் மலை சாதியினர் பெரும்பாலும் சமவெளி சமூகத்திலிருந்து ஒதுங்கியே வாழ்ந்தனர். அரசு அளித்த சலுகைகளை அவர்கள் மிகுதியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. கிட்டத்தட்ட ஒவ்வொரு சிற்றூரிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் சேரிகளில் வாழ்ந்து வந்தனர். ஒருசில குடும்பங்களைச் சார்ந்த ஒருசில தாழ்த்தப்பட்ட சாதியினர் அரசு அளிக்கும்சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு கல்வி கற்றனர்; பதவி பெற்றனர்; பதவி உயர்வு பெற்றனர். ஒதுக்கப்பட்ட தொகுதிகள் (Reserved Constituency) வழித் தாழ்த்தப்பட்ட சாதியினர் சட்ட மன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் எம். எல். ஏவாகவும், எம்.பியாகவும் தெரிவு செய்யப் பெற்றனர். எனவே, சட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்றம் அல்லது நாடாளு மன்றங்களில் கணிசமான எண்ணிக்கையினர் தாழ்த்தப்பட்ட சாதியினராக ஒவ்வொரு முறையும் அமர்ந்தனர். அவர்கள் பெரும்பாலும் ஒரு குழுவாக ஓர் அணியில் திரண்டு இருந்தனர். நாடு முழுவதிலும் கணிசமான மக்கள் மேற்கண்ட இனத்தைச் சார்ந்திருந்தனர். எனவே, மாநில அமைச்சரவையிலும், தில்லி மைய அமைச்சரவையிலும், மேற்கண்ட இனத்தார் அமைச்சர்களாக இடம்பெறுதல் வரலாற்றுக் கட்டாயமாயிற்று. இந்நிலையில் தங்கள் கீழ், பண்ணை அடிமை வேலை செய்யும் சாதியினர், கல்விச் சலுகை, வேலைச் சலுகை, வேலை உயர்வுச் சலுகை, எம்.எல்.ஏவாகச் சலுகை, எம்.பியாகச் சலுகை, அமைச்சர் பதவிச் சலுகை ஆகியன பெறுவதை நேர் முகமாகப் பார்த்துவரும் ஏனைய சாதியினர், சாதியின் அடிப்படையில் சில சாதியினர் சலுகை பெறத் தம் சாதியினர் சாதி அடிப்படையில் உரிய கல்வி நுழைவு, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் உரியனவற்றைப் பெற முடியாத நிலையிலும் பொங்கி எழத் தொடங்கினர். இதுவே சில ஆண்டுகளுக்கு முன்பு குஜராத்தில் பெரும் கலவரமாக வெடித்தது. அண்மையில் தமிழ்நாட்டில் அரிசன-வன்னியர் மோதலாக வெடித்துள்ளது.

மாநில அளவில் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் பப்ளிக் சர்விஸ் கமிஷன், மைய அரசு அளவில் இருக்கும் இந்தியப் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அவற்றுள் இடம்பெற்று இருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் வெட்கத்தைவிட்டுச் சொல்லப்போனால், சாதி அடிப்படையிலும், மத அடிப்படையிலுமே நியமிக்கப்பட்டவர்கள். மைய அரசில் சில சமயம் மொழியும் அடிப்படையாகக் கொள்ளப் பெறும். அண்மையில் தமிழ்நாட்டின் செய்திகளைப் பார்ப்போர் ஒன்றைக் கவனித்து இருக்கக் கூடும். நீதிமன்றத்திலும், மாநில பப்ளிக் சர்விஸ் கமிஷனிலும் தம் சாதியார்களை நியமிக்கவில்லை என்று இடம்பெறாத சாதியினர் போராடி வருகிறார்கள். எனவே, அலுவலர் அல்லது ஊழியர் அல்லது நீதிபதி ஆகிய பதவி அமர்த்தம் முழுதும் பெரும்பாலும் சாதி அடிப்படையிலேயே நிகழுகின்றது.

கணிசமான மக்கள் தொகையைப் பெற்றிராதசாதியினரும் சிதறிக் கிடந்த சிறுசிறு சாதியினரும் கணிசமான செல்வம், செல்வாக்குடைய சிறுபான்மைச் சாதியினரும், வளர்ந்தோர் (Forward Community) பட்டியலில் இடம்பெற்ற சிறு சிறு சாதியினரும், பெரும்பான்மைச் சாதியினர் சாதி அடிப்படையில் பெற்று வரும் அனைத்து நலங்களையும் பார்த்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலையில் சாதியை மையமாக வைத்துச் சங்கங்கள் அமைத்துக் குழு உணர்வோடு ஒன்றுபடத் தொடங்கினர். நாடார் சங்கம், பிராமண சங்கம், வேளாளர் சங்கம் முதலானவற்றைத் தோற்றுவித்தோர், தம் அறிவின் நிமித்தம் அலுவலகங்கள், கம்பெனிகள் அமைக்கும்போதோ அல்லது தம் பணம் நிமித்தம் தொழில்களைத் தொடங்கி நடத்தி வரும்போதோ தம் சாதியினரையே அமர்த்தி வருவது கண்கூடு. சென்னை, கோவை, மதுரை, தூத்துக்குடி முதலான இடங்களில் தனியாரால் உருவாக்கப் பெற்றுள்ள, பல கம்பெனிகளில், தொழில் துறைகளில் முதலாளியின் சாதியினரே பெரும்பான்மையாக இடம்பெற்று இருப்பதைக் காணலாம். எனவே, பெரும்பான்மை எண்ணிக்கை கொண்ட சாதியினரும், மதத்தினரும் சிறுபான்மை எண்ணிக்கை கொண்ட சாதியினரும், தம் சாதியை மறக்காமல் அழுத்தமாகப் பற்றிக் கொள்ள நம்முடைய அரசியல் சாசனமும் கடந்த காலத் தேர்தல் முறையும், அரசியல் போக்கும், வேலையில் அமர்த்தும் முறையும் தொடர்ந்து உதவி செய்துள்ளன; உதவி செய்து வருகின்றன.

மாநில அளவிலும், தில்லி மைய அரசு அளவிலும் அரசு அளித்த சலுகைகளைப் பெற்ற தாழ்த்தப்பட்ட சாதியினர் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் குறிப்பிட்ட சலுகைகளைப் பெற்று வருவதால் புதிய ஏற்றத் தாழ்வு உருவாயிற்று. பழைய பிராமண ஆதிக்கத்தை ஒழிப்பதாக நினைத்துக்கொண்டு புதிய கருப்புப் பிராமணர்கள் இந்த அமைப்பில் உருவாக்கப்பட்டார்கள்; உருவானார்கள். சலுகைகள் பெற்று உயர்ந்த சாதி மக்கள் ஒருபுறமும், சலுகைகள் பெற முடியாத —பெறவே முடியாத ஏனைய சாதி மக்கள் ஒருபுறமும் அணி திரளும் நிலை தோன்றியது.

மதம், சாதி ஆகிய மனிதனைப் பிரிக்கும் சக்திகளுக்கு ஒதுக்கீட்டு முறையாலும், தேர்தல் முறையாலும், சிறுபான்மை உரிமை வழங்கும் முறையாலும் இந்தியாவில் நிலையான பேதத்தை இடம் பெறச் செய்துவிட்ட அரசியல் சாசனமே மொழி பேதத்திற்கும் நிலையான வாழ்வைக் கொடுத்து விட்டது.

இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் 15 ஆண்டுகள் வரையிலும் ஆங்கில மொழி இந்தி மொழியுடன் (யூனியன் அரசாங்க மொழியுடன்) அரசாங்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழியாக இருக்கும். அதற்குப் பிறகு தேவ நாகரி மொழியைக் கொண்ட இந்தி மொழிதான் அரசாங்க மொழியாய் இருக்கும். ஒவ்வொரு மாநிலச் சட்டமன்றம் சட்டத்தின்மூலம் அவ்விடத்தில் வழங்கும் மொழியை அரசாங்க மொழியாய் ஏற்கலாம். ஆனால் இரண்டு மாநிலங்களுக்கு இடையில் ஏற்படும் கடிதப் போக்குவரத்து யூனியனுடைய அரசாங்க மொழியிலேதான் (இந்தியில்தான்) நடத்தப்பட வேண்டும் என்று அரசியல் சாசன மொழிப் பிரிவு வரையறுத்துள்ளது.

1947 வரை இந்தியரை ஒன்றுபடுத்திய பொதுமொழியாக இருந்த ஆங்கில மொழியை விலக்கிவிட்டு, ஒரு மொழியை உயர்த்துவதன் மூலமும் தனிப்படுத்துவதன் மூலமும் மொழிச் சகோதரர்களுக்கு இடையே சண்டையை மூட்டி விட்டது நம் அரசியல் சாசனமே. மதவாதப் பிரிவினை கிழக்கு வங்காளப் பிரிவினையில் தொடங்கியது (1905). பாகிஸ்தான் பிரிவினையில் (1947) நிறைவு பெற்றது. இந்திய அரசு மொழிவாரி மாநிலப் பிரிவினையை அறிமுகப் படுத்தியது.

1950ஆம் ஆண்டில் அரசியல் அமைப்புச் சட்டம் ஏழாவது திருத்தம் மாநில எல்லைகளை மாற்றி அமைத்தது. இம் மாற்றம் பெரும்பாலும் மொழி அடிப்படையில் நிகழ்ந்தது. 1953ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு வட பகுதியை இணைத்துத் தனி ஆந்திர மாநிலம் மொழி அடிப்படையில் உருவாக்கப் பெற்றது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு, கேரளா எல்லைப் பகுதிகளும் மொழி அடிப்படையில் இடம் பெயர்ந்தன. 1960ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25ஆம் நாள் மொழி அடிப்படையில், பம்பாய் மாநிலம், குஜராத்தி மாநிலம் என்றும் மகாராட்டிர மாநிலம் என்றும் இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பெற்றது.

இதன் மூலம் ஒவ்வொரு மொழி பேசும் மாநிலங்களிலும், ஏனைய மொழிகளைப் பற்றிய எதிர்ப்புணர்வு உருவாக்கப் பட்டது. அந்தந்த மாநிலமும் அந்தந்த மொழிக்குரிய தனித் தீவாகத் தற்போது உருவாகிக் கொண்டு வருகின்றது. அது பெரிதாக வெடிக்கப் போகும் முன் அறிகுறிகளை அஸ்ஸாமிலும்,. மகாராஷ்டிரத்திலும், கர்நாடகத்திலும் நாம் கண்டோம்; கண்டு வருகிறோம். இதன் வெடிப்பை விரைவில் தமிழ் நாட்டிலும் நாம் சந்திக்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்படி, அரசியல் சாசனத்தால் தொடங்கப்பெற்று, தற்போது நிலைபேறு அடைந்துவிட்ட சாதி மத மொழி பேதங்களை நம்மால் நீக்க முடியுமா? நீக்க முடியும். அதற்குரிய வழிகளாவன :

1. அரசியல் சாசனத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கும் பழங்குடியினருக்கும் வழங்கப்பட்டிருக்கும் தனிச் சலுகைகள் உடனடியாக நீக்கப் பெறல் வேண்டும்.

2. மாநிலங்களில் சாதி அடிப்படையில் பின் தங்கியோர் எனப் பல சாதியினருக்கு வழங்கப்பெறும் சலுகைகள் உடனடியாக நீக்கப் பெறல் வேண்டும்.

3. சாதி அடிப்படையிலான சலுகை எந்த உருவத்திலும் இடம் பெறாமல் தடுக்கப்பெற வேண்டும். இந்த அடிப்படையில் சாதி மதம் ஆகிய பெயர்களில் சங்கங்கள் ஒதுக்கீடுகள் இன்னபிற எல்லாம் தடை செய்யப்பெறல் வேண்டும்.

4. மதத்தின் பெயரால் சில மதத்தினருக்கு அளிக்கப்படும் சிறுபான்மை உரிமைகள் அகற்றப்பட வேண்டும். மத அடிப்படையிலான சலுகைகள் யாருக்கும் வழங்கப்படக் கூடாது.

5. ஒடுக்கப்பட்டோரும், பின்தங்கியோரும் எவ்வாறு வளருவது? அவர்கள் இடத்தை ஏனைய சாதி மதத்தினர் பற்றிவிடுவதை எவ்வாறு தடுப்பது என்ற வினாக்களுக்கு விடை இறுக்கப்பட்டாக வேண்டும். சாதி மத அடிப்படையில் வழங்கப்பெறும் சலுகைகள் இரத்துச் செய்யப்பட வேண்டிய அதே நேரத்தில் பின்வரும் மூன்று அடிப்படைகளைக் கொண்டு கல்வி கற்பதில் மட்டும் சலுகைகள் வழங்கப் பெறலாம்.

   1. ஒருவரின் பொருளாதாரப் பின்னடைவு (Economic Backwardness)

   2. சமுதாயப் பின்னடைவு (Social Backwardness)

   3. கல்விப் பின்னடைவு (Educational Backwardness)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இம்முறையினால் உடனடியாகச் சாதியினரிடையே உள்ள பொருளாதாரச் சமூக ஏற்றத்தாழ்வுகள் அகன்றுவிடும் என்று எதிர்பார்த்தலாகாது. ஒடுக்கப்பட்டோரும், பின் தங்கி யோரும் மேற்கண்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தி, மற்றவ ரோடு இணையாக வரும் காலம் வரை அந்தச் சிக்கல் ஓரளவு தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆனால், குறைந்தது 25 ஆண்டுகளில் அச்சிக்கல் நிலையாக விடைபெற்றுவிடும்.

ஆப்பிரிக்கா, வடஅமெரிக்கா, சோவியத் வரலாற்றை உற்றுக் கவனிப்போர் மேற்கண்ட முறையால் சமூக ஏற்றத் தாழ்வுகளைத் தணித்துக் கொள்ள முடியும்; ஒரு காலக் கட்டத்தில் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதை ஒப்புக் கொள்வர். சான்றாக : 1960 வாக்கில் ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற்றன. அப்போது சாதியைப் போன்ற இனக் குழு (Ethnic) என்ற பிரிவு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்தது. ஆயிரக்கணக்கான இனக்குழுக்கள் அக்காலத்தில் இருந்தன. சில இனக் குழுவினர் ஆளுவோராக இருந்தனர். எனினும், அந் நாடுகள் வகுத்துக் கொண்ட அரசியல் சாசனத்தில் இனக்குழு அடிப்படையிலான ஒதுக்கீடு முறையை அவர்கள் பின்பற்ற வில்லை. முற்றுமாகத் தவிர்த்தனர். அதன் விளைவு 25ஆண்டு களில் இனக்குழு பிரிவுகள் அங்குத் தேயத் தொடங்கின; மாயத் தொடங்கின. வட அமெரிக்காவில் அடிமைகளாக இருந்த நீக்ரோக்கள் அடிமை விலங்கு விலக்கப்பெற்று விடுதலை பெற்றனர். முழுமையாக விடுதலை பெற்ற அந்தக் காலத்தில் எந்தவிதமான ஒதுக்கீடும் அவர்களுக்கு அளிக்கப் படாமல் வெள்ளையர்களுடனே இணைந்து இருக்குமாறு பணிக்கப்பட்டனர். காலப்போக்கில் வெள்ளை-ஆப்பிரிக்கர் இடையே இருந்த இடைவெளி உடைந்தது. 1917 மக்கட் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தில் உயர்வும் தாழ்வு மாகப் பல தேசிய இனங்கள் இருந்தன; சமமின்மை இருந்தது. அனைவருக்கும், மொழிவழிப்பட்ட அனைத்துத் தேசிய மக்களுக்கும் அனைத்துச் சமூக, பொருளாதார, அரசியல் நிலையில் சமவாய்ப்பு நல்கப் பெற்றது. காலப்போக்கில் இடைவெளி சுருங்கி ஒழிந்தது.

சாதி மத நிலை பேற்றிற்கு நம்நாட்டில் 1952, 1957, 1962, 1967, 1971, 1977, 1980, 1985இல் நடந்து முடிந்த தேர்தல்கள் தொடர்ந்து நீர் பாய்ச்சி வளர்த்து வந்துள்ளன. இதே தேர்தல் முறை, தொடருமேயானால், எந்தப் பிறவியிலும் இந்திய மண்ணில் சாதி மத வெறிகளையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவற்றால் தோன்றும் கலவரங்களையும் தவிர்க்கவே முடியாது. எனவே, தேர்தல் முறையை முற்றுமாக நாம் மாற்றியமைத்தல் வேண்டும். வேட்பாளர் தெரிவில் சாதி மதம் எந்த இடத்திலும் முன்னுரிமை பெறாமல் தடுக்கப் பெறுதல் வேண்டும்.

வாக்குரிமை பெறுவதற்கு அல்லது குடியாட்சி முறையை அடைவதற்கு ஆங்கிலேயரைப் போலவோ / பிரஞ்சுக்காரர்களைப் போலவோ இந்திய மக்கள் நெடுங்காலம் போராடவில்லை. எனவே, வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அருமையை அவர்கள் சற்றும் புரிந்துகொள்ளவில்லை. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் மிகப் பின்தங்கிய நிலைக்குப் பெரும்பான்மையான வாக்காளர்கள் மேற்கண்ட வாக்குரிமையின் அருமை அறியாதவர்களாக இருப்பதே தலையாய காரணமாகும். கல்வி அறிவின்மையும், பகுத்து உணரும் ஆற்றல் இன்மையும், மெல்லிய உணர்வுகளுக்கு இடம் அளிக்கும் மனப்போக்கும் மிகக் கடைக்கோடியில் இருக்கும் பின்தங்கிய பெண்கள் நிலையும், தேர்தல் முறையும் தமிழ்நாட்டில் குடியரசு முறை, கொள்கை அளவில் தோற்றதற்குக் குறிபிடத்தகும் காரணங்கள் ஆகும். எனவே, அனைவருக்கும் வாக்குரிமை என்ற முறையை மறுபார்வை செய்தல் வேண்டும். வயது, என்ற தகுதி மட்டுமல்லாமல், வாக்காளருக்குக் குறைந்த பட்சக் கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு என்றும், நாடாளுமன்ற வேட்பாளருக்குக் குறைந்த பட்சக் கல்வித் தகுதி முதுநிலைக் கல்வி என்றும் வரையறை செய்யப் பெறுதல் வேண்டும்.

ஒட்டுமொத்தமான இத்தகு மாற்றங்களை ஒரே சமயத்தில் செய்வதன் மூலம்தான் நம் நாட்டில் நாளும் வளர்ந்து வரும்— வளர்க்கப்பட்டு வரும் சாதிச் சப்பாத்தியை வெட்ட முடியும்; வீழ்த்த முடியும்.

பின்னிணைப்பு :

நாளும் வளருது சாதி
மணமக்கள் வேண்டும் விளம்பரம்

1988 — செப்டம்பர்த் திங்கள் இந்து நாளிதழில் **வெளிவந்த விளம்பரத்தை அடியொற்றி எடுக்கப்பெற்ற சாதிவாரிப் புள்ளி விவரங்கள் :**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடுதல் விளம்பரங்கள் : 403
சாதி வேண்டாத விளம்பரங்கள் : 45
விழுக்காடு : 11.16%
சாதி வேண்டும் விளம்பரங்கள் : 358
விழுக்காடு : 88.8%

பெயர்	எண்ணிக்கை	விழுக்காடு
1. ஆதி திராவிடர்	9	2.5%
பள்ளர்	1	0.3%
2. இந்து நாடார்	9	2.5%
3 ஈழவர்	2	0.6%
4. உடையார்	2	0.6%
5. **பிராமணர் :** 50.3% 180 / 358		
ஐயங்கார்	7	2.0%
வடகலை	15	4.2%
தென்கலை	3	0.84%
கௌசிகா	5	1.4%
ஐயர்	35	9.8%
கேரள ஐயர்	7	2.0%
பாலக்காட்டு ஐயர்	1	0.3%
ஸ்ரீலங்கா ஐயர்	1	0.3%
பிராமின்	20	5.6%
ஆந்திர பிராமணர்	1	0.3%
இந்து பிராமணர்	1	0.3%
கன்னட பிராமணர்	1	0.3%
கேரள பிராமணர்	1	0.3%
தெலுங்கு பிராமணர்	9	2.5%
பெங்காலி பிராமணர்	1	0.3%
கௌண்டண்ய கோத்திரம்	9	2.5%
பாரத்துவாஜ கோத்திரம்	14	3.9%
பாரத்துவாஜ அல்லாத வேறு கோத்திரம்	8	2.2%
வடமா	41	11.5%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயர்	எண்ணிக்கை	விழுக்காடு
6. கம்மா	1	0.3%
7. கள்ளர்	1	0.3%
8. கௌண்டர்	1	0.3%
9. செட்டியார்	5	1.4%
10. துளுவ நியோகி	1	0.3%
11. தையா	2	0.6%
12. நாயர் மொத்த விழுக்காடு :	4.74%	
நாயர்	11	3.1%
கேரள நாயர்	1	0.3%
பாலக்காட்டு நாயர்	1	0.3%
மேனன்	3	0.8%
நம்பியார்	1	0.3%
13. நாயுடு மொத்த விழுக்காடு :	7.54%	
நாயுடு	4	1.10%
கம்மா நாயுடு	2	0.6%
கவர நாயுடு	3	0.8%
பலிஜா நாயுடு	14	3.9%
தெலுங்கு நாயுடு	1	0.3%
யாதவ நாயுடு	2	0.6%
ரெட்டியார்	1	0.3%
14. பிள்ளை மொத்த விழுக்காடு :	5.3%	
பிள்ளை	2	0.6%
கருணீகர் பிள்ளை	2	0.6%
சைவப் பிள்ளை	1	0.3%
சைவ வேளாளப் பிள்ளை	1	0.3%
மலையாளிப் பிள்ளை	1	0.3%
திருநெல்வேலி சைவ வேளாளப் பிள்ளை	1	0.3%
வேளாள	1	0.3%
வேளாளப் பிள்ளை	2	0.6%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயர்	எண்ணிக்கை	விழுக்காடு
கார்காத்த வேளாளப் பிள்ளை	1	0.3%
கொங்கு வேளாளப பிள்ளை	1	0.3%
சோழி வேளாளப் பிள்ளை	2	0.6%
துளுவ வேளாளப் பிள்ளை	4	1.1%
15. முதலியார் மொத்த விழுக்காடு : 7.8%		
முதலியார்	12	3.4%
ஆர்க்காட்டு முதலியார்	6	1.7%
செங்குந்த முதலியார்	7	2.0%
வேளாள முதலியார்	3	0.8%
16. யாதவர்	1	0.3%
17. வன்னியர் மொத்த விழுக்காடு : 1.9%		
வன்னியர்	1	0.3%
வன்னியக்குலச் சத்திரியர்	6	1.7%
18. வள்ளுவ நயினார்	1	0.3%
19. வளையர்	1	0.3%
20. விஸ்வ கர்மா	7	2.0%
21. முசுலீம் மொத்த விழுக்காடு : 3.7%		
முஸ்லிம்	3	0.84%
சுனி முஸ்லிம்	6	1,7%
உருது முஸ்லிம்	1	0.3%
ஷப்பி முஸ்லிம்	1	0.3%
22. கிருத்துவர் மொத்த விழுக்காடு : 6.14%		
கிருத்துவர்	1	0.3%
புராட்டஸ்டண்டு	4	1.1%
ரோமன் கத்தோலிக்கர்	11	3.1%
கத்தோலிக்க நாயுடு	1	0.3%
கத்தோலிக்க முதலியார்	1	0.3%
கத்தோலிக்க வேளாளர்	1	0.3%
புராட்டஸ்டண்டு வன்னியர்	1	0,3%
புராட்டஸ்டண்டு அகமுடையர்	1	0.3%
நாடார் கிருத்துவர்	1	0.3%
23. ஆங்கிலோ இந்தியன்	1	0.3%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புள்ளி விவரத்தை அடியொற்றிய குறிப்புகள்

சாதியையும் மதத்தையும் ஒப்புக்கொள்வது, சார்பற்ற (Secular) சமத்துவ நிலைக்கு எதிரானது. சாதிச் சலுகையும் சார்பற்ற நிலையும் மீண்டும் சந்திக்க முடியாத இணைக் கோடுகள்; இரட்டை இரயில் பாதைகள். ஒதுக்கீடு ஒடுக்கப் பட்ட மக்களையும், பின்தங்கிய மக்களையும் ஏனையோர்க்குச் சமமாக மேலே கொண்டு வர வேண்டும் என்பதற்கு உரிய சரியான வழி அன்று. சாதி மத வழிச் சலுகைகள் அல்லது ஒதுக்கீடுகள் அல்லாத மாற்று வழியை அரசியல் சாசனத்தை உருவாக்கியோர் கண்டுபிடித்திருக்க வேண்டும். கண்டுபிடிக் கத் தவறவே சாதியும் மதமும் நிலைப்பதற்கான வழிமுறை களுக்கு வித்திடப்பட்டது: இதன் விளைவு சலுகை பெற்ற சாதியினரும் மதத்தினரும் குழுவாகத் தனித் தனி அணிகளாகத் திரண்டு விட்டனர். சாதிமத அடிப்படையில் சலுகைகள் பெறாத, அல்லது பெற மறுக்கப்பெற்ற ஏனைய சாதியினரும் அணியாக ஒன்று திரளுவதன் மூலம் சலுகை களை அடைவதற்காக ஒன்று திரண்டு விட்டனர். இச்சூழலில் சாதி மதப் பிளவு முன்பைவிடத் தற்போது வலுப்பெறத் தொடங்கி விட்டது. அரசியல் பொருளியல் சமூகவியல் முனை களிலும் சாதியின் வல்லாண்மை பெருகிவிட்டது.

கல்வி, சாதி மதப் பிரிவினையைத் தவிர்த்திருக்க வேண்டும். மாறாக வளர்த்தது. கல்வி நுழைவு, கல்விக் கூடங்கள் முதலாயின சாதி மத அடிப்படையிலே அமைக்கப் பெற்றிருப்பதால் மேற்கண்ட பிரிவினைக் கூறுகள் கல்வி நிறுவனங்களிலும் வலுப்பெற்றன. இந்து நாளிதழில் மணம் வேண்டும் பகுதியில் விளம்பரம் செய்வோர் பெரும்பாலும் கற்றவராகவே இருப்பர். அதிலும் குறிப்பாக ஆங்கிலக் கல்வி உடையவராகவே இருப்பர். ஆனால் கல்வி கற்ற அவர்களே தம் சாதியை முன்னிருத்தி விளம்பரங்கள் செய்துள்ளனர்.

1988 — செப்டம்பர்த் திங்களில் மணமக்கள் வேண்டும் பகுதியில் வெளிவந்த விளம்பரங்கள் 403. இவற்றுள் 358 விளம்பரங்கள். அதாவது 88.8% விழுக்காட்டினர் தத்தம் சாதிகளிலேயே திருமணம் செய்து கொள்ள விரும்பினர் எனத் தெரிகிறது. இது கற்றவர்கள் கூடத் தம் சாதியை விடவில்லை என்பதைக் காட்டுகிறது. தம் சாதியை விட்டு வேறு சாதியில் திருமணம் செய்துகொள்ள முடியாத சமுதாய இக்கட்டையும் தெளிவு படுத்துகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளம்பரங்களில் மிகுதியாக இடம் பெற்றிருப்போர் பிராமணர். 50.3% அதாவது 358 பேரில் 180 பேர்கள். அவர்களும் கூடப் பிராமணர் என்று பொதுவாக விளம்பரம் கொடுக்காமல் தத்தம் கோத்திர உட்பிரிவுகளையும் மொழி உட்பிரிவுகளையும் கொடுத்துள்ளனர்.

நாயுடு இனத்தைச் சேர்ந்தவர் 27 பேர் விளம்பரம் அளித்துள்ளனர். அதாவது 7.54% அவர்களும் கம்மா நாயுடு, கவர நாயுடு, பலிஜா நாயுடு என்று தம் சாதி உட்பிரிவுகளைக் கொடுத்துள்ளனர்.

பிள்ளை என்ற வெள்ளாளர் 19 பேர் விளம்பரம் செய்துள்ளனர். மொத்தத்தில் 5.3% விழுக்காட்டினர். அவர்களும் தம் சாதியின் உட்பிரிவுகளைச் சைவ வேளாளர், கார்காத்த வேளாளர், சோழிய வேளாளர் எனக் கொடுத்து விளம்பரம் செய்துள்ளனர்.

சமத்துவ சமயம் என்று கூறப்படும் இசுலாமியர் 11 பேர் அதாவது 3.07% விழுக்காட்டினர் விளம்பரம் செய்துள்ளனர். அவர்களும் தம் உட்பிரிவான சுனி முஸ்லிம், ஷப்பி முஸ்லிம், உருது முஸ்லிம் என்று விளம்பரம் செய்துள்ளனர்.

சாதியை அடிப்படையில் ஒப்புக்கொள்ளாத மதம் கிருத்துவம். ஆனால் அச்சமயம் கூட இந்தியச் சூழலில் சாதியை ஒப்புக்கொண்டது என்பதை அவர்தம் விளம்பரம் புலப்படுத்துகிறது. 22 பேர் விளம்பரம் செய்துள்ளனர். அதாவது 6.14% விழுக்காடு. ஆனால் விளம்பரத்தில் கத்தோலிக்க நாயுடு, முதலியார், வெள்ளாளர் என்றும் நாடார். கிருத்துவர் என்றும் பிராட்டஸ்டண்டு வன்னியர், அகமுடையார் என்றும் ஆங்கிலோ இந்தியர் என்றும் விளம்பரம் நல்கியுள்ளனர்.

மேற்கண்ட புள்ளி விவர முடிவு நமக்கு எடுத்து உரைப்பது இவற்றைத்தான்.

1. நம்முடைய சாதிப் பற்றை நாம் பெற்ற கல்வியால் கூடத் தகர்க்க முடியவில்லை. அல்லது சாதிப்பற்றைத் தகர்க்க முடியாத கல்வி முறையை நாம் வைத்துள்ளோம்.

2. சாதிய அடித்தளமே இல்லாத மண்ணில் தோன்றிய இசுலாம் கிருத்துவம் ஆகிய மதங்கள்கூட இந்தியாவில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதம் மாற்றம் பெற்ற கிருத்துவர்களிடையே சாதி அற்ற நிலையைத் தோற்றுவிப்பதில் தோற்றுப் போய்விட்டன: தம் சமயத்தின் அடிப்படைக் கோட்பாட்டிற்கு எதிரான சாதிப் பிரிவினைகளை அவை ஒப்புக் கொண்டுவிட்டன.

3. நம் நாட்டு மக்கள் சாதி என்ற விரிந்த ஒன்றைக் கூடப் பெருந்தன்மையோடு ஒப்புக் கொள்வதில்லை. சாதிக்கு உள்ளே இருக்கும் உட்பிரிவுகள் கூட அழியாமல் அவர்களால் பின்பற்றப்படுகின்றன; பேணப்படுகின்றன.

4. இவற்றுக்கெல்லாம் காரணம் அம்மக்கள் மட்டுந்தானா, சாதி உணர்வுக்கு நிலையான வாழ்வை அளித்த நம் அரசியல் சாசனம், உள்ளாட்சி, சட்டமன்ற நாடாளு மன்றத் தேர்தல் முறை, கல்விக்கூட நுழைவு முறை, வேலை அளிக்கும் முறை, மிகுதியான எண்ணிக்கை உடைய அல்லது குழு உணர்வுடைய சில சாதிமக்களின் செயல்முறை ஆகியன எல்லாம் காரணங்கள் அல்லவா?

குறிப்பு

வேட்பாளர் தேர்வில் ஜாதிக்கு முன்னுரிமை*

'சாதி, மத வித்தியாசம் பார்ப்பதில்லை' என்று...... கட்சி கூறிக்கொண்ட போதிலும், தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சி உறுப்பினர்கள், தங்கள் சாதிப் பெயரைத் தெரிவிக்குமாறு.........கட்சி கமிட்டி அச்சடித்து வழங்கியுள்ள விண்ணப்ப மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(* தினமணி 6-12-1988, இன்டியன் எக்ஸ்பிரஸ் 5-12-88)

1. சாதி வேண்டாதோர் : 45
பிராமணர் :
சாதி வேண்டியோர் : 180
மொத்தம் 225 விழுக்காடு : 80%

2. சாதி வேண்டாதோர் : 45
நாயர் :
சாதி வேண்டியோர் : 17
மொத்தம் 62 விழுக்காடு : 27.4%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. சாதி வேண்டாதோர் : 45
நாயுடு :
சாதி வேண்டியோர் : 27
மொத்தம் 72 விழுக்காடு : 37.5%

4. சாதி வேண்டாதோர் : 45
பிள்ளை :
சாதி வேண்டியோர் : 19
மொத்தம் 64 விழுக்காடு : 29.66%

5. சாதி வேண்டாதோர் : 45
முதலியார் :
சாதி வேண்டியோர் : 28
மொத்தம் 73 விழுக்காடு : 38.35%

6. சாதி வேண்டாதோர் : 45
வன்னியர் :
சாதி வேண்டியோர் : 7
மொத்தம் 52 விழுக்காடு : 13.45%

7. சாதி வேண்டாதோர் : 45
முசுலிம் :
சாதி வேண்டியோர் : 11
மொத்தம் 56 விழுக்காடு : 19.64%

8. சாதி வேண்டாதோர் . 45
கிருத்துவர் :
சாதி வேண்டியோர் : 22
மொத்தம் 67 விழுக்காடு : 32.83%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

ஏசலிலும் கொச்சை

திட்டுதல் என்பது சினத்தின் வெளிப்பாடாக மாந்தர்களிடம் அமைந்து உள்ளது. யாரேனும் ஏதேனும் சினம் வந்தால் நாக்கைக் கடிப்பதும், கைமுட்டியைக் காட்டுவதும் வழக்கம். நாக்கைக் கடிப்பதும், முட்டியைக் காட்டுவதும் உணர்ச்சி வெளிப்பாடுகள் மட்டும் அல்ல, உள்ளத்தில் ஏற்படும் கொந்தளிப்பைக் காட்டும் உடல் அறிகுறிகளே அவை. எதிரியைத் தாக்க மனம் விழைகிறது. ஆனால் எதிரி வலுவுடையவனாக இருப்பின் மனம் தயங்குகிறது. இந்தத் தயக்கத்தின் வெளிப்பாடாகச் சிலர், எழும் கோபத்தை அடக்கிக் கொள்கிறார்கள். சிலர் திட்டும் சொற்களாக வெளிப்படுத்துகிறார்கள். வலுக்குறைந்தவர் வலுவுடையோரைத் திட்டுதலை விட வலுமிகுந்தவர் அல்லது வயதில் கூடியவர் வலுவற்றவரை அல்லது வயதில் குறைந்தவரைத் திட்டுதல் மிகுதியாக உள்ளது. சில சமயம், வலுமிகுந்தவரை எதிர்த்து அடிக்கும் ஆற்றல் இல்லாதபோது இயலாமையின் வெளிப்பாடாகத் திட்டுதல் வெளிப்படுவது உண்டு.

திட்டுதலை உறவினரைத் திட்டுதல், உறவு அல்லாதவரைத் திட்டுதல் என்று இரண்டாக வகைப் படுத்தலாம். இவற்றையும்கூட உறவினருள் ஆணையும் பெண்ணையும் திட்டுதல் என இரண்டு வகையாகவும், அயலாருள் ஆணையும் பெண்ணையும் திட்டுதல் என்ற இருவகையாகவும் பிரித்துக் கொள்ளலாம்.

மனிதன் ஒரு சமூக விலங்கு. அவன் தன் குடும்பத்தாலும், குலத்தாலும், ஊராலும் கட்டுப்படுத்தப்படுகிறான். அவனுடைய தேவைகள் ஒவ்வொரு நாளும் வயது போலக் கூடிக் கொண்டே வருகின்றன. அவற்றை அவன் இயல்பாக எளிதாகப் பெறும்போது சிக்கல் ஒன்றும் நேர்வது இல்லை. தேவைகளைப் பெற முயலும்போது அவன் விருப்பம் நிறைவேறாமல் தடைப்பட வாய்ப்பு உண்டு. அத்தடை அவனுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன முறிவையே (Frustration) உண்டாக்குகிறது. உளவியல் அறிஞர்கள், மனமுறிவைத் தன்னைச் (Personal) சார்ந்தவை, சூழ்நிலைகளால் ஏற்படுவை, முரண்பாட்டால் ஏற்படுபவை என்று வகைப்படுத்துவர். மனமுறிவை வெளிப்படுத்துவது வேறு வேறு வகையாக அமையும். திட்டுதலும் மனமுறிவின் ஒருவகைப் புலப்பாடே. உள் எண்ணம், நோக்கம் நிறை வேறாமல் முறிவுறும் போது மனத்தில் ஏற்படும் செயல் முறையையே ஆக்கிரமிப்பு (Aggression) என்று குறிக்கின்றனர். இவ்வாக்கிரமிப்பு நேர்முகமாகவும், மறைமுக மாகவும் அமையும். அம்மாவையோ, அப்பாவையோ, அண்ணனையோ அடிக்க முடியாமல் கையில் உள்ள பொருள்களைத் தூக்கி உடைக்கிறது குழந்தை. சில சமயம் தானாகவும் சுவரில் முட்டிக் கொள்கிறது. தற்கொலைப் பழக்கம் கூட இந்த ஆக்கிரமிப்பின் தன்னை நோக்கிய விளைவுதான். நேர்முகமாக எதிர்த்துச் செயல்படுதல் ஒரு நிலை; இயலாதபோது பேசித் திட்டித் தீர்ப்பது இன்னொரு முறை. இந்த அடிப்படையில்தான் நம்மிடமும் சினமும் அதன் வெளிப்பாடாகத் திட்டுதலும் நிகழ்கின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. அஃறிணையில் இயங்காதவற்றைச் சொல்லித் திட்டுவது:

   எடுத்துக்காட்டு: குத்துக் கல்லு, மரம்.

2. அஃறிணையில் இயங்குகின்றனவற்றைச் சொல்லித் திட்டுவது:

   எடுத்துக்காட்டு: மாடு, எருமைமாடு, குரங்கு, நாய் முதலாயின.

3. சாதியைச் (கீழ்) சொல்லித் திட்டுவது.

   எடுத்துக்காட்டு: பறையன், பள்ளன், சக்கிலியன், வண்ணான், சூத்திரர்.

4. உடல் அமைப்பைச் சொல்லித் திட்டுவது.

   எடுத்துக்காட்டு: முண்டம், த்டியன், தடிச்சி.

5. சிறுமைக்குரிய செயல்களைச் சொல்லித் திட்டுவது:

   எடுத்துக்காட்டு: பொறுக்கி, சிறுக்கி, நக்கி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. ஏழ்மையைச் சொல்லித் திட்டுவது.

எடுத்துக்காட்டு: பிச்சைக்காரப் பையன், கையா லாகாத பயல்.

7. அறிவின்மையைச் சொல்லித் திட்டுவது.

எடுத்துக்காட்டு: முட்டாள், அறிவற்றவன், மூடம், அறிவு கெட்டவன்.

8. பயனின்மையைச் சொல்லித் திட்டுவது.

எடுத்துக்காட்டு: தண்டம், பைசாவுக்குக் கூடப் பிரயோசனம் இல்லாதவன்.

9. தன்மையை வைத்துத் திட்டுவது.

எடுத்துக்காட்டு: முரடு, முரட்டுப்பையன், முரட்டுச் சிறுக்கி.

10. கணவனை இழந்த நிலையை வைத்துத் திட்டுவது.

எடுத்துக்காட்டு: கம்மனாட்டி (கைம்பெண்டாட்டி)

11. திருடுதலை இழிவாகச் சொல்லித் திட்டுவது.

எடுத்துக்காட்டு: திருட்டுப் பையன், திருட்டுச் சிறுக்கி, களவாணி.

12. வேற்றுமொழிச் சொற்களைக் கொண்டு திட்டுவது.

எடுத்துக்காட்டு: இடியட், நான்சென்ஸ், ஃபூல், பாஸ்டர்டு, படவா (?) முதலாயின.

13. உடல் ஊனத்தைச் சொல்லித் திட்டுவது.

எடுத்துக் காட்டு: செவிட்டுப் பயல், குருட்டுச் சிறுக்கி முதலாயின.

14. சாவை மையமாக வைத்துத் திட்டுவது.

எடுத்துக்காட்டு: பாடையிலே போக, கட்டையிலே போக, கழிச்சலிலே போக, வயத்தாலே போக, காளியாத்தாள் கொண்டு போக, மாரியாயி அள்ளிக்கிட்டுப் போக.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15. பரத்தமையைச் சொல்லித் திட்டுவது:

எடுத்துக் காட்டு: தேவடியாள், தேவடியாள் சிறுக்கி, தேவடியாள் மவன், தேவடியாள் பையன்.

16. ஆண் பெண் பால் உறுப்புகளின் பெயரை வைத்துச் சொல்லித் திட்டுவது.

17. முறையற்ற பால் உறவுகளைச் சொல்லித் திட்டுவது.

1. தந்தை — மகள்
2. தாய் — மகன்
3. அக்காள் — தம்பி
4. பலர் — முதலானவை

மேற்கண்ட திட்டுகின்ற சொற்களையும், முறைகளையும் வைத்துத் தமிழர் தம் சமூகப் போக்கை ஓரளவு உய்த்துணரலாம்.

1. முறையற்ற பால் உறவு இவர்களால் மிகக் கடுமையாகக் கருதப்படுகிறது.

2. பெண்ணின் தேவடியாள் வாழ்வு மிக இழிவாகப் பழிக்கப்படுகிறது. தேவடியாளுடன் கூடிய உறவால் அவர்களுக்குப் பிறக்கும் ஆண்குழந்தை, பெண் குழந்தை ஆகியோர் மிகத் தாழ்வாகக் கருதப் பெறுகின்றனர்

3. கணவனை இழந்த விதவைக கோலம் மிகப் பழிப்புக்கு உரியதாகக் கருதப்படுகிறது.

4. இவர்களிடையே சாதிப் பேதங்களும் சில சாதிகளை இழிவாகக் கருதும் போக்கும் உள்ளன.

5. பொருளாதாரத் தாழ்வை இவர்கள் மிக இழிவாகக் கருதுகின்றனர். ''சோத்துக்கு வக்கு இல்லாதவன்'' என்று திட்டுவதும், ''பிச்சை எடுத்தலைப் பழித்துத் திட்டுவதும்'' இதனைக் காட்டும்.

6. கீழே கிடந்தவற்றைப் பொறுக்குதல், உணவை நக்கி உண்ணுதல் சிறுசெயல்களைச் செய்தல் ஆகியன இவர்களால் கண்டனத்திற்கு உள்ளாகின்றன.

FORWARDED FREE OF COST, AND WITH THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF EDUCATION, GOVERNMENT OF INDIA, NEW DELHI"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. அறிவின்மை தாழ்வாகக் கருதப்படுகிறது. அறிவின்மையை விடப் பண்பின்மையை இம்மக்கள் மிகப் பெரிதாகக் கண்டிக்கிறார்கள். பண்பாட்டின்மையில்கூடப் பெரும்பாலானவை ஆண் பெண் பால் உறவை மையமாக வைத்துக் கண்டிக்கப் பெறுகின்றன. ஆண் பெண் பால் உறவைப் பற்றிய திட்டும் மொழிகள் மிகக் கடுமையானவை யாகத் திட்டுவோராலும் திட்டப்பெறுவோராலும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அத்தகு திட்டுகள் நேரும்போது ''என்ன இப்படியா சொன்ன?'' என்று கேட்டு இருவ ரிடையே சண்டை மூளுவதைப் பல இடங்களிலும் காணலாம்.

8. எதிரியை நோய்வாய்ப் பட்டுச் சாகச் சொல்லும் மொழிகள், இம்மக்கள் சாவைக் கடுமையான எதிர்ப்பார்ப் பாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. மறுஉலக வாழ்வு பெருநம்பிக்கை இருக்கும் கூட்டத்தில் சாவைப் பற்றிய கவலை குறைவாகவே இருக்கும். இத்திட்டு மொழிகள் சாவைப் பெரிதாகக் காட்டுவதால் இம்மக்கள் இம்மை வாழ்வில் அதிக அக்கறை கொண்டு இருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன. மேலும் இச்சொற்களில் பெரும் பாலானவை பெண்களால் திட்டப் பெறுகின்றன என்பதும் கருதத் தக்கது.

மேலே சுட்டப்பெற்ற திட்டு மொழிகளை ஆண் பெண்ணை நோக்கித் திட்டுவன, பெண் ஆணை நோக்கித் திட்டுவன, ஆண் ஆணை நோக்கித் திட்டுவன, பெண் பெண்ணை நோக்கித் திட்டுவன என்று வகைப்படுத்திக் கொண்டு ஆராய்தல் நல்லது. இவ்வகைப் படுத்தலைக் கூட முடிந்தால் வயது அடிப்படையில் பகுத்துக் கொள்ளுதல் மேலும் சில தெளிவுகளை அளிக்கக்கூடும்.

சண்டை போட வேண்டும் என்ற விருப்பமும், எதிரியைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற சீற்றமும், இறக்க வேண்டும் என்ற ஆசையும் மனிதனுக்கு இயல்பாக இருக்கின்றன என்பது சிக்மன் பிராய்டு அவர்களின் கருத்து. ஆனால் மனிதன் எல்லோரிடமும் சண்டை போட முடியாது. எதிரியைப் பகிரங்கமாகத் தாக்கவும் முடியாது; அவன் பைத்தியக்காரத் தனமாக இறக்கவும் முடியாது. ஆனால் இந்த அடிப்படை உணர்வுகள் வேறு வேறு புற வடிவம் கொண்டு வெளிப்படு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றன. கத்திச் சண்டை, மற்போர், கிரிக்கெட், ஆக்கி முதலான விளையாட்டுகளை எல்லாம் மனிதன் மிக விரும்புவதற்குக் காரணம் அவன் உள்ளத்தில் உள்ள சண்டை போடும் உணர்ச்சியும், எதிரியைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற உணர்ச்சியும் ஆகும்.

ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், தெலுங்கர், மலையாளி ஆகியோருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழரிடையே திட்டும் முறைகள் மிகுதியாக உள்ளனவோ என்று கருத வேண்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, பால் உறவு முறைகளையும் உறவுகளையும் மையமாக வைத்துத் திட்டும் முறை மிகுதியாகத் தமிழர்கள் இடம் புழங்கு கின்றமை மிகுந்த கவனத்திற்கு உரியது. பால் உறவைப் பாவம் அல்லது பழிக்கத் தக்கது என்ற கருத்துடையவராகப் பழங்காலத் தமிழர் இருந்தனர் என்று கருதுவதற்கு இடம் இல்லை. ஆனால், தமிழ்நாட்டிற்கு வந்த சமண மதமும், பௌத்த மதமும் அவற்றுள் சிறப்பாகச் சமண மதமும் இல்லற வாழ்க்கையை விடத் துறவற வாழ்க்கையையே சிறப்பாகப் போற்றின. ஆண் பெண் கூட்டு வாழ்வை அம்மதங்கள் ஊக்கு விக்கவில்லை. பெண், இணை விழைச்சுப் பொருளாகப் பழிக்கப் பெற்றாள். பிற்காலத்து வந்த இசுலாமும் பெண்ணை ஆணோடு சமத்துவமாகக் கருதிய ஒன்று அன்று. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் அக வாழ்வையே பாவம் (Sin) என்று, செல்வாக்கோடு ஆட்சி பெற்ற கிருத்துவமும் பரப்பியது. எனவே, பலநூறு ஆண்டுகள் தொடர்ந்து ஆண் பெண் கூட்டு வாழ்வைப் பாவம் என்று கருதிய மனப்போக்கு, திட்டுதலாக வெளிப்படுகிறதோ என்று ஐயுற வேண்டியிருக் கிறது.

திட்டும் மொழிகளுள் குறிப்பாகப் பால் உறவைச் சார்ந்த கொச்சைச் சொற்களையும் இணைத்துப் பேசும் பழக்கம் மிகுதியாகக் கற்றவர்களைவிடக் கல்லாதவரிடமும் பொரு ளாதாரம் ஏற்றம் பெற்றவர்களை விட மிகப் பின்தங்கியவர் ளிடமும் இருப்பது கவனிக்கத்தக்கது. இத்தகு இயல்பு உடையோரிடம் மேற்கண்ட சொற்கள் மிகுதியாக இருப்பானேன்? உடல் உறவு வாழ்க்கையில் அவர்களிடையே உள்ள நிறைவின்மையும், நிறைவேறாமையும் காரணங்களா என்பது ஆராயத்தக்கது. உளவியல் அறிஞர்கள் இரண்டு செயல்களை வற்புறுத்துகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. அடக்குதல் (Repression): மனத்தில் எழுகின்ற வேண்டாத எண்ணங்களை, உணர்ச்சிகளை, ஆசைகளை மேல் எழா வண்ணம் அடக்கி வைக்கும் மனமுறையே அடக்குதல் என்பர் பிராய்டு. ஆசைகளை உண்டாக்குகின்ற எண்ணங்களை அடக்கி மேல் மனத்தில் இருந்து அடி மனத்திற்கு அனுப்புதல் இச்செயல் முறையின் செயல்பாடு ஆகும்.

2. தடுத்தல் (Inhibition) : அடக்குதலைப் போலவே தடுத்தல் என்பதும் மனத்தோடு தொடர்புடைய பிறிதொரு செயல் ஆகும். மனத்திற்குள் ஏற்படும் எத்தனையோ வகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்கொள்ளாமல் தடுத்துக் கொள்ளுதல் அல்லது திசை திருப்பி விடுதல், தடுத்தல் எனப் பெறும். பொங்கி வரும் கோபத்தைச் சொல்லாகவோ, செயலாகவோ வெளிப்படுத்தாது தடுத்துக் கொள்ளுதல் இதன்பாற்படும். அடக்குதல், தடுத்தல் என்ற இரண்டு மன நிலைகளையும் மனிதன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதல் மூலம் பெற முடியும். இந்தப் பண்படுத்தலைக் கல்வியும், சில சமயம் பெற்றோர் வழிப் பழக்க வழக்கமும், நல்ல சமூகச் சூழ்நிலையும் ஒருவனுக்குத் தருகின்றன. இவை மூன்றும் அமையாதபோது மக்கள் எளிதாக அடக்குதலும், திட்டுதலும் இன்றி உணர்ச்சி வசப் படுகிறார்கள். தமிழர்களுள் பெரும்பாலோர் இப்பண்புகள் இல்லாமல் உணர்ச்சி வசப் பட்டுத் தம்வயம் இழக்கின்றனர் என்று கருத வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை நகரில் திட்டுதலில் ஒரு விசித்திரமான நிலை உருவாகி வருவதைக் கேட்கலாம்; பலரும் கேட்டு இருக்கலாம். அங்கே படிக்காதவர்களிடையே கொச்சை உறவுச் சொற்கள் ஏனைய தமிழ்நாட்டுப் பகுதிகளைவிட மிகக் கூடுதலாகப் பேசப் பெறுகின்றன. அனிச்சைச் செயல் போல அவர்கள் வாயில் இருந்து மேற்கண்ட சொற்கள் வெளிப்படுகின்றன. இதற்குரிய காரணம் ஆராயத்தக்கது. உடல் உறவு வாழ்க்கையில் ஏற்பட்ட சீர்குலைவையோ நிறைவேறா ஆசைகளையோ இவை காட்டலாம். அடக்குதலும் தடுத்தலும் இன்றிக் கற்கின்ற கல்லூரி இளைஞர்கள் வாயில் கொச்சைச் சொற்கள் இடம்பெற்று இருப்பது பண்பாட்டுத் தாழ்மையைக் காட்டுகிறது. கல்வி, மனமுறிவுகளைத் தாங்கும் பண்பாட்டைப் போதிய அளவு வழங்கவில்லை என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு ஆகலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றாலும், ஏனைய மாநில உலக மக்களை அவர்களிடையே வழங்கும் திட்டும் மொழிகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது தமிழர்களிடையே திட்டும் மொழிகள் கூடுதலாக உள்ளன. தமிழர்தம் தற்காலப் பண்பாட்டை அளக்கும் ஓர் அளவுகோலாக இவை கொள்ளத் தக்கனவா என்பது மேலும் ஆராயத்தக்கது.

துணை நூல்

மு. இராசமாணிக்கம், **உள்ளத்தின்–விந்தைகள்,** தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1964.

சந்திரமோகன், **சிந்தனையாளர்-ப்ராய்டு,** பிரேமா பிரசுரம், சென்னை - 600 024.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7

கற்கையினும் பிச்சை நன்றே

அயல் நாடுகளில் இந்தியாவைக் குறிப்பிடும்போது குறிப்பாக, கருத்துப் படங்களில் (கார்ட்டூன்ஸ்) பிச்சைக் காரர்கள் வடிவத்தில் குறிப்பிடுவர். உலக நாடுகளில் பிச்சைக் காரர்கள் மிகுதியாக உள்ள நாடு இந்தியா என்று புள்ளி விவரம் தெரிவிக்கிறது. பிச்சை எடுத்தலை ஒரு தொழி லாகவே இந்தியாவில் சில பேர் செய்கிறார்கள் என்பதை ஓர் ஆண்டுக்கு முன்பு வெளி வந்த இல்லுஸ்டிரேட்டட் வீக்லி ஆப் இந்தியா, தன் கட்டுரை வழித்தகுந்த சான்றுகளுடன் நிறுவிக் காட்டியது. சில சமூக விரோதிகள் குழந்தைகளையும், இளம் வயது சிறுவர்களையும் திட்டமிட்டுக் கடத்திச் சென்று பல்வேறு வகையான பிச்சை முறைகளுக்குப் பயிற்சி அளித்துப் பிச்சை எடுக்கச் செய்கிறார்கள் என்றும் பம்பாய்த் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் தோன்றி, வளர்ந்து, வாழ்ந் தும், இறந்தும் வருகிற சமயங்கள் அனைத்தும் சமய அடிப் படையில் பிச்சை எடுத்தலை மறைமுகமாக ஊக்கப்படுத்தி வந்தன; ஊக்கப்படுத்தி வருகின்றன. நிறுவனமாகத் தோன்றிய இந்தியத் தொன்மைச் சமயம் என்று கருதப்படு கின்ற சமணத்தில் பிச்சை எடுத்தல் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நெறியாகும். பிச்சை இடுதலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நெறியாகும். சமண சமயத்தைத் துறவோர் சமயம் என்பார்கள். காரணம், அந்தச் சமயத்தில் துறவோர்க்குத் தனி முதன்மை அளிக்கப் பெறுகிறது. இத்துறவோர்கள் வீட்டை விட்டு ஒதுங்கி வாழ்கிறார்கள். காடு மலைகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உணவு அளித்துப் பேணும் கடமை இல்லறத்தார்க்கு உரியது. இதனைச் சமண சமயம் தன்னுடைய அறநூல்கள் அனைத்திலும் வற்புறுத்துகிறது. சமணத்தைப் போலவே பௌத்தத்திலும் பிச்சை எடுத்தலும் பிச்சை இடுதலும் ஒப்புக் கொள்ளப் பட்டன. சமண பௌத்த மதங்கள் அல்லாது இந்தியாவில் பல்வேறு முனைகளில் சைவம் வைணவம்,(வைதீகம்) முதலான தேசிய (Native) மதங்களும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோன்றி வளர்ந்தன. இம்மதங்கள் அனைத்தும் பிச்சை எடுத்தலையோ, பிச்சை இடுதலையோ எதிர்த்ததாகச் சான்றுகள் இல்லை. முன்பின் அறிமுகம் இல்லாத புதியவர்களுக்கு உணவு அளித்துப் போற்றுதல் என்பது இந்தியத் தேசிய மதங்களின் வற்புறுத்தலாக இருந்தது. இவை சமய அடிப்படையில் மிகப் பெரிதாகப் போற்றப்பட்டன என்பதை,

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

என்று கண்ணகி கலங்குவதாக இளங்கோவடிகள் குறித்துள்ளமையால் அறிந்து கொள்ளலாம்.

சிவன் அடியார்கள் வீடு வீடாகப் பிச்சைக்குச் செல்வதையும், தம் உணவிற்கு வீட்டாருடைய குழந்தை இறைச்சியைக் கேட்பதையும் கூடக் குறையாகக் காணாமல் சமய நெறியாகப் பார்த்ததைப் பெரிய புராணம் எடுத்துரைக்கிறது. எனவே, இந்தியச் சமயங்கள் பிச்சை எடுத்தலையும், பிச்சை இடுதலையும் எதிர்க்கவில்லை என்பது தெரிகிறது.

கலைஞர்களுக்கும், புலவர்களுக்கும், வறிஞர்களுக்கும் உள்ள உரிமை இரத்தல் என்பது போலப் பல காட்சிகள் பழைய இலக்கியமான சங்க இலக்கியத்தில் காட்டப் பெறுகின்றன. ஆற்றுப்படை இலக்கியங்கள் கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியரும் அரசர்களையும், வள்ளல்களையும் நாடி உணவைப் பெற்று வாழ்ந்ததை வருணிக்கின்றன. புலவர்கள் பரிசிலுக்காக மன்னர் பலரையும், வள்ளல் பலரையும் நாடியதையும் புற இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. பரிசு அளிக்க மறுத்தவனைக் கூட, காலம் தாழ்த்துவோரைக் கூட மிகக் கடுமையாகக் கண்டிப்பதைச் சங்க இலக்கியப் படைப்புகள் ஒரு சில காட்டுகின்றன. எனவே, சங்க காலத்தில் இரத்தல் ஒரு குற்றமாகக் கருதப் பெறவில்லை; கண்டிக்கப்படவும் இல்லை.

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனினும்
ஈயேன் என்றல் இழிந்தன்று

என்ற புறநானூற்று வரி இரத்தலை இழிந்தது என்று ஒப்புக்கொண்டாலும், ஈயேன் என்பதை இரத்தலைவிட மிக இழிந்தது என்று சுட்டிக் காட்டுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரிசில் பெற்று வரும் புலவர் ஒருவர், தாம் பெற்ற அன்பளிப்புகளை எல்லோருக்கும் வழங்கும்படி தன்துணைவியைப் பணிக்கிறார் (புறநானூறு, 163). இதிலிருந்து, இலவசமாகப் புரவலர் / புலவர் அளிக்கும் பொருளைத் தயக்கம் இல்லாமல் மக்கள் வாங்கிச் சென்றனர் என்பதை அறியலாம். இலவச எதிர்பார்ப்புத் தமிழர் தம் இயல்பாக இருந்துள்ளது; இருந்து வருகிறது.

ஈகை

ஏற்றத்தாழ்வை ஓரளவு தணிப்பதற்கும், பொருளாதார மேடு பள்ளத்தை ஓரளவு சமன்படுத்துவதற்கும் ஈகைக் கோட்பாடு பயன்படலாம். ஆனால், ஒரு பக்கம் பொருள் குவிதலையும், இன்னொரு பக்கம் பொருளின்றி அழிதலையும் தடுக்கும் ஆற்றலை ஈகைக் கோட்பாடு பெற்றிருக்கவில்லை. இதனைத் தமிழ்நாட்டின் கடந்த கால வரலாறு மெய்ப்பிக்கின்றது.

இரத்தலைக் கொள்கை அடிப்படையில் கடுமையாகக் கண்டித்த முதல் அறிஞர் திருவள்ளுவராக இருக்கலாம்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (இரவச்சம் 1062)

இரவச்சம் என்ற அதிகாரத்தில் அவர் கூறுகின்ற கருத்துகள் சங்க இலக்கியத்தில் இரத்தலை ஏற்றுப் பேசியதற்கு எதிரானது என்று கருதத் தோன்றுகிறது.

1. ஒளிக்காமல் கொடுக்கும் கண் போன்ற நல்லவரிடம் கூட யாசிக்கக் கூடாது.

2. உலகத்தைப் படைத்தவன், உலகில் சிலர் பிச்சைக்காரர்களாக இருந்துதான் உயிர் வாழ வேண்டுமென்று படைத்து இருந்தால், அந்த உலகைப் படைத்தவனும் பிச்சைக்காரர்கள் போல எங்கும் அலைந்து கெடுவான்.

3. ஏழ்மையைப் பிச்சை எடுப்பதன் மூலம் தீர்க்க முடியும் என்று உழைப்பையும், முயற்சியையும் கைவிடுவது போன்று இழிவானது எதுவும் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. சிறிதுகூட வழி இல்லாதபோதும் பிச்சை எடுக்காமல் வாழுகின்ற சால்பு உலகத்து எல்லையை விடப் பெருமை யுடையது ஆகும்.

5. வெறுங்கூழ் உணவாக இருந்தாலும், சொந்த முயற்சியில் உழைத்துச் சமைத்து உண்பதே இனிமையானது, அதற்கு ஈடான இனிமையுடையது வேறு எதுவும் இல்லை.

6. தண்ணீர் இல்லாமல் தவிக்கும் பசுவிற்குத் தண்ணீர் வேண்டும் என்று ஒருவரிடம் தண்ணீர்ப் பிச்சைக் கேட்பது கூட இழிவானது.

7. பிச்சைக்காரர்களைப் பார்த்து நான் பிச்சைக் கேட்பது – தயவு செய்து நீங்கள் பிச்சை எடுக்காதீர்கள் என்பதுதான்.

8. பிச்சை எடுத்தல் என்பது போதிய பாதுகாப்பு இல்லாத தோணியைப் போன்றது. அது கரவு என்ற மறைக்கும் நெஞ்சமான பாறை தாக்கி உடைந்து சுக்கு நூறாகிவிடும்.

திருவள்ளுவர் இரவச்சம் என்ற அதிகாரத்திற்கு முன்பு இரவு என்ற ஓர் அதிகாரத்தை அமைத்துள்ளார். பிச்சை எடுத்தலைப் பற்றிய முன்னைய கருத்துகளைத் திருவள்ளுவர் தொகுத்துக் கூறுகின்றார் என்று அவ்வதிகாரத்தால் கருத லாம். இரவு அச்சம் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவரே கூறுவது போன்ற தன்மைக் கூற்று அமைந்துள்ளது:

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று (1067)

எனவே பிச்சை எடுத்தலை எதிர்த்து அழுத்தமாக முதல் குரல் கொடுத்தவர் திருவள்ளுவர் என்று கருதலாம்.

புலால் உண்ணாமை, கள் உண்ணாமை, பரத்தையர் உறவு நீக்கம், கொல்லாமை முதலான திருவள்ளுவ அறங்கள் மன்னர் களாலும், மக்களாலும் பின்பற்றப்படாமல் புறக்கணிக்கப் பட்டது போல, பிச்சை எடுத்தலைத் தடுக்கும் திருவள்ளுவர் கருத்தும் புறக்கணிக்கப்பட்டதாக எண்ண வேண்டியுள்ளது. குறிப்பாகத் திருவள்ளுவத்தை அடுத்தே தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும், நேராகவும், மறைமுகமாகவும் ஈகையை முதன்மையாக வற்புறுத்துகின்றன. பிச்சை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எடுத்தலையும் எதிர்க்கவில்லை. மணிமேகலைக் காப்பியம், பிச்சையிடுதலை வரவேற்றுப் போற்றியது. (மணிமேகலையின் செயல்கள், ஆதிரை பிச்சையிட்ட காதை). தமிழ் நாட்டின் மேல் ஆதிக்கம் கொண்ட சமயங்கள் பிச்சை எடுத்தலை எதிர்க்கவில்லை. சிவபெருமான் பிச்சைக்காரர் என்றும், வேறு தேவர்கள் பிச்சைக்காரர்கள் என்றும் கதைகள் பரப்பப்பட்டன. அக்காலத்து மக்களை மிகுதியாக ஆட்டிப் படைத்த சமயங்கள் அனைத்தும் ஈதலையும், ஏற்றலையும் ஏற்றுக்கொண்டன.

இதுவே தமிழ்நாடு பிற்காலத்தும் இன்றும் பிச்சைக்காரர்களின் இருப்பிடமாக இருப்பதற்கு மூலகாரணமாகலாம். மத வழிப் பிச்சை கொடுப்பது, எடுப்பது தடுக்கப் பெறவில்லை; மாறாக வளர்க்கப்பெற்றன. கோயில்களுக்குச் செல்வோர் பிச்சை போடுவதற்காகவே சில்லறைக் காசுகளைக் கொண்டு செல்லுதலைக் காணலாம். இதனை நம்பி நூற்றுக்கணக்கான பிச்சைக்காரர்கள் கோயில் வாயில்களிலும், திருவிழாக் காலங்களிலும் நிரம்பி வழிகிறார்கள். பிச்சை எடுத்துப் பிழைக்கலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே வளர்ந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். இதனால் ஏழ்மையை ஒப்புக்கொண்டு இசைவாகப் போடுமாறு மக்களை எளிதாகத் திசைதிருப்பவும் முடிந்தது.

புதுவை நகரைச் சுற்றிப் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுத்தலைப் பற்றி ஒரு புள்ளி விவர ஆய்வு மேற்கொள்ளப் பெற்றது. இவ்வாய்வு இன்னும் நிகழ்ந்து வருகிறது. ஏறத்தாழ 500 வினா நிரல்கள் தட்டச்சுச் செய்யப் பெற்றுப் புதுவை மாநிலக் கோயில்கள், மாதா கோயில்கள், பள்ளி வாசல்கள், பொது இடங்கள், திருவிழாக் கால கோவில் தலங்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று திரட்டப்பட்டன. அவ்வாறு திரட்டப்பெற்ற செய்திகளை அடியொற்றிப் பின் வரும் புள்ளி விவரம் ஆயத்தம் செய்து அளிக்கப்பெறுகிறது.

பிச்சை எடுத்தல் புள்ளி விவரம்

			விழுக்காடு
மொத்த ஆண்கள்	:	98	56.9%
மொத்த பெண்கள்	:	74	43.02%
மொத்தம்	:	172 பேர்	

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிச்சை எடுப்போர்

		சாதிவாரியாக	விழுக்காடு
நாயுடு	:	11	6.39
ஆதிதிராவிடர்	:	51	29.60
பிள்ளை	:	5	2.90
முதலியார்	:	13	7.55
படையாட்சி	:	15	8.72
கவுண்டர்	:	21	12.20
செட்டியார்	:	8	4.65
நாடார்	:	5	2.90
சாணர்	:	2	1.16
குருக்கள்	:	1	0.58
நாயக்கர்	:	8	4.65
கிறித்துவர்	:	1	0.58
சக்கிலியர்	:	1	0.58
கிராமணி	:	1	0.58
வன்னியர்	:	4	5.55
ஆசாரி	:	4	5.55
வேளாளர்	:	2	1.16
இடையர்	:	1	0.58
செம்படவர்	:	1	0.58
நாயர்	:	1	0.58
கர்ணையர்	:	1	0.58
உடையார்	:	1	0.58

மதம்			விழுக்காடு
கிறித்துவர்	:	10	5.81
இந்து	:	159	99.40
முகம்மதியர்	:	1	0.58

			விழுக்காடு
புதுவையைச் சார்ந்தவர்கள்	:	91	52.9%
புதுச்சேரி அல்லாத பகுதியினின்று	:	72	41.8%

ஊர்கள்

நெய்வேலி	குடியாத்தம்	மேல்பட்டாம்பாக்கம்
செஞ்சி	சென்னை	கள்ளக்குறிச்சி
அனுமந்தை	கடலூர்	சித்தூர்
காஞ்சிபுரம்	சுவிகாரப்பேட்டை	சிதம்பரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சௌகார் பேட்டை	அங்குசிட்டுப் பாளையம்	வேலூர்
விழுப்புரம்	பொய்யாவரம்	கிளியனூர்
ஆரணி	ஆத்திக்குப்பம்	தம்பிநாயக்கன்பட்டி
அரசூர்	திருச்சி	புதுப்பாளையம்
காளப்பாக்கம்	பண்ருட்டி	மரக்காணம்
வந்தவாசி	பாபநாசம்	செங்கம்
சேலம்	சீநாத்தூர்	கருப்பூர்
முகையூர்	குறிஞ்சிப்பாடி	கள்ளிப்பட்டு
நாகப்பட்டினம்	சேரனூர்	கொம்பூர்
மணலிப்பட்டு	திண்டிவனம்	மூலக்குளம்
மைலம்	காகுப்பம்	இராணிப்பேட்டை
கோட்டக்குப்பம்		

பெற்றோர் தொழில்

மரம் வெட்டுதல்	வியாபாரம்	சர்க்கரை ஆலையில் வேலை
பூசாரி	வீடு கட்டுதல்	கறிக்கடை
செருப்புத் தைத்தல்	மீன் வியாபாரம்	பிச்சை எடுத்தல்
கூலி வேலை	விவசாயம்	ரிக்ஷா ஓட்டுதல்
நெசவு	பட்டுச்செடி வளர்த்தல்	ஆசிரியர்
விறகு விற்பது	தோட்டவேலை	துப்புரவுத்தொழில்
மரம் ஏறுதல்	தினக்கூலி	மாட்டு வியாபாரம்
தச்சு வேலை	ஆலைத்தொழில்	பொன்வேலை செய்தல்
சலவைத்தொழில்	பால் வியாரம்	கங்காணி (சிங்கப்பூர்)
மிட்டாய் கம்பெனி	மூட்டைத் தூக்குதல்	முனிசிபாலிடியில் வேலை
நெல் வியாபாரம்		

படிப்பு

படித்தவர்கள்	:	37
படிக்காதவர்கள்	:	119
வகுப்பு	:	8, 6, 5, 4, 3, 2.
8வது படித்தவர்கள்	:	6 பேர்
6வது படித்தவர்கள்	:	4 பேர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5வது படித்தவர்கள்	:	6 பேர்
4வது படித்தவர்கள்	:	3 பேர்
3வது படித்தவர்கள்	:	13 பேர்
2வது படித்தவர்கள்	:	5 பேர்

விழுக்காடு

படித்தவர்கள்	:	21.5.
படிக்காதவர்கள்	:	69.18

பிச்சை எடுக்கக் காரணங்கள்

			விழுக்காடு
அநாதை	:	24	13. 90
குருடு	:	19	11. 04
வயிற்று வலி	:	1	0. 58
துறவி	:	11	6. 39
குஷ்டம்	:	15	8. 72
நொண்டி	:	14	8. 13
கை ஊனம்	:	1	0. 58
மரம் விழுந்து அடிபட்டது	:	1	0. 58
ஆஸ்த்மா	:	5	2. 90
பிள்ளைகள் கைவிட்டது	:	1	9. 88
பிச்சை எடுப்பது எளிது	:	1	0. 58
செவிடு	:	2	1. 16
ஊமை	:	3	1. 74
முதுமை	:	1	0. 58
எளிதாகப் பிழைக்க முடியும்	:	7	4. 06
காச நோய்	:	3	1. 74
யானைக்கால்	:	3	1. 74
இடுப்பு வலி	:	2	1. 16
குழந்தை இல்லை	:	1	0. 18
தீராத நோய்	:	17	9.88
வலிப்பு	:	3	1.74
மனநிலை சரியில்லை	:	1	0.58
மூளை வளர்ச்சியின்மை	:	1	0.58

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கால் வலி	:	6	3.48
நரம்புத் தளர்ச்சி	:	1	0.58
வறுமை	:	1	0.58

திருமணம்

			விழுக்காடு
ஆகாதவர்கள்	:	46	26.74
ஆகியவர்கள்	:	122	70.93

கணவன் இறந்தமையால் பிச்சை எடுத்தல் (விதவை)

			விழுக்காடு
மொத்தம்	:	46	26.70

மனைவி இறந்தமையால் பிச்சை எடுத்தல்

			விழுக்காடு
மொத்தம்	:	27	15.60
கணவன் கைவிட்ட நிலை	:	8	4.65
மனைவி கைவிட்ட நிலை	:	12	6.97
கணவன் மனைவி இருவரும் பிச்சை எடுத்தல்	:	4	5.55%

வேலை கிடைத்தால் வேலை

			விழுக்காடு
செய்யச் சம்மதம்	:	39	22.60
சம்மதம் இல்லை	:	124	72.09

காரணம்

1. வேலை செய்வது கஷ்டம்
2. வேலை கொடுத்தால் சுதந்திரம் போய்விடும்.
3. உட்கார்ந்த இடத்தில் இருந்து சம்பாதிக்க முடியாது.
4. செய்ய இயலாத உடல் ஊனம் — கை, கால், நொண்டி, குருடு முதலாயின.
5. நோய்
6. உடம்பில் வலுவில்லை
7. வலிப்பு நோய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணச் சேமிப்பு உண்டா ?

			விழுக்காடு
உண்டு	:	2	1.16
இல்லை	:	165	95.90

சொந்த வீடு

			விழுக்காடு
உள்ளவர்கள்	:	19	11.4
இல்லாதவர்கள்	:	143	83.13

உறங்கும் இடங்கள்

தெரு வீதி	மற்றவர் வீட்டுத் திண்ணையில்	பூங்கா
தெருவோரம்	பஸ் ஸ்டாண்டில்	ரயில்வே ஸ்டேசன்
கோயில்களில்	கடையோரம்	தேங்காத் திட்டு ஆற்று ஓரம்
சினிமாதியேட்டர் வாசலில்	தோப்பு வீடு	குடிசைப் பகுதி அண்ணா திடல்

உடல் நலம் கெட்டால் மருத்துவம்

			விழுக்காடு
நாட்டு மருத்துவம்	:	5	2.90
ஆங்கில மருத்துவம் (மருத்துவ மனைக்குச் செல்லுதல்)	:	149	86.60
மருத்துவமனைக்குப் போகாமல் சகித்துக் கொள்ளுதல்	:	11	6.39

கெட்ட பழக்கம்

			விழுக்காடு
வெற்றிலை பாக்கு போடுதல்	:	17	9.88
புகையிலை	:	1	0.58
பொடி போடுதல்	:	1	0.58

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மது அருந்துவோர்	:	46	26.74
மது அருந்தாதவர்கள்	:	119	69.18
புகை பிடிப்போர்	:	45	26.16
புகை பிடிக்காதவர்கள்	:	118	68.60

பொழுது போக்கு

			விழுக்காடு
சினிமாவிற்குச்செல்லுதல்	:	35	20.34
சீட்டு	:	3	1.74
கூத்துப் பார்ப்போர்	:	1	0.58
தூங்குபவர்	:	1	0.58

			விழுக்காடு
பிச்சை எடுக்க வெளியூர் செல்லுவோர்		38	22.09
உள்ளூரில் பிச்சை எடுப்போர்	:	52	30.23
திருமண விருந்திற்குச் செல்லுவோர்	:	16	9.30

அதிக பிச்சை எடுக்கிற நாட்கள்

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி.

மிகுதியாகப் பிச்சை கிடைக்கும் திருவிழா மாதங்கள்

ஆடி, புரட்டாசி, கார்த்திகை, மார்கழி, தை, சித்திரை, வைகாசி.

ஒரு நாளைக்குக் கிடைக்கும் ரூபாய்

குறைந்த பட்சம்	:	50 பை
கூடுதல்	:	ரூ. 10

சாப்பாடு

				விழுக்காடு
மூன்று வேளையும்	சாப்பிடுவோர்	:	33	19.18
இரண்டு வேளை	,,	:	84	48.80
ஒரு வேளை மட்டும்	,,	:	44	25.58
தானே சமைத்துச் சாப்பிடுவோர்		:	5	5.55

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வயது

13 வயது	:	1
15 வயது	:	1
28 வயது	:	2
29 வயது	:	1
30—40க்குள்	:	25
41—50க்குள்	:	27
51—60க்குள்	:	51
61—70க்குள்	:	41
71—80க்குள்	:	20
90— வயது	:	1

7324

மேற்கண்ட புள்ளிவிவரங்களில் இருந்து பெறப்படும் முடிவுகள் வருமாறு

1. பிச்சை எடுப்போர்களில் ஆண்களின் விழுக்காடு 55.30% பெண்களின் விழுக்காடு 44.70%. ஏறத் தாழப் பாதிக்குப் பாதி ஆண்களும் பெண்களும் இத் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்பது தெரிகிறது.

2. பிச்சை எடுத்தலை, சாதி வாரியாகக் கணக்குப் பார்க்கும்போது, மிகுதியாகப் (28.23%) பிச்சை எடுத்தலில் ஆதி திராவிடர்கள் ஈடுபடுகின்றனர் என்பது தெரிகிறது. அவர்களுக்கு அடுத்த நிலையில் (7.55%) முதலியாரும், 12.20% விழுக்காடு கவுண்டரும் பிச்சை எடுத்தலில் ஈடுபடுகின்றனர் என்பது தெரிகிறது.

   மிகக் குறைந்த விழுக்காடாக இடம்பெற்று இருக்கும் சாதியார் குருக்கள். ஒருவர் மட்டுமே உள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. புதுச்சேரி மாநிலத்தில் பிச்சை எடுப்பதில் 95.29% விழுக்காட்டினர் இந்து சமயத்தைச் சார்ந்தவராக வும், 4.70% விழுக்காடு கிறித்துவச் சமயத்தைச் சார்ந்தவராகவும் உள்ளனர்.

4. புதுச்சேரி நகரை யொட்டிப் பிச்சை எடுத்தலில் பெரும்பாலோர் 77.64% விழுக்காட்டினர் புதுச்சேரி யைச் சார்ந்தவர்கள் என்பது தெரிகிறது.

புதுச்சேரி : 77.64%
வெளியூர் 22.35%

5. படிக்காதவர்கள் பிச்சை எடுத்தலில் அதிகமாக ஈடுபடுகின்றனர்.

படிக்காதவர்கள் : 77.64%
படித்தவர்கள் : 22.35%

படித்தவர்கள் கூட— 8 ஆம் வகுப்பு படித்தவர்கள் 3 பேர்
6 ஆம் வகுப்பு படித்தவர்கள் 2 பேர்
7 ஆம் வகுப்பு படித்தவர்கள் 1 பேர்

ஏனையோர் எல்லாம் 5 ஆம் வகுப்பிற்குக் குறைவாகவே படித்துள்ளனர்.

6. பிச்சை எடுக்கக் காரணங்கள்

1. ஊனம் 2. நோய் 3. பிள்ளைகள் கைவிட்டது
4. எளிதாகப் பிழைக்க முடியும் என்ற நம்பிக்கை
5. குழந்தைகள் இல்லாமை.

இவற்றுள் குருடு, நொண்டி ஆகிய ஊனம் உற்றோர் முதல் நிலையில் வருகிறார்கள். ஊனம் உற்றோருக் குப் பிச்சை வழங்க வேண்டும் என்ற மக்களுடைய கோட்பாடும் இணைத்து நினைக்கத்தக்கது. ஊனத் தையும், நோயையும் கடவுளின் தண்டனையாகக் குறிப்பாக நம்புகின்ற தமிழ் மக்களின் மனப்போக்கும் எண்ணத்தக்கது. ஊனம் உற்றோரையும் நோய் உடையோரையும் தமிழ்ச் சமூகத்தினர் எப்படி நடத்துகின்றனர் என்பதையும் இது காட்டுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. திருமணம் ஆகியவர்களே பிச்சை எடுப்பவர்களில் பெரும்பாலானவர்களாக உள்ளனர் (30.00%)

8. விதவையானோர் பிச்சை எடுப்பதில் மிகுதியாக உள்ளனர் (22.35%) என்பதைப் புள்ளி விவரம் காட்டுகிறது. தமிழ்ச் சமூக அமைப்பில் விதவைகள் நிலை எவ்வளவு பரிதாப நிலையில் இருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

9. வேலை கிடைத்தாலும் வேலை செய்ய உடன்பட வில்லை என்போர் 83.52% விழுக்காட்டினராக உள்ளனர். பிச்சைக்காரர் விடுதிகளில் சிறு சிறு தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டும் ஏன் அவை அழிந்து விடுகின்றன என்பதை இங்கே நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

10. பிச்சைக்காரர்கள் உறங்கும் இடங்கள், தெருவிலும், கோயில் வாசல்களிலும், இன்ன பிற இடங்களிலும் என்பது மிகுந்த கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

11. தீரா நோயுற்ற பிச்சைக்காரர்கள் நோயால் வரும் துன்பத்தைச் சகித்துக் கொள்வது என்பது தலை வலிக்குக்கூட மருத்துவமனைக்குச் செல்லும் பலருடைய பார்வைக்கு உரியது.

12. பிச்சைக்காரர்களின் பொழுது போக்காகச் சினிமா முதலிடம் வகிப்பது கவலைக்கும் கவனத்திற்கும் உரியது.

13. நாள் முழுதும் பிச்சை எடுத்தும்கூட மூன்று வேளை யும் சாப்பிடுகிறவர்கள் 21.17% விழுக்காடு என்று புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

குறிப்பு

1. வினா நிரல்களைப் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்று, பிச்சைக்காரர்களை நேரில் சந்தித்து நிரப்பி அளித்த எம்.பில் மாணாக்கியர் :

   செல்வி. நிரஞ்சனா

   செல்வி. உஷா ஆகியோருக்கும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. நிரப்பப் பெற்ற வினா நிரலிலிருந்து செய்திகளைத் திரட்டி அளித்த பிஎச்.டி. மாணாக்கியர்

   செல்வி. தாமரைச்செல்வி

   திருமதி. சுத்திக்கரமேரி

   செல்வி. உமாராணி ஆகியோருக்கும்,

3. புள்ளி விவரங்களை ஒழுங்கு செய்யவும், தட்டச்சுச் செய்யவும் உறுதுணையாக இருந்த திரு. பழ. முருகப்பன் ஆகியோருக்கும் நன்றி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8

விளம்பரம் என்னும் வாண வேடிக்கை

விளம்பரம் என்றால் என்ன என்பதை "The Encyclopaedia of Britanica" பின்வருமாறு வரையறுக்கிறது.

'A form of paid, announcement intended to promote the sale of a commodity or service, to advance an idea or to bring about some other effect, desired by the advertiser".

"THE AMERICAN MARKETING ASSOCIATION" என்ற அமைப்பு விளம்பரம் என்பதைப் பின்வருமாறு வரையறுக்கிறது.

"Any paid form of non-personel presentation and promotion of ideas, goods or services by an identified sponsor"

விளம்பரத்திற்காகத் தில்லி நடுவண் அரசே டி.ஏ.வி.பி (Directorate of Advertising and Visual Publicity) என்ற ஒரு தனித் துறையை வைத்து இயக்குகிறது.

மைய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள் இதழ்களில் ஓர் ஆண்டிற்கு 165 கோடி ரூபாயைச் செலவழிக்கின்றன.

இலாட்டரிக்காக ஆண்டுதோறும் 42 கோடி ரூபாய் விளம்பரத்திற்காகவே செலவழிக்கப் பெறுகிறது.

இந்திய நாட்டை விளம்பரப் பேய் பிடித்து ஆட்டுகிறது. அதிலும் குறிப்பாகத் தமிழ் பேசப்பெறும் பகுதிகளான தமிழ் நாட்டிலும், புதுச்சேரியிலும் விளம்பரப் பிசாசு பொருளாதாரச் சீரழிவையும், பண்பாட்டுச் சீரழிவையும் நிகழ்த்தி வருகிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஒரு கூறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போட்டிப் பொருளாதாரம் (Competitive) ஆகும். போட்டிப் பொருளாதாரத்தின் உயிர் நாடி விளம்பரத்தின் நெஞ்சக் கூட்டில் வைக்கப் பெற்று, வளர்க்கப் பெற்று வருகிறது. 1988 இல் விளம்பரத்திற்கென 850 கோடி ரூ; இதில் இதழ்களின் பங்கு மட்டும் 700 கோடி ரூ. விளம்பரங்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. சுவரொட்டி விளம்பரம்
2. திரைப்பட/தொலைக்காட்சி விளம்பரம்
3. வானொலி விளம்பரம்
4. ஒலிபெருக்கி விளம்பரம்
5. துண்டறிக்கை விளம்பரம்
6. நாளிதழ் விளம்பரம்.

இவற்றுள் நாளிதழில் விளம்பரம் பற்றி மட்டும் இவ்வெழுத்துரை ஆராய்கிறது. 80 % விளம்பரம் இதழ்களிலேயே வெளி வருகின்றன. இதில் 51.4% விளம்பர முதலீடு ஆங்கில இதழ்களுக்குச் செல்கிறது. ஆராய்ச்சிக்கு அடித்தளமாகச் செப்டம்பர் 1988இல் வெளிவந்த தினத்தந்தி, தினமணி, தினமலர், இந்து ஆகிய நாளிதழ்கள் மட்டும் கணக்கில் கொள்ளப் பெற்றன.

இதழ்	மொத்த பக்கம்	விளம்பரப் பக்கம்	விழுக்காடு
தினத்தந்தி	438	208	47.48%
தினமணி	256	$71\frac{1}{4}$	27.83%
தினமலர்	242	$94\frac{1}{2}$	38.94%
இந்து	680	$365\frac{1}{2}$	53.75%

தினத்தந்தி, தினமணி, தினமலர் முதலான நாளிதழ்கள் **வரி அடிப்படையில்** விளம்பரக் கட்டணத்தை அமைத்துள்ளன.

ஒரு வரிக்கு ரூ. 30/—எனத் தினத்தந்தி வரையறுத்துள்ளது (செப்-1988). ஒரு காலத்தில் கிட்டத்தட்ட 94 வரிகள் உள்ளன. ஒரு பக்கத்தில் 8 காலங்கள் உள்ளன. ஒரு நாளைக்கு, ஒரு பக்கம் விளம்பரம் வழிக் கிடைக்கும் வருமானம் ரூ. 22,560,/—(94 X 30 X 8= 22,560) ஒரு மாதத்தில் 208 பக்கங்களில் விளம்பரங்கள் வெளிவந்துள்ளன. அங்ஙனம், ரூ. 22,560 X 208 = 46,92,480 ரூபாய் ஒரு மாதத்திற்கு விளம்பரம்மூலம் தினத்தந்தி தமிழ் நாளிதழுக்குக் கிடைக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்து நாளிதழ் இதனிலும் மேலே போய் ஒரு சொல்லிற்கு எவ்வளவு என்று விளம்பரக் கட்டணம் விதித்துள்ளது. அதனையும் பல்வேறு வகையாக வகைப்படுத்தி இருக்கிறது. குறைந்த பட்சம் ஒரு சொல்லிற்கு ரூபாய் 6.50 என்றும், கூடுதல் ஒரு சொல்லிற்கு ரூ. 12ம் அமைத்துள்ளது. இரண்டையும் சராசரியாகக் கொண்டால் ரூ. 9. 25/- என்று கொள்ளலாம்.

ஒரு காலத்தில் இந்து நாளிதழில் இடம் பெறும் சொற்கள் கிட்டத்தட்ட 920. ஆறு காலம் கொண்ட இந்து நாளிதழில் மொத்த சொற்கள் 5,520.

ஒரு சொல்லிற்கு ரூ. 9.25/-

ஒரு நாளைக்கு ஒரு பக்கம் வழி கிடைக்கும் வருமானம்:

5,520 X 9.25 : 51,060

ஒரு மாதத்திற்கு 365.5 பக்கங்கள் இந்துவில் வெளிவருகின்றன. ஒரு மாதத்திற்குக் கிடைக்கும் வருமானம்:

5,520 X 9.25 X 365.5 = 1,86,62,430

ஒரு முழுப் பக்க நாளேட்டின் அளவு 9 கிரௌவுன் பக்க அளவோடு ஒத்தது. 1 கிரௌவுன் பக்கத்தை அச்சிடத் தாள் செலவு, அச்சுச் செலவு முதலியன ரூ. 55.55 இதனடிப்படையில், தினத்தந்தி ஒரு திங்களில் வெளிவரும் விளம்பரங்களின் பக்க அளவு: 208

செலவுத் தொகை	203 X 500 = 1,04,000	10	= 10400
தினமணி	72 X 500 = 36,000	10	= 3600
தினமலர்	95 X 500 = 47,500	10	= 4750
இந்து	366 X 500 = 1,83,000	10	= 18300
			26650

ஒரு நாளைக்கு ஒருவரின் சாப்பாட்டுச் செலவு ரூ. 10 என்றால், ஒருநாள் விளம்பரத்தைத் தவிர்ப்பதன் மூலம்: 26650 பேருக்கு உணவு அளிக்கலாம்.

தினத்தந்தியை ஒருநாளில் படிப்போர்தொகை நகர்ப்புறங்களில் 30.77 இலட்சம் என மதிப்பிடப் பெற்றுள்ளது (The National Readershhip Survey III 1983-84 by Operations Research Group)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழேடுகள் 8 காலன்கள் உடையன. ஒவ்வொரு காலனும் 53 செ. மீ உயரமுடையது. (8 Columns X 53 Cms =424 Columns Cms) இந்து ஆங்கில ஏடு ஆறு காலன்களை உடையது. உயரம் 53 செ.மீ. மொத்த சதுரப் பரப்பு 6 X 53 = 318 சதுர காலன் செ.மீ. இந்தியன் எக்ஸ்பிரஸ் 8 காலன்களை உடையது.

இந்தியாவில் இதழ்களுக்கும், இன்ன பிற விளம்பரச் சாதனங்களுக்கும் விளம்பரம் செய்வதற்காகவும், தரத்திற் காகவும் 390 விளம்பர முகவர்கள் (Advertising Agencies) இயங்குகின்றன. அவற்றிற்கு நாடு முழுவதும் அலுவலகங் களும், கிளைகளும் உள்ளன. விளம்பரம் செய்ய விரும்புவோர் மேற்கண்ட விளம்பர முகவர்கள் வழி விளம்பரத்தை வழங்குவர். ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் 15 ரூபாயை விளம்பர முகவர்கள் எடுத்துக் கொள்வார்கள். இவ்விளம்பர அமைப்புகளில் கிட்டத்தட்ட 17302 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு 6400 வாடிக்கை யாளர்கள் உள்ளனர். இவை அல்லாமல், ஒப்புதல் இல்லாமல் (Non Accredicted Adverti. Agencies) பல இயங்குகின்றன. இவற்றில் சுமார் 10,000 வாடிக்கையாளர்களும், 2000 அலுவலர்களும் பணியாற்றுகின்றனர்.

The Press Commission 1951-இல் இதழ்களுக்கு ஓர் ஆண்டு விளம்பரம் மூலம் கிடைக்கும் தொகை ரூ. 5 கோடி என்று மதிப்பிட்டு உள்ளது. கடந்த 38 ஆண்டுகளில் இது கிட்டத்தட்ட 170 மடங்காக ஏறியுள்ளது. அதாவது, 850 கோடி ரூபாய் (தினமணி 30-3-89). ஏடுகளில் வரும் விளம்பரத்துள் 60% நுகர் பொருளுக்குரியது. 1987ஆம் ஆண்டில் 30% ஆக இருந்த நுகர் பொருள் விளம்பரச் செலவு 1988இல் 40% ஆக உயர்ந்துள்ளது.

இதழ்களில் வெளிவரும் விளம்பரத்தின் உண்மைத் தன்மைகள் பற்றி எவ்வகை உறுதிப்பாடும் இல்லை. இதழ்களில் பொய் விளம்பரங்கள் கொடுத்துப் பல போலித் திருமணங்கள் நடந்து பலருடைய வாழ்க்கை கெடுவது இன்றைய இதழ்களின் அன்றாடச் செய்தியாகும். அதனைப் போல இன்றைய இதழ்களில் விள்ம்பரமாக வெளியாகும் மருந்துகளைப் பற்றி எவ்வகை உறுதிப்பாடும் இல்லை. அதனால் விளையும் கேடுகள் சொல்லத்தகும் அளவினதன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளம்பரத்தை நம்பி ஏமாந்தோர், நோய்வாய்ப் பட்டோர், எவ்வகைச் சட்ட நடவடிக்கையையும் எடுப்பதற்கு இந்தியச் சட்டத்தில் வகை செய்யப்படவில்லை.

ஓர் ஆண்டிற்குச் சுமார் 410 கோடி ரூபாய் விளம்பரமாக அழிகிறது. மேம்போக்காகப் பார்த்தால் இந்த 410 கோடி ரூபாயைப் பல்வேறு நிறுவனங்கள் தம் கைப்பையில் இருந்து கட்டுவது போலத் தோன்றும். ஆனால், ஆழ்ந்து பார்த்தால், எந்த நிறுவனமும் விளம்பரக் காசைத் தன் கைப்பையில் இருந்து கட்டுவது இல்லை. விளம்பரம் செய்யும் ஒரு நிறுவனம் விளம்பரத்திற்காகச் செலவிடும் பணத்தை தாம் உற்பத்தி செய்யும் பொருளின் அடக்க விலையில் சுமத்துகிறது. சான்றாக, பான்ட்ஸ் என்ற முகப்பவுடர் நிறுவனம் ஓர் ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாயை விளம்பரத்திற்காகச் செலவிடுகிறது. இவ்வொரு கோடி ரூபாயைப் பான்ட்ஸ் என்ற நிறுவனம் கட்டுவது போல மேம்போக்காகத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில் இந்த ஒரு கோடி ரூபாயும் பாண்ட்ஸ் பவுடர் மேல் ஏற்றப்படுகிறது. அதாவது இந்தச் சுமையைச் சுமப்பவர்கள் பொது மக்கள்தாம். விளம்பர முறையை நிறுத்திவிட்டால், என்ன செய்வது, எப்படித் தெரிவிப்பது என்ற வினாக்கள் எழும். இந்தச் சிக்கலை எளிதாகத் தீர்க்க முடியும். விளம்பரங்களை மட்டுமே தாங்கி வரும் இதழ்களை அரசே தனியாக நடத்தலாம்; நடத்த முடியும். இதனால் செலவு சிக்கனம் ஆவதோடு பொது மக்களின் பணம் விரயம் ஆவதையும் தடுக்க முடியும். சான்றாக, விளம்பரத்தைக் கொடுக்க விரும்பும் ஒரு கம்பெனி தன்னுடைய விளம்பரத்தைத் தற்போது தாம் விரும்புகின்ற பல நாளேடுகளுக்கு, வார ஏடுகளுக்கு, இன்னபிற ஏடுகளுக்குக் கொடுக்கிறது. இவை யாவும் அரசாங்கம் ஏற்றுச் செய்யும் விளம்பரத்தின் வழி ஒரே ஒரு விளம்பரத்தை மட்டும் கொடுத்தால் போதும், ஏனைய தொகை மீதமாகும். விரயம் ஆவதையும் தடுக்கலாம். உற்பத்திப் பொருள்களின் அடக்க விலை மேல் ஏற்றுவதைக் குறைக்கலாம்.

பொருளாதார இடைவெளி தோன்றுவதற்கும், விரிவு அடைவதற்கும் மிகப் பெரிய காரணமே பொருள் உற்பத்தியாளருக்கும், பொருளை நுகர்வோருக்கும் இடையே தரகர்கள் பெருகுவதுதான். இத்தரகர்கள் வணிகர்கள் என்ற பெயரில் உழைப்பே இல்லாமல் நிறையப் பணம் ஈட்டுகிறார்கள். ஒரு பொருளால் கிடைக்கும் வருமானத்தின் பெரும் பகுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளை உற்பத்தி செய்யும் தொழிலாளிக்கும் போகாமல், பொருளை நுகர்வோருக்கும் போகாமல் பொருளை விளம்பரம் செய்பவருக்கும், இடைத்தரகருக்கும் சென்று சேருகிறது. இதில் இன்னொரு கூடுதல் கூறாக, விளம்பர முகவர்களும் சேர்ந்து கொள்கிறார்கள். பொருளை உற்பத்தி செய்பவருக்கும், வாங்குபவர்க்கும் இடையில் உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டு பல்லாயிரக்கணக்கான ரூபாயை விளம்பர நிறுவனங்கள் 15 விழுக்காடு அளவில் வாங்குகின்றன. ஓராண்டிற்கு 410 கோடி விளம்பரச் செலவு. இதில் 15% விளம்பர நிறுவனங்களுக்குப் போகிறது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இதழ்களைப் படிப்போர் இந்தியாவில் படித்த மக்களாகவே இருக்க முடியும். இந்தியாவில் படித்த மக்கள் தொகை மிகக் குறைவு. அதாவது 40 விழுக்காட்டினரே ஆவர். அதாவது 80 கோடி மக்களில் 32 கோடி மக்கள். இவர்களுள் இருபது விழுக்காடு மக்களே இதழ்களைப் படிக்கிறார்கள். அதாவது, 6.4 கோடி மக்கள். தனியார் கம்பெனியிடம் இருந்து விளம்பரத் தொகையாக இதழ்களுக்காகப் போய்ச் சேரும் விளம்பரத் தொகை இதழ்களைப் படிக்கும் 20 விழுக்காட்டு மக்களை மட்டும் பாதிப்பது இல்லை. படிக்கத் தெரிந்த, படிக்காமல் இருக்கிற எல்லா மக்களுமாக விளம்பரத்திற்காகச் செலவழிக்கும் தொகையைச் சுமக்கிறார்கள். 6.4 கோடி மக்களுக்காக எண்பது கோடி மக்கள் சுமக்கின்றனர்.

இதழ்களில் விளம்பர முறையை நிறுத்திவிட்டால் இதழ்களின் அடக்கவிலை கூடிவிடும் என்று சிலர் கருதலாம். இதில் ஓரளவே உண்மை உள்ளது. ஓர் இதழின் விலை என்பது அந்த இதழ் வெளியிடும் பக்கங்களைப் பொருத்தது. 10பக்கங்களைக் கொண்ட ஒரு நாளிதழின் விலை ஒரு ரூபாய் என்றால், விளம்பரம் இல்லாமல் அல்லது குறைந்த அளவே வெளியாகும் நாளிதழ்களின் விலை ஒரு ரூபாயாக இருக்கலாம். அதன் அடக்கவிலை 50 காசுகளாகவே அமையும். பக்கங்கள் பெருகப் பெருக அடக்கவிலை மிகுதியாகிறது. வாங்குவோர் கொடுக்க வேண்டிய விலையும் அதிகமாகிறது. 10 பக்கங்கள் என்ற பெயரில் உண்மையாக 5 பக்கங்களை மட்டும் வழங்கி, இடையில் விளம்பரங்களை இட்டு நிரப்பி இதழ்கள் மக்களை ஏமாற்றுகின்றன என்பதே உண்மை. புகழ்பெற்ற வார இதழ்களை எடுத்து ஆராயும்போது இது தெளிவாகத் தெரியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தித்தாள் (News Print), இதழ்கள் பயன்படுத்து மளவிற்கு நம்மிடம் தாளிருப்பு இல்லை. இதனால், சற்றேரக் குறைய 50 விழுக்காட்டிற்கு மேல் தாள் இறக்குமதி ஆகிறது. வெளிநாட்டுச் செலாவணி வீணாகிறது. வேறு மருந்துப் பொருள், உணவுப் பொருள் இறக்குமதிக்கு இப் பணத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

SELECTED BIBLIOGRAPHY

1. அன்பரசு — விளம்பரம் ஒரு கலை, கலைக்கதிர், கோயம்புத்தூர், ஏப்பிரல் 1989.

2. விளம்பர வருமானம் ஈட்டுவதில் பத்திரிக்கைகள் முதலிடம்: தினமணி — 30.3.1989.

3. Geetika Chauhan - The Creative Use of Language in Advertising. A Monograph - Department of English, Pondicherry University, Pondicherry.

4. Advertisement Tariff - The Hindu (Sep. 1988), Thinasari (2.7.88), The Daily Thanthi (8.10.88), Dinamani, Dinamalar.

5. D.S. Mehta - Mass Communication and Journalism in India, Allied Publishers Private Limited, New Delhi, 1979.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு :

தினத்தந்தி - செப்டம்பர் 1988

நாள்	கூடுதல் பக்கங்கள்	விளம்பரப் பக்கங்கள்	விழுக்காடு
1.9.88	12	5	5/12-41.6
2.9.88	20	8	8/20-40
3.9.88	10	4	4/10-40
4.9.88	16	6	6/16-37.5
5.9.88	16	9	9/16-56.25
6.9.88	12	5	5/12-41.6
8.9.88	14	7	7/14-50
9.9.88	20	8	8/20-40
10.9.88	14	7	7/14-50
11.9.88	20	9	9/20-45
12.9.88	14	6	6/14-42.8
13.9.88	12	4	4/12-33.3
14.9.89	12	5	5/12-41.6
15.9.88	14	9	9/14-64.29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாள்	கூடுதல் பக்கங்கள்	விளம்பரப் பக்கங்கள்	விகிதாச் சாரம்
11.9.88	20	9	9/20-45
12.9.88	14	6	6/14-42.8
13.9.88	12	4	4/12-33.3
14.9.88	12	5	5/12-41.6
15.9.88	14	9	9/14-64.28
16.9.88	20	10	10/20-50
17.9.88	10	7	7/10-70
18.9.88	20	9	9/20-45
19.9.88	16	9	9/16-56.25
20.9.88	14	6	6/14-42.8
21.9.88	14	8	8/14-57.14
22.9.88	12	6	6/12-50
23.9.88	20	10	10/20-50
24.9.88	14	8	8/14-57.14
25.9.88	22	8	8/22-36.36
26.9.88	14	8	8/14-57.14
27.9.88	12	6	6/12-50
28.9.88	12	7	7/12-58.3
29.9.88	12	5	5/12-41.6
30.9.88	20	9	9/20-45
	438 —	208	

கூடுதல் விகிதாச்சாரம் 208/438 — 47.48%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தினமணி - செப்டம்பர் - 1988

நாள்	மொத்த பக்கங்கள்	விளம்பரப் பக்கங்களின் அளவு	விகிதாச் சாரம் %
1.9.88	8	2	2/8-25
2.9.88	12	2	2/12-16.6
3.9.88	12	2½	2½/12-20.8
4.9.88	8	1¾	1¾/8-21.8
5.9.88	8	2	2/8-25
6.9.99	8	1¼	1¼/8-15.6
8.9.88	8	1½	1½/8-18.75
9.9.88	12	2	2/12-16.6
10.9.88	12	2¼	2¼/12-18.75
11.9.88	8	2	2/8-25
12.9.88	8	½	½/8-6.25
13.9.88	8	1¾	1¾/8-21.8
14.9.88	8	2¼	2¼/8-28
15.9.88	8	2¾	2¾/8-34.37
16.9.88	12	2½	2½/12-20.8
17.9.88	16	3½	3½/16-20.3
18.9.88	8	2¼	2¼/8-28
19.9.88	8	2	2/8-25
20.9.88	8	2	2/8-25
21.9.88	8	2	2/8-25
22.9.88	8	1¼	1¼/8-15.6
23·9.88	16	5½	5½/16-32.8
24.9.88	12	2¼	2¼/12-28
25.9.88	8	2¾	2¾/8-34.37
26.9.88	8	3¼	3¼/8-46.8
27.9.88	8	2¼	2¼/8-28
28.9.88	8	2¼	2¼/8-28
29.9.88	12	4¼	4¼/12-35.4
30.9·88	16	6¼	6¼/16-39
கூடுதல்	256	7¼	71¼/256-27.83%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தினமலர் - செப்டம்பர் - 1988

நாள்	மொத்த பக்கங்கள்	விளம்பரப் பக்கங்களின் அளவு	விகிதாச் சாரம் %
1.9.88	10	3	3/10-30
2.9.88	8	2¼	2¼/8-28
3.9.88	8	2¼	2¼/8-28
4.9.88	8	2¾	2¾/8-34.3
5.9.88	8	3	3/8-37.5
6.9.88	8	3¾	3¾/8-46.8
8.9.88	10	4¾	4¾/10-47.5
9.9.88	8	2¾	2¾/8-34.3
10.9.88	8	3	3/8-37.5
11.9.88	8	3	3/8-37.5
12.9.88	8	2	2/8-25
13.9.88	8	2¾	2¾/8-34.3
14.9.88	8	3	3/8-37.5
15.9.88	8	4¼	4¼/8-53
16.9.88	8	3	3/8-47.5
17.9.88	10	5¼	5¼/10-52.5
18.9.88	8	3½	3½/8-40.6
19.9.88	10	4¼	4¼/10-42.5
20.9.88	8	2½	2½/8-31.25
21.9.88	8	3¼	3¼/8-46.67
22.9.88	8	3	3/8-37.5
23.9.88	10	4	4/10-40
24.9.88	8	3¼	3¼/8-40.6
25.9.88	8	3¼	3¼/8-40.6
26.9.88	8	3¼	3¼/8-40.6
27.9.88	8	2¼	2¼/8-28
28.9.88	8	2½	2½/8-31.25
29.9.88	8	3¼	3¼/8-40.6
30.9.88	8	5	5/8-62.5
	242	94½	94½/242-38.94

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

HINDU — SEPTEMBER — 1988

நாள்	மொத்த பக்கங்கள்	விளம்பரப் பக்கங்களின் அளவு	விகிதாச் சாரம்%
1.9.88	24	14½	14½/24-59.37
2.9.88	24	12	12/24-50
3.9.88	20	8½	8½/20-41
4.9.88	24	11½	11½/24-46.8
5.9.88	16	8¾	8¾/16-54.68
6.9.88	24	14¼	14¼/24-59.37
7.9.88	32	14¼	14¼/32-44.5
9.9.88	20	10	10/20-50
10.9.88	24	13½	13¼/24-56.25
11.9.88	28	18	18/28-64
12.9.88	16	9	9/16-32
13.9.88	24	11¼	11¼/24-46.8
14.9.88	34	15¾	15¾/24-65.6
15.9.88	32	21	21/38-65.6
17.9.88	28	14¼	14¼/28-50.89
18.9.88	24	8	8/24-33.3
19.8.88	16	7¾	7¾/16-48.4
20.9.88	24	9½	9½/24-39.5
21.9.88	24	12¾	12¾/24-53
22.9.88	32	21¼	21¼/32-66.4
23.9.88	24	11½	11½/24-46.8
24.9.88	28	17	17/28-60.7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாள்	மொத்த பக்கங்கள்	விளம்பரப் பக்கங்களின் அளவு	விகிதாச் சாரம்%
15.9.88	28	$13\frac{3}{4}$	$13\frac{3}{4}/28$-49
16.9.88	16	$7\frac{3}{4}$	$7\frac{3}{4}/16$-48.43
17.9.88	28	17	17/28-60.7
18.9.88	24	$13\frac{1}{4}$	$13\frac{1}{4}/24$-52.2
19.9.88	28	$17\frac{3}{4}$	$17\frac{3}{4}/28$-63.3
20.9.88	24	$11\frac{3}{4}$	$11\frac{3}{4}/24$-48.95
	680	$365\frac{1}{2}$	$365\frac{1}{2}/680$-53.75

நன்றி: இக்கட்டுரைக்கான அனைத்துப் புள்ளிவிவரங்களையும் திரட்டி அளித்த முனைவர் பட்ட ஆய்வாளர்கள் திரு. சிலம்பு நா. செல்வராசு அவர்களுக்கும், செல்வி தி. தாமரைச் செல்வி அவர்களுக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9

சுவரொட்டிப் 'பண்'பாடு

உலக நாடுகளையும், இந்தியாவையும் ஒப்பிடும் போது இந்தியாவில் சுவர்களிலும் இன்ன பிற பொது இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டும் பழக்கம் மிகப் பரவலாக இடம் பெற்றுள்ளது. இப்பழக்கம் நாளுக்கு நாள் பெருகியும் வருகிறது. மூலைக்கு மூலை கண்ட கண்ட இடங்களில் சுவரொட்டி ஒட்டும் பழக்கம் பொதுவாக வளர்ந்த ஐரோப்பிய, அமெரிக்க, சப்பான் முதலான நாடுகளில் இல்லை. பிரஞ்சுக் காலனியாக இருந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் இந்தப் பழக்கம் காணப்படவில்லை. மிகப் பின் தங்கிய நாடுகளில்கூட ஊரார் சுவர்களைத் தம் விருப்பப்படி ஒட்டி வீணாக்கும் இந்தியப் போக்குக் காணப்பெறவில்லை.

பொது நிகழ்ச்சிகள், திரைப்படம், வணிகம், ஏடுகள் ஆகியவற்றை விளம்பரப் படுத்தும்போது ஏனைய நாடுகளில் கடைப் பிடிக்கும் நெறி பாராட்டத் தக்கதாக உள்ளது. பெரும்பாலும் திரைப்படம், நாடகம், கலை முதலான நிகழ்ச்சிகள் அந்தந்த நிகழ்ச்சிகள் நடக்கும் அரங்கு வாயிலில் சிறு சுவரொட்டிகளாக ஒட்டப் பெறுகின்றன. காலையிலும், மாலையிலும் வெளிவரும் நாளிதழ்களும் அச் செய்தியை விளம்பரப் படுத்துகின்றன. சில நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி முதலான மக்கள் தொடர்புச் சாதனங்கள் வழிச்செய்திகள் பொதுமக்களுக்குச் சென்று சேருகின்றன. சில நாடுகளில் சாலைச் சந்திப்புகளிலும், பொதுமக்கள் பார்க்கும் இடங்களிலும் சில இடங்கள் இதற்காகவே ஒதுக்கப் பெற்று அந்த இடங்களில் மட்டும் சுவரொட்டிகளோ, எழுத்து விளம்பரங்களோ செய்யப் பெறுகின்றன. இத்தகு நெறிமுறைகள் இந்தியா போன்ற நாடுகளில் பின்பற்றப் பெறுவதில்லை. புதுவை மாநிலங்களில் சுவரொட்டி பெரிய இடத்தைப் பற்றியுள்ளது. சில சமயம் அரசியல் கட்சிகள் போட்டியிட்டுச் சுவரொட்டிகளை ஒட்டுகின்றன. எடுத்துக் காட்டாக, ஈழத்தின் மேல் இந்திய இராணுவம் படை எடுத்துத் தமிழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈழப் போராளிகளை ஒடுக்குவது சரி என்று ஒரு கட்சி சுவரொட்டி ஒட்ட, சரி அன்று என்று சொல்லி இன்னொரு கட்சி சுவரொட்டி ஒட்டப் பெரும் போட்டா போட்டியே நிகழ்கிறது.[1]

சுவரொட்டிகளை ஒட்டுவதில் பின்வருவோர் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர் என்று வகைப் படுத்தலாம்.

1. அரசியல் கட்சியினர்
2. திரையரங்க முதலாளிகள்
3. வணிக உடைமையாளர்கள்
4. சமய நிறுவனத்தினர்
5. இதழதிபர்கள்.

ஏறத்தாழ 60 விழுக்காடு படிக்காத மக்களுடைய ஒரு நாட்டில் எழுத்துகள் வழிச் செய்திகளைப் பரப்பும் சுவரொட்டிகள் பெருகி வருவது வியப்பான முரண்பாடாக உள்ளது. படிக்காதவர்கள் நிறைந்த நாட்டில் படிப்பதற்கு உரிய சுவரொட்டிகள் பெருகுவானேன்? சில திரைப்பட அரங்க அதிபர்களையும், பல அரசியல் கட்சித் தலைவர்களையும் நேர்முகம் கண்டபோது அவர்கள் சொன்ன விடை: வண்ண வண்ண எழுத்துகளையும் அவற்றுடன்கூட இடம் பெற்றுள்ள படங்களையும் பார்த்து ஈர்க்கப் பெறும் படிக்காத பொது மக்கள் அச்சுவரொட்டிகளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று படித்தவரைக் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர் என்று விடை இறுத்தனர். படிக்காத மக்களைக் கவர்வதற்காக நடிகை நடிகர் படங்களையும், அரசியல் தலைவர் படங்களையும் சேர்த்து அச்சிடுகின்றனர். திரைப்படச் சுவரொட்டிகளில் புகழ் பெற்ற கதாநாயகர் அல்லது கதாநாயகியின் படத்தை வெளியிடுவது பெரிய அளவு பாதிப்பை உண்டாக்குகிறது. தமிழ்நாட்டு நடிகரின் உருவம் பொறித்த சுவரொட்டிகளை ஒரு ரூபாய் வாடகை கொடுத்து வாங்கி அதன்மேல் படுத்து உறங்கும் சிற்றூர்ப் பெண்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். [Sumit Mitra—Light, Camera, Action Sunday Jan. 1987] எனவே, படிக்காத பெண்களும் சுவரொட்டிகளின் ஈர்ப்புக்கு ஆளாகின்றனர் என்பது தெளிவாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலக நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவிலும், இந்திய மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாடு, புதுவை மாநிலங்களிலும் சுவரொட்டி மிகுதியாக ஒட்டப் பெறுவதற்குப் பின்வரும் காரணங்களைத் தலைமையாகக் கருதலாம்.

1. வண்ணப் படங்கள் உடைய சுவரொட்டிகள் வழியாகப் படிக்காத மக்களையும் ஈர்க்க முடியும்; ஈர்க்க முடிகிறது.

2. தமிழக மக்களின் ஏடு படிக்கும் பழக்கம் குறைவாக உள்ளது.

3. ஏடுகள் வழி அறிவிக்க வேண்டிய முதன்மைச் செய்தி சுவரொட்டி வழிப் பரப்பப்படுகிறது.

4. தமிழ் மக்கள் அறிவுக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள் என்பதைக் காட்டிலும் உணர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கின்ற மக்கள். எனவே, பெரும்பாலோரிடம் முதிர்ச்சியின்மை (Immaturity) உள்ளது.

5. தமிழ் மக்களுடைய வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தால் சுவர் வழிச் செய்திகளைத் தெரிந்து கொள்ளுதல் தமிழர்களுக்குப் பரம்பரைப் பழக்கமாக இருந்து வந்திருக்கும் உண்மை புலப்படும். கி.பி. 4ஆம் நூற்றாண்டு தொடங்கி அண்மைக் காலம் வரை அரசர்கள், பொது மக்களுக்கு அறிவிக்க நினைக்கும் செய்திகளைக் கோயில் சுவர்களிலேயே பொறித்து வந்திருக்கிறார்கள். சுவர்வழிச் செய்திகளைப் படிப்பது முன்னோர் தம் பழக்கமாகத் தொடர்ந்து வந்திருக்கிறது.

6. அரசியல் அமைப்பும், அதனால் அமைந்த கட்சிகளின் பெருக்கமும் சுவரொட்டி முறையைப் பொது மக்களிடையே ஊக்குவிக்கின்றன.

7. தமிழர்கள் மேல் திரைப்படம் நிகழ்த்தும் செல்வாக்கு மிகப் பெரியது. நாட்டில் உள்ள 26 மாநிலங்களில் உள்ள திரையரங்குகளின் மொத்தத் தொகையில் 23 விழுக்காடு அளவு திரையரங்குகள் தமிழகத்தில் மட்டும் உள்ளன. எனவே, திரைப்படம் பார்ப்பது தமிழர்களுக்கு உணவு உண்பதைப் போல—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கண்ட காரணங்களால் தமிழ்நாட்டில் சுவரொட்டி ஒட்டும் பழக்கம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. சுவரொட்டிகளை அரசியலாரும், திரைப்பட இயலாரும், வணிகவியலாரும், சமயவியலாரும் பயன்படுத்துகின்றனர். இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றைவிடச் சுவரொட்டி வழியாக விளம்பரப் படுத்துவது மேற்கண்டோருக்கு மலிவாக இருக்கிறது. செலவோ மலிவு; பார்க்கும் மக்களோ மிகுதி; விளைவோ பெரிது. விரும்புவோர், விரும்பாதோர் இருவர் கண்களையும் சுவரொட்டி ஈர்த்துவிடும். கருத்து வாசிப்பைவிடக் கண்ணை ஈர்க்கும் வண்ணமும், படமும் பார்க்கும் மக்களின் மனத்தில் ஏற்படுத்தும் விளைவு மிக ஆழமானது ஆகும். காட்சிப் படுத்தும் ஒவ்வொன்றும் பார்ப்போர் மனத்திரையில் மிக ஆற்றலுடன் பதியும்.

சில சமயம் செய்தி தெரிவிப்பது (To Communicate) என்ற நிலையைத் தாண்டித் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவும் (Self-Advertisement) சுவரொட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, சென்னை நகர் நடுவே உள்ள கல்லூரி மாணாக்கர் ஒருவர் தாம் செயலாளர் தேர்தலில் நிற்பதை வெளிப்படுத்தும் சுவரொட்டியை இருபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தாம்பரத்தில் ஒட்டி வைத்திருப்பார். புதுவை நகரக் கலைக் கல்லூரி மாணாக்கர் தாம் மாணவர் தேர்தலில் நிற்கிறோம் என்ற செய்தியைப் பத்துக் கிலோமீட்டர் தொலைவில் உள்ள கதிர் காமத்தில் ஒட்டி வைத்திருப்பார். இச்சுவரொட்டிகளைப் பார்க்கும் பொதுமக்கள் மாணவர் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்கள் அல்லர். எனினும் அங்கங்கே சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். தம்முடைய பெயரைப் பலவேறு மக்கள் பார்ப்பதிலும் படிப்பதிலும் கிடைக்கும் ஒரு சுய—திருப்தி மாணவ வேட்பாளருக்குக் கிடைக்கிறது.

அரசியல் கட்சிகளில் ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்த பல வேறு சின்ன சின்ன தலைவர்கள் தலைவருக்குத் தம்மைக் காட்டிக் கொள்வதற்காகப் பிறந்த நாள் சுவரொட்டிகளை அச்சிட்டு அவற்றில் தம் பெயரையும் பொறித்து ஒட்டி விடுகின்றனர். இந்த அரசியல்வாதியின் நோக்கம் மக்களுக்குச் செய்தியைத் தெரியப்படுத்துவது அன்று, மாறாகத் தலைவருக்குத் தாம் சுவரொட்டி போட்டிருக்கிறோம் என்ற செய்தி போய்ச் சேரவேண்டும் என்பதுதான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கம். இன்னும் சிலர், குறிப்பிட்ட குழுவுடன் தாம் சார்ந்து இருப்பதைக் காட்டிக் கொள்வதற்காகத் தம் தலைவரின் பிறந்த நாள் விழா வருகிறபோது சுவரொட்டி ஒட்டி அறிவித்துவிடுவர். தம் அரசியல் கட்சித் தலைவர் தம்மூருக்கு வருகை தரும்போது தம் படத்தையும் பெயரையும் இணைத்துச் சுவரொட்டி ஒட்டுவது தற்போது மிகுந்து வருகிறது. மேற்கண்ட போக்குகள் தமிழகத்தில் சுவரொட்டியைப் பெருக்க அண்மையில் பெரும் காரணங்களாக அமைந்து வருகின்றன. அயல் நாடு சென்று வரும் அரசியல் தலைவரை வரவேற்கும்போது பல வண்ணச் சுவரொட்டிகள் தமிழகப் பகுதிகளில் அண்மைக் காலத்தில் இடம்பெற்று வருகின்றன. தாழ்வு உணர்வு நோய் (Inferiority Complex) பற்றி இருப்பதால் அயல் நாட்டுப் பயணம் தமிழர்க்கு இன்னும் மதிப்புமிக்க ஒன்றாகவே இருக்கிறது. அன்றியும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தலைவருக்கும் தனக்கும் நெருக்கத்தைப் பெருக்கிக் கொள்ளவும் நெருக்கம் இருப்பது போலக் காட்டிக் கொள்ளவும் தம் பெயர் அடங்கிய சுவரொட்டிகளைக் கட்சிக்காரர்கள் அடித்து ஒட்டுகிறார்கள். ஆக, சுவரொட்டிகளை ஒட்டுவதில் ஒரு சுமாரான கணக்கீடு செய்தால் 75 விழுக்காடு சுவரொட்டிகள் அரசியல் கட்சிக்காரர்களால் ஒட்டப்படுகின்றன. தேர்தல் வருகிறபோது இச்சுவரொட்டி ஒட்டும் பழக்கம் மிக உச்சத்துக்குப் போகிறது. யார் வீட்டுச் சுவரும் விடப்படுவது இல்லை.

கட்சிகளுக்கு இடையே நிகழும் கருத்து மோதல் சுவரொட்டி வடிவில் வெளிப்படுதலைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட கருத்துப் பற்றி வேறுவேறு முடிவினைக் கொண்ட அரசியல் கட்சிகள் தத்தம் முடிவை வற்புறுத்தச் சுவரொட்டிகளைப் போட்டா போட்டியிட்டு வெளியிட்டு ஒட்டுகின்றன. இது தேர்தல் காலத்தில் குளிர் நீர் (Ice watar) குடித்த குடல் போலப் பரவுவதைப் பலரும் கண்டு இருக்கலாம்.

அடுத்துத் திரைப்பட அதிபர்களைச் சொல்லலாம். இவர்களுக்கு அரசியல் கருத்து என்பதைவிடப் பண நோக்கமே முதன்மையான காரணம் எனலாம். பின்வரும் தேவைகளுக்காகத் திரைப்பட அதிபர்கள் சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. குறைந்த செலவு நிறைந்த பயன்
2. புதுப் படம் வெளிவருவதைத் தெரியப்படுத்துவது
3. படத்திற்குக் கூட்டம் குறைந்ததால் 25ஆவது நாள், 50ஆவது நாள், 100ஆவது நாள் என்று சுவரொட்டி ஒட்டுவது.

இவற்றுடன் கூடத் திரைப்படத்தைப் பொறுத்த அளவிற்குத் தமிழ்நாட்டில் தோன்றிய ஒரு புதுமையான அமைப்பு இரசிகர் மன்றங்கள் ஆகும். இந்த இரசிகர் மன்றங்கள் மறைமுகமாக நடிகருடைய மூலதனத்தைக் கொண்டே பல வேறு நகரங்களில் அமைக்கப் படுகின்றன. குறிப்பிட்ட நடிகரின் திரைப் படம், குறிப்பிட்ட ஊரில், குறிப்பிட்ட அரங்குகளில் வெளியிடப்படும்போது இரசிகர் மன்றங்களால் (நடிகர்களாலே மறைமுகமாக உருவாக்கப்பெற்றவை) துண்டு அறிக்கைகளும், சுவரொட்டிகளும், 'பேனர்' களும் கட்டப்படு கின்றன அல்லது ஒட்டப்படுகின்றன.

திரைப்பட அதிபர்கள் ஒரு பக்கமும், திரைப்பட இரசிகர் கள் மறு பக்கமுமாகச் சுவரொட்டிகளைப் பெருக்குகின்றனர். இருவரும் சேர்ந்து நடிகரின் வருவாயைப் பெருக்குகின்றனர். நன்மை அடைவது நடிகரும் திரையரங்க உரிமையாளர் களுந்தாம்.

ஏறத்தாழப் பத்து ஆண்டு காலமாக வணிகர்களும் சுவரொட்டிகளை ஒட்டும் பழக்கத்தில் ஈடுபட்டு வருகின்ற னர். குறிப்பாகச் சர்க்கஸ் குழுவினர், துணிக்கடையினர், இன்ன பிற வணிகக் குழாத்தினர் தங்கள் வரவையும் புதிய பொருளை யும் மக்களுக்குத் தெரியப்படுத்தச் சுவரொட்டிகளைப் பயன் படுத்துகின்றனர். இவர்களுடைய பங்கு நாளுக்கு நாள் பெரு கிக் கொண்டே வருகிறது.

இந்திய அரசியல் சாசனம் மதங்களுக்கு அப்பாற்பட்டதா யினும் உண்மையில் மத உரிமைகளுக்கு இடம் அளித்து இருப்பதால் மதப் பிரச்சாரம் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. ஒவ்வொரு மதமும் போட்டா போட்டியில் பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. இப்போட்டா போட்டிகள் விழாக் காலங்களில் வெளிப்படுகின்றன. சுவரொட்டிப் போட்டியில் எல்லாச் சமயத்தாருக்கும் இடம் உண்டு எனினும் அற்புதப் பிரச்சாரங்கள் நிகழ்த்தும் மதப் பிரிவினர் சிலர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிகப் பெரிய அளவில் சுவரொட்டி ஒட்டிப் பிரச்சாரம் செய்வதில் மிகுதியான பங்கு பெறுகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இதழ்களும் சுவர் விளம்பரங்களில் இறங்கியுள்ளன. சான்றாகப் புதிய தொடர்கதைகளைத் தமிழ் ஏடுகள் தொடங்குகிற போது தொடர் கதைக்குரிய கதாநாயகியரின் படங்களுடன் சுவரொட்டிகள் அச்சிடப்படுகின்றன. அத்னைப் போலப் புதிய இதழ்கள் தொடங்கும் முன்னும், தொடங்கிய பின்னும் விற்பனைச் சந்தையைப் பிடிக்கிற வரை சுவரொட்டிகளை இதழ் அதிபர்கள் ஒட்டி வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஜூனியர் விகடன் என்ற இதழ் தொடங்கும் முன்பும் தொடங்கிய பின்பும் சுவரொட்டிகளை நாடெங்கும் ஒட்டியது. சுவரொட்டி ஒட்டுதலில் ஒரு புதிய பழக்கத்தைத் தராசு சென்னையில் அறிமுகப்படுத்தியது. சுவரொட்டிகளை ஒட்டுவதற்குப் பதிலாக வெட்டு எழுத்துகளைக் கொண்டு சுவரில் பதித்துக் கருப்பு மை பூசிச் சுவர்களில் வரைந்தனர். தராசு இதழுடைமையாளர்கள் 'மின்மினி' என்ற இதழ் தொடங்கும் பொழுதும் இதனைச் செய்தனர்.

சுவரொட்டி ஒட்டுவது சுவரில் எழுத்தைப் பதிப்பது ஆகியன அல்லாமல் காலிச் சுவர்களில் அரசியல் முழக்கங்களையோ சமய முழக்கங்களையோ எழுதுவது தமிழகத்தில் பெருகியுள்ளது. அரசியல் முழக்கங்கள் ஊரில் உள்ள எல்லா இடத்தையும் ஆட்கொள்ளுவதைத் தேர்தல் காலத்தில் காண முடியும். தேர்தல் காலத்தில் எந்த அரசியல் வாதிகளின் சுவரொட்டிக்கோ எழுத்து முகத்திற்கோ ஆளாகாமல் சுவர்கள் தப்பவே முடியாது.

இந்தச் சுவரொட்டிப் பழக்கத்தில் அரசியல் போட்டியும் தலைமை இடம் பெறுவதால் அரசியல் பகைமை வேறு வழியாக இடம் பெறுகிறது. அதனை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. எதிரி சுவரொட்டிகளை ஆள் வைத்துக் கிழித்து விடுவது.
2. எதிரியின் சுவரொட்டியின் மேல் சாணத்தைப் பூசுவது.
3. எதிரி ஒட்டிய சுவரொட்டியின் மேல் தன் சுவரொட்டியை ஒட்டி விடுவது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு அரக்கத்தனமாகச் சுவரொட்டி ஒட்டப்பெறும் இடங்கள் கண்காணிப்பிற்கும் கண்டித்தலுக்கும் உரியதாக உள்ளன:

1. காலிச்சுவர்களில் (வீட்டுக்காரர் ஒப்புதல் இல்லாமல்) ஒட்டுதல்

2. மக்களுக்கு உதவுவதற்காகப் பேருந்து எண் எழுதப் பெற்ற நிழற் குடைகள் மேல் ஒட்டுதல்.

3. சாலைச் சந்திப்புகளிலும், திருப்பங்களிலும் வைக்கப் பெற்றுள்ள சாலைப் பெயர்ப் பலகை, வழி காட்டிப் பலகை ஆகியவற்றின் மேல் ஒட்டுவது.

4. சாலை சந்திக்கும் இடங்கள், குறிப்பாக அடையாள விளக்குகள் அமைக்கப் பெற்றுள்ள பகுதிகளில் உள்ள சுவர்களில் ஒட்டுவது.

மேற்கண்ட நான்கு இடங்களிலும், சுவரொட்டி எழுதப் பெறுவதால், ஒட்டப் பெறுவதால் விளையும் தீங்கு சிறிது அன்று.

1. ஊரையே அழகற்றதாகச் சுவரொட்டிகள் மாற்றுகின்றன.

2. பேருந்து நிறுத்த நிழற் குடையின் கீழ் நிற்கும் மக்கள் உந்துகளின் எண்ணை அறியாமல், அறிய முடியாமல் தடுமாறுகின்றனர்.

3. சாலை, தெருப் பெயர் தெரியாமல் புதியவர்கள் தடுமாறுகின்றனர்.

4. அடையாள விளக்கின் அருகில் நிற்கும் வண்டியோட்டி தன் கவனத்தைச் சுவரொட்டிகளின்மேல் செலுத்துவதால் விபத்துக்குள்ளாகிறார் (தமிழ் நாட்டில் நிகழும் விபத்துகளுக்கு முதன்மையான காரணங்களில் ஒன்றாகச் சுவரொட்டிகள் குறிப் பிடப்படுகின்றன).

5. வீட்டுச் சொந்தக்காரர் கடன் வாங்கிக் கட்டி வைக்கும் வண்ணச் சுவர்கள், சுவரொட்டிகளால் மறு செலவிற்கு ஆளாகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக, சுவரொட்டி ஒட்டும் பழக்கம் தமிழருடைய பக்குவ மின்மையைக் காட்டும் ஒரு சான்றாக விளங்குகிறது எனலாம்.

ஏனைய உலகப்பகுதி மக்களை விடவும், ஏனைய இந்திய மாநிலப் பகுதி மக்களை விடவும், தமிழர்கள் சுவரொட்டி ஒட்டுவதிலும், சுவரொட்டிகளைப் படிப்பதில் பேரீடுபாடு காட்டுவதிலும் வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. அவையாவன :

1. கி.பி. நான்காம் நூற்றாண்டு தொடங்கித் தமிழகத்தை ஆண்ட அரசர்கள் சுவர்களையே செய்தி தெரிவிக்கும் தகவல் சாதனமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். கோயில் சுவர்கள் அனைத்தும் அழிக்க முடியாப் பழைய கல்லெழுத்துச் சுவரொட்டிகளால் நிறைந்துள்ளன.

2. ஒவ்வோர் ஊரிலும், நகரிலும் கோயில் கட்டுவது என்பது தமிழருடைய மரபாகும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழ் மொழியில் வழங்கும் பழமொழியாகும். எனவே, கோயில் வழிபடு தலமாக மட்டும் அமையாமல், செய்திப் பரிமாற்றம் நிகழும் பொது இடமாகவும் இருந்துள்ளது. அதனால் கோயிலுக்குப் ''பொதுவில்'' என்பதே ஒரு பழைய பெயராகும்.

3. நூல் படிக்கும் பழக்கத்தைவிடத் தமிழர்களிடம் நூல் கேட்கும் பழக்கமே மிகுதியாக இருந்தது. கேட்டு அறிவைப் பெருக்கிக் கொள்வது கேள்விச் செல்வம் என்றே போற்றப் பட்டது. அதற்கு ஒரு காரணம் மக்களிடமிருந்த படிப்பறிவின்மை; பிறிதொரு காரணம் சோம்பல். படிப்பதை விடப் படித்ததைக் கேட்பது எளிதல்லவா? இந்தச் சோம்பலே நாளிதழ் படிப்பதில் தமிழருடைய விழுக்காட்டைக் குறைவாக்கி இருக்கலாம். இந்தச் சோம்பல் பழக்கமே சுவரொட்டி படித்தலுக்கும் கண்வழி பெறும் காட்சி அறிவிற்கும் மூலமாக இருக்கலாம்.

4. கோயில்களில் பொது மக்களை ஈர்ப்பதற்காகக் காம உணர்வைத் தூண்டும் சிற்பங்கள் மண்டபத் தூண்களிலும், கோபுரச் சிற்பங்களிலும் அமைக்கப் பெற்றிருந்தன. அவற்றைப் பார்த்துப் பழக்கப்பட்ட தமிழர், திரைப்பட நடிகர் நடிகையர் படங்களையும், அரசியல் தலைவர்கள் படங்களையும் ஏந்தி நிற்கும் சுவரொட்டி மேல் ஈடுபாடு காட்டுவது இயல்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. திரைப்பட அதிபர்கள், அரசியல் கட்சியாளர்கள், வணிகர்கள் ஆகியோர்க்கு வானொலி, தொலைக்காட்சி, ஏடுகள் வழி விளம்பரம் செய்வதை விடச் சுவர்கள் வழி விளம்பரம் செய்வது எளிதாக இருக்கிறது; மலிவாக இருக்கிறது.

மேற்கண்ட திரைப்படம், அரசியல், வணிகம் என்ற மூன்றையும் நடத்துகிறவர் பெரும்பாலும் முதலாளிகளாகவே இருப்பதால் அவர்கள் இலாப நட்டம் பார்த்து ஒரு செயலை மேற்கொள்வது தவிர்க்க முடியாதது. எனவே, மூவகையினரும் சுவரொட்டி முறையைப் பெரிதும் பின்பற்றுகின்றனர். முப்பத்தைந்து (35) ஆண்டுகள் திரைப்பட அரங்கை ஆட்சி செய்த மேலாளர் தம் நேர்முகத்தில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

> ''சுவரொட்டி ஒட்டுவதில் செலவு குறைவு. விளம்பரம் அதிகம். சுவரொட்டி ஒட்ட எங்களிடம் நிறைய ஊழியர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாதம் 250 ரூபாய் கொடுக்கிறோம். மைதாமாவும், கிழங்குமாவும் சேர்த்துக் காய்ச்சிப் பசையாக்கி ஒட்டும் ஊழியர்களிடம் தருகிறோம். இச்சுவரொட்டிகளின் மூலம் படிக்காதவர்களும் சுவரொட்டிகளில் இடம் பெற்றிருக்கும் உருவத்தைப் பார்த்து என்ன படம் என்று தெரிந்துகொள்கிறார்கள்''

பதினைந்து ஆண்டுகள் திரையரங்கம் நடத்தும் அதிபர் ஒருவர் கூறும் செய்தி பார்வைக்குரியது. அவர் கூறுவதாவது:

> ''குறிப்பாக வண்ண வண்ணச் சுவரொட்டி மூலம் படிக்கத் தெரியாத மக்களும் ஈர்க்கப் பெற்றுச் சுவரொட்டியில் உள்ள செய்தி என்ன என அண்டையிலுள்ள மக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுவர். மேலும் உருவத்தோடு பெரிது பெரிதாக நடிகர், நடிகை படங்கள் காணப்படுவதால் தாம் விரும்பும் நடிகர்களுக்குத் தகுந்தாற்போலத் திரைப்பட அரங்குக்குப் பொதுமக்கள் வருகை தருவார்கள்''.

அரசியல் பார்வையில் சுவரொட்டி ஒட்டுவது மிக மலிவான அதே நேரத்தில் மிகப் பயனைத் தருவதாகவும் உள்ளது. குறிப்பாக, திரைப்பட அதிபர்களுக்கு ஒட்டும் கூலி ஆவதைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போல அரசியல் கட்சிக்காரர்களுக்கு ஆவதில்லை. காரணம், கட்சித் தொண்டர்களே காசு வாங்காமல் சுவரொட்டிகளை ஒட்டிவிடுகிறார்கள். சுவரொட்டி ஒட்டும் வலது பொது வுடைமைக் கட்சித் தோழர் ஒருவர் தம் நேர்முகத்தில் கூறும் செய்தி கருதத்தக்கது.

> ''எங்கள் கட்சியை வளர்ப்பதில் எனக்கு ஆர்வமிருப்ப தாலே கூலி எல்லாம் எதிர்பார்ப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால் பசை கூட நாங்களே தயாரித்து ஒட்டுகிறோம். இதற்கு என்று ஒரு பைசாகூட வாங்க மாட்டோம்''.

திராவிடக் கழகத் தொண்டர் ஒருவரும் இதே கருத்தைத் தம் நேர்முகத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திரா காங்கிரஸ் தொண்டர், ''கூலி வாங்காமல் தேநீர் அருந்துவதற்கு மட்டும் பணம் பெற்றுக் கொள்வோம். இதனால் எனக்குத் தலைவர் மத்தியில் தனி மரியாதை உண்டு'' என்று தெரிவிக்கிறார்.

அரசியல் கட்சியைச் சார்ந்த சுவரொட்டிகளை ஒட்டு பவர்கள் பெரும்பாலும் கட்சிக்காரர்களாகவே இருக் கின்றார்கள். ஒருசில சமயங்களில் ஒருசில கட்சிகள் பணம் கொடுத்துக் கூலி ஆட்களை வைத்துச் சுவரொட்டி ஒட்டுவதும் உண்டு. மனித சங்கிலிப் போராட்டச் சுவரொட்டி ஒட்டிய ஒருவர் அளித்துள்ள நேர்முகம் நம் கவனத்திற்குரியது:

> ''நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்லன். ஒரு தொழிலாளி. எந்தக் கட்சிக்காகவும் ஒட்டுவேன். கூலி 25 ரூபாய்''.

நேர்முகம் செய்தவர், ''எதற்கு எல்லாவற்றையும் ஒட்டறிங்க. இரண்டு மூன்று ஒட்டிவிட்டு ஏனையவற்றைத் தூக்கி எறிய வேண்டியதுதானே'' என்று கேட்க,

''செய்யலாமுங்க, ஆளு கண்டுபுடுச்சுட்டாங்கனா திட்டு வாங்க. அதனால் முக்கிய இடங்களில் அவர்கள் பார்வை படும் இடங்களில் ஒட்டி விட்டுப் போவோம். அதே நேரத்தில் அ.தி.மு.க. சுவரொட்டிகளுக்கு அருகில் மனித சங்கிலிப் போராட்டச் சுவரொட்டிகள் ஒட்ட வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள்''.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தச் சிக்கல், வணிகர்கள் சுவரொட்டி ஒட்டும் பொழுதும் நேர்கிறது. எல்லாச் சுவரொட்டிகளையும் ஒருவரிடமே கொடுப்பீர்களா என்ற வினாவிற்கு 18 ஆண்டுகள் ஒரு தனியார் வணிக நிறுவனத்தில் பணியாற்று பவர் சொன்னதாவது:

''எல்லாத்தையும் ஒருத்தர்கிட்டே கொடுத்தா சுவரொட்டி எல்லாத்தையும் எடைக்கு விற்று விட்டுக் கிடைக்கும் காசுக்குக் குடித்துவிட்டுப் போய்விடுவார்கள், எனவே, பிரித்துத்தான் கொடுப்போம்''

இதழ், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை வழி யாகத் திரைப்படம், அரசியல், வணிக விளம்பரங்கள் செய்யப் படுவதும் அவற்றைப் பார்த்தும் கேட்டும் மக்கள் அறிந்து கொள்வதும் வளர்ந்த நாடுகளில் வழக்கமாக உள்ளன. பொதுத் தேர்தல் காலத்தில் கூடச் சுவரொட்டிகள் கண்ட கண்ட இடங்களில் ஒட்டாமல் பார்த்துக் கொள்கிறார்கள். அவ்வாறு ஒட்டுவதே ஒரு பண்பாட்டுக் குறைவாக அவர்கள் கருதுகிறார்கள். தமிழர்களிடம் பொது இடங்களில் சிறுநீர் கழிப்பதும், மலங்கழிப்பதும் எப்படிப் பழக்கமாகி விட்டனவோ அவற்றைப் போலப் பொது இடங்களில் சுவ ரொட்டிகளை ஒட்டுவதும் பழக்கமாகிவிட்டது. செய்தியை அறிவிப்பது மேற்கண்டவாறு இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி வழிதான் என்று முடிவு செய்யப்படுமானால் சுவரொட்டிப் பழக்கம் குறைந்துவிடும்.

அரசியல் சுவரொட்டிகள் கூட்டம் நடக்கும் இடங்களைச் சுற்றிப் பெரும்பாலும் ஒட்டப்பெறும். ஆனால், திரைப் படம், வணிகச் சுவரொட்டிகள் தொலை தூரத்திலுள்ள மக்களை ஈர்ப்பதற்காகவும் ஒட்டப்பெறுகின்றன. இதனால் நகரங்களை மட்டும் சார்ந்து இருந்த சுவரொட்டி ஒட்டும் பழக்கம் நகரத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் பரவத் தொடங்கி விட்டது. ஒரு கடை அதிபர் தம் நேர்முகத்தில் கூறிய செய்தி:

''நாங்கள் பொதுவா எல்லா நேரத்திலும் போஸ்டர் ஒட்டமாட்டோம். தீபாவளி, பொங்கல் போன்ற விற்பனைமேம்பட்ட சமயத்திலே மட்டுமே ஒட்டுவோம். அப்போதெல்லாம் புதுச்சேரியில் ஒட்டறதைவிட வெளி யூரில் அதிகம் ஒட்டுவோம்''.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சில திரையரங்க அதிபர்கள் சிற்றூர்களில் குறிப்பிட்ட இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்கின்றனர். தொடர்ந்து குறிப்பிட்ட இடங்களிலேயே ஒட்டி வருகிறார்கள். அதற்காகக் குறிப்பிட்ட இடத்தையே சொந்தக்காரருக்கு அல்லது சுவரொட்டி ஒட்டியதைக் கிழிக்காமல் பார்த்துக் கொள்கிறவருக்கு ஒரு படத்திற்கு ஒரு முறை இலவச அனுமதி தருகிறார்கள். இப்படித் திரையரங்கச் சுவரொட்டிப் பழக்கம் சிற்றூர்களையும் கவ்வ ஆரம்பித்து இருக்கிறது.

தான் விரும்பாத செய்தியை ஒரு கட்சியோ அல்லது ஒரு குழுவோ சுவரொட்டியாக ஒட்டுமே யானால் அதற்கு எதிரான கட்சி, ஒட்டிய சுவரொட்டியை மறைக்க முயற்சி எடுத்துக் கொள்கிறது. ஒட்டிய சுவரொட்டிமேல் வேறு சுவரொட்டியை ஒட்டி விடுவது, அதுவும் குறிப்பாக அரசியல் சுவரொட்டிகள் மேல் பிறிதொரு கட்சியினர் சுவரொட்டியை ஒட்டினால், பிறிதொரு கட்சியின் சுவரொட்டியை மேலே ஒட்டும்போது முன்னைய கட்சி தெரிந்து கொண்டு வம்புக்கு வரும் என்பதால், முன்னைய அரசியல் சுவரொட்டியின் மேல் தொடர்பே இல்லாத திரைப்படச் சுவரொட்டிகளை எதிர் அரசியல் கட்சி புதுச்சேரியில் ஒட்டுவதாக ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது. சுவரொட்டிச் செய்தியை விரும்பாத அரசியல் கட்சிக்காரர் அல்லது திரைப்பட இரசிகர், விரும்பாச் சுவரொட்டிகளின் மீது சாணத்தை அடித்தோ அல்லது சுவரொட்டியைக் கிழித்தோ தம் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதும் பழக்கமாக உள்ளது.

பின்னிணைப்பு :

பாண்டிச்சேரி - அண்ணாசிலை முதல்
இராசா திரையரங்கு முடிய உள்ள
சுவரொட்டிகள் - 19.11.87 - 30.11.87

எண்	சுவரொட்டியின் வகை	எண்ணிக்கை	விழுக்காடு
1.	திரைப்படம்	40	47.6%
2.	காங்கிரஸ்	14	16.7%
3.	தி.மு.க.	1	1.1%
4.	பொதுவுடைமை	3	3.5%
5.	தொழிலாளர்	4	4.7%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6.	விடுதலைப்புலி ஆதரவு	8	9.5%
7.	வணிக வியாபாரம்	9	10.7%
8.	அரசு	1	1.1%
9.	நாடகம் (1) நலவழி மன்றம் (2) இசை நிகழ்ச்சி (3) நாடகம்	3	3.5%
10.	தில்லி அரசு எதிர்ப்பு	1	1.1%
		84	99.5%

நவம்பர் 19 தொடங்கி 30 வரை புதுச்சேரி அண்ணா சாலையில் ஒட்டப்பெற்ற சுவரொட்டிகளின் மொத்த எண்ணிக்கை 84. இச்சுவரொட்டிகள் பொருள் அடிப் படையில் பகுக்கப் பெற்று மேலே அட்டவணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அட்டவணையிலிருந்து நமக்குத் தெரியும் செய்திகள் கவனத்திற்கும் கவலைக்கும் உரியவை.

1. புதுச்சேரியைத் திரைப்படம் பேரளவிற்குப் பாதிக் கிறது. இதனை மொத்த சுவரொட்டியில் 47.6% விழுக்காடு திரைப்படச் சுவரொட்டிகளாக ஒட்டப் பெறுவதிலிருந்து ஊகிக்கலாம்.

2. திரைப்படத்திற்கு அடுத்தபடியாக அரசியல் இடம் பெறுகிறது. காங்கிரஸ் சார்ந்த சுவரொட்டிகள் 16.7% பொதுவுடைமை சார்ந்த சுவரொட்டிகள் 3.5%. தி.மு.க. சார்ந்த சுவரொட்டிகள் 1.1%. இவை, திரைப்படத்திற்கு அடுத்தபடியாக அரசியல் பேரிடத்தைப் பிடித்து உள்ளது என்பதைக் காட்டுகின்றன.

3. வணிக விளம்பரங்கள் 10.7% இடம் பெற்றுள்ளன. திரைப்படம், அரசியல் ஆகிய இரண்டிற்கும் அடுத்தபடியாக வணிகம் தலைமை இடம் பெற்று இருப்பதை இப்புள்ளி விபரம் காட்டுகிறது.

4 அடுத்தபடியாக விடுதலைப் புலிகளுக்காக ஆதரவுச் சுவரொட்டிகள் 9.5% விழுக்காடு இடம் பெற்றுள்ளன. திரைப்படச் சுவரொட்டிகள் 47.6%, விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக 9.5% என்று இரண்டையும் இணைத்து ஒப்பிட்டு நோக்குகின்றபோது பெரும்பான்மைத் தமிழர்களை ஆட்டிப் படைப்பது எது என்று புள்ளிவிவரம் புலப்படுத்துகிறது. 84

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுவரொட்டிகளில் ஒரே ஒரு சுவரொட்டி மட்டும் நலவழி மன்றத்தைச் சார்ந்ததாகும் (1.1%). இதிலிருந்து பொது அமைப்புகள் புதுச்சேரியில் எவ்வளவு மெலிந்து போய் இருக்கின்றன என்பதை உய்த்துணரலாம். அறிவு சார்ந்த கருத்தரங்கினைப் பற்றியோ, அறிவியல் அறிஞர்களின் பங்கேற்பு பற்றியோ நாட்டு மக்களை நல் வழிப்படுத்தும் சுவரொட்டி ஒன்று கூட இடம்பெறாதது கவலைக்குரியது. மக்களை, அறிவு அல்லது அறிவியல் அடிமட்டத்தை இயக்குவதை விடத் திரைப்படமும் அரசியலுமே ஆட்டிப் படைத்து இயக்குகின்றன என்பதற்கு மேலே கொடுக்கப்பட்ட மாதிரிப் புள்ளிவிவரம் (Sample Survey) சான்று அளிக்கிறது.

ஏதோ சுவரொட்டிதானே என்று நாம் இந்தச் சுவரொட்டிப் போக்கை விட்டு விடுதல் கூடாது. அஃது நம் சமுதாயப் போக்கைக் காட்டும் கண்ணாடி. சுவரொட்டி ஒட்டும் பழக்கம் நம்முடைய பண்பாட்டுச் சீர்மையை மற்றவர் அளக்க அடிப் படையாக உள்ளது. சுவரொட்டியில் இடம் பெற்றிருக்கும் பொருளும் அதில் முதன்மை பெற்றிருக்கும் பொருளும் நம் மக்களின் மனப் போக்கைச் சித்திரிக்கின்றன. எனவே, இந்தச் சிறு சுவரொட்டிக் கணக்கெடுப்பிலிருந்து நாம் மூன்று முடிவிற்கு வரலாம்.

1. சுவரொட்டியை ஒட்டும் அநாகரிகப் பழக்கம் நம் மக்களை பற்றி இருக்கும் நோயாகத் தொடங்கிப் பெரு நோயாக நாளும் வளர்ந்து வருகிறது.

2. நம் மக்களை முதலாவதாகத் திரைப்படங்களும், இரண்டாவதாக அரசியலும் அலைக்கழிக்கின்றன.

3. அறிஞர்கள், அறிவியல் மேதைகள் ஆகியோருக்கு நாம் முதன்மை கொடுப்பது இல்லை. அவர்களுக்குக் கொடுக்கும் இடம் வெறும் பூச்சியமே என்பதையும் இந்தச் சுவரொட்டிப் பழக்கம் காட்டுகிறது.

குறிப்பு

1. 20-11-87இல் புதுச்சேரியில் ஒட்டப் பெற்றிருந்த சுவரொட்டி:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலங்கை இந்திய ஒப்பந்தம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சாதனை
இலங்கைத் தமிழரின் வாழ்வு மலர்ந்திட
'இந்திய அமைதிப்படை'
நடத்திவரும் போராட்டம் வரலாற்றின் புகழ்மிக்க
அத்தியாயம்.
சரித்திரம் படைத்து வரும் எங்கள் தலைவர்
பார்புகழும் பாரதப் பிரதமர்
ராஜீவ் காந்தியின் நடவடிக்கைகளை முழுமனதுடன்
வரவேற்கிறோம்.

—தமிழ்நாடு காங்கிரஸ்—

26.11.87இல் மேற்கண்ட சுவரொட்டிக்கு மறுப்பாக இடம் பெற்றிருந்த சுவரொட்டி:

மானம் உள்ள தமிழனுக்கு?

அரசாண்ட உனது குணம் அழிக்கப்படுவதை
வரவேற்கிறாயா?
அன்னை, சகோதரி கற்பிழப்பதை ஏற்கிறாயா?
தமிழினத்தை அடிமையாக்கும்
தருக்கர்தம் ஒப்பந்தத்தை ஏற்கிறாயா?
ஏகாதிபத்திய ஏவல் நாய்கள் குரைக்கின்றன
இனமானம் மறந்து கையெழுத்திடாதே!

—தமிழினப் பாதுகாப்புப் பேரவை—
(தெ. ஆ. மாவட்டம்)

நன்றி

சுவரொட்டி பற்றிய மேற்கண்ட ஆய்வு புதுச்சேரி நகரை மையமாக வைத்துச் செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி நகரில் உள்ள அண்ணா சாலை—அண்ணா சிலையிலிருந்து இராசா திரையரங்கு வரையுள்ள சுவர்களில் ஒட்டப் பெற்றிருந்த சுவரொட்டிகள் மட்டும் கணக்கிலே கொள்ளப்பட்டுள்ளன;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1987 நவம்பர் 19 தொடங்கி 30 வரை உள்ள 12 நாள்களில் தோராயமாக ஒரு கிலோ மீட்டர் அளவுள்ள இருபக்கச் சாலைகளும் கணக்கில் கொள்ளப்பட்டுச் சுவரொட்டிகளின் வாசகம், எண்ணிக்கை இவற்றை அன்றாடம் கணக்கிட்டு அளித்தவர் திரு. கே. எம். கே. கோமதிசங்கர் (எம்.பில். மாணாக்கர்) ஆவார். திரைப்பட அதிபர்கள், மேலாளர்கள், அரசியல் கட்சித் தொண்டர்கள், வணிக அதிபர்கள் ஆகியோரைச் சந்தித்து நேர்முகம் கண்டவர் திரு. இரா. வேங்கடேசன் (எம்.பில் மாணாக்கர்) ஆவார். அவ்விருவருக்கும் நன்றி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10

இராசிபலன் எனும் 'ஊசி'பலன்

இராசி பலன் பார்க்கும் பழக்கம் தமிழரிடையே ஏன் ஏற்பட்டது? எப்போது ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது என்பன ஆராய்ந்து முடிவு செய்யப் பெற வேண்டிய வினாக்கள். இவற்றைப் பற்றிய மூல ஆய்வு ஒரு பக்கம் இருப்பினும், இப் பழக்கத்தால் தமிழர் வாழ்க்கையில் ஏற்பட்ட பின்னடைவு மிகுந்த கவனத்திற்கும், கவலைக்கும் உரியது.

தாம் பிறந்த நட்சத்திரத்தையும், அந்த நட்சத்திரத்திற்குரிய இராசி, அவற்றை ஒட்டிய பறவை இயல்புகளையும் பார்த்துத் தம்முடைய அன்றாடச் செயல்களுக்குக் காரணம் கற்பிப்பது தமிழரிடம் வழக்கமாக உள்ளது. எனவேதான், விடுதலை, முரசொலி போன்ற ஒரு சில நாளிதழ்கள் தவிர, ஏனைய ஆங்கில / தமிழ் நாளிதழ்களும் இராசிபலனை நாள் தோறும் அல்லது வாரந்தோறும் ஏந்தி வருகின்றன. குறிப்பாக, வார / மாத இராசிபலன் வெளியிடப்படும் நாட்களில் இதழ்கள் மிகுதியாக விற்பனையாகின்றன. நாள் தோறும் இதழ் பார்க்காத ஏனையோரும் அன்று இதழைப் பார்க்கிறார்கள். மிக ஆர்வம் மீதூரப் பதற்றத்துடன் நாளிதழைப் பார்க்கும் இராசிபலன் விரும்பியும் உள்ளனர். சென்னை, மதுரை, கோவை, திருச்சி, பெங்களூர், உதக மண்டலம் முதலான இடங்களில் அன்றைய நாளிதழில் தம் இராசிபலனைப் பார்த்து விட்டுப் பெங்களூர் உதகமண்டலம் முதலான இடங்களில் ஓடும் குதிரைகளின் மேல் பணம் கட்டு பவர் பல்லாயிரக் கணக்கானோர் தமிழ் இனத்தாரிடையே உள்ளனர். இந்தியாவில் அச்சாகும் மொத்த இலாட்டரிச் சீட்டுகளில் ஏறத்தாழ 70 விழுக்காடு இலாட்டரிச் சீட்டை வாங்கும் தமிழரிடையே, இராசிபலன் பார்த்துக் குதிரைப் பந்தயம் கட்டுவோரும் பெருந்தொகையில் உள்ளனர். அன்றாட இராசிபலனைப் பார்த்து ஊக்கம் இழப்பாரும், ஊக்கம் பெறுவாரும் தமிழரிடையே திரளாக உள்ளனர். முதல் நாள் பார்த்த இராசி பலனுக்கும், அன்று நிகழ்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மையான வாழ்க்கை நிகழ்ச்சிக்கும் உறுதியாகத் தொடர்புகள் உள்ளனவா என்பதைத் தமிழர்கள் ஆராய்ந்து பார்ப்பது இல்லை. நிகழ்ந்த நிகழ்வுகளுக்கும், இராசிகளுக்கும் தொடர்பா அல்லது அரசியல் பொருளியல் சமூகக் காரணங்களா என்பதையும் ஆய்வதில்லை. அப்படி ஆராய்ந்திருந்தால் சில தெளிவுகள் கிடைத்திருக்கும், படிப்பினைகள் கிடைத்திருக்கும், அவற்றை ஒட்டித் தமிழரிடையே உறக்கம் நீங்கிய அரசியல் / பொருளியல்/சமூகவியல் விழிப்பும் ஏற்பட்டிருக்கும். அத்தகைய கணிப்பு ஒன்றைச் செய்தல் நல்லது என்ற நோக்கில் கடந்த செப்டம்பர் மாதத் தினமணி, தினத்தந்தி, தினமலர் ஆகிய இதழ்களை ஒட்டிக் கணிப்பொன்று மேற்கொள்ளப் பெற்றது. அந்தக் கணிப்பிலிருந்து கிடைத்த தகவல்கள் இக் கட்டுரையின் பின் இணைப்பாக இணைக்கப் பெற்றுள்ளன.

இராசிபலனுக்கு மூலமாக இருக்கின்ற நட்சத்திரங்கள் வான் மண்டலத்தில் உள்ளவை. நட்சத்திரங்கள் அதனைச் சார்ந்து வரும் ரசிகள் பூமண்டலத்திலுள்ள மக்களை அன்றாடம் செயல்படுத்தி வருகின்றன அல்லது செயலிழக்கச் செய்கின்றன என்பது வியப்பிற்குரியது. வான் மண்டலம் பூமண்டலத்தைப் பாதிப்பது உண்மைதான். கதிரவன் நிலவு ஆகியன பூமியைச் சுற்றி வருகின்றன. தாம் வாழும் பூமி, அப்படியே நிலைத்து நிற்கிறது என்ற நம்பிக்கை நம்பப்பட்டு வந்த முற்காலத்தில் உருவான நட்சத்திரங்களை ஒட்டிய இராசி பலன் கொள்கை, கதிரவனும், நிலவும் ஒரே இடத்தில் உள்ளன, சுற்றி வருவது பூமிதான் என்ற உண்மை அறியப் பெற்ற தற்காலத்தில் எவ்வாறு நம்பப் பெறுகிறது என்ற வினா இராசிபலனை நம்புவோரிடையே எழாதது வியப்புதான். தமிழரிடையே ஊக்கம் இழக்கச் செய்யும் சக்திகளுள் ஒன்றாக இருக்கும் இராசிபலன் பார்க்கும் பழக்கம் பல நூற்றாண்டுகளாகத் தமிழர் வாழ்வை அரித்து வருகின்றமை ஆய்வால் புலப்படுகிறது.

ஆதி மனிதன் தன்னைச் சுற்றி நிகழும் இயற்கை அற்புதங்களுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில் இயற்கை ஆற்றல்களுக்கு இறைமை கற்பித்தான். இறைமை, அச்சத்திற்கும் வழிபாட்டிற்கும் காரணம் ஆயிற்று. இயற்கையை வழிபடல் தமக்கு நன்மை செய்யும் என்று வழிபடத் தொடங்கினர். அவனுக்கு அக்காலத்தில் பெரும் அற்புதத்தை விளைத்தது வான் மண்டலமே. வான் மண்டலத்திலுள்ள கதிர் அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. இரவில் உலா வரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலவு அடுத்த புதிராக இருந்தது. வானிலிருந்து கொட்டு கின்ற மழை, அவனுக்குப் பெரும் புதிராக இருந்தது. வான் மண்டலத்தில் நிரம்பி இருக்கும் காற்று, அதன் வீச்சு / வேகம் அவனுக்குப் புதிர்களாக விளங்கின. மண்ணிலிருந்து பற்றி எரியும் தீ, வான் நோக்கிப் போவது, புகை வான் நோக்கி எழும்புவது அவனுக்கு அதிசயங்களாக இருந்தன. உயர்ந்த மலை முகட்டிலிருந்து கொட்டும் அருவி, அவனுக்கு வானி லிருந்து கொட்டும் அருவியாகப் பட்டு அற்புதத்தை விளைத்தது. எனவே, நீர், தீ, விசும்பு, காற்று ஆகிய நான்கும் வான் மண்டலத்தில் இருந்து வந்தமையால் மனிதனை ஆட்டிப் படைக்கும் இறைமை வான் மண்டலத்தில் இருப்ப தாக அவன் நம்பினான். எனவேதான் வான் நோக்கிய வழிபாடு தோன்றியது. அது கதிர் வழிபாடாகவும், நிலவு வழிபாடாகவும், காற்று வழிபாடாகவும் நீர் வழிபாடாகவும் விரிந்து பெருகியது. இந்த நடவடிக்கையின் பிறிதொரு போக்கே வானில் உள்ள நட்சத்திரங்கள் தம் வாழ்வைப் பாதிக்கின்றன என்பதாகும். நாட்களுக்கு விண்மீன்கள் அடிப் படையில் அவன் பெயரிட்டான். ஒரு நட்சத்திரத்தைச் சார்த்தித் தெய்வத்தின் பெயரையும் அவன் அமைத்துக் கொண்டான் (பார்க்க நட்சத்திரங்கள் — தெய்வங்கள் — இணைப்பு). நட்சத்திரம், நட்சத்திரத்தின் பெயரீடுகள் ஆகிய வற்றுக்கும் தொடர்புண்டு என்று நம்பத் தொடங்கினான். குழந்தை பிறப்பதற்கே காரணம் தெய்வம் என்று நம்பிய (கடவுள் கொடுத்த குழந்தை) மாந்தன், பிறந்த பின் வாழும் வாழ்விற்கும் காரணம் வானுறை ஆற்றல் என்று நம்பினதில் வியப்பு இல்லை. எனவே, அறிவியல் முழுமையாக உருக்கொள் ளாத காலத்தில் தம் வாழ்வுக்கு வான்மண்டலம் காரணம் என்ற அவன் நம்பியதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இத்தகு நம்பிக்கை தமிழரிடையே இருந்து வந்தது என்பதைப் பழைய இலக்கியங்கள் காட்டுகின்றன. ''நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்'' என்ற தொல்காப்பியர் கூற்றும், அதற்கு நன்னாள், தீ நாள் என்று எழுதிய இளம் பூரணர் உரையும், பழங்காலத்திலேயே, தமிழர், நாள் வழி பலன் பார்த்து வந்தனர் என்பதை உறுதி செய்கின்றன. மேற்கண்ட (பொருள் 88) நூற்பாவிற்கு உரை வகுக்கும் போது, இளம்பூரணர் ''வருங்காலம் குறித்தல்'' என்று வகுப்பர் . .

நல்ல நாள் பார்த்துத் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் செய்யப் பெற்றன என்பதை அகநானூறும், நல்ல நாள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்த்து விதை தெளிக்கப் பெற்றதைப் புறநானூறும் குறிக்கின்றன.

இரவலர் புரவலரிடம் பரிசில் பெறாதபோது தாம் புறப்பட்ட நேரத்தையும், புள் நிமித்தத்தையும் பழித்தார்கள். பரிசில் பெற இயலாது போன ஏனைய காரணங்களைப் புறக்கணித்தனர்.

சங்க காலத்திற்குப் பின்பும் இப்பழக்கம் தொடர்ந்து பின்பற்றப் பெற்றதைச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் மொழிகின்றன. கோவலன் கண்ணகி திருமணம் நல்ல நாளில் நடைபெற்றமை, இந்திர விழா சித்திரை மாதத்தில் தொடங்கப் பெற்றமை ஆகியனவாம்.

நாள்நிலை பார்த்துரைப்போரை 'அறிவன்' என்றும், கணிவன் என்றும் முன்னோர் குறித்தனர்.

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்

என்ற தொல்காப்பிய அடிகள் அறிவனின் முக்கால மொழிவைப் புலப்படுத்தும்.

பனியும் வெயிலும் கூதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு நோன்மை எய்திய
தணிவுற்று அறிந்த கணிவன் முல்லை

என்ற நூற்பா, கணிவன், காலம் பார்த்து உரைப்பதைக் காட்டும். 'அறிவன்', 'கணிவன்' என்ற பெயரிடுகள் ஒரே பொருளை, 'அறிவன் என்றது கணியனை' என்ற இளம்பூரணர் உரை இதனைத் தெளிவுறுத்தும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இந்த நல்ல நாள் பார்ப்பதோடு, சில வளர்ந்த குறிப்புகள் கிடைக்கின்றன. ஆசாரக்கோவை, அந்தணரிடம் நல்லநாள் கேட்டுச் செயல் செய்தல் வேண்டும் என்று பணிக்கிறது.

நல்லநாள் பார்க்கும் பொறுப்பு அந்தணர் கைவசம் சேர்ந்துவிட்டதை ஆசாரக் கோவைப் பாடல் எடுத்துணர்த்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறது. 27 நட்சத்திரங்களின் பெயரும் சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு வந்தவை. அந்நட்சத்திரங்களோடு அமைக்கப் பட்டிருக்கிற இராசிகளின் பெயர்கள் வருமாறு:

மேஷம் (அசுவதி, பரணி, கார்த்திகை), ரிஷபம் (கார்த்திகை, ரோகினி, மிருகசீரிஷம்), மிதுனம் (மிருக சீரிஷம், திருவாதிரை, புனர்பூசம்), கடகம் (புனர்பூசம், பூசம், ஆயில்யம்), சிம்மம் (மகம், பூரம், உத்திரம்), கன்னி (உத்திரம், அஸ்தம், சித்திரை), துலாம் (சித்திரை, ஸ்வாதி, விசாகம்), விருச்சிகம் (விசாகம், அனுஷம், கேட்டை), தனுசு (மூலம், பூராடம், உத்திராடம்), மகரம் (உத்திராடம், திருவோணம், அவிட்டம்), கும்பம் (சதயம், பூரட்டாதி, அவிட்டம்), மீனம் (பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி)

இவ்விராசிகளின் பெயர்களும், நட்சத்திரங்கள் பெயரிட்ட தேவதைகளும், தெய்வங்களின் பெயர்களும் அனைத்துமே தமிழ்ப் பெயர்கள் இல்லை என்பதும் அவை சமஸ்கிருதப் பெயர்கள் என்பதும் கவனத்திற்கு உரியன.

இராசிபலன் காலப்போக்கில் சோதிடக் கலையாக வளர்ந்து, அது பெரும்பாலும் குறிப்பிட்ட இனத்தாரிடம் அடங்கிவிட்டது. பிற்காலக் காவிய இலக்கியங்கள் அரச குமாரர்கள் பிறக்கிறபோது எதிர்காலம் கணிப்பவரை அழைப்பதன் மூலம் அக்கால நம்பிக்கையை விளங்கிக்கொள்ள முடிகிறது. கி.பி. 1462இல் வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னர் காலத்து வீரபாண்டிய சதுர்வேத மங்கலத்திற்கு மானியம் வழங்கியது பற்றிக் கல்வெட்டுக் குறிப்புத் தென்காசி விசுவநாதர் கோயிலில் வெட்டப் பெற்றுள்ளது. அக்கல்வெட்டில், பிற பாண்டிய சதுர்வேத மங்கலத்திற்குத் தாங்களே இருந்து 24 திருமணங்களுக்குப் பஞ்சாங்கம் படிப்பதாகவும் குறிப்புத் தரப்பட்டுள்ளது. எனவே நேரம் பார்க்கும் பழக்கம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதையும் அதனை வேதியர்கள் பிற்காலத்தில் அரசப் பணி களில் முனைந்து செய்து வந்துள்ளார்கள் என்பதையும் மேற்கண்ட கல்வெட்டு உணர்த்துகிறது. இன்றும் பல பிற்றூர்களில் பஞ்சாங்கம் பார்க்க வேதியர் அழைக்கப் பெற்றுத் தமிழ் ஆண்டுப் பிறப்பின் போது பஞ்சாங்கம் படித்தலைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேதங்களில் கோள் பார்த்து, நாள் பார்த்துச் செய்யும் பழக்கங்களைக் காட்டும் சான்றுகள் எதுவும் இல்லை. பறவைகளையொட்டிய புள் நிமித்தம் பேசப்படுகிறதே தவிர நாள் பார்க்கும் சோதிடப் பழக்கத்திற்கான குறிப்பு இல்லை.

கிரேக்கர்கள் வழி, கோள் பற்றிய பல்வேறு செய்திகள் இந்தியாவில் மலர்ந்தன. நாள் பார்க்கும் பழக்கமும், கிரேக்கர்கள் வழியாக வட இந்தியாவிற்கு வருகை தந்து, பிறகு வைதீகர் வழியாகத் தென் இந்தியாவிற்கு வந்திருத்தல் வேண்டும்.

> ''நாள் செய்வதை நல்லவர்கள் செய்ய மாட்டார்கள் என்ற ஒரு வசனம் உண்டு. இந்த வசனத்தைப் பிசகாமல் அனுசரித்து விட்டார்கள் கிரேக்கர்கள். எதற்கும் நாள் காலம் முதலியவைகளைப் பார்ப்பார்கள். உரிய நல்ல நாள் பார்த்துதான் விதை விதைப்பார்கள். அறுவடை செய்வார்கள். தொழிலாளர்களும் இப்படியே நல்ல நாள் பார்த்துதான் எதையும் செய்வார்கள்.''

டெல்பி (Delphi) என்ற கிரேக்கத் தெய்வம், மனிதர்களின் எதிர்காலத்தைக் கோள்களின் போக்காகக் கொண்டு செல்லும் என்று கிரேக்கர் நம்பினர். சூரியன் உட்பட அனைத்துக் கோள்களும் பூமியைச் சுற்றி வருகின்றன என்ற நம்பிக்கையிலேயே கிரேக்கரும் பிறரும் சோதிடத்தை அமைத்திருந்தனர்.

எனவே, கிரேக்கப் பகுதியில் இருந்து வட இந்தியாவிற்கு வருகை தந்து, பிறகு, தென் இந்தியாவில் இப்பழக்கம் பரவி இருக்கலாம். நாட்களுக்கு ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி எனக் கோள்களின் பெயர்களை வைத்திருந்தனர். அந்நிலையில் கோள்களின் போக்கிற்கு நல்லனவும் அல்லனவும் நிகழும் என நம்பினர். கோள்கள் மழையை நிருணயிக்கின்றன என்பதைத் தமிழர் அறிந்திருந்தனர். மன்னனின் செயல்களுக்கு ஏற்ப வானகத்துக் கோள் இடம் மாறும், அதற்குத்தக மழை பெய்யும் அல்லது பொய்க்கும் என்று தமிழர் நம்பியிருந்தனர். கோல் நிலை திரும்பிடின் கோள் நிலை மாறும், கோள் நிலை மாறின் மாரி வறங்கூரும்.

த.—8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மழை, வான் பார்த்த தமிழர்க்கு வரப்பிரசாதம். மழைக்கும் வெய்யிலுக்கும் வானமே காரணமாயிற்று. அவ்விரண்டாலுமே மண்ணகத்து நன்மைகளும் பிறவும் நிகழ்ந்தன. அவற்றை ஒட்டி, நாளைச் சார்த்தித் தம் வாழ்நாளையும் தமிழர் பார்க்கலாயினர் போலும்.

இயற்கையில் இறைமை கண்டு அஞ்சியும், அன்பு காட்டியும் வாழ்ந்த தமிழர் வாழ்வில் கிரேக்கர்களுடைய வரவும், அவர் வழி வந்த கோள்களை ஒட்டிய நல்லநாள், தீயநாள் நம்பிக்கைகளும் எளிதாக இடம் பெற்றன. கடவுள் உண்மை, பிறப்பு வழி ஜாதி உண்மை, பல்வேறு மூட வழிபாடுகள் ஆகியவற்றை எதிர்த்து ஜைன மதமும், பௌத்த மதமும் கிளர்ச்சி செய்தன. இத்தகு நம்பிக்கைகளை ஜைன சமய சாத்திரங்கள் மூடங்கள் என்றே பழித்தன; ஒதுக்கின.

மூவகை மூடமும் எட்டு மயங்களும்
தோவகைஇல் காட்சியார்க்கு இல் —(29)

என்பது அருங்கலச் செப்பு.

சைன சமய புலவரால் எழுதப்பெற்ற பழமொழி நானூறு வெளிப்படையாக நாள் பார்ப்பதை எதிர்த்துக் குரல் எழுப்புகிறது.

இது மன்னுந் தீதென் றிசைந்த தூஉம் ஆவார்க்கு
அது மன்னும் நல்லதே யாகும் அது மன்னும்
வீதானு கானல் விரிதிரைத் தண் சேர்ப்ப
தீ நாள் திருவுடையார்க் கில் (235)

சைன சமயக் கருத்துகள் சிலவற்றை இணைத்துக் கொண்ட பிற்கால வைதீக சமயம் ஒரு காலத்து நாள், நட்சத்திரம் பார்ப்பதை வரவேற்ற நிலையில் இருந்து மாறி, எதிர்க்கத் தொடங்கியதைத் திருஞானசம்பந்தர் வரலாற்று மூலம் அறியலாம்.

திருஞானசம்பந்தர் வேதாரண்யத்தில் தங்கி இருந்தார். அப்போது அவரைப் பாண்டி நாட்டு அரசி மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறை நாயனாரும் மதுரைக்கு வருகை தருமாறு வேண்டினர். அவர்தம் வேண்டுதலுக்கு இணங்கப் பாண்டி நாட்டுக்குச் செல்லத் திருஞானசம்பந்தர் முடிவு எடுத்தார். அப்போது அப்பர், சம்பந்தர் பயணத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தைத் தடுத்தார். நாள்களும், கோள்களும் நன்றாக இல்லை. எனவே, தற்போது மதுரைக்குப் பயணம் செய்யவேண்டாம் என்று அப்பர் தடுத்தார். ஆனால் சம்பந்தர், சிவபெருமான் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும்வரை நாட்களால் தீயன எதுவும் விளையா என்று கோள் அறு திருப்பதிகம் பாடினார்.

அரசருளிச் செய்கின்றார் ''பிள்ளாய்! அந்த
அமண்கையர் வஞ்சனைக்கோர் அவதி யில்லை;
உரை தெய்வ துளது கோள் தானும் தீய;
எழுந்தருள உடன்படுவ தொண்ணாது'' என்னப்
''பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால்
பழுதணையாது'' எனப் பகர்ந்து பரமர் செய்ய
விரைசெய்மலர்த் தாள்போற்றிப் புகலி வேந்தர்
''வேயுறு தோளியை'' எடுத்து விளம்பினாரே

— பெரியபுராணம்
திருஞானசம்பந்தர் 616

சம்பந்தர்தம் கோளறு பதிகத்தில் இடம் பெற்றுள்ள முதல்பாட்டு, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஏழு நாட்களின் பெயரை மொழிந்து அந்நாள்கள் நல்லன என்றும் மொழிகிறது. அப்பாடல் வருமாறு:

''வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம்
வெள்ளி சனி ஞாயிறு பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே''

(கோளறு திருப்பதிகம்—1)

சைவ நாயன்மார்களின் தலைமையானவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் நாள்கள் அனைத்தும் நல்லன என்று கூறியபோதிலும், திருநாவுக்கரசு நாள் நிலையாமையையும், கோள் நிலையாமையையும் நம்பினமை தெளிவாகிறது. நாள் நிலையையும் கோள் நிலையையும் பார்த்து அன்றாட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்வைத் தீர்மானிக்கும் பழக்கம் தமிழரிடம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதை இடைக்காலக் கல்வெட்டும் இலக்கிய வழக்காறுகளும் இன்றைய இராசி பலன் பார்க்கும் பழக்கமும் உறுதி செய்கின்றன.

மனிதம் தன்னளவில் தீமையைத் தடுக்கவும், நன்மையைப் பெருக்கவும் முடியாத போதுதான், மந்திரம், மாயை, பிற வழிபாடு ஆகியவற்றை நாடுகிறது. அது சார்ந்திருக்கும் சமுதாயத்தில் எதிர்நோக்கும் முறையான எதிர்பார்ப்பைக் கூட நிறைவு செய்ய, அரசியல், பொருளியல் அமைப்புகள் தடுக்கிறபோது மனிதன் மந்திர மாயை வழிபாட்டுக் கட்டுக்குள் அகப்பட்டுக் கொள்கிறான். தொடர்ந்து இராசி பலன் பார்க்கும் தமிழரும் மேற்கண்ட சூழலிலேயே மேற்கண்ட மூட நம்பிக்கைக்கு ஆளாகின்றனர்.

இதுவரை கண்ட செய்திகளில் இருந்து பின்வருமாறு இராசிபலன் பார்க்கும் பழக்கத்தைக் கால வரிசையில் ஓரளவு ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

1. இயற்கை மீது அச்சமுடைய ஆதி மனிதனுக்கு வான் மண்டலத்தைப் பற்றிய அச்சமும் இருந்தது. அந்த அச்சமே கோள்நிலையைப் பார்த்து நாள் நிலையைப் பார்க்கும் பழக்கமாக உருவாயிற்று.

2. தமிழரிடமும் நாள் பார்த்தல், கோள் பார்த்தல், மன்னவன் செயல் பார்த்தல் ஆகிய பழக்கங்கள் இருந்தன.

3. இந்தியாவிலிருந்து ஆரியர் தென் புலம் வந்த பிறகு மேற்கண்ட நாள் பார்க்கும் பழக்கம் விரிவு அடைந்தது. காலப் போக்கில் நாள் பார்க்கும் பொறுப்பு வடபுலத்திலிருந்து வந்த ஆரியர் கைவசம் ஆயிற்று.

4. வறுமையில் துன்புறுவதற்கு உண்மைக் காரணங்களான அரசியல், சமுதாய, பொருளியல் காரணங்களை விட்டுவிட்டு அவற்றிற்குக் காரணம் நாள் நட்சத்திரங்களே என்று நம்பும் போக்குத் தமிழரிடையே பெருகியது; பெருக்கப் பெற்றது.

5. படிக்காத பெரும்பான்மை மக்களும், படித்த சிறுபான்மை மக்களும் தமக்கு நேர்ந்த வறுமைத் துன்பத்திற்கும், இன்ன பிற துன்பத்திற்கும் காரணம் தாம் வாழும் ஊரில் உள்ள சிலர், ஆளுவோர், ஆளும் அரச அமைப்பு, பொருளியல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைப்பு, சமூக அமைப்பு என்று ஆராய்ந்து கண்டுகொள் வதை இராசிபலன் பார்க்கும் பழக்கத்தால் தடுக்க முடியும் அல்லது தணிக்க முடியும் என்று அறிந்த சிலர் இராசிபலன் பார்க்கும் பழக்கத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர், வளர்த்து வந்தனர் போலும்.

குறிப்பு

திரு. சாமிக்கண்ணுப் பிள்ளை தமது நூலில் குறிப் பிட்டுள்ள செய்திகள் கவனத்திற்கு உரியன. தமிழ்நாட்டில் தற்போது வழங்கும் நாட்பெயர்களும், மாதப் பெயர்களும் கி. மு. 5ஆம் நூற்றாண்டுக்கு முன்பு தமிழ்நாட்டில் வழங்கப் பெறவில்லை. ஆனால் தொல்காப்பியம் ஈற்றெழுத்தைக் குறிப்பிட்டுச் செல்லும் மாதப் பெயர்களும் தற்போது வழங்குகின்ற பெயர்களும் ஒன்றா அல்லது தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய பெயர்கள் வேறா என்பன மேலும் ஆராய்ச்சிக்குரியவை.

REFERENCES :

1.. Thiru. Srinivasa Iyengar, History of the Tamils from the earlier times to 600 A. D., Asian Educational Services, New Delhi, 1982.

2. P.U. Jagadisa Ayyar, South Indian Customs, Asian Educational Services, New Delhi — 1985.

3. Dr. Ka. Ganthi, Thamizhar Pazhakangalum Nambi-kaigalum, International Institute of Tamil Studies, Adyar, Madras - 20, December 1980.

4. K. Govindarao - Why the Stars can't foretell? Science Express - Indian Express, July 5, 1988.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு: 1

விண்மீன்களும் அவற்றிற்குரிய பறவைகளும்

பருந்து :	அஸ்வினி பரணி கார்த்திகை ரோகிணி மிருகசீசம்
ஆந்தை :	திருவாதிரை புனர்பூசம் பூசம் ஆயில்யம் மகம் பூரம்
காகம் :	உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம்
சேவல் :	அனுசம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம்
மயில் :	திருவோணம் அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு: 2

விண்மீன்களின் பெயர்களும் அவற்றிற்குரிய தெய்வப் பெயர்களும்

	விண்மீன்கள்	தெய்வம்
1.	அஸ்வினி	அஸ்வின்
2.	பரணி	எமன்
3.	கிருத்திகா (கார்த்திகை)	அக்கினி
4.	ரோகிணி	பிரஜாபதி
5.	மிருகசிஷா (மிருகசீசம்)	சோமா
6.	ஆர்தா (திருவாதிரை)	ருத்திரர்
7.	புணர்பசு	அதிதி
8.	பூசய (பூசம்)	பிரகஸ்பதி
9.	ஆசிலேகா (ஆயில்யம்)	சர்பாத்
10.	மகா (மகம்)	பித்தாரா
11.	பூர்வ பல்குணி (பூரம்)	பகா
12.	உத்தர பல்குணி (உத்திரம்)	ஆரியமன்
13.	அஸ்தா (அஸ்தம்)	சாவித்திரி
14.	சித்திரா (சித்திரை)	துவஸ்திரி
15.	சுவாதி	வாயு
16.	சிவாகா (விசாகம்)	இந்திராகுணி
17.	அனுராதா (அனுஷம்)	மித்திரா
18.	ஜெயஸ்தா (கேட்டை)	இந்திரா
19.	மூலா (மூலம்)	நெறிதீ
20.	பூர்வ ஆஷாட (பூராடம்)	ஆப்பா
21.	உத்தரஅஷாட (உத்திராடம்)	விஸ்வதேவா
21.அ.	அபிஜித்	பிர்மா
22.	சிரவனா (திருவோணம்)	விஷ்ணு
23.	திரவிசிஸ்தா (அ) கனிஸ்தா (அவிட்டம்)	வாசவ
24.	பூர்வ பத்ராபதி	ஆஜா ஏக பாத்
25.	உத்தர பத்ராபதி (உத்திரட்டாதி)	அகிபுத்ன
26.	சதாவிசாஜ் (அ) சகாரசா (சதயம்)	வருண
27.	ரேவதி	பூசன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 3

சங்க இலக்கியத்தில் காலக் கணிப்புக் குறிப்புகள்

1. மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்

— புறம் 117 : 1, 2

மைம்மீன் — சனி; தூமம் — தூமகேது

2. ஆடியல் அழல்குட்டத்து
ஆரிருள் அரையிரவில்
முடப்பனையத்து வேர்முதலாகக்
கடைக்குளத்துக் கயம்காயப்
பங்குனி உயர் அழுவத்துத்
தலைநாண்மீன் நிலைதிரிய
நிலைநாண்மீன் அதனெதிர் ஏர்தரத
தொண்நாண்மீன் துறைபடியப்
பாசிச் செல்லாது ஊசித் துன்னாது
கனை எரி பரப்பக் கால்எதிர்பு பொங்கி
ஒரு மீன் வீழ்ந்தன்றால் விசும்பினானே

— புறம் 229 : 1—11

யானைக்கட் சேஎய் மாந்தரஞ் சேரலிரும்பொறையைக் கூடலூர் கிழார் பாடியது

3. நின்று நிலைஇயர் நின் நாண்மீன் ; நில்லாது
படாஅச் செலீஇயர் நின்பகைவர் மீனே

— புறம் 24 : 24, 25

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிகிழார் பாடியது.

4. மழைபொழியும் நாள்

விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை, எழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெரு இடைப்படுத்த மூன்று ஒன்பதிற்று இருக்கையுள்
உருகெழு வெள்ளி வந்து ஏற்றியல் சேர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருடையை படிமகன் வாய்ப்பப் பொருள்தெரி
புந்தி மிதுனம் பொருந்த புலர்விடியல்
அங்கி உயர்நிற்ப, அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்கு உப்பால் எய்த இறையமன்
வில்லின் கடை மகரம் மேவப் பாம்பு ஒல்லை
மதியம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியில் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி இயைக.........

பரிபாடல் 11 (வையை) : 1—13

5. வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசைதிரிந்து தெற்கு ஏகினும்

பட்டினப்பாலை 1, 2

6. விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோல் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறம் சாரா அசைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டு

மனைவகுத்தல் நெடு : 74-76

7. மதலை மாக்கோல் கைவலம் தம்மின்

புறம் 152 : 18

(வல்விலோரியை வன்பரணர் பாடியது)
மதலை மாக்கோல் - பிறப்புணர்த்தும் கோல்

8. வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்

குறு. 298

9. வான் மீன்பல பூப்பின் **புறம் 129 :7**

10. பன்மீனிமைக்கும் மாகவிசும்பு **புறம் 270 :1**

11. மதிசேர் நாண்மீன் போல **புறம் 160 :8**

12. நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல

பட்டினப்பாலை 67—69

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13. வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து

சிறு. 242, 243

14. உவவுத் தலை வந்த பெருநாளமையம் புறம் 65 : 6

15. வைகுறும் மீன் பெரு. 318

16. வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்ப

புறம். 397 : 1, 2

17. மதி நிலாக் கரப்ப வெள்ளி யேர்தர புறம். 398 : 1

18. வறிது வடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி

பதி. 24 : 24

19. வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை

புறம். 338 : 1, 2

20. அலங்கு கதிர்க் கனலி நால்வயிற் றோன்றினும்
இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்

கனலி — கொள்ளி புறம் 35 : 6,7

21. வெங்கதிர்க் கனலி துற்றவும் புறம் 41 : 4

22. மீக வானுள் எரிதோன்றினும்
குறமீனொடுந் தாட் புகையினும்

புறம். 395 : 33,3

தொல்காப்பியம்

23. 'மறுவில் செய்திமூவகைக்காலமும்நெறியின் ஆற்றிய
அறிவன் தேயமும்'

தொல் — புறம்

'பனியும் வெயிலும் கதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு நோன்மை எய்திய
தணிவுற்று அறிந்த கணிவன் முல்லை'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இளம்பூரணர் உரை

'அறிவன் என்றது கணியனை, மூவகைக் காலமும்
நெறியினால் ஆற்றுதலாவது பகலும் இரவும்
இடைவிடாமல்ஆகாயத்தைப்பார்த்துஆண்டு நிகழும்
வில்லும் மின்னும் ஊர் கோளும் தூமமும்
மீன் வீழ்வும் கோள் நிலையும் மழைநிலையும் பிறவும்
பார்த்துப் பயன் கூறல்'

24. பாக்கத்து விரிச்சி - நற்சொல் ஆராய்தல்

தொல். பொருள் - 61

25. நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்ப விழ் அலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப

முல்லைப்பாட்டு

26. அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலம் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே

தொல் பொருள் - 88

அச்சமாவது — தீமை வரும் என அஞ்சுதல்
உவகையாவது - நன்மை வரும் என மகிழ்தல்
நாளாவது - நன்னாள் தீநாள்
புள்ளாவன - ஆந்தை முதலியன
பிறநிமித்தமாவன - அலகு முதலியன
காலம் கண்ணுதல் - வருங்காலம் குறித்தல்

இளம்பூரணர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 4

தொடர்பற்ற இராசிபலன் விகிதாச்சாரம்

ஒரு இராசிக்கு மூன்று நாளிதழ்களில் வந்த பலன்கள் தம்முள் தொடர்பற்ற பொருளைக் கொண்டு விளங்கின.

சான்றாக : 04.09.1988 அன்று விருச்சிகம் இராசிக்கு

தினமணியில் வெற்றி என்றும்

தினமலரில் வீண்வார்த்தை என்றும்

தினத்தந்தியில் கடன் என்றும்

பலன்கள் கூறப் பெற்றிருந்தன. இவ்வாறு தொடர்பற்ற பொருளை / பலனைக் கொண்ட இராசிகளின் விகிதாச்சாரம் இங்குக் கணக்கிடப் பெற்றுள்ளது.

எண்	நாள்	இரண்டு பலன்கள் தொடர் புடைய இராசி களின் எண்ணிக்கை	மூன்று பலன்கள் தொடர் புடைய இராசி களின் எண்ணிக்கை	தொடர் பற்றபல னுடைய இராசி களின் எண் ணிக்கை	தொடர் பற்ற பலன் — இராசி விகிதாச் சாரம்
1.	01.09.88	4	3	4/11	36.4%
2.	02.09.88	—	8	3/11	27.3%
3.	03.09.88	2	9	—	
4.	04.09.88	4	2	5/11	45.5%
5.	05.09.88	7	1	3/11	27.3%
6.	06.09.88	4	5	2/11	18.2%
7.	07.09.88	3	4	4/11	36.4
8.	08.09.88	—	6	5/11	45.5%
9.	09.09.88	5	3	3/11	27.3%
11.	11.09.88	1	1	9/11	81.8%
12.	12.09.88	6	1	4/11	36.4%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	நாள்	இரண்டு பலன்கள் தொடர்புடைய இராசிகளின் எண்ணிக்கை	மூன்று பலன்கள் தொடர்புடைய இராசிகளின் எண்ணிக்கை	தொடர் பற்ற பலனுடைய இராசிகளின் எண்ணிக்கை	தொடர் பற்ற பலன்—இராசி விகிதாச்சாரம்
13.	13.09.88	7	—	4/11	36.4%
14.	14.09.88	5	1	5/11	45.5%
15.	15.09.88	6	5	—	
16.	16.09.88	—	6	5/11	45.5%
17.	17.09.88	5	4	2/11	18.2%
18.	18.09.88	5	2	4/11	36.4%
19.	19.09.88	7	2	2/11	18.2%
20.	20.09.88	7	3	1/11	9.1%
21.	21.09.88	3	4	4/11	36.4%
22.	22.09.88	7	2	2/11	18.2%
23.	23.09.88	—	4	7/11	63.9%
24.	24.09.88	8	—	3/11	27.3%
25.	25.09.88	—	6	5/11	45.5%
26.	26.09.88	7	2	2/11	18.5%
27.	27.09.88	5	2	4/11	36.4%
28.	28.09.88	5	3	3/11	27.3%
29.	29.09.88	4	5	2/11	18.2%
30.	30.09.88	—	7	4/11	36.4%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதுவுமே பொருத்தமில்லாத பலன்களின் விகிதாச்சாரம்

நாள்	விழுக்காடு
01.09.88	50%
02.09.88	50%
03.09.88	45.5%
04.09.88	34.8%
05.09.88	32.1%
06.09.88	47.8%
08.09.88	78,6%
09.09.88	75%
10.09.88	41.2%
11.09.88	36%
12.09.88	45%
13.09.88	28%
14.09.88	42.9%
15.09.88	52.4%
16.09.88	60%
17.09.88	40%
18.09.88	31.6%
19.09.88	47.1%
20.09.88	58.3%
21.09.88	50%
22.09.88	47.1%
23.09.88	47.88%
24.09.88	36.4%
25.09.88	40.9%
26.09.88	72.7%
27.09.88	61.5%
28.09.88	48.1%
29.09.88	58.3%
28 நாட்கள்	47.9%

ஒரு திங்களில் எதுவும் பொருத்தமில்லாத பலன்களின் விகிதாச்சாரம் : 47.9%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராசி பலன் தொடர்புகள்

எண்	நாள்	இரண்டு பலன்கள் தொடர்புடைய இராசிகள்	மூன்று பலன்கள் தொடர்புடைய இர்ாசிகள்	மூன்றும் தொடர்பற்ற வெவ்வேறான பலனுடைய இராசிகள்
[illegible]	1.9.88	கடகம், விருச்சிகம், கன்னி, சிம்மம்	மேஷம், கும்பம், மிதுனம்	மீனம், மகரம், துலாம், ரிஷபம்
[illegible]	2.9.88	—	துலாம், மேஷம், ரிஷபம் கும்பம், சிம்மம், மகரம், கன்னி, மிதுனம்.	கடகம், மீனம், விருச்சிகம்
[illegible]	3.9.88	துலாம், மிதுனம்	கடகம், மீனம், விருச்சிகம் மேஷம், ரிஷபம், கன்னி, சிம்மம், கும்பம்.	
[illegible]	4.9.88	மீனம், சிம்மம், கும்பம், மிதுனம்	கடகம், துலாம்	விருச்சிகம், மேஷம், ரிஷபம் கன்னி, மகரம்
[illegible]	5.9.88	கடகம், விருச்சிகம். துலாம், மேஷம்,ரிஷபம்,மகரம்,மிதுனம்	சிம்மம்	மீனம், கன்னி, கும்பம்
[illegible]	6.9.88	மீனம், விருச்சிகம், சிம்மம், மிதுனம்	கடகம் துலாம் ரிஷபம் மகரம் கன்னி	மேஷம், சிம்மம்
[illegible]	8.9.88	விருச்சிகம், சிம்மம், மகரம்,	மீனம் கன்னி கும்பம் மிதுனம்	கடகம் துலாம் ரிஷபம் மேஷம்
[illegible]	9.9.88	—	கடகம் துலாம் மீனம் மேஷம் ரிஷபம் விருச்சிகம்	கன்னி சிம்மம் கும்பம் மகரம் மிதுனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	நாள்	இரண்டு பலன்கள் தொடர்புடைய இராசிகள்	மூன்று பலன்கள் தொடர்புடைய இராசிகள்	மூன்றும் தொடர்பற்ற வெவ்வேறான பலனுடைய இராசிகள்
9.	10.9.88	விருச்சிகம், சிம்மம், மேஷம் ரிஷபம், கும்பம்	கடகம் துலாம் மகரம்	மீனம் கன்னி மிதுனம்
10.	11.9.88	மேஷம்	கன்னி	கடகம் மீனம் துலாம் ரிஷபம் மகரம் கும்பம் மிதுனம் சிம்மம் விருச்சிகம்
11.	12.9.88	ரிஷபம், சிம்மம், கன்னி, கும்பம், மிதுனம்	மகரம் —	கடகம் துலாம் மீனம் மேஷம்
12.	13.9.88	மீனம், ரிஷபம், கன்னி; துலாம் மகரம் சிம்மம் கும்பம்		கடகம் மேஷம் விருச்சிகம் மிதுனம்
13.	14.9.88	விருச்சிகம், மேஷம், ரிஷபம் கன்னி, கும்பம்	கடகம்	மீனம் மகரம் சிம்மம் துலாம் மிதுனம்
14.	15.9.88	மீனம், கன்னி, விருச்சிகம் மேஷம், கும்பம், மிதுனம்	கடகம் சிம்மம் துலாம் ரிஷபம் மகரம்	
15.	16.9.88	—	விருச்சிகம் துலாம் மேஷம் ரிஷபம் சிம்மம் மிதுனம்	கடகம் மீனம் மகரம் கன்னி கும்பம்
16.	17.9.88	கடகம், மீனம், துலாம் சிம்மம், மிதுனம்	மேஷம் ரிஷபம் மகரம் கன்னி	விருச்சிகம் கும்பம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	நாள்	இரண்டு பலன்கள் தொடர்புடைய இராசிகள்	மூன்று பலன்கள் தொடர்புடைய இராசிகள்	மூன்றும் தொடர்பற்ற வெவ்வேறான பலனுடைய இராசிகள்
17.	18.9.88	விருச்சிகம், மேஷம், சிம்மம், கும்பம், மிதுனம்	ரிஷபம் கன்னி	கடகம் மீனம் துலாம் மகரம்
18.	19.9.88	கடகம், விருச்சிகம், மேஷம் ரிஷபம் மகரம் கன்னி சிம்மம்	துலாம் கும்பம்	மீனம் மிதுனம்
19.	20.9.88	மீனம் விருச்சிகம் துலாம் மகரம் சிம்மம் கும்பம் மிதுனம்	கடகம் மேஷம் கன்னி	ரிஷபம்
20.	21.9.88	மிதுனம் கடகம் சிம்மம்	மீனம் மேஷம் ரிஷபம் கும்பம்	விருச்சிகம் துலாம் மகரம் கன்னி
21.	22.9.88	மீனம் ரிஷபம் விருச்சிகம் சிம்மம் மேஷம் கன்னி கும்பம்	கடகம் மகரம்	துலாம் மிதுனம்
22.	23.9.88		கடகம் மேஷம் கன்னி கும்பம்	மீனம் துலாம் விருச்சிகம் ரிஷபம் மகரம் சிம்மம் மிதுனம்
23.	24.9.88	கடகம் மீனம் விருச்சிகம் ரிஷபம் மகரம் சிம்மம் கும்பம் மிதுனம்		துலாம் மேஷம் கன்னி
24.	25.9.88		கடகம் துலாம் மீனம் கன்னி ரிஷபம் மிதுனம்	விருச்சிகம் மேஷம் மகரம் சிம்மம் கும்பம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	நாள்	இரண்டு பலன்கள் தொடர்புடைய இராசிகள்	மூன்று பலன்கள் தொடர்புடைய இராசிகள்	மூன்றும் தொடர்பற்ற வெவ்வேறான பலனுடைய இராசிகள்
25.	26-9-88	கடகம் விருச்சிகம் மகரம் கன்னி கும்பம் சிம்மம் ரிஷபம்	துலாம் மேஷம்	மீனம் மிதுனம்
26.	27-9-88	கடகம் விருச்சிகம் ரிஷபம் கன்னி கும்பம்	மீனம் துலாம்	மேஷம் மகரம் சிம்மம் கும்பம்
27.	28-9-88	கடகம் மீனம் சிம்மம் ரிஷபம் மகரம்	துலாம் கன்னி மிதுனம்	விருச்சிகம் மேஷம் கும்பம்
28.	29-9-88	மீனம் துலாம் மகரம் மிதுனம்	கடகம் மேஷம் விருச்சிகம் ரிஷபம் கும்பம்	கன்னி சிம்மம்
29.	30-9-88	—	கடகம் விருச்சிகம் மீனம் மேஷம் மகரம் சிம்மம் கும்பம்	துலாம் ரிஷபம் கன்னி மிதுனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு: 5

தினசரிகளில் பலன்களைக் குறிப்பிடக் கையாளும் சொற்கள் பற்றிய விவரங்கள்

எண்	தினமணி	தினமலர்	தினத்தந்தி
1.	வெற்றிகள்	1. காரிய சாதனை	1. தைரியமாக எதையும் ஏற்றுச் செய்தல்
2.	செலவினம்	2. இன்ப நாட்டம்/ உல்லாசம்	2. அதிர்ஷ்டகரமான நாள்/ முன்னேற்ற நாள்
3.	அனுகூலம்	3. அலைச்சல்	3. மன அமைதி குறைவு/ மன அமைதி இல்லாமை
4.	இலாபதினம்	4. பணவரவு/ஆதாயம்	4. பற்றுவரவில் சுலப போக்கு
5.	புதிய முயற்சி	5. தெய்வச் சிந்தனை	5. மற்றவரால் புகழப்படுதல்
6.	காரியதாமதம்	6. புதிய அனுபவம்/புதிய முயற்சி	6. நண்பர்களால் அலைச்சல்
7.	பணவரவு	7. பெரியோர் ஆசி	7. நண்பர்களுடன் மனஸ்தாபம்/ நண்பர்களுடன் உரசல்
8.	சுலப நன்மை	8. வீண்கவலை/வீண்அச்சம்	8. நல்ல செய்தி கிடைத்தல்
9.	பிரயாணம்	9. காரிய தாமதம்	9. காரியத்தில் கவலை/ காரியத்தில் சங்கடம் நேரல்
10.	நண்பரால் உதவி	10. பதற்ற நிலை	10. பிரயாணத்தில் காரிய வெற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	தினமணி	தினமலர்	தினத்தந்தி
11.	அரசாங்க நன்மை	11. முயற்சி மும்மரம்/ முயற்சி தடை	11. வீண் மனக்குழப்பம்/ வீண் மனக்கலக்கம்
12.	விகித அனுகூலம்	12. கடன் நீக்கம்/கடன் வரவு	12. பற்றுவரவில் கடினம்
13.	புதிய அலுவலில் நன்மை	13. நல்ல செய்தி	13. அதிஷ்டம் குறைவு
		14. பண நெருக்கடி	14. விண் அலைச்சலும் ஆயாசமும்
		15. நன்மதிப்பு	15. உறவினரால் செலவு/ செலவினம்
		16. உறவினர் உதவி	16. நிர்பந்தம் சமாளிக்கப்படுதல்/ எதிர்ப்புகள் சமாளிக்கப்படுதல்/
		17. மனசஞ்சலம்	17. நண்பர்களால் உதவி
		18. மனைவி உதவி	18. எதிர்பாராத நல்ல தகவல் கிடைத்தல்
			19. காரியத்தில் கடனாதல்
			20. நல்ல வாய்ப்புக் கிடைத்தல்
			21. துணிச்சலான செயல்கள்
			22. பிற்போக்கான செயல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு: 6

மனச்சோர்வைத் தரும் அதிக சொற்குறியீடுகளை யுடைய நாளிதழால் மனம் பாதிக்கப்பட்டோர் விகிதாச்சாரம்

1.9.88	48.2%
3.9.88	10.3%
4.9.88	93.1%
5.9.88	31%
6.9.88	20.6%
8.9.88	37.9%
10.9.88	34.5%
11.9.88	48.3%
12.9.88	17.2%
13.9.88	44.8%
14.9.88	75.9%
15.9.88	51.7%
17.9.88	68.96%
18.9.88	79.3%
19.9.88	34.5%
20.9.88	55.2%
21.9.88	68.96%
22.9.88	10.3%
24.9.88	82.8%
26.9.88	51.7%
27.9.88	51.7%
28.9.88	65.5%
29.9.88	20.7%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உற்சாகமான சொற் குறியீடுகளை அதிகம் தரும் நாளிதழ்

தினமணி	தினமலர்	தினத்தந்தி
11 சொற்குறியீடுகள்	16 சொற்குறியீடுகள்	11 சொற் குறியீடுகள்
11/13 = 84.6%	16/24 = 66.7%	11/29 = 37.9%

மனச் சோர்வைத் தரும் சொற்குறியீடுகளை அதிகம் தரும் நாளிதழ்

தினமணி	தினமலர்	தினத்தந்தி
2 சொற்குறியீடுகள்	8 சொற்குறியீடுகள்	18 சொற் குறியீடுகள்
2/13 = 15.3%	8/24 = 33.3%	18/29 = 62.1%

இராசி மண்டலத்தின் மனைகள்

	அடையாளம்	இராசி அல்லது மனை	(ஆங்கிலக்குறியீடு) கிரேக்கவழி
1.	செம்மறி	மேடம்	Aries
2.	வெள்விடை	இடபம்	Tanrus
3.	நம்பியும் நங்கையும்	மிதுனம்	Gemini
4.	நண்டு	கடகம்	Cancer
5.	செம்மடங்கல்	சிம்மம்	Leo
6.	கருங்கன்னி	கன்னி	Virgo
7.	துலை	துலாம்	Libra
8.	கருந்தேள்	விருச்சிகம்	Scorpio
9.	வில்	தனுசு	Sagittarius
10.	மகரமீன் அல்லது கடல் பூதம்	மகரம்	Capricorn
11.	வெண்மகன்	கும்பம்	Acquarius
2.	இணைமீன்	மீன்	Pisces

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 7

தகவலாளர்களின் விவரங்கள்
வயது/கல்வி

எண்	வயது வரம்பு	விழுக்காடு
1.	20—30 ஆண்டுகள்	68.9%
2.	30—40 ஆண்டுகள்	24.1%
3.	40—50 ஆண்டுகள்	6.89%

எண்	கல்வித் தகுதி	விழுக்காடு
1.	இளங்கலை கீழ்	6.89%
2.	இளங்கலை அளவு	34.5%
3.	முதுகலை அளவு	48.2%
4.	முனைவர் பட்டம் அளவு	10.3%

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11

தற்கொலைக் கலாச்சாரம்

உலக நாடுகளில் வாழும் பல்வேறு இன மக்களிடம் பொதுவாகவும், குறிப்பிட்ட சில இனமக்களிடம் மிகுதி யாகவும் தற்கொலைப் பழக்கம் காணப்படுகிறது. சில இன மக்கள் தற்கொலை செய்து கொள்வதை மத வழியாகவே போற்றியுள்ளனர். தமிழர்கள் தற்கொலை செய்து கொள் வதை அரசியல் பழக்கமாகவும், மதப் பழக்கமாகவும் கொண்டிருந்தனர் எனலாம். குறிப்பாகத் தமிழர் இடமும், பொதுவாக உலக இனமக்களிடமும் காணப்படும் இக்கொடும் பழக்கத்தைப் பின்வரும் அடிப்படையில் நிகழ்கின்றது என வகைப்படுத்தலாம்.

1. அரசியல் காரணங்கள்

1. அரசியல் கொள்கை (இந்தி எதிர்ப்பு—தமிழ்நாடு), அமெரிக்க எதிர்ப்பு (தென்வியட்நாம்)
2. போர்த் தோல்வி (சங்ககால மன்னர், இட்லர்)
3. தலைவன்/தலைவி இறப்பு (இந்திரா, அண்ணா)
4. எதிரிக் கொடுமை (தமிழகம், சப்பான்)

2. பொருளியல் காரணங்கள்

5. ஏழ்மை
6. சுயலாபம் (அரசியல் கட்சிகளின் குடும்ப உதவிகள்)
7. திடும் பண நட்டம் (நொடித்துப் போதல்)

3. மதம்

8. சல்லேகனா (வடக்கிருத்தல்—சமணம், பௌத்தம்)
9. நவகண்டம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. போர்நெறி

10. இரகசியத்தைக் காப்பாற்ற
11. தற்கொலைப் படை (Suicide Commando)

5. தனிப்பட்டவை (Personal)

12. காதல் தோல்வி
13. காதலன்/காதலி இறப்பு
14. தீரா நோய் தாளாமை
15. அவமானம் (தேர்வுத் தோல்வி)
16. சண்டை (குடும்பச் சண்டை)
17. பலவீனம் (இந்திரா இறப்பு)
18. அச்சம்
19. முதுமை

மேற்கண்ட காரணங்களால் மக்கள் தற்கொலை செய்து கொள்ள உந்தப்படுகிறார்கள். தோல்வியை வாழ்க்கையின் ஒரு கூறு என்று எடுத்துக் கொள்ளப் பக்குவப்படாத மக்களிடமும் வாழ்க்கையைத் துன்பமயம் என்று கருதும் மக்களிடமும் தற்கொலைப் பழக்கம் கூடுதலாக உள்ளது. உலக நாடுகளில் தற்கொலையை ஒரு நெறியாக ஏற்றுக் கொண்ட நாடாகச் சப்பானைக் குறிப்பிடலாம். ஹரகிரி (Harakiri) என்றும், செப்புக்கு (Seppuku) என்றும் சப்பானில் இது அழைக்கப்படுகிறது. தற்கொலையை ஒரு வாழ்வு நெறியாகப் போற்றிய பௌத்த சமயம் சப்பானில் பரவியமை அங்குத் தற்கொலை பரவியமைக்குக் காரணமாக இருக்கலாம். எனினும், இரண்டாவது போர் முடிவில் சப்பானில் தற்கொலை எண்ணிக்கை 90 விழுக்காட்டிலிருந்து 99 விழுக்காட்டிற்கு உயர்ந்தது. காரணம், எதிரிப்படையிடம் தோற்ற சப்பானியப் போர் வீரர்கள், எதிரிகளிடம் சரண் அடைவதைவிடத் தற்கொலை செய்து கொள்ளுவதே மேல் என்று கருதி, நூற்றுக்கணக்கானோர் தற்கொலை செய்து கொண்டனர்.

அதிகாரம் செலுத்துகின்ற ஏகாதிபத்தியத்தின் எதிராக எதிர்ப்புணர்வு காட்ட மக்கள் தற்கொலையை ஓர் எதிர்ப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புணர்வுக் கருவியாகக் கையாண்டனர். இத்தகு முறை கிழக்கு ஆசிய நாடுகளில் தோன்றி வலுத்தது. சீனாவில் இது போன்ற தற்கொலைகள் மிகுதியாக நிகழ்ந்தன. சீனப் புரட்சிப்பேரரசு 1949 அக்டோபரில் மலர்ந்த பிறகு பாதிக்கப் பெற்ற நில உடைமையாளர்கள் புரட்சி அரசின் வன்முறைக்கு அஞ்சியும் இருந்த வளவாழ்வை இழந்து வருந்தியும் தற்கொலை செய்து கொண்டனர்.*1 சீனரைப் போல மங்கோலிய இனமக்கள் வாழும் வியட்நாமிலும் அரசியல் தற்கொலைகள் பல அண்மையில் நிகழ்ந்தன. போரில் தோற்ற அமெரிக்கர்கள் வியட்நாமை விட்டு வெளியேறிய பிறகு வட வியட்நாமும் தென் வியட்நாமும் ஒன்றாகின. வடவியட்நாமின் பொதுவுடைமை ஆட்சிக்கு அடிபணிய மறுத்த தென்வியட்நாமியர் தம் எதிர்ப்பைக் காட்ட அரசியல் தற்கொலையை மேற்கொண்டனர்.

ரோம அரசர்கள் எதிரிகளால் தோற்கடிக்கப்படும்போது, பகைவர் கைவயப்பட்டுச் சித்திரவதைக்கு ஆளாவதை விடச் செத்து மடிவதே மேல் என்று தற்கொலை செய்து கொண்டனர். இட்லர் அவ்வாறுதான் தற்கொலை செய்து கொண்டார். அண்மையில் தமிழ் ஈழப் போராளிகளின் தலைவர் 11 பேரை இந்தியப் பட்டாளம் சிறை செய்து இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்தபோது ஈழப் போராளிகள் 11 பேரும் சயனைட்டை விழுங்கித் தற்கொலை செய்து கொண்டனர்.

19ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய இராணுவத்தில் அவமானத்திற்கு ஆளாகிய தளபதிகளும் போர் வீரர்களும் அவமானம் தாளாமல் தற்கொலைசெய்துகொண்டனர். அதற்காகப் பாதிக்கப் பெற்றுள்ளவர்களின் நண்பர்களே குண்டுகள் நிரப்பப்பெற்ற கைத்துப்பாக்கியை அவர்கள் முன்னே வைத்து விட்டுச் செல்வராம். காட்டோ (Cato) புருட்டஸ் (Brutus) காசியஸ் (Cassius) செனிகா (Seneca) ஆகியோரும் பிற ரோமானியர்களும் இது போன்றே தற்கொலை செய்து கொண்டனர். போரில் தோல்வியைத் தழுவும்போது எதிரியின் அம்பு அல்லது வாள் மார்பில் பாய்ந்து முதுகுப்புறம் வெளிப்பட்டதைப் பொறாத தமிழ் அரசர்கள் உயிர் வாழ விரும்பாமல் தற்கொலை செய்து கொண்டனர் (சேரமான் பெருஞ்சேரலாதன்-புறம்:65). ஆற்றின் நடுவே உள்ள மணல் திட்டில் வடக்கு நோக்கி அமர்ந்து உயிர் போகும்வரை உண்ணாமலும் நீர் பருகாமலும் தமிழ் அரசர்கள் உயிர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீத்தனர். இச்செயல் ''வடக்கு இருத்தல்'' என்று பெருமை யாகப் பழைய காலத்தில் பேசப்பெற்றது. வடக்கு இருத்தலைச் 'சல்லேகனை' என்று சமண சமயத்தினர் அழைத்தனர். சமண சமயம் முதுமை, நோய், அவமானம் ஆகியன வரும்பொழுது தற்கொலை செய்து கொள்ளுவதை மத தர்மமாக ஒப்புக் கொண்டது.

சல்லேகனை என்பதன் பொருள்: **உடலைத் தியாகம் செய்தல்** என்பதாகும். வடக்கிருத்தல் என்ற தமிழ் வழக்காறு சல்லேகனையின் நேர்ப் பொருள் பெயர்ப்பன்று.

பகவான் இடபதேவர், வடக்கே யுள்ள கயிலை மலை யிலும், நேமிநாதர், வடக்கே யுள்ள கிர்நாரிலும், மகாவீரர், (பீகாரில் உள்ள) பாவாபுரியிலும் வீடுபேறடைந்தனர். எனவே, தென்னிந்தியச் சமணர், சல்லேகனை இருக்கும்போது, புண்ணியப் புனித திசையான வடக்கு நோக்கி அமர்ந்து உயிர் நீத்தனர். எனவே, தமிழகத்தில் அஃது வடக்கிருத்தல் எனப் பெற்றது போலும்.

தாங்க முடியாத துன்பம், போக்க முடியாக் கொடிய நோய், தள்ளா முதுமை முதலியனவந்தால் உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என அனைத்தையும் நீக்கி உயிர் விடுதல் வேண்டும் (அருங்கலச்செப்பு 145). நீலகேசியும் (மொக்கல வாதச் சருக்கம் 55) நீலகேசி மேற்கோள் பாடலும் இப் பழக்கத்தைப் போற்றுகின்றன. சமண இயல் அறிஞர் சல்லேகனை, தற்கொலையினின்று வேறானது என்று வாதிப்பர் (அருங்கலச் செப்பு, அறவாணன் பதிப்பு, பக்கம் 111).

வடபுலத்து அரசனான சந்திரகுப்த மோரியன் (கி. மு. 322 — 298). தென்னாட்டிற்குத் தன் குருநாதர் பத்திர பாகு முனிவருடன் வந்தான் என்றும், சமயப் பணிகள் பலவாற்றி முனிவர் இறந்தார் என்றும், முனிவரைத் தொடர்ந்து சந்திர குப்தன் சல்லேகனை இருந்து உயிர் துறந்தான் என்றும் சமண மரபுகள் தெரிவிக்கின்றன.

சல்லேகனாவும் சங்க இலக்கியத்தில் காணப்படும் வடக்கு இருத்தலும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன என்று அறிஞர் கருதுவர்.[*2] கி.பி. 975இல் மாரசிம்மன் என்ற அரசனும், கி.பி. 982இல் இந்திரன் என்ற அரசனும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சல்லேகனை இருந்து உயிர் துறந்ததாகத் தென் இந்திய வரலாறு தெரிவிக்கிறது.

தொல்காப்பியக் காஞ்சித் திணை (77) மனைவி, கணவனுடன் தீக்குளித்து இறத்தலை ''நல்லோள் கணவனொடு நளி அழல் புகீஇ'' என்று மொழியும். திருவள்ளுவத்தில் (1151) பிரிவாற்றாமை அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள

''செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை

என்ற குறட்பாவும், தலைவன் பிரிவு பொறுக்கலாற்றாது தலைவி உயிர் துறந்து விடுவாள் என்ற குறிப்பைக் காட்டும்.

கணவன் இறந்த பிறகு அவனுடைய மனைவி உடன் இறப்பது இந்தியா முழுவதும் காணப்பெற்ற பழக்கமாகும். இப்பழக்கம் 'சதி' என்று வட இந்தியாவிலும் உடன்கட்டை ஏறுதல் என்று தமிழகத்திலும் குறிப்பிடப் பெற்றது. இறந்த கணவனின் உடலை விறகுக் கட்டைகளின் மேல் வைத்துத் தீ மூட்டும் பொழுது அவன் மனைவி உடன் பாய்ந்து தீயில் குதித்து இறப்பது பழக்கமாகிவிட்டது. வட இந்தியாவில் இது பெரும் பழக்கமாக இருந்தது. தமிழ் நாட்டில் அரசக் குடும்பத்தில் இப்பழக்கம் காணப்பட்டது. பாண்டிய அரசன் பூத பாண்டியன் இறந்த பின் அவனுடைய மனைவி பெருங் கோப்பெண்டு தீ வளர்த்து உடன்கட்டை ஏறியதைப் ''பல் சான்றீரே'' என்ற புறநானூற்றுப் பாடல்(246) காட்டுகிறது. இப்பழக்கம் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பும் மாறவில்லை என்பதைப் பிற்காலச் சோழர் வரலாறு[3] (கி.பி. 969) எடுத்துரைக்கிறது. சுந்தர சோழரின் மனைவி வானவன் மாதேவி சோழ மன்னன் இறந்த நிலையில் உடன்கட்டை ஏறி உயிர் துறந்தார் என்று சோழர் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

தமிழ் நாட்டில் அரசக் குடும்பத்தினர் மட்டுமின்றிப் பொது மக்களிடையேயும் இப்பழக்கம் பரவியிருந்தமையை ஒரு சில குறிப்புகள் உறுதிசெய்கின்றன. மானுடவியல் அறிஞர் குரோபர் (Kroaber) தான் எழுதிய Anthropology என்ற நூலில் இந்தியாவில் உடன்கட்டை ஏறும் பழக்கம் உயர் சாதியினரிடம் மட்டும் இருந்தது[4] என்பர். அரசக் குடும்பத்தில் மட்டும் இல்லாமல் மற்ற பெண்களும் உடன்கட்டை ஏறி உயிர் துறந்ததைத் தமிழ் நாட்டுச் சிற்றூர்களில் நேரில் கண்ட கத்தோலிக்கத் துறவியர் போப்பாண்டவருக்கு எழுதிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடிதங்களில் பதிவு செய்து வைத்துள்ளனர். 17—18ஆம் நூற்றாண்டில் ஏறத்தாழ 700 இடங்களில் பெண்டிர் உடன் கட்டை ஏறி உயிர் துறந்த நிகழ்ச்சியை அப்பே துப்வா தம் நூலில் குறிப்பிடுவர்[5].

இது சரியாக இருக்கலாம் என்பதைச் சங்க இலக்கியமும், மணிமேகலைக் காப்பியமும் உறுதிப்படுத்துகின்றன. குறுந்தொகைப் பாட்டு ஒன்றில் மனைவி ஒருத்தி குரங்குக் கதையை உருவகமாகச் சொல்லுகிறாள். கணவனாகிய ஆண் குரங்கு இறந்துவிட்டது. ஆண் குரங்கின் இறப்பைத் தாளாமல் பெண் குரங்கு சாகத் துடிக்கிறது. பக்கத்தில் இருக்கும் குட்டிக் குரங்கு தாய்க் குரங்கின் மனத்தை வாட்டுகிறது. முடிவில் தாய்க் குரங்கு, குட்டிக் குரங்கை வேறு குரங்கிடம் சேர்த்து விட்டு மலையில் ஏறிக் குதித்துத் தற்கொலை செய்து கொள்கிறது. இவ்வுருவகக் கதை தாயான போதும் தலைவி தலைவன் இழப்பிற்குப் பிறகு உயிர் தாளாமல் உடன் இறந்து விடுதல் உண்டு என்பதைக் காட்டுகிறது (குறுந்தொகை).[6] எனவே, அரசக் குடும்பத்தினர் மட்டுமின்றி ஏனையோரிடையேயும் உடன் கட்டை ஏறி உயிர் துறக்கும் பழக்கம் தமிழ் நாட்டில் இருந்து வந்துள்ளது என்று தெரிகிறது. மணிமேகலைக் காப்பியம் கணவனுக்குப் பிறகு மனைவி வாழும் கோலத்தை வகைப்படுத்திக் காட்டுகிற பொழுது நீரில் குளிப்பது போலத் தீயில் பாய்ந்து பெண்கள் இறப்பதைச் சுட்டிக் காட்டுகிறது (மணிமேகலை ஊரலர் 42—47).

கத்தோலிக்கக் கிருத்துவ சமயத்திலும் தற்கொலை பேரளவு அனுமதிக்கப்பட்டிருந்தது. சப்பானியரிடம் 'சிஞ்சு' (Shinju) என்ற தற்கொலைப் பழக்கம் காதலர்களிடம் இருந்தது. காதலில் தோல்வியுற்ற காதலர்கள் ஒருவரையொருவர் கயிற்றினால் பிணைத்துக்கொண்டு மிகுந்த ஆழம் உள்ள நீர் நிலையில் குதித்து உயிர் விடுவர். சப்பானில் உள்ள கெயிகன் என்ற அருவியில் குதித்து உயிர்விடுதலும் உண்டு (1903). அண்மையில் இரயிலுக்கு முன்பு காதலர் இருவரும் கயிற்றினால் பிணைத்து விழுந்து இறப்பது பழக்கமாக உள்ளது.

மேலனேஷியாவில் (Melanesia) தென்னைமரத்தின் மேல் ஏறிக்குதித்து உயிர்விடும் பழக்கம் இருந்தது. நஞ்சு அருந்தி இறப்பதும் அங்கே பழக்கமாக இருந்தது. வடகலிபோர்னியாவின் ஒருபகுதியில் வாழும் விண்டு (Wintu) என்ற இனமக்கள் தற்கொலை செய்து கொள்ளும் பழக்கத்தினர். சூதாடும் போது தோற்றுவிடும் விண்டு ஆண்கள் வீட்டிற்கு வரவும் தம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவியைச் சந்திக்கவும் அஞ்சுவர். மனைவி இடும் உணவை உண்ண மறுப்பர். மிக ஆழமான நீர்நிலைக்குச் சென்று குதிப்பர். உயிர் போகும்வரை கரைக்கு வருவதும் மீண்டும் தண்ணீரில் குதிப்பதும் முடிவில் இறப்பதும் அம்மக்களின் பழக்கம்.

எக்சிமோக்கள் என்ற துருவ மக்களிடமும் தற்கொலைப் பழக்கம் இருந்தது அங்கு வாழ்க்கை என்பது மிகத் துன்பமான தாகவும், கொடுமையானதாகவும், பெரும் போராட்டம் உடையதாகவும் உள்ளது. எனவே, அச்சூழல் அம்மக்களைத் தற்கொலைப் பழக்கத்திற்குத் தள்ளியது. கிழக்கு கிரின்லேண்டு என்ற துருவப் பகுதியில் அம்மாசாலிக் (Ammasalic) என்ற இடத்தில் வயதான முதிய பெண்கள் பனிப்படுகுழியில் தாமே விழுந்து உயிர் துறந்துவிடுவர். கிழவியாக இருந்து ஒரு வேலையையும் செய்யாமல் துன் புறுத்துகிறாயே என்று மருமகன் சொன்னதற்காகத் தற் கொலை செய்து கொண்ட குறிப்பு உள்ளது. அதே இடத்தில் ஓர் இளம்பெண், தன்னுடைய கணவன் தன்னுடைய தாயையே (மாமியாரை) தன் இரண்டாம் மனைவியாக ஆக்கிக் கொண்டான் என்பதை அறிந்து தற்கொலை செய்து கொண்டாள். ஒருவன் தன்னுடைய தங்கை தவறான வாழ்க்கையில் ஈடுபடுகிறாள் என்பதை அறிந்து தற்கொலை செய்து கொண்டான். இதுபோன்ற மானச் சிக்கல்கள் மட்டும் இல்லாமல் வறுமையும், பட்டினியும் எக்சிமோக்களின் தற் கொலைக்குக் காரணங்களாக உள்ளன.*8

ஓசியானியா, அம்மாசாலிக், மைக்ரோனேசியா, பாலினேசியா ஆகிய இடங்களில் தற்கொலை எண்ணிக்கை மிகுதியாக உள்ளது. ஆனால் ஆப்பிரிக்காவில் தற்கொலை எண்ணிக்கை மிக மிகக் குறைவாக உள்ளது. காரணம் ஆப்பிரிக்கர்கள் பொதுவாக வாழ்க்கையைச் சுமையாக எடுத்துக் கொள்வது இல்லை. ஆப்பிரிக்கர்கள் எதனையும் இலேசாக (Take it easy) எடுத்துக் கொள்ளுகின்ற மனப் போக்கினர், சமுதாயச் சிக்கல்கள் மிகுதியாக இல்லாதவர்கள், இயற்கையோடு ஒன்றி வாழ்கின்றவர்கள். இதுவே ஆப்பிரிக்கா வில் தற்கொலை எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் காரணமாக இருக்கிறது போலும்.

சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும், சோழன் கரிகால் வளவனுக்கும் நிகழ்ந்த போரில் சோழன் வென்றான். சேரன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோற்றான். சோழன் வீசி எறிந்த வேல் சேரனின் மார்பை ஊடுருவி முதுகுப் பக்கமாக வந்துவிட்டது. புறப்புண் பெற்றமைக்காக மிக வருந்தினான் சேரன். அதனைப் பொறுக்காமல் வடக்கிருந்து உயிர்விட்டான். இதனைக் கழாத்தலையாரின் புறநானூற்றுப் பாடல் (புறம்:65) குறிப்பிடுகிறது. சேரன் வடக்கிருந்து உயிர்விட்டது சோழன் போர் செய்து வெற்றி பெற்றதைவிடப் பெருமையுடையது என்று பாராட்டுகிறார் வெண்ணிக்குயத்தியார் என்ற பெண் புலவர். மன்னனாக இருந்து உயிர்விட்டதைக் கோழைத்தனம் என்றோ தற்கொலை என்றோ குறிப்பிடாமல் புகழ் மிக்க செயல் என்கிறார்.

> ''மிகப் புகழ் எய்திப்
> புறப்புண் நாணி வடக்கிருந் தோனே''

என்பன புலவர் தம் மொழிகள் (புறநானூறு 66). தற்கொலை செய்து இறந்த பிறகு மன்னன் எய்தியது ''மிகப் புகழ் உலகம்'' என்று புலவர் குறிப்பிடுவது அக்காலத்தில் தற்கொலையைப் பற்றித் தமிழர் மனத்தில் இருந்த மதிப்பீட்டைக் காட்டுகிறது. கோப்பெருஞ்சோழன் தன்னுடைய பிள்ளைகளின் செயல் பொறுக்காமல் வருந்தினான். மானம் பொறாது வடக்கிருந்து உயிர் நீத்தான். பிசிராந்தையார் வடக்கு இருத்தலைப் பாராட்டிக் கோப்பெருஞ்சோழனை உயர்த்திப் பாடுகிறார் (புறம்:191.216). கோப்பெரும் சோழன் வடக்கிருந்து உயிர்நீத்தபோது பாடியதும், அவரைக் கண்டு வருந்திய பிசிராந்தையார் முதலானோர் பாடியனவும் (புறம்:191,124 முதல் 223 வரை) புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

நண்பனின் இறப்புத் துன்பம் பொறுக்காமலும் சிலர் தற்கொலை செய்துகொள்ளுதல் உண்டு. சங்ககாலப் புலவருள் தலைமையானவர் கபிலர். பாரி மன்னர் புலவருடைய நெருங்கிய நண்பர். பாரி மூவேந்தர்களால் கொல்லப்பட்டார். நண்பரின் இறப்பைப் பொறுக்க முடியாத கபிலர் வடக்கிருந்து உயிர் துறந்தார் (புறம்:236). துறவியாகிய கவுந்திஅடிகள் சேரன் செங்குட்டுவன் காலத்தில் கோவலன், பாண்டியன், அவன் தேவி, கண்ணகி ஆகியோர் இறப்புச் செய்தி கேட்டு உயிர் வாழ விரும்பாமல் வடக்கிருந்து உயிர் துறந்தார் என்று சிலப்பதிகாரம் மொழிகிறது. இது போன்று தற்கொலை செய்து கொள்ளுதலை ஒரு மரபாகத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவள்ளுவரும் உடன்பட்டாரோ என்று கருத இடம் இருக்கிறது. மானம் என்ற அதிகாரத்தில்,

> "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
> உயிர் நீப்பர் மானம் வரின்"

என்ற திருக்குறள் (969) மூலமாக மானம் அழிய நேர்ந்தால் உயிரை விட்டுவிடுதலைத் திருவள்ளுவர் சிறப்பாகப் போற்றுவது தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கருத்து பிற்காலத்திலும் போற்றப்பட்டதைப் பதினெண்கீழ்க்கணக்கு நூலில் இடம்பெற்றுள்ள கருத்துகள் உறுதி செய்கின்றன. நாலடியாரில் மானம் என்ற அதிகாரம் (30) இடம் பெற்றுள்ளது. இனியவை நாற்பது என்ற கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலில் மானம் இழந்தபின் வாழாமை முன் இனிதே (பாடல். 13) என்ற கருத்துக் கூறப்பெற்றுள்ளது. சிறுபஞ்சமூலம் (71), "வடக்கிருந்தாரை" மன்னவராய் மதிக்க வேண்டும் என்று மொழிகிறது. 11ஆம் நூற்றாண்டில் சுந்தர சோழனின் மனைவி வானவன் மாதேவி உடன்கட்டை ஏறி இறந்ததைப் பெருமையாக அக்காலக் கல்வெட்டு எடுத்து மொழிகிறது.

கல்வெட்டுகளில் 'நவகண்டம் கொடுத்தல்' என்ற குறிப்புப் பரக்கப் பேசப்படுகிறது. வீரர்கள் போரில் தான் சார்ந்த மன்னன்படை வெற்றி பெறுவதற்காகத் தேவியிடம் வேண்டிக் கொள்வர். வெற்றி பெற்றால் தானே தன் தலையை வெட்டிப் பலியாகக் கொடுப்பேன் என்று வாக்களிப்பதும் வெற்றி பெற்றபின் அவ்வாறே செய்வதும் நவகண்டம் கொடுத்தல் எனப்பெறும். அப்பழக்கம் தென்இந்தியாவில் இருந்த ஒரு பொதுப்பழக்கம் என்று கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. இவ்வாறு கொடுக்கும் பழக்கம் உண்டு என்பதை மாமல்லபுரம் போன்ற இடங்களில் காணப்பெறும் தன் தலையைத் தானே வெட்டி அளிக்கும் சிற்பங்களும் உறுதி செய்கின்றன. இவற்றுடன் கூடத் தமிழ் இலக்கியமும் இப்பழக்கத்தைப் பதிவு செய்து வைத்துள்ளது. சான்றாகக் கலிங்கத்துப் பரணியில் வரும் குறிப்பு எண்ணத்தக்கது. "அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப் பராலோ" என்ற பாடலடி மேல் கருத்தை விளக்கும். சிற்றூர்ப் புறங்களில் தற்கொலை முயற்சி தலைமுறை தலைமுறையாக இருந்து வந்ததைச் சில பழக்கங்கள் காட்டுகின்றன. அரளி விதையை அரைத்துத் தின்று இறப்பதும், ஊமத்தன் காயைஅரைத்துத் தின்று இறப்பதும் சிற்றூர்ப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புழக்கங்கள். ஏதேனும் குடும்பத்தில் சண்டை வருகிறபோது "நான் அரளிவிதையை அரைத்துத் தின்று செத்துவிடுவேன்" என்று அச்சுறுத்துவதும், "ஊமத்தன்காயை அரைத்துத் தின்று செத்துவிடுவேன்" என்று அச்சுறுத்துவதும் பழக்கங்களாக உள்ளன. இவைதொடர்ந்து நிகழ்ந்தமையாலேயே தமிழ் மக்களிடையே பேசப்பட்டன. இத்தற்கொலைப் பேச்சுகளும், முயற்சிகளும் நாட்டுப்புற வழக்கங்கள் என்று கொள்ளுவதில் தவறு இல்லை.

தலைமுறை தலைமுறையாகத் தற்கொலை செய்து கொள்ளும் பழக்கம் தமிழரிடையே ஒப்புக் கொள்ளப் பட்டமையால்தான் அப்பழக்கம் தற்காலத்திலும் தியாகப் பண்பாக தொடர்ந்து போற்றப்படுகிறது. கிறித்துவம் தத்துவ அடிப்படையில் தற்கொலையை ஒப்புக்கொள்ளவில்லை. தூய அகஸ்டின் தற்கொலையை மிகப் பெரிய பாவம் என்று குறிப்பிடுகிறார். இசுலாம் தற்கொலையைக் கடுமையாகக் கண்டிக்கிறது. கிறித்துவுக்குப் பிற்பட்ட யூத சமயம் (Judaism) தற்கொலையைக் கண்டிக்கிறது. பைபிள் பழைய ஏற்பாட்டில் தற்கொலையைப் பற்றி நான்கு குறிப்புகள் உள்ளன. இந்தியாவில் சமண சமயமும், பௌத்த சமயமும் தற்கொலையை மதநெறியாக ஒப்புக்கொண்டுள்ளன. மேலே சொல்லப்பட்ட இலக்கியம், கல்வெட்டு, நாட்டுப்புறச் சான்றுகளை அடிப்படையாக வைத்து நோக்குகிறபோது தமிழரிடையே தற்கொலை பாவமாகக் கருதப் பெறவில்லை என்று தெரிகிறது.

தற்கொலை என்பது ஓர் உளநோய் விளைவு; உணர்ச்சி வசப்பட்ட கணநேர முடிவு; வாழ்க்கைச் சிக்கலை எதிர்த்து நிற்கும் திறமையின்மையின் வெளிப்பாடு. இதனைப் பாமரத் தமிழ் மக்கள் போதிய அளவு உணரவில்லை. அன்றியும் தமிழ்நாட்டில் உள்ள அரசியல் சக்திகள் தமிழர்களிடம் உள்ள இந்தப் பலகீனத்தைப் பெருக்கி வருகின்றன. தற்கொலை அரசியல் சார்பு பெறுகிறபோது தியாகங்களாகப் போற்றப் படுகிறது. இந்நிலை தமிழர் கோழைக்குண மக்கள் என்று மற்றவர் கணிக்க வைக்கும் நிலையைத் தோற்றுவித்து உள்ளது. இதன் கொடுமுடியாக ஒரு சான்றைக் குறிப்பிடலாம்.

"1984இல் இந்திரா கொலை செய்யப்பட்டார். அந்த அவலத்தைத் தமிழகம்தவிர ஏனைய இந்திய மாநில மக்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புலப்படுத்திய முறைக்கும், தமிழ் நாட்டினர் புலப்படுத்திய முறைக்கும் வேறுபாடு உண்டு. இந்திரா இறப்பைத் தாளாமல் நான்கு தமிழர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனர். மூன்று பேர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டனர். ஒருவர் நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டார். ஏழு பேர் நெஞ்சுவலியில் இறந்து போயினர். ஒரிசாவில் உள்ள கட்டாக்கில் ஒருவர் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார். அவரும் தமிழரே. மலேசியாவில் ஒரு தேநீர்க் கடைக்காரர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவரும் தமிழரே. இந்திரா பிறந்த ஊரிலோ, அவர் குடும்பத்தின் பிறந்தகமான காசுமீரிலோ அவரைப் பழைய தேர்தலில் எம். பி. ஆகத் தேர்ந்து எடுத்த ஆந்திரத்திலோ, அவர்தம் கட்சி அன்று ஆட்சியில் இருந்த கேரளத்திலோ வேறு பிற மாநிலங்களிலோ யாரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை''*9

தமிழ்நாட்டின் முதல்வர் உடல் நலக் குறைவாக இருக்கிறார் என்ற வதந்தியைக் கேட்ட திரு. இராசன் என்பவர் சென்னை ஆவடி இரயில் பாதையில் துக்கம் தாளாமல் மனம் முறிந்து தற்கொலை செய்து கொண்டார். (தினமணி 28. 6. 87) ஒரு தனியார் நிறுவனத்தில் தற்காலிக வேலை செய்து வந்த திரு. இராசனுக்கு மனைவி, மூன்று குழந்தைகள் உள்ளனர். தற்கொலை பற்றி ஆராய்ந்த ஆங்கில ஏடு (Aside) சென்னை நகரில்தான் இந்தியாவிலேயே மிகுதியான தற்கொலைகள் நிகழுகின்றன என்று புள்ளி விவரத்துடன் நிறுவுகிறது. இப்படி அரசியல் தலைவர்கள் உடல் நோயுற்ற போதும், இறந்தபோதும் தமிழகத்தில் தற்கொலைப் பட்டியல் நீளுகிறது; நீண்டுகொண்டே செல்லுகிறது.

அடிக்குறிப்புகள்

1. Raja Hutheesing - The Great Peace, P. 175
2. க. ப. அறவாணன், சைனரின் தமிழிலக்கண நன்கொடை, ப. 33—35
3. கி. பி. 969 சுந்தர சோழனின் முதல் மகனாகிய ஆதித்த கரிகாலன் அந்தண உயர் அலுவலர்களால் கொல்லப் பெற்றான் (தி. வை. ச. பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு. 79)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'செந்திரு மடந்தைமன் சீராஜ ராஜன்
இந்திரசமானன் இராஜசர்வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந்
தூண்டா விளக்கு... ... ...
......மணிமுடி வளவன்
சுந்தரசோழன் மந்தரதாரன்
திருப்பய முயங்குந்தேவி'.

4. Kroeber, Anthropology "However only High Caste Practices Suttee" P. 614

5. க. ப. அறவாணன், தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்—ப. 252.

6. ''கருங்கண் தாக்கலை பெரும்பிறிது ற்றெனக்
கைம்மை உய்யாக்காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குயர் அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்''
தோழி இரவுக் குறிமறுத்தது—குறுந்தொகை 6

7. காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர்; ஈயா ராயின்—
நன்நீர்ப்—பொய்கையின் நளிஎரி புகுவர்
நளிஎரி புகாஅ ராயின் அன்ப ரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம்படுவர்
மணிமேகலை: 'ஊரலர் 42—47

8 John Lewis. "Anthropology" P-141 "Yet they allow many acts which we consider heinous. Certain forms of homicide are socially justified and legally privileged. The killing of infants, invadlis, and the aged, and also suicide fall into this category. The necessity of killing old and sick members of society very easily arises with a

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

limited food supply, for those ailing persons might fatally cripple the tribe in its often desperate struggle against adverse conditions. Under these circumstances killing becomes a moral act. We also know that they lend their wives to visitors as a necessary act of hospitality, without any thought of this being a departure from morality.

9 க. ப. அறவாணன், தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்—பக்கம் 1.

தற்கொலைக் கலாச்சாரம்

1. திருவள்ளுவர் தாமே உயிர் துறத்தலை ஏற்கிறார் என்பதற்குப் பிறிதொரு சான்று :

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர் (குறள் : 1017)

2. மற்றும் தற்கொலை செய்துகொள்ள விழைவோர் மலைமீது ஏறி உயிர் துறப்பர் என்ற செய்தியைச் சங்க காலம் வரைபாய்தல் என்று குறிப்பிடுகிறது.

வயங்கு வெயில் ஞெமியப் பாஅன் மின்னு வசிபு
மயங்கு துளி பொழிந்த பானாட் கல்குல்
ஆறாகி காமம் அடுஉ
நின்று கலைய இறுவரை வீழ்நரின் நடுங்கி
.................தேம்புதி சொல்லோ நெஞ்சும்

அகநானூறு : 322

(தலைவன் தன் நெஞ்சுக்கு சொல்வதாக அமைந்த பாடல் இது)

3. தற்கொலை முயற்சியைச் சங்ககாலத் தமிழர் மேற்கொண்டனர் என்பதை மடல் ஏறுதல் பற்றிய குறிப்புகள் உணர்த்துகின்றன.

மேற்கண்ட குறிப்பு இடம் பெற்றுள்ள சங்ககாலப் பாக்கள்:குறுந்தொகை 17, 18, 173, நற்றிணை 152, கலித்தொகை 58, 138—141,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. நாட்டுப்புறப் பாடல்களும், நாட்டுப்புறக் கதைகளும் பாடல்களும் தமிழரிடையே தற்கொலை செய்து கொள்ளும் வழக்கம் இருந்ததை உறுதி செய்கின்றன:

   1. நல்லதங்காள் கதை — வறுமையில் வாடும் நல்லதங்காள் தன் குழ்ந்தைகளைக் கேணியில் தள்ளிவிட்டுத் தானும் குதித்து இறந்து விடுகிறாள்.

   2. சிற்றூர்ப் புறங்களில் அரளிக் கொட்டையைத் தின்று இறந்துவிடுதல் உண்டு என்பதை அரளிக் கொட்டை தின்ற கதைப் பாட்டு என்ற நாட்டுப்புறக் கதைப் பாடல் தெளிவுபடுத்துகிறது.

   3. மதுரைவீரன் இறந்த பிறகு அவனுடைய மனைவியர் தாமே உயிர் துறந்தனர், என்பதை மதுரை வீரன் மனைவியர் மாண்ட கதைப் பாடல் உணர்த்துகிறது.

   4. அம்பிகாபதி — அமராவதி கதைப்பாட்டு தற்கொலை செய்தி நிகழ்ந்ததை உறுதிப்படுத்துகிறது.

   5. முத்துப்பட்டன் இறந்த பின்பு அவன் மனைவியர் சக்குலியப் பெண்கள் உடன்கட்டை ஏறி உயிர் துறந்தனித முத்துப்பட்டன் கதை என்ற கதைப்பாடல் தெளிவுபடுத்துகிறது.

      'சிங்கதவன் ராசாவே தீப்பாயப் போறோமே
      உத்தரவுதான் வேணும் உடன்கட்டை ஏறுதற்கே'

5. கல்வெட்டுகளும் உடன்கட்டை ஏறி இறத்தல் உண்டு என்பதைத் தெரிவிக்கின்றன. அரச குடும்பத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கத்தைச் சுந்தர சோழன் மனைவி வானவன் மகாதேவி கணவனுடன் உடன்கட்டை ஏறியதைத் திருக்கோயிலூர்க் கல்வெட்டு தெரிவிக்கிறது. சோழன் காலத்தைச் சேர்ந்த பிரம்மதேசம் கல்வெட்டும், எலவான் ஆசூர் கல்வெட்டும் காட்டுகின்றன. அரச குடும்பத்தினர் அல்லாமல் ஏனையோரும் உடன்கட்டை ஏறி உயிர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறத்தலைக் கி.பி. 1188 குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு தெளிவுபடுத்துகிறது.

''கூத்தாடும் தொழில் வல்ல தேவரான் பிரிதிகங்கர்
இறந்தார்
பாடும் தொழில் வல்ல பெண் உடன் பள்ளி கொண்டு
இறந்தாள்

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 10ஆவது வோமனான பிரிதி கங்கனேன் எங்களைய்யர் கூத்தாடும் தேவரான பிருதி கங்கர் உடன் பள்ளி பாடும் பெண்டிருக்கும் மனக்கேதம் தீர்த்ததக்கும் சந்தர்மமாக 16 வாண் கோயில் விட்ட நிலம் வேலியும் இவர்கள் வங்கிசம் உள்ளதனையும் செல்வதாக விட்ட நிலத்துக்கு நம் வங்கி சத்து இருக்கு இலங்கனம் சொல்லுவார் மதுராந்த வேளாண் கால் கழுவின நீரும் குடிச்சு கலைச் சோறும் தின்பார்கெங்கையிடை குமரியிடைச் செய்தார் செய்த பாவங்கள் கொள்வார்.

6. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வருகை தந்த மார்கோபோலோ உடன்கட்டை ஏறி உயிர் துறந்தனர் என்பதைக் குறிப்பிடுகிறார்.

7. திருமலை நாயக்கர் (கி.பி. 17ஆம் நூற்றாண்டு) இறந்தபொழுது அவர் மனைவியும் உடன்கட்டை ஏறினாள். நாயக்கர் காலத்தில் உடன்கட்டை ஏறிய பெண்களுக்குக் கோயில் எழுப்பப்பெற்று அக்கோயில்கள் தீப்பாய்ந்த அம்மாள் கோயில்கள் என்று குறிக்கப் பட்டன.

8. கி.பி. 1736இல் மதுரையை ஆண்ட மீனாட்சி நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டாள். சந்தா சாகிப் வஞ்சகத்துடன் மீனாட்சி அரசியை ஏமாற்றி திருச்சிக் கோட்டையில் சிறைப் படுத்தியபோது இந் நிகழ்ச்சி நடந்தது.

9. கதைப் பாடல்களில் உடன்கட்டை ஏறுதல் கருப்ப தேவன் கதை, பெரியண்ணன் பெரியசாமி கதை, வண்ணான் கதை, ராசா மகன் கதை, முத்தருளி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதை ஆகியவற்றுள் இடம் பெற்றுள்ளது. கருப்ப தேவன் கதையில் கருப்பதேவன் பந்தயத்திற்கு அழைக்கின்ற கண்ணிமாடி சமீன்தாரின் இளைய மனைவி சிதைக்குத் தீ மூட்டி தானும் உடன்கட்டை ஏறுகிறாள். பெரியண்ணன் பெரியசாமி கதையில் சின்னசாமி இறந்துவிட அவனுடைய அண்ணன் மனைவி தீ மூட்டி அவனுடன் உடன்கட்டை ஏறு கிறாள். வண்ணான் கதையில் வண்ணானுடன் ராசா மகள் உடன்கட்டை ஏறியதையும், ராசா மகள் கதையில் ராசா மகனுடன் அவன் காதலி பறைப் பெண் உடன்கட்டை ஏறியதையும் காணலாம். முத்தருளி கதையில் உடன்கட்டை ஏறுபவர் ஆணாகக் காணப்படுகிறார். முத்தருளி என்ற பள்ளர்குலப் பெண் இறந்தபொழுது அவளுடைய காதலனான மறவன் உடன்கட்டை ஏறுகிறான். பட்டத்து அரசி அல்லது மனைவியர் உடன்கட்டை ஏறுதலே பொது வழக்கு. ஆனால், கருப்பதேவன் கதையில் சமீன்தாரின் இளைய மனைவி உடன் கட்டை ஏறி இறக்கிறாள். பெரியண்ணன் பெரிய சாமி கதையில் மனைவி உடன்கட்டை ஏறியதாகக் குறிப்பு உள்ளது. வண்ணான் கதையில் ராசா மகளும் ராசா மகன் கதையில் பறையன் பெண்ணும் உடன்கட்டை ஏறியதாக உள்ளமைப்பு தாண்டித் திருமணம் செய்ததைக் காட்டுகிறது.

பார்க்க : கதைப்பாடல்களில் உடன்கட்டை ஏறுதல், ஆய்வுக் கோவை, தொகுப்பு-3, 1987, பக்கம் 110.

ஆறு. ராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், அணியகம், 1979 பக்கம் 98.

10. சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள அன்றில் பற்றிய குறிப்பு எண்ணத்தக்கது. பெண்ணோ ஆணோ இறந்துவிட்டால் இணை அன்றில் பறவை இறந்துவிடும் என்ற குறிப்பு உள்ளது.

11. 24. 12. 1987இல் தமிழ்நாடு முதல்அமைச்சர் எம்.ஜி.ஆர் இறந்ததைக் கேட்டுத் தற்கொலை செய்து கொண்டு இறந்த செய்தி கருதத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயர்	வயது	ஊர்	ரிமார்க்ஸ்
1. ராசு உடையார்	25	உளுந்தூர் பேட்டை	பாலிடால் விஷம் அருந்தி
2. ராசா	21	அம்மையகரம் தென்.ஆற். மாவட்டம்	தீக்குளித்தல்
3. பெயர் தெரியவில்லை	40	சிதம்பரம்	அதிர்ச்சி
4. பெயர் தெரியவில்லை	25	திண்டிவனம்	அதிர்ச்சி
5. பெயர் தெரியவில்லை	—	உளுந்தூர் பேட்டை	விஷம்
6. ராஜாஜி	—	அம்மையகரம், தெ.ஆற்.மா	தீக்குளிப்பு
7. பெரியசாமி	—	கீழ்நாரையூர்	மாரடைப்பு
8. இராமலிங்கம்	—	மன்தாரங் குப்பம், நெய்வேலி	அதிர்ச்சி
9. பெயர் தெரியவில்லை	17	மயிலாடுதுறை	தீக்குளிப்பு
10. சந்திரன்	25	சின்னசேலம், தெ.ஆ.மா	தீக்குளிப்பு
11. இராமலிங்கம்	33	கிள்ளி தெ.ஆ.மா	தீக்குளிப்பு
12. ராமசாமி	45	சிற்றூர் (கரூர்) திருச்சி	விஷம்
13. கருப்பண்ணன்	30	கரூர் (திருச்சி)	தூக்கு
14 த்னலட்சுமி	18	மவுஞ்சுபுரம், திண்டுக்கல்	தீக்குளிப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	பெயர்	வயது	ஊர்	ரிமார்க்ஸ்
15.	ராமசாமி	48	தொக்கப்பட்டு (திருச்சி)	விஷம்
16.	செல்லப்பா	35	கிருஷ்ணாபுரம் கடையநல்லூர் திருநெல்வேலி	மாரடைப்பு
17.	கந்தசாமி		சேலம்	விஷம்
18.	ராஜேந்திரன்	22	ஆதம்பாக்கம்	தூக்கு
19.	ராஜம்	45	மாத்தூர், திருச்சி	தீக்குளித்தல்
20.	வெங்கடாசலம்	19	ஆண்டிமடம்	
21.	சந்திரன்	25	சின்னசேலம், தெ.ஆ.மா	தீக்குளிப்பு
22.	ராஜேந்திரம்	28	சாரம் திண்டிவனம்	மிகுதியான சாராயம்
23.	முனிசாமி	21	சங்கராம்பாளையம், வளவனூர் தெ.ஆ.மா.	தீக்குளிப்பு
24.	நடராசன்	49	மீனவர், கடலூர் தெ.ஆ.மா	தீக்குளிப்பு
25.	சிவப்பிரகாசம்	41	சிறுவத்தூர் பண்ருட்டி	தீக்குளிப்பு
26.	முத்தையா	40	காட்டேரிசெட்டியார் தோட்டம் கோயம்புத்தூர்	தீக்குளிப்பு

தீக்குளிப்பு முயற்சி

கடலூர் 1   வளவனூர் 1   புலியூர் 1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீக்குளிப்பு	—	13—50%	ஆண் — 20
		-	ஆண் பெண் தெரியவில்லை — 4
விஷம்	—	5	பெண்— 2
அதிர்ச்சி	—	3	ஆண் வயது 19 முதல் 49
மாரடைப்பு	—	3	வயது வரை பெண் வயது 18
தூக்கு	—	2	வயது மற்றும் 45 வயது தெரிந்து
சாராயம்	—	1	ஆணா பெண்ணா தெரியாமல்:
		———	17 முதல் 40 வரை.
		26	4

திருச்சி 4 தென் ஆற்காடு மாவட்டம் 57.7% வட ஆற்காடு மாவட்டம் 1 கோவை 1 சென்னை 1 திண்டுக்கல் 1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

12

தலைமை வழிபாடு

தமிழகத்திலிருந்து சோவியத் ஒன்றியம் சென்றிருந்த ஒருவரைச் சோவியத் செய்தியாளர்கள் சில கேள்விகளைக் கேட்டனராம். அவற்றுள் ஒன்று : ''உங்கள் மொழி இலக்கியத்தில் மிகச் சிறந்தது எது?'' அவ்வினாவிற்கு விடையிறுத்த தமிழ் நாட்டுக்காரர் திருவள்ளுவர் எழுதிய 'திருக்குறள்' என்று விடை அளித்தாராம். அவருடைய காலம் என்ன என்று மேலும் செய்தியாளர்கள் வினவினர்.

''கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கு முன்'' என்று விடையிறுத்தார் தமிழகப் பயணி.

''கடந்த 1800 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று செய்தியாளர்கள் தொடுத்த அடுத்த வினாவிற்கு விடையிறுக்க முடியாமல் தமிழ்நாட்டுக்காரர் திணறியதாக ஒரு செய்தி. இதனுடன் இன்னொரு செய்தியையும் இங்கே சேர்த்து நினைத்தல் வேண்டும். தமிழர்கள் வேறு எந்த இந்திய மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தலைமை வழிபாட்டினர் என்ற கணிப்புப் பலராலும் பேசப் பெறுகிறது; எழுதப் பெறுகிறது. திரைப்படத் துறையில், அரசியல் துறையில், இன்னபிற அனைத்துத் துறைகளிலும் தமிழர் தலைமை வழிபாட்டுப் பழக்கத்தினர் என்ற கருத்து அடிக்கடி சொல்லப் பெறுகிறது. இக்கணிப்பு மிகச் சரியானதாக இருக்கும் என்பதை அண்மைக் காலத்தில் நிகழ்ந்த ஒரு சில நிகழ்ச்சிகள நமக்கு மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

1. தலைமையமைச்சராக இருந்த இந்திரா காந்தி அக்டோபர் 31, 1984இல் இறந்தபோது அவர் இறப்பைத் தாளாத இந்தியருள் தமிழர் மட்டுமே தற்கொலை செய்து கொண்டனர். சான்றாக, நான்கு தமிழர்கள் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டனர்; மூன்று பேர் தூக்கிட்டுத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தற்கொலை செய்து கொண்டனர்; ஒருவர் நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டார்; ஏழு பேர் நெஞ்சதிர்ச்சியால் இறந்து போயினர். ஒரிசாவில் உள்ள கட்டாக்கில் ஒருவர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார், அவரும் தமிழரே. மலேசியாவில் ஒரு தேநீர்க் கடைக்காரர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார், அவரும் தமிழரே. இந்திரா பிறந்த உத்தரப்பிரதேச மாநிலத்திலோ, அவர் குடும்பம் வளர்ந்து தழைத்த காசுமீர் மாநிலத்திலோ, அவர் கட்சி ஆட்சியிலிருந்த வேறு எந்த மாநிலத்திலோ யாரும் தற்கொலை செய்து கொண்டு விடவில்லை; நெஞ்சதிர்ச்சியால் இறந்துவிடவும் இல்லை.

2. தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த திரு எம். ஜி. ஆர், 1987, டிசம்பர் 24இல் இறந்தார்; சாகும்முன் சில ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டிருந்தார்; அதனால் பேச இயலாதும் இருந்தார்; பின்பே இறந்தார். இறப்பிற்குப் பின், தமிழகம் எங்கும் ஏறத்தாழ முப்பது பேருக்கு மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டனர் என்பது செய்தி.

> ''திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது பதினேழு பேர் தற்கொலை செய்தும், நெஞ்சதிர்ச்சி கொண்டும் இறந்தனர். பத்தொன்பது பேர் தீக்குளிப்பு முயற்சியை மேற்கொண்டு தடுக்கப் பெற்றனர். திருமதி. இந்திராகாந்தி இறந்தபோது இருபது பேர் தற்கொலை செய்து கொண்டதுடன், இருபத்தியொரு பேர் தற்கொலைக்கு முயன்று தடுக்கப் பெற்றனர் (இந்து 16.11.84).
>
> தில்லி மைய அரசு நடவடிக்கையால் ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என். டி. இராமாராவ் பதவியை இடைக்காலத்திற்கு இழக்க நேர்ந்தது. அப்போது, ஆந்திராவில் யாரும் தற்கொலை செய்து கொள்ளவும் இல்லை. என். டி. இராமாராவ் பதவி இழப்பைத் தாளாத ஒரு தமிழர், தமிழகத்தில் தற்கொலை செய்து கொண்டார்''.

3. வேறு எம்மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில்தான்நடிகர் பெயரில் இரசிகர் மன்றங்கள் ஆயிரக்கணக்கில் இயங்குகின்றன. புதுவை ரஜினிகாந்த் ரசிகர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்றத்தினர், ரஜினிகாந்த் தன் மனைவியுடன் சண்டையிட்டுப் பிரிந்திருந்த காலத்தில் அவர்கள் இருவரும் பேசிக் கலக்க வேண்டும் என்பதற்காக உண்ணா விரதமே இருந்தனர்.

மேற்கண்டவை தலைமை வழிபாட்டின் வெளிப்பாடுகள். இப்படித் தமிழர் ஏனைய இன மக்களைவிடக் கூடுதலாகத் தலைமை வழிபாட்டினராக இருப்பது, இருப்பதற்குரிய காரணம், அதனை நீக்கும் வழிமுறை ஆகியவற்றைக் கண்டறிவதே கட்டுரையின் நோக்கம்.

தமிழர்கள் பின்பற்றும் மதங்களையும், கட்சிகளையும் உற்று நோக்கினால் தலைமை வழிபாட்டின் இன்னொரு புறக் கூறும் புலப்படும். தமிழர்களிடையே வழங்கும் கட்சிகள் அனைத்தும் தனி மனிதச் சார்பினவாகவே இருக்கும். அவை தத்துவச் சார்புடையனவாக இரா. எம்.ஜி. ஆர்கட்சி இந்திரா கட்சி, காந்தி கட்சி, அண்ணா கட்சி, பெரியார் கட்சி என்றதனி மனித அடிப்படையில் கட்சிகளைக் குறிப்பதும் பின்பற்றுவதும் வெளிப்படை. இதனைப் போலவே தமிழர்கள் பின்பற்றிய/ பின்பற்றும் மதங்கள் கூடத் தத்துவ அடிப்படையிலான மதங்கள் என்பதைவிடத் தனி மனித அடிப்படையிலான மதங்கள் என்று குறிப்பதே மிகச் சரியாக இருக்கும். சான்று: புத்த மதம், ஜைன மதம், ஏசு மதம், நபி மதம், சாக்தம், கௌமாரம், சிவ மதம், விஷ்ணு மதம். தத்துவத்தரிசனங்கள் அல்லது கட்சிக் கோட்பாடுகள் என்பவற்றைவிடத் தனி மனித ஈடுபாடு அதனால் தோன்றும் வழிபாடு தமிழரிடம் பல்கி இருக்கின்ற தென்பதற்கு மேலே உள்ளவை சான்றுகள். அனைத்துலகப் பெருமை பெற்ற தத்துவம் சார்ந்த இபக் கங்கள் கூடத் தமிழ் மண்ணிற்கு வருகிறபோது தனி மனிதக் கட்சிகளாகக் குறுகிவிடுவதைக் காணலாம். பொதுவுடைமைக் கட்சி தமிழர்களைப் பொறுத்தவரை லெனினைச் சார்ந்த இயக்கமாகவும், மார்க்சுசைச் சார்ந்த இயக்கமாகவும் அல்லது ருசியாவைச் சார்ந்த இயக்கமாகவும், சீனாவைச் சார்ந்த இயக்கமாகவும் இயங்குவதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

தலைமை வழிபாட்டுக்குக் காரணங்கள் எவை என்பது ஆராயத் தக்கது. அனைத்து வழிபாட்டுக்கும் அடிப்படை அச்சமும், அன்புமாகும் என்பது மானிடவியல் அறிஞர் பலர் தம் கருத்து. இவற்றுள் அச்சமே முதலாவது காரணமாகவும், தலைமைக் காரணமாகவும் இருந்தது. பல மதங்களின் தோற்றத்திற்குக் காரணம் அச்சமே*[1]. அச்சத்திற்குப் பின்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மானுடவினம் மேலும் வளர்ந்த நிலையில் இணைந்தது அல்லது இணைத்துக் கொள்ளப்பட்டது அன்பு என்று கருதலாம்.

தலைமை வழிபாட்டிற்கு மேற்கண்ட இரண்டு காரணங்கள் (அச்சம், அன்பு என்ற இரண்டு) மட்டுமல்லாமல், கண்மூடித்தனம், தன்னம்பிக்கையின்மை ஆகியனவும் காரணமாக அமைந்துள்ளன. தலைமை வழிபாட்டிற்கு மூல ஊற்றாக இருப்பது தாழ்வுணர்ச்சியாகும் (Inferiority complex). உலகத்தோடு ஒத்துச் செல்லும் முயற்சிகளால் கொண்டுள்ள தேவைக்குக் குறைவான உணர்ச்சி, தன் திறமைகளில் நம்பிக்கைக் குறைதல், தன்னைப் பற்றியும், தன் ஆற்றலைப் பற்றியும் பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போதெல்லாம் தன்னுடைய திறமை குறைவானது என்று முடிவு செய்து கொள்ளுதல், தாழ்வு மனப்பாங்கு என்று உளவியல் அறிஞர்கள் வரையறுப்பர். இத்தாழ்வு மனப்பான்மையே மனமுறிவு அல்லது விரக்திக்குக் (Frustration) காரணமாகிறது. தமிழ்ச் சமூகத்தில் மன முறிவுகள் மிகுதியாகப் பெருகி வளர்வதற்குப் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. மனிதனுடைய முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடிய அரசியல் சட்டங்கள் ஒரு பக்கம்; அவனுடைய உணர்ச்சிகளைத் தடைப்படுத்தும் சமூகக் கட்டுப்பாடுகள் மறுபக்கம்; காதல் திருமணம் முதலியவற்றால் நேருகின்ற இடையூறுகள் இன்னொரு பக்கம்; வாணிபத்தில் நேரும் கடும் போட்டிகள் பிறிதொரு பக்கம்; தொழில் செய்யும் இடங்களில் நிகழ்கின்ற பூசல்களும், அவற்றைத் தொடர்ந்து வருகின்ற அநீதிகளும் பிறிதொரு பக்கம்; மனமகிழ்ச்சியைக் கெடுக்கின்ற அனைத்துலக அரசியல் நிலைகளும், குடும்பத்தில் ஏற்படுகின்ற தகராறுகளும், பொருளாதாரக் குறைபாடுகளும், இன்னொரு பக்கம். இவை அனைத்தும் ஒருவனுடைய வாழ்க்கையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்குகிறபோது மனிதன் மனமுறிவுக்கு உள்ளாகிறான். தமிழர்தம் குடும்பங்கள், தமிழர்தம் சாதிகள், தமிழர்தம் ஊர்கள், ஊராட்சி, நகராட்சி, வட்ட, மாவட்ட ஆட்சி, முறைகள், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக ஆட்சி முறைகள், அரசாங்க ஆட்சி முறைகள் ஆகிய அனைத்தும் தமிழர்களைத் தாழ்வுணர்ச்சியிலிருந்தோ, மனமுறிவிலிருந்தோ மீட்கும்படியாக அமையவில்லை. எனவே, தலைமுறை தலைமுறையாக, நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் தாழ்வுணர்ச்சியாலும் புதிய அறிவியல் உலகம் சார்ந்த ஏற்றத் தாழ்வுடைய சமூக இக்கட்டுகளாலும், அரசு நடை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறைகளாலும் மனமுறிவு மக்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

தாழ்வுணர்ச்சி, மனமுறிவு ஆகியவற்றின் தொடர்ச்சியாகத் தன்னம்பிக்கைக் குறைவு ஏற்படுகிறது. தன்னம்பிக்கைக் குறைவு ஏற்பட்டு நிலைபெறும்போது மனிதன் சார்புணர்ச்சிக்கு (Dependancy) ஆளாகிறான். சார்புணர்ச்சியே அவனைத் தலைமை வழிபாட்டிற்கு அழைத்துச் செல்லுகிறது. ஆக, தாழ்வு மனப்பாங்கு எனத் தனி மனிதனுக்கு ஏற்பட்ட உளவியல் சிக்கல் (Psychological Problem) பலருக்கும் ஏற்படவே, அது சமூகவியல் சிக்கலாக (Sociological Problem) விழுது விடுகிறது. தமிழரைப் பொறுத்தவரைத் தலைமை வழிபாட்டிற்கு மூலாதாரம் இதுவே என்று கருத வேண்டியுள்ளது.

தாழ்வுணர்ச்சியின் விளைபயன் தலைமை வழிபாடு என்றால், தலைமை வழிபாட்டின் வித்து தாழ்வுணர்ச்சி ஆகும்.

தமிழ்ச் சமுதாயமே காலம் காலமாக மனமுறிவுச் (Frustrated Society) சமுதாயமாக இருந்து வந்திருக்கிறது என்பதைத் தமிழர்களுடைய மதக் கோட்பாடுகள் உறுதி செய்கின்றன. வாழ்க்கையைத் துன்பம் என்று கொள்ளும் துன்பக் கொள்கையும், இவ்வாழ்க்கை பொய், உலகம் பொய், அனைத்தும் பொய் என்ற மாயாவாதமும், பிறந்து வாழ்வதைவிட, இறந்து பிறவாப் பெருநிலை அடைவதே சிறப்பு என்ற மதக் கொள்கையும், இடும்பை நிலையை இயல்பு என்று ஒப்புக் கொள்ளும் விதிக் கொள்கையும், தமிழர் மனமுறிவுச் சமுதாயத்தினராகவே இருந்து வந்துள்ளனர் என்பதை எடுத்துரைக்கின்றன.

நவகண்டம்

நவகண்டம் கொடுத்தல் என்ற பழக்கம் தமிழரிடம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதைத் தொல்காப்பியம், பரணி முதலான இலக்கண இலக்கியங்களும், சிற்பங்களும், கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன; உணர்த்துகின்றன. அரசன் வெற்றிக்காக வேண்டிக் கொண்ட வீரர்கள் அரசன் வெற்றி பெற்றால் அதைக் கொண்டாடும் முகமாக, கொற்றவை முன்பு சென்று தம் தலையைத் தாமே அரிந்து தற்கொலை செய்து கொள்வர். இதனை நவகண்டம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுத்தல் என்றும், அடிக்கழுத்தின் உடன் சேர்த்து அரிவர் என்றும் கல்வெட்டுகளும், இலக்கியங்களும் பேசும். அரசனும், மதமும் இணைந்து தலைமை வழிபாட்டையும், அதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகத் தற்கொலை முயற்சியையும் தலைமுறை தலைமுறையாக வளர்த்து வந்துள்ளன என்பதற்கு மேற்கண்ட நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

தாழ்வுணர்ச்சியின் பாரித்த வெளிப்பாடு தலைமை வழிபாடு என்ற நிலையில் தலைமை வழிபாட்டை விரும்பும் அதிகார வர்க்கம், அதனைத் திட்டமிட்டு வளர்க்கிறது. சான்றாக, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, புலவர்கள் (கவிஞர்கள்), இதழ்கள், பேச்சாளிகள் ஆகியோர் வழியாகத் தலைமையை நோக்கிய வழிபாடு வளர்க்கப் பெறுகிறது. முற்காலத்தில் தொடர்புச் சாதனங்கள் தற்காலம் போல் இல்லை. எனவே, புலவர்கள் அவர்கள் வழி எழுதப்பெறும் பிரபந்தங்கள், முதலானவற்றால் தலைமை வழிபாடு கட்டிக்காக்கப் பெற்றது.

உயர்நிலையில் உள்ளோருடைய திறமைகளுக்குத் தெய்வீகம் கற்பிக்கப் பெற்றது. மனிதனாகப் பிறந்த யாரும் திறமையைப் பயிற்சியால் பெற முடியும் என்பதற்கு மாற்றாகப், பெற முடியாது அஃது இறைமையின் அருள் என்று மீண்டும் கற்பிக்கப் பெற்றது. சிறந்த அரசர்கள், தெய்வங்களின் அவதாரம், தெய்வத்திற்கு நிகரானவர்கள் என்று கற்பிக்கப் பெற்றனர். சிறந்த புலவர்கள், தெய்வீக அருள் பெற்றவர்கள், காளி அருள் பெற்றவர்கள் என்று கற்பிக்கப் பெற்றனர். சுருக்கமாகத் திறமையுடையோர் தனிமைப் படுத்தப் பெற்று 'அவதார புருஷராக' உயர்த்திச் சொல்லப் பெற்றனர். ஒருசிலர்தம் உடைமையாக உயர்வு, உருவாக்கப் பெற்றது.

இந்நிலையில் பொதுமக்கள் (பாமரர்) தன்னிடம் இல்லாத ஆற்றல் (Power), தன்னிடம் இல்லாத கல்வி (Education), தன்னிடம் இல்லாத செல்வம் (Wealth) தன்னிடம் இல்லாத திறமை (Efficiency), தன்னிடம் இல்லாத தகுநிலை (Status), தன்னிடம் இல்லாத குணங்கள் (Qualities) ஆகியன தலைவரிடம் இருப்பதாக நம்ப வைக்கப் பெறுகின்றனர்; நம்புகின்றனர். இவற்றைத் தம்மால் அடைய முடியாது, அடைவதற்குத் தமக்குத் தகுதி இல்லை என்ற தாழ்வுணர்ச்சி, மனமுறிவாகி தன்னம்பிக்கை குறைவாக வளர்ந்து, சார்புணர்ச்சியாக நிலைபெறுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்பிக்கப் பெற்ற தலைமையை ஒப்புக் கொண்டு இணங்கிப் போவது பாமரர்களுக்கு எளிதாக இருந்தது; இருக்கிறது. தலைவனைப் பின்பற்றுவது அவர்களுக்கு எளிது. தலைவனுக்கு 'ஜே' போட வேண்டியதுதான் அவர்களுடைய கடமை. எனவே, காந்திக்கு ஜே என்று சொல்லுவது அவர்களுக்குச் 'சுளுவாக' இருக்கிறது. தலைவனைப் பின்பற்றுதல் எளிது; பகரமாகத் தத்துவத்தைப் பின்பற்றுவது எளிது அன்று. காந்திக்கு ஜே போடுவது அவர்களால் முடியும். ஆனால் காந்தியத்தைப் பின்பற்றுவது அவர்களால் முடியாது. பலர் சிவ வழிபாட்டைச் செய்யும் சைவராக இருக்க முடியும். ஆனால் சிவக் கோட்பாடாகிய சைவ உணர்வை அவர்களால் மேற்கொள்ள முடிவதில்லை. எனவேதான், மதத் தத்துவங்கள் புரிந்து கொள்ளப்படுதலைவிட, போற்றப் படுதலைவிட, மதச் சடங்குகள், மதத்தின் இடத்தில் இடம் பெற்று விடுகின்றன. (MERE RITUALS). Religion = Philosophy; Religion = Rituals. நம்மில் ஏசு மதத்திற்குரிய சடங்குகளைப் பின்பற்றுவோர் இருக்கிறோம்; நபி மதத்தின் சடங்குகளைப் பின்பற்றுவோர் இருக்கிறோம்; புத்த மதத்தின் சடங்குகளைப் பின்பற்றுவோர் இருக்கிறோம்; ஆனால் மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுவோர் இல்லை அல்லது மிகக் குறைவு. அதனைப் போலவே, தலைவன், தத்துவம் என்ற இரண்டில் தத்துவத்தைப் பின்பற்றும் செயல்பாட்டைவிட (Functional Aspect) தலைவனைப் பின்பற்றும் தனிமனித வழிபாடு (Personality Cult) எளிதாக இருக்கிறது.

தலைவனுக்குப் பின்னால் பெருங்கூட்டமே நிற்கிறது. அதனால் மலிவுப் புகழும் (Cheap Personality), பதவிப் பயனும், பண ஈட்டமும் கிடைக்கின்றன. குடியரசு அமைப்புடைய முதலாளித்துவ ஆட்சியில் இவை அவனுக்குப் பெருநிறைவையும், பாதுகாப்பையும் தருகின்றன. தொண்டர்க்குத் தனக்காக ஒரு தலைவர் இருக்கிறார் என்பது சுளுவாக, பாதுகாப்பாக இருக்கிறது. இதனை உளவியலில் ஒன்றியமாதல் (Identification) என்பர்.

ஒன்றியமாதல் மூலம் தலைவனின் இன்பத்தில் அல்லது துன்பத்தில் பங்கேற்கப் பழக்கப்படுத்தப் படுகிறான் தொண்டன். எனவே, தலைவனுடைய இன்பதுன்ப நிகழ்வுகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனை மிகப் பாதிக்கின்றன. கிட்டத்தட்ட சொந்தப் பகுத்தறிவையே அவன் இழந்து நிற்கிறான். இவ்வாறு இழந்து நிற்போர் கூட்டமாகப் பெருங்கூட்டமாகத் தமிழகத்தில் இருந்து வருகின்றனர். இவர்கள் ஒரு காலத்தில் அரசனைச் சார்ந்த, பகுத்தறிவை இழந்த கூட்டமாகவோ, சாதியைச் சார்ந்த, அரசியலைச் சார்ந்த கூட்டமாகவோ சார்ந்து இருந்து வந்தனர். எனவே, அரசன், மதம், சாதி ஆகியன இருந்த இடத்தில் தற்போது கட்சித் தலைமை இடம் பெற்றுள்ளது. தலைமை வழிபாட்டுக்கு உரிய மூலாதாரம்/ மூலவர் மாறியதே ஒழிய மூலத்தானமும் மாறவில்லை; வழிபாடும் மாறவில்லை. இஃது வெறும் இடமாற்றமே (Replacement) எனவே, தலைவன் இறக்கிறபோது தானே அழிந்தது போன்றும், தானே அழிய வேண்டும் போன்றும் இவன் உணர்கிறான். அதன் விளைவே தற்கொலையாக முடிகிறது.

தமிழர்களுடைய இன்னோர் இயல்பும் இதனை உறுதி செய்கிறது. இந்தியாவிற்கு அப்பால் வெளியின மக்களிடம் காணப் பெறாத ஒரு பழக்கம் தமிழர்களிடம் உள்ளது. அஃது இறந்தவர்க்கு ஒப்பாரி வைப்பது. ஒப்பாரி வைப்பதையோ, ஆர்ப்பரிப்பதையோ, உலக மதமான கிருத்துவம் ஏற்றுக் கொள்வதில்லை; இசுலாம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் தமிழர் மதம் ஏற்றுக்கொள்கிறது. இறப்பை இயல்பு என்று ஒப்புக்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும், எதிர்த்து நிற்கவும் வளர்க்கப் பெற வேண்டிய ஒரு மக்களினம், பழக்கம் பெற வேண்டிய மக்களினம், இறப்பு என்பது ஒரு தியாகம் என்று பழக்கப்படுத்தப் பெற்றதால்தான், ஒப்பாரி தமிழ் மக்க ளிடையே மட்டும் நிகழ்கிறது. தலைமை வழிபாட்டின் மறை முகமான குறுவெளிப்பாடாக ஒப்பாரியைக் கணிக்கலாம்.

தலைமை வழிபாட்டை வளர்ப்பது தலைமையில் உள்ள வர்களுக்கு நல்லது; இலாபம். எனவே, அஃது இடைக் காலத் தில் வளர்க்கப் பெற்றது; இக்காலத்திலும் திட்டமிட்டு வளர்க் கப் பெறுகிறது. முன்பு அரசனுக்குத் தெய்வீகம் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. ஆண்டவனே தெய்வம் என்று கற்பிக்கப் பெற்றது. அதன் வளர்ச்சி ஆள்பவனும் தெய்வம் என்று வளர்ந்தது. அத்தகு தெய்வம் இறக்கிறபோது விடுமுறை அளிப்பது, விழாக் கொண்டாடுவது, இரங்கல் கூட்டங்கள் தொடர்ந்து நடத்துவது, இதழ்களில் விளம்பரப் படுத்துவது, வானொலியில் விளம்பரப் படுத்துவது, திரைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படம், தொலைக் காட்சியில் விளம்பரப் படுத்துவது ஆகிய வற்றின் மூலம் ஒரு சாதாரண மனித இழப்பு ஈடு செய்ய முடியாத ஒரு பெரும் இழப்பு என்று கற்பிக்கப் பெறுகிறது. அயல் நாடுகளில் பெரும் பெரும் மேதைகள் அரசியல் வல்லு நர்கள். மடிந்தபோதும், அம்மக்கள் தமிழர்கள் அளவு தற்கொலை செய்து கொள்வதும் இல்லை; துக்கம் கொண் டாடுவதும் இல்லை. லெனினுக்குப் பிறகு ருசியா அழிந்து விட வில்லை; ஸ்டாலினுக்குப் பிறகு சோவியத் அழிந்து விட வில்லை; மாசேதுங்குக்குப் பிறகு சீனா அழிந்துவிடவில்லை; ஜார்ஜ் வாசிங்டனுக்குப் பிறகு அமெரிக்கா அழிந்துவிட வில்லை, வின்ஸ்டன் சர்ச்சிலுக்குப் பிறகு இங்கிலாந்து அழிந்து விடவில்லை. இத்தகு அரசியல் மேதைகளின், வித்தகர்களின் பேராற்றலுக்கு முன் கால் பங்கு கூடப் பெறாதவர்கள் இறப்பைச் சந்திக்கிறபோது தமிழர்கள் அலறுவதற்குக் காரணம் :

1. தமிழர்களிடமே உள்ள பலகீனம்.
2. செய்யப்படும் பிரச்சாரம்
3. பரம்பரைத் தலைமை வழிபாட்டுக் குணம்.

செய்யப்படும் பிரச்சாரம்

தமிழ் நாட்டில் மட்டும் அரசியல் சார்ந்த தலைமை வழி பாடும், அதனை ஒட்டிய தற்கொலைகளும் மிகுந்து இருப்ப தற்குரிய காரணங்கள் ஆராயத் தக்கன. இப்பழக்கம் தொடர் வதற்கு ஒரு பெரும் காரணம், அரசியல்வாதிகளும், அந்தந்த மொழியில் வழங்கும் ஏடுகளும், இன்னபிற தொடர்புச் சாதனங்களும், தற்கொலை செய்து கொள்வோரைத் தியாகி கள் என்று வருணிப்பதும், சிலைகள் எடுப்பதும், சாலை போன்றவைகளுக்குத் தற்கொலை செய்து கொள்பவர் களுடைய பெயரை வைப்பதும், தற்கொலை செய்துகொள் வோருடைய குடும்பங்களுக்குக் கட்சிகள் போட்டிப் போட்டுக் கொண்டு நிதி உதவிகள் செய்வதும் காரணங்கள் (Are all self immolation, Hindu).

தமிழர்கள் தொடர் வீழ்ச்சிக்கான காரணங்களுள் ஒன்று, தலைமை வழிபாடு என்பதை மறுத்தற்கு இல்லை. இது தலை முறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் தொற்று நோய் என்பதையும் மறுத்தற்கு இல்லை. எப்பொருள் யாரால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லப்பட்டது, எத்தன்மையது, என்பவற்றை விட, அப்பொருளின் மெய்ப்பொருள் காணுதல் வேண்டும் என்ற சித்தாந்தப் பற்று இடம் பெற்று வளம் பெற்று வாழ்வதற்குப் பதிலாகத் தனி மனிதப் பித்தே இடம் பெற்றுப் போற்றுத லாக வளர்ந்து; தமிழரைத் தாழ்த்தி வருகிறது. இதற்குச் சரியான சான்று, ஈழ மண்ணில் நிகழும் நிகழ்ச்சிகள். அங்கே உள்ள ஈழத் தமிழ் அமைப்புகள் பலவற்றின் சித்தாந்தமும் ஒன்றே ஒன்றுதான்: ஆனால் அமைப்புகள் பல. இதற்குரிய காரணத்தை ஊன்றி ஆராய்ந்தால் ஒன்று தெளிவாகும். தத்துவ அடிப்படை புறக்கணிக்கப் பெற்றுத் தனி மனித அடிப் படை போற்றப்பட்டதன் விளைவால், ஆளாளுக்கு இயக்கங் கள், அமைப்புகள் தோன்றித் தத்துவ ஒருமிப்பைத் தகர்த்து விட்டன. அதனால் செயல் ஒருமிப்பும் தகர்க்கப் பெற்றது. நம் நாட்டில் தோன்றி வளர்ந்து பல்கி மேலும் கிளைத்துக் கொண்டே இருக்கும் மதங்கள், கட்சிகள், சங்கங்கள் ஆகியன பேதம் உற்றதற்குக் காரணம் இதுதான். காங்கிரசு இயக்கம், திராவிட இயக்கம், தமிழர் பின்பற்றும் பல மதங்கள், சங்கங் கள் அனைத்தும் பல்வேறு கிளைகளாகவும், எதிரணிகளாகவும் கிளைப்பதற்குக் காரணம், தனி மனித மோதல்தான். தத்துவ மோதல் அன்று. (It is not a Policy Conflict; It is a Personal Conflict). தலைமை வழிபாட்டை வளர்த்ததன் விளைவைத் தமிழர்கள் இன்று அனுபவிக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

தலைமை வழிபாட்டைத் தவிர்க்க வழிமுறைகள்

1. உன்னால் முடியாது

   பெண்ணால் முடியாது

   உங்கள் மொழியால் முடியாது

   உங்கள் சாதியால் முடியாது

   உங்கள் நிற இனத்தால் முடியாது

மேலே கண்டவாறு சொல்லப்பட்டு வரும்/மீண்டும் மீண்டும் ஓதப்பட்டு வரும் மொழிகள் அறிவியலுக்கு முற்றும் முரணானவை. எந்த மனிதனாலும் முடியும், எந்தப் பெண் ணாலும் முடியும், எந்த மொழியாலும் முடியும், எந்தச் சாதி யினராலும் முடியும், எந்த இனத்தினராலும் முடியும் என்று நம்மால் முடியும் என்ற நம்பிக்கை நம்மிடையே வளர்க்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெறுதல் வேண்டும். நம்மால் முடியாது என்று வளர்க்கப் பெறும் முடக்கு வாதத்தால் நாம் அனைவரும் மன அளவில் முடவர்களானோம். உள்ள ஊனமுற்றவர்களாக ஆகிவிட்டோம் என்பதே உண்மை. எனவே, இதன் அடித்தளமாக இருக்கின்ற மொழியை, தாய் மொழியை அனைத்துக் கட்டத்திலும் பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், வழிபாட்டு மொழியாகவும் அனைத்துக்கட்ட மொழியாகவும் ஆக்குதல் வேண்டும். மொழி இங்கே ஒரு கருவியாக மட்டும் செயல்பட வில்லை. முடியாது என்ற முடக்கு வாதத்தின் ஊனத்தை ஒடித்து நம்பிக்கை கொள்பவர்களாக ஆக்க, மொழி ஒன்றால்தான் முடியும். கல்லாதவர், கற்றவரிடையே தனக்கு அனைத்தும் தெரியவில்லையே என்றும், போதிய ஆங்கிலம் தெரியவில்லையே என்றும், ஆங்கிலத்தில் பேசத் தெரியவில்லையே என்றும் எழுதத் தெரியவில்லையே என்றும், மனத்தால் நினைந்து முடங்கிக் கிடக்கின்ற ஆற்றல் உடையவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். இவர்களைக்கூட விடுவிக்க ஒரே வழி, அவர்கள் மொழியாலும் அனைத்தும் முடியும் என்று செயல்படுத்துவதன் மூலம் நம்பிக்கை ஊட்டுவதே.

2. கூட்டுக் குடும்ப முறை உடைபடவேண்டும். வயதான பிறகும் சார்புணர்ச்சி உடையவராக இளைஞர்கள் இருப்பதற்கு இது ஒரு தலைமையான காரணம். பெண் தந்தையைச் சார்ந்தும், பின்னர்க் கணவனைச் சார்ந்தும், பின்னர் மகனைச் சார்ந்தும் வாழ வேண்டிய இக்கட்டிற்கு இதுதான் காரணம்

3. எவன் இறந்தாலும், கைலாசத்தில் இருக்கிற சிவனே இறந்தாலும் விடுமுறை விடுவது, விழாக் கொண்டாடுவது, தொடர் இரங்கல் கூட்டங்கள்நிகழ்த்துவது, பொய்ப் புகழ்ச்சி புகல்வது ஆகியன முற்றுமாகத் தடை செய்யப் பெற வேண்டும்.

4. அலுவலகங்கள், அரசாங்க ஆட்சித் துறைகள், இன்ன பிற அனைத்திலும் இருக்கும்படி நிலைகள் (Classes in Position) அட்டெண்டர், பியூன், தட்டச்சாளர், எழுத்தர், மேலாளர், தலைமை மேலாளர் என்பன போன்ற படிநிலைகள் முற்றுமாக ஒழிக்கப் பெறுதல் வேண்டும். இந்த அமைப்புகள் நிலை பெறுவதன் மூலம் தனக்கு மேலே உள்ள அதிகாரிக்கு அஞ்ச வேண்டும், வணங்க வேண்டும், வழிபட வேண்டும் என்ற தலைமை வழிபாட்டு உணர்ச்சி வளர்க்கப் பெறுகிறது. அவன் கடமையை வணங்க வேண்டுமே தவிர, மனிதனை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வணங்க வேண்டுதல் தேவையில்லை என்ற நிலை உருவாக்கப் பெறுதல் வேண்டும்.

5. ஊராட்சி, நகராட்சி, வட்ட, மாவட்ட, மாநில, மைய அரசு அலுவலகங்கள் அனைத்திலும் மையத்தை நோக்கிக் குவிக்கப் பெற்றிருக்கும் அதிகாரங்கள் பங்கீடு செய்யப் பெற்று அங்கே பகிர்ந்தளிக்கப் பெற வேண்டும் (To Decentralise all powers).

6. பள்ளிக்கூடம் தொடங்கிக் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றிலும் படிக்காத பாமர மக்களிடத்திலும், ஆங்காங்கே தலைமை பயிற்சி (தேர்தல் பயிற்சி இல்லை) Leadership Training தொடர்ந்து வழங்கப் பெறுதல் வேண்டும்.

தலைமை வழிபாட்டின் கொடூர விளைவுகள்

தமிழகத்தில், கடவுள் மனிதராக்கப் பெறுகிறார் என்பதை விட, மனிதர்கள் கடவுள் ஆக்கப் பெறுகிறார்கள். ஆளுகின்ற அரசனைத் திருமாலின் அவதாரமாகக் கருதுவது தமிழரியல்பு; ஒர் இந்திய இயல்பும்கூட. எனவே, ஆளுவோரை ஆண்டவனாகவே கருதும் போக்குத் தலைமுறை தலைமுறையாகத் தமிழரிடம் இருந்து வந்திருக்கிறது. தலைமையை வழிபாட்டிற்குரிய கடவுள் அம்சமாக மக்கள் கருதினரா அல்லது மக்கள் கருத வைக்கப் பெற்றனரா என்பது அடிப்படைக் கேள்வி. மக்கள் கருத வைக்கப் பெற்றனர் என்பதே சரியான விடையாக இருக்க முடியும். எனினும் கடவுள் அவதாரமாக ஆள்வோர் நம்ப வைக்கப்பட்டபோது மக்கள் நம்பும் நிலையில் இருந்தனர்; நம்பினர். ஆளுவோனை ஆண்டவன் அவதாரமாக மக்கள் கருதுவதால் ஆளுவோர்க்குப் பல சிக்கல்கள் தோன்றாமலே இருந்தன. தோன்றியவற்றையும் மிக எளிதாகத் தவிர்க்க முடிந்தது.

1. பரம்பரை பரம்பரையாக ஆளுகின்ற உரிமை பெற்று ஆண்டு வரும் அரச வம்சம், ஆண்டவன் வம்சம் என்று மக்கள் நம்புவதால் ஆண்டவனை எதிர்த்து மக்கள் குரல் எழுப்புவது இல்லை.

2. ஆளுவோர் அனுபவிக்கும் அரண்மனை வாழ்க்கை, சொகுசு வாகன வசதி, உழைப்பற்ற வாழ்வு, இன்னபிற ஐம்புல நுகர்ச்சிகளைப் பார்த்துப் பொது மக்கள் பொருமுவது இல்லை; பொறுப்பது உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. மக்களை அறிவு நிலையிலிருந்து விலக்கி உணர்ச்சி என்ற போதை நிலையில் நிலையாக வைத்திருக்க முடியும். உணர்ச்சிப் போதை நிலை உண்மையைக் கண்டு கொதிக்கவோ, மதிக்கவோ செய்யாது. இவ்வியல்பு ஆளுவோருக்கு வசதியாக இருந்தது; இருக்கிறது.

ஒரு தலைமைக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் பொறுப்புகளை எல்லாம் தலைமை பார்த்துக் கொள்ளும் என்று நம்பி ஒதுங்குவது பொதுமக்களுக்கு எளிதாக இருந்தது; இருக்கிறது என்பது முன்பே விளக்கப்பட்டது. இவ்வியல்பிற்கு இன்னொரு காரணம்: விலங்கு இயல்பு மிக்கு இருக்கும் மக்கள் இனத்திற்குத் தலைமையின்கீழ்க் கண்மூடிக் கட்டுப்பட்டு வாழ்வது எளிதாக இருக்கிறது. யானைக் கூட்டம், குரங்குக் கூட்டம் முதலான விலங்குகளின் கூட்டத்தில் தலைமை விலங்கிற்கு ஏனைய விலங்குகள் முரண்டாமல்கட்டுப்பட்டு வாழ்கின்றன. முரண்டு பிடிக்கும் விலங்கினங்கள் தலைமையால் விலக்கி வைக்கப்படுகின்றன. தமிழரிடம் உள்ள பழக்க வழக்கங்கள் அவர்கள் இன்னும் விலங்கு இயல்புகளை மிகுதியாகப் பெற்றுள்ளனர் என்பதைக் காட்டுகின்றன*2. தமிழரிடம் இன்றும் உள்ள பின்வரும் பழக்கங்கள் அவர்கள் விலங்குத் தன்மையை மிகுதியாக உடையவர்கள் என்பதைக் காட்டுகின்றன*3.

பொது இடங்களில் சிறுநீர் கழித்தல், மலம் கழித்தல், எச்சில் துப்பல், சண்டை இடுதல், 'கியூ' வரிசையைப் போற்றாமை, பொதுவாகச் சட்டங்களை, விதிகளைப் பின்பற்றாத போக்கு*4 கல்லாமை

முதலாயின தமிழர்தம் விலங்கு இயல்புகள் மிகுதியாக உடையவர்கள் என்று காட்டுகின்றன. ஆணுக்கு முதன்மை தருவதும் பிறிதொரு விலங்கு இயல்பாகும். அஃறிணை உயிரினங்களில் ஆண் உயிரினங்களே தலைமை பெற்றுள்ளன. கோழிகளில் சேவல், மயில்களில் தோகை விரித்தாடும் ஆண் மயில், யானைகளில் நீண்ட தந்தங்களையுடைய ஆண் யானை, மாடுகளில் நெடும் கொம்பும், பெரும் திமிலும் உடைய காளை அல்லது கடா என ஆண் தலைமை பெற்று இருப்பது வெளிப்படை. இவ்வினங்களில் தலைமை பெற்று இருக்கும் ஆண் இனமே தலைவனாக விளங்கித் தங்கள் குழுவைக் கட்டுப்படுத்துகிறது. தமிழ்ச் சமுதாயமும் ஆண் தலைமைச் சமுதாயமாக நெடுங்காலத்திற்கு முன்பு மாற்றம் பெற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்து வருகிறது. சம பங்கும், பெருமையும் பெண்ணுக்கு அளிக்காத தன்மையும் ஒரு விலங்கு இயல்பே. இவ்வியல்பால் தமிழரிடம் தலைமை வழிபாட்டு உணர்வு மிகுதியாக இருக்கிறது. விலங்குக் குணங்கள் நீக்கப்பட்டால் அன்றி அல்லது குறைக்கப்பட்டால் அன்றித் தலைமை வழிபாட்டு உணர்வு தளராது; வளரும்.

தலைமை வழிபாட்டால் விளையும் தீங்குகள் கொடுமை யானவை; கொடூரமானவை. அவை வருமாறு:

1. கருத்துக் குருடாக்குதல் / செவிடாக்குதல்

எந்தப் பொருளை யார் சொல்லுகிறார் என்பது இவர்களுக்கு முதன்மை இல்லை. பொருளின் உயர்வு அல்லது இழிவு முதன்மை இல்லை. பொருளைப் புகல்வோர் யார் என்பதற்கே தமிழர் முதன்மை தருவர். ஒரு கூட்டத்தில் என்ன பேசப் பெறுகிறது என்பதைவிட யார் பேசுகிறார்கள் என்பதிலேயே தமிழர் கவனம் செலுத்துவர். ஒரு திரைப்படத்தில் எப்படி நடிக்கிறார்கள் என்பதைவிட யார் நடிக்கிறார்கள் என்பதி லேயே தமிழர் கவனம் செலுத்துவர். எது என்பது முதன்மை பெறுதல் இல்லை; எவர் என்பவர்க்கே முதன்மை. எனவே, நல்ல கருத்தை அல்லது நல்ல கலையைக் கேட்டலோ அல்லது பார்த்தலோ செய்யாமல் செவிடாகவும், குருடாகவும் தமிழர் மாறிப் போயிருக்கின்றனர்.

2. தன் புத்தி குறைதல்

தலைவன் என்ன சொல்கிறான் என்பதில் தலைவன் சொன்ன நல்லது அல்லது எனும் கருத்துக்கு முதன்மை கொடுக்காமல் சொன்னவனுக்கு முதன்மை கொடுத்து மக்கள் அவனையே பின்பற்றுகிறார்கள். தமக்காகத் தலைவர் சிந்திக் கிறார்; முடிவு எடுக்கிறார்; நெறிப்படுத்துகிறார்; நடக் கிறார் என்று இவர்கள் முற்றுமாக நம்புகிறார்கள். இவ்வியல்பால் காலப்போக்கில் தாமாகத் தமக்காகச் சிந்திக்கின்ற இயல்பை இழக்கிறார்கள். பேசப் பழகாத குழந்தை பேசாமலேயே ஊமையாதல் போல, நடக்கப் பழ காத குழந்தை நடக்காமலேயே ஊனம் ஆவதைப் போல, சிந்தித்துப் பழகாத மக்கள் இனம் காலப்போக்கில் சிந்தனை ஊமையாகவும், ஊனமாகவும் ஆகி நிலைபெற்று விடுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. குடியாட்சித் தலைமை உருவாகாமை

தலைமையைக் கண்மூடிப் போற்றித் தன் சிந்தனையை இழக்கும் சமூகத்தில் தலைவனே முதன்மை பெறுகிறான். சமுதாயமே தலைவனுக்கு என்று ஆகிறது. சமுதாயத்திற் காகவே தலைவன் என்ற குடியாட்சிக் கோட்பாடு செத்துப் போகிறது. எனவேதான்,

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்றும்

'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்றும்

உருப்பெற்ற கோட்பாடுகளைத் தமிழரிடையே தலைமுறை தலைமுறையாகக் காணமுடிகிறது. தலைமை வழிபாட்டுச் சமூகம் உள்ள நாடுகளில் ஆளுவோர் மட்டுமல்லாமல் அரசாங்க அலுவலகங்கள் கூட மக்களுக்காக அலுவலகங்கள் என்ற நிலை மாறி, அலுவலகங்களுக்காக மக்கள் என்ற நிலை உருவாகிவிடும்—செருப்புக்காகக் கால் வெட்டப்படுதல் போன்று.

4. பரம்பரைத் தலைமை

தலைமை அவதாரம் என்ற தத்துவம் தோன்றிப் பரவி நிலைத்து விடுவதால் தலைமைக்கு வந்துவிட்டவர்கள் தங்கள் தலைமையையே நிலையாக அமைத்துக் கொள்ள முடிகிறது. இந்தியாவை ஒரே குடும்பத்தினர் தொடர்ந்து ஆளுவதற்கு இந்த மனப்போக்கே காரணம். தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்து இறந்துவிட்ட ஒருவரின் மனைவி, காமக்கிழத்தி ஆகியோர் எளிதாக மக்களிடத்தில் செல்வாக்குப் பெற முடிவதற்கும் காரணம் இதுதான்.

5. அடிமை விருப்பம்

தலைமை வழிபாட்டை ஒப்புக் கொள்ளும் சமுதாயம் அடிமைச் சமுதாயமாகவும், அடங்கி வாழும் சமுதாயமாகவும் காலப்போக்கில் ஆகிவிடும். அடிமைத்தனமும், அடங்கிப் போதலும் நூற்றாண்டுகளாகத் தொடருகின்றபோது மக்கள் இனத்திற்கு அதுவே பழக்கமாகிவிடுகிறது. இன்னொருவரைச் சார்ந்து வாழ்தல் என்பது அவர்கள் குருதியில் ஊறிப்போய் விடுகிறது. நடக்க முடியாத குழந்தைப் பருவத்தில் இடுப்பி லேயே தூக்கி வைத்துப் பழக்கப்பட்ட குழந்தை, கால்கள் வளர்ந்து நடக்கின்ற பருவம் எய்திய போதிலும் பழக்கத்தால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அம்மா இடுப்பிலேயே அமர்ந்து இருக்க விரும்புவது போல அடிமைத் தனத்தில் பழக்கப் பட்டுப் போன மக்கள் இனம், அடிமைத் தனத்திலேயே வாழ விரும்புகிறது. இத்தகு சமூகங்களில் தலைமை வழிபாடு எளிதாகிறது. இருக்கும் தலைமை இறந்து போனாலோ, விலகிப் போனாலோ அந்த இடத்தை நிரப்புவதற்குரிய தலைமையை இந்தச் சமூகங்கள் தமக்குள்ளேயே தேடுவது இல்லை; வெளியே தேடுகின்றன.

ஐரோப்பாவிலிருந்து ஆங்கிலேய மூதாதையர் அமெரிக்காவில் குடியேறினர்; ஆஸ்திரேலியாவில் குடியேறினர்; கனடாவில் குடியேறினர்; நியூகினியாவில் குடியேறினர். தலைமை வழிபாட்டுப் பழக்கத்திற்கு ஆளாகாத இனம் ஐரோப்பியக் காக்கேசிய இனம் என்பதால் தாங்கள் தொடர்ந்து போற்றிவரும் அரசத் தலைமையை விரும்பவில்லை. எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இலண்டன் தலைமை வேண்டாம் என்று அமெரிக்கா தனி நாடாயிற்று; கனடா தனி நாடாயிற்று; ஆஸ்திரேலியா தனி நாடாயிற்று; நியூக்கினியா தனி நாடாயிற்று. ஆனால், தமிழர்கள் வாழ்ந்த தமிழ்ப் பிரதேசங்கள் இத்தகு தன்னாட்சி விடுதலையை விரும்பவும் இல்லை; செயல்படுத்தவும் இல்லை என்பதற்கு ஈழத் தமிழர் வரலாறும், இந்தியாவில் தமிழ் நாட்டுத் தமிழர் வரலாறும், புதுச்சேரித் தமிழர் வரலாறும் சான்றுகளாக இருக்கின்றன. சார்புச் சமுதாயமாகத் தமிழர்க்ள் இருந்தமையால் ஐரோப்பியத் தலைமை விடைபெறும் நிலையில் பிறிதோர் அயல் இனத் தலைமையை விரும்பி ஒப்புக் கொண்டார்கள்; ஒப்புக் கொள்கிறார்கள்.

6. உணர்ச்சிப் போதை

அறிவுக்குரிய ஒன்று, உணர்வுக்குரிய ஒன்றாக நம்பவைக்கப் படுகிறபோது அங்கே உண்மை நிலை தேய்ந்து வழிபாட்டு நிலை தோன்றுகிறது. பூசித்தல், வழிபடுதல் ஆகியன அறிவின் அம்சங்கள் அல்ல; உணர்ச்சியின் அம்சங்கள்*[6]. மனிதன் மனம் உணர்ச்சி வசமாகிறபோது பருப்பொருளின் உண்மை நிலையை அறிய முடியாமல் தடுமாறுகிறது; தடுமாறும். உண்மையான குறை நிறை தெரியாமல் தடுமாறும்; தடம் மாறும்.

காதலியை ஒரு பெண்ணாகப் பார்ப்பது உணர்ச்சி நிலை; வாழ்க்கைத் துணையாகப் பார்ப்பது அறிவு நிலை. காதலனை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெறும் ஆணாகப் பார்ப்பது உணர்ச்சி நிலை; வாழ்க்கைத் துணைவனாகப் பார்ப்பது அறிவு நிலை. உணர்ச்சி கண்ணையும் மூடும், கருத்தையும் மூடும். அறிவு, கண்ணைத் திறக்கும்; கருத்தையும் திறக்கும். எந்த ஒன்று உணர்வுப் பார்வையில் பூசைப் பொருளாகிறதோ, வழிபாட்டுப் பொருளாகிறதோ அந்த ஒன்றைப் பற்றிய மெய்ம்மை நிலையைப் பார்ப்போர் அறியத் தவறுகின்றனர்.

சுவரில் ஒட்ட/ மாட்டப் பெற்றிருக்கும் நடிகையின் படம், இரசிகனின் உணர்ச்சிகரமான மனநிலையில் வெறும் தாளாகத் தோன்றாது. அவனுக்குப் பிடித்துப்போன நடிகையின் மெய்யான கவர்ச்சித் தோற்றமாகவே தோன்றும்.

தலைமை வழிபாடு தழைத்து இருக்கும் மக்கள், உணர்ச்சி நிலைக்கு உந்தப்பட்டுப் பூசைநிலைக்கும், வழிபாட்டிற்கும் ஆளாகின்றனர். அதனால் வழிபாட்டிற்குரிய மூலவரை அறிவுப் பார்வையில் பார்க்கத் தவறுகின்றனர். அதனால் பொதுமை நிலையில் இருந்து (Objectivity) தற்சார்பு நிலைக்கு (Subjectivity) மக்கள் தள்ளப் பெறுகின்றனர். எனவேதான், நம் நாட்டில் அறிவு மன்றங்களின் எண்ணிக்கையைவிட, இரசிகர் மன்றங்கள் ஆயிரக்கணக்கில் பெருகி இருக்கின்றன*5. ஒரே தலைமை நிலைபெற வேண்டுமானால், ஒரே நடிகன்/நடிகை வருவாய்ச் சந்தையில் நிலை குலையாமல் இருக்க வேண்டுமானால், திறமையைக் கணிக்கும் அறிவு நிலை வளர்க்கப்படக் கூடாது. திறமையை மறக்கும் உணர்வு நிலை, இரசிக நிலை வளர்க்கப்பட வேண்டும். எனவேதான், தமிழ் பேசும் பகுதிகளில் இரசிகர் மன்றங்கள் மிகுதியாக உள்ளன. இரசிகர் மன்றங்களே அரசியல் கட்சி மன்றங்களாகவும், இரசிகர் மன்ற மூலவர்களே அரசியல் கட்சித் தலைவர்களாகவும் அண்மையில் வளர்ந்து வருகின்றனர். இதிலிருந்து அரசியலும் உணர்வு நிலையை அடிநாதமாகக் கொண்ட இரசிகர் மன்றங்களைச் சார்ந்து வளர்ந்து விட்டமை தெளிவு. எனவே, தமிழ் பேசும் பகுதிகளில் அறிவு நிலை, ஆளுகைக்கு அடிப்படையாக இல்லை, உணர்ச்சி நிலையே அடிப்படையாக இருக்கிறது; அப்படித்தான் இருக்கமுடியும்*6.

வழிபாட்டுக்கு மூலதனமாக இருப்பது பக்தி அல்லது இரசிப்புத் தன்மை. இஃது ஒருவகை உருவம் இல்லாத போதை மருந்து; அருவபோதை. இரசிப்பு என்ற உணர்ச்சிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போதைக்கு அடிமையாகிவிடுகின்ற மக்கள் கூட்டத்திற்கு எது மேடு, எது பள்ளம், யார் நல்லவர், யார் கெட்டவர், எது இருட்டு, எது பகல் என்பன தெரியாது. தெரியக் கூடாது என்பதுதான் தலைமை வழிபாட்டைத் திட்டமிட்டு வளர்ப் போரின் திட்டம்.

எனவேதான், தலைமையைத் தொடர்ந்து நிலைபெறுத்த விரும்பும் ஆளுவோர், தலைமை வழிபாட்டிற்குரிய உணர்ச் சியைப் பெருக்கும் கருவிகளைத் தொலைநோக்கோடு திட்ட மிட்டுப் பெருக்குகின்றனர். அவர்கள் பெருக்கிவரும் இரசிப்பு வளர்ப்புக் கருவிகளாவன:

திரைப்படம்
ஏடுகள்
சாதிகள்
மதங்கள்
கட்சிகள்
மொழிகள்
கிரிக்கெட் முதலான விளையாட்டுகள்
மதுக் கடைகள்
உணவுக் கடைகள்

மேற்கண்டவை உணர்ச்சிப் போதைக்கு ஏற்கனவே அடிமைப்பட்டுப் பழகிப்போன மக்களுக்கு மேலும் மேலும் புதிய மொந்தைகளை வழங்கிக் கொண்டே இருக்கின்றன. இந்த மொந்தைகளில் மூழ்கிப் போன மக்கள் கண்ணிற்கு உண்மை தெரியாது. தலைமை வழிபாட்டின் கொடுமையான தீங்குகளுள் இது தலைமையானது ஆகும். ஐம்புல ஆசைகள் வளர்க்கப்பெற்று ஆறாம் புலத்தின் குரல்வளை நெரிக்கப் பெறுகிறது.

குறிப்புகள்

1. Paul Radin - Primitive Religion - Its Nature and Religion, pp - 5-6.

2. எல்லா இன மனிதர்களுக்கும் விலங்கு இயல்புகள் இருக்கின்றன. இனம் தோறும் விலங்கு இயல்பு கூடுதல் குறைவாக இருக்கிறது.

3. **விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
கற்றாரொடு ஏனை யவர் (410)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற திருக்குறளில் திருவள்ளுவர் கல்லாத (தமிழ்) மக்களை விலங்கு என்று குறித்தல் கருதத் தக்கது.

4. சாலை விதிகளைத் தில்லிவாசிகளும், சென்னை வாசிகளும் கடைப்பிடிக்கும் உண்மைப் போக்கைக் காட்ட இரண்டு நிழற்படங்கள் வெளியிடப்பட்டிருந்தன. சாலை விதியைத் தில்லிவாசிகள் மதித்துப் போற்றுவதையும் சென்னை வாசிகள் விதிகளைப் புறக்கணித்து அனைவர்க்கும் இன்னல் தருவதையும் அப்படங்கள் துல்லியமாகக் காட்டின (தினமணி நாளேடு 12.9.89)

5. 'மரத்தில் மறைந்தது மாமதயானை'
'கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்'

என்பன இங்கே எண்ணத் தக்கன.

6. Krishna Iyer's Statement, Hindu 28-8-89

பின்னிணைப்புகள்

1. 'அபூர்வ சகோதரர்கள்' என்ற படம் முத்தியாலுப் பேட்டையில் உள்ள சத்தியம் திரையரங்கில் 9.8.1989இல் வெளிவர இருப்பதையொட்டித் தார்ச் சாலையில்-சுண்ணாம்பால் மிகப் பெரிய எழுத்தில் $1\frac{1}{2}$ அடி உயரத்தில் கீழ்க்கண்ட வாசகங்கள் எழுதப் பெற்றிருந்தன.

1. WELCOME TO KAMAL FANS.
2. புதுமையை விரும்பும், எங்கள் அப்பு கமல் வாழ்க.
3. வேலு நாயக்கர், கமல் வாழ்க.
4. அபூர்வ சகோதரர்கள், கமல் வெற்றி வாழ்க.
5. நாட்டிய நாயகன் எங்கள் கமல் வாழ்க.
6. எங்கள் நாயகன் நடித்த அபூர்வ சகோதரர்கள் காணவந்த அன்பு இதயங்களுக்கு நன்றி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. அபூர்வ கமல் வாழ்க.

8. அபூர்வ சகோதரர் கமல் வாழ்க.

2. காம்பியா என்பது மேற்கு ஆப்பிரிக்காவில் ஒரு நாடு. பரப்பளவு: 19,680 கி. மீ. மக்கள் தொகை: 797,000. இந்நாட்டிலுள்ள திரையரங்கங்கள்: 14.

சென்னை நகரில் மட்டும்: 150 திரையரங்குகள்.

புதுச்சேரி என்ற சிறுநகரில் மட்டும்: 26 திரையரங்குகள்.

3. **புதுச்சேரியில் உள்ள திரையரங்குகள்**

1. அண்ணா
2. நியூடோன்
3. ரத்னா
4. இராமன்
5. இராஜா
6. ஜீவா
7. ருக்மணி
8. ஜெயராமன்
9. பாலாஜி
10. நவீனா
11. கந்தன்
12. ஆனந்தா
13. பால ஆனந்தா
14. அஜந்தா
15. ரேணுகா
16. அம்பிகா
17. வீனஸ்
18. சத்தியம்
19. முருகா
20. கண்ணம்மை
21. சேகர்
22. விஜயா
23. சண்முகா
24. வசந்தராஜா
25. ரமேஷ்
26. மல்லிகா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. POLITICS UNDER GRIP OF MAFIA: KRISHNA IYER

Naw Delhi, Aug. 27 : Mr. V. R. Krishna Iyer, a former Supreme Court judge protesting against the growing criminalisation of politics, said in a statement that if this "AIDS syndrome is not arrested, the coalition of brawn and politics will aspyxiate our democratic, especially electoral, processes".

He urged every sensitive nationalist, regardless of party affiliations, to initiate and strengthen a pan-Indian movement to eradicate the plague of the mafia-politician-tie-up" "Now or never is the cry of theh our", he said.

Mr. Krishna Iyer said, "Criminals are becoming politicians and politicians are becoming criminals.' Parties themselves are becoming vulnerable to pressure from notorious characters. This disease affects most political parties, some more than others".

Everywhere in the country, he said, "this spectre of criminalised politics and politicised criminality is 'seeking the blood of the people. "If we fail now, the government of the criminals, by the criminals and for the criminals through the political process is not far off' he said — Our Special Correspondent (The Hindu, dt. 28-8-89)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13

வழிபாட்டில் (தடு)மாற்றம்

வழிபாடு

மாந்தன் விலங்கு நிலையினின்று மாந்த நிலையை எய்தி, குழுவாகத் திரண்டு நின்ற போது மெல்லச் சிந்திக்கத் தொடங்கியதன் வெளிப்பாடே வழிபாடு. வழிபாட்டின் தொடக்க கால அடிப்படை அச்சமே. மாந்தனின் தொடக்க கால வாழ்வு, ஆயிரக் கணக்கான அபாயங்களால் சூழப் பட்டிருந்தது. அவற்றிற்கான காரண காரியத் தொடர்பு களைப் புரிந்துகொள்ள முடியாத போது, அவன் தன் சொந்த உடலின் இயக்கத்தையே மாதிரியாகக் கொண்டு ஒவ்வோர் இயற்கைப் பொருளுக் குள்ளும் ஒரு சக்தி இருக்கிறது என்று எண்ணினான். இயற்கையை வழிபட்டால், அது தன்னை ஒன்றும் செய்யாது என்று நம்பினான்; நன்மை செய்யும் என்று நம்பினான். விளைவு காற்று, மழை, மலை எனப் பலவற்றையும் வழிபடத் தொடங்கினான். பாம்பு வணக்கத்திற்கான பல காரணங்களுள் ஒன்று அச்சமே. அச்சத்தின் அடிப்படையில் தோன்றிய வழிபாட்டின் கூறுகள், உலகெங்கும் காணப்பட்டன; காணப்படுகின்றன.

முன்னோர் வழிபாடு

செத்துப் போனவர்கள் மனிதனின் கனவில் தோன்றி னார்கள். அவர்தம் தோற்றம் மனிதனுக்கு அச்சத்தை மூட்டியது. இறந்தவர், கொடியவராக இருந்து இறந்திருப்பின் கனவு காணும் மனிதனின் அச்சம் பெருகு கிறது. அன்றியும் இறந்தவன் நல்லவனாக இருந்திருப்பின் அவனது அன்பு இவர்களை வாட்டியது. எனவே அச்சமுறும் நிலையும், சற்றே சிந்தனை வளர்ந்த நிலையும் முன்னோர் மேல்அன்புறும் நிலையும்பண்டை மாந்தனின் வழிபாட்டிற்குக் காரணங்கள் ஆயின. முன்னோரே கடவுள் ஆயினர். கடவுள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற சொல்லைக் குறிக்கும், பழங்குடி மக்கள் சிலரின் அகராதியில், 'இறந்த மனிதன்' என்பதே பொருளாக உள்ளது. எகிப்து, ரோம், மெக்சிகோ, பெரு ஆகிய நாடுகளில் அரசன் இறப்பதற்கு முன்பே கடவுளாக வழிபடப் பட்டான். அலெக்சாண்டர் தன்னைக் கடவுள் என்றே வெல்லப்பட்ட மக்களை நம்புமாறு செய்தான். கத்தோலிக்கக் கிறித்துவத்தில் ஆண்டவர் 'போப்' எனவும், அவரே அரசர் எனவும் இருந்த காலங்கள் உண்டு. தமிழில் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்' என்ற இலக்கிய வழக்கை எண்ணுக. ஆளுகை செலுத்திய அரசனைக் குறிக்கும் ஆண்டவன் என்ற சொல்லே மக்கள் வழக்கில் கடவுளைக் குறித்தல் காணுக. மாயோன் என்ற பெயரில் 'மாய்', 'மாய்ந்தவன்' என்ற குறிப்பும், 'சிவன்' என்ற பெயர் அழிவோடும், சுடலையோடும் தொடர்புற்றுச் சுடலை ஆண்டி என வழங்கும் குறிப்பும் எண்ணத் தக்கவை. கை கூப்புதல், தலை வணங்குதல், மண்டியிடுதல் போன்ற கடவுள் முன்னிலைச் செயல்கள், குழுத் தலைவனுக்கு அடிபணிந்ததையே நினைவூட்டுவன வாகும்.

தமிழ்நாட்டில் இருந்த நடுகல் வழிபாடு, இறந்த வீரனைப் போற்றி வணங்குவதே யாகும். தமிழகத்தில் உள்ள பல கோயில்கள் ஆண்டு மறைந்த மன்னவர்களுக்கு எழுப்பப்பட்ட பள்ளிப் படை மேல் எழுப்பப்பட்டனவே ஆகும். நன்றாக வாழ்ந்த மனிதர் இறந்த பின் சமாதி எழுப்பப்பட்டு வழிபடப் படுதல் தமிழர்தம் பொது வழக்கமாகும். கோயில் வழி பாடாகவே இன்றும் இலங்கி வருதலை (நெல்லை) ஏரல் போன்ற ஊர்களில் காணலாம். சிற்றூர்களில் உள்ள (ஆண்) சிறு தெய்வங்கள் எல்லாம் ஒருகாலத்து ஊரில் வாழ்ந்த மாடனும், சூரனும், ஐயனும் ஆவர்.

இறந்த முன்னோர்தம் உருவை நினைவு கூர்ந்து உருவை அமைத்து வழிபட்ட வழிபாடே, தமிழகத்தில் உருவ வழி பாட்டைத் தோற்றுவித்திருக்க வேண்டும். நடுகல்லில் உருவம் பொறித்து நாட்டி வழிபட்டதைச் சங்க இலக்கியங்களும் காட்டுகின்றன.

தமிழர் இயற்கை வழிபாட்டினராய் இருந்ததை, அவர் தம் மழை வழிபாடு காட்டுகிறது. மழையை 'மாரி' என்ற பெயரில் தாமாக உருவகித்து வழிபட்டனர். தமிழரிடமிருந்து மிகப் பழைய, மிகப்பெருகிய வழிபாடு மாரி வழிபாடே ஆகும். மாந்த இனத்தின் தலைமை வழிபாடான தாய்த் தெய்வ வழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டின், தமிழக வடிவமே மாரி அல்லது அம்மன் வழி பாடகும். மாரி வழிபாடு பொதுமக்கள் (Folk) வழிபாடாகப் பரவி இருந்துள்ளது. அரசர், வணிகர்தம் ஆண் வழிபாட்டுத் தெய்வங்களைப் பேரளவு பதிவு செய்த சங்க இலக்கியம், அம்மன் வழிபாட்டிற்குப் பொது மக்கள் வழிபாடு என்பதால் தலைமை கொடுக்க வில்லை போலும்! எனினும், பாவை நோன்பு, பாவை வழிபாடு என்பன பண்டைய தாய்த் தெய்வ வழிபாட்டின் எச்சங்களே. பாவைப் பாடல்கள், மழை பொழிதலோடு சார்த்திப் பாடப் படுவதும் கருதத்தக்கது.

முருகன் வழிபாடு, பண்டைத் தமிழர்தம் தலைமுறை வழிபாட்டும். முருகனைக் கொற்றவை மகனாகவும் பழையோள் குழவியாகவும், திருமுருகாற்றுப்படை குறிப்பது எண்ணத்தக்கது. முருகனின் தாயைப் 'பழையோள்' என்று பழைமை குறித்துச் சுட்டுவது, பழைய தாய்த் தெய்வ வழிபாட்டை நினைவு கூர்வதாகும்.

ஆரியர்தம் வரவும், உறவும் நேர்ந்த பிறகு, தமிழர்தம் வழிபாட்டுத் தெய்வங்களும் முறைகளும் மாறின. ஆரியர், ஆணுக்குத் தலைமை கொடுக்கும் வழிபாட்டினர். எனவே, கொற்றவை பாலைக்குத் துரத்தப்பட்டாள் (கொன்—தவ்வை —வெற்றித் தாய்). அவன் மகன் முருகன் முதன்மைக்குக் கொணரப்பட்டான். அவனுக்கு மேலே, சிவன் தந்தையாக்கப் பட்டான். கொற்றவை தாயாக்கப்பட்டாள். பார்வதியின் தந்தை தட்சனுக்கும், சிவனுக்கும் ஊடே இருந்த பகை வரலாறு, ஆரிய திராவிடத் தெய்வப் போட்டியைக் காட்டுவதே யாகும். திராவிடத் தெய்வம் ஆரியத் தெய்வத் தால் ஏற்கப்படவில்லை. ஒருவகையான சமாதானம் செய்யப் பெற்றது. சிவன், பெருமாள் கோயில்களில் அம்மன் சந்நதி தனியே இருப்பது எண்ணத் தக்கது.

நேரே நடுகல்லைக் கும்பிட்டுப் பூவும் நெல்லும் தூவி வழிபட்ட நிலை மாற்றப்பட்டது. இடையே புரோகிதர் அறிமுகமானார். புதிய மொழி அறிமுகமாகியது. கருவறைக் குள்ளே கடவுள் அமர்த்தப்பட்டார்; பொதுமக்கள் வெளியே நிறுத்தப்பட்டனர்.

தமிழர் புதிய தெய்வங்களுக்கும், புதிய வழிபாட்டு முறைகளுக்கும் பழகிப் போயினர். பக்திக் காலத்தில், சிவமால் வணக்கம், புது வேகத்துடன் பரப்பப்பட்டது. அரசர்கள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமயவாணர்கள் ஆகியோர்தம் முழு மூச்சும் பேச்சும் சிவமால் வணக்கங்களாக இலங்கியதைப் பக்தி இயக்கக் காலத்தில் பார்க்கிறோம். சமயவாணர் என்ற புரோகிதக் குல மரபே இக்காலத்தில் தனிப் பிறப்பு எடுக்கிறது. ஆரிய திராவிடத் தெய்வங்களின் திட்டமிட்ட ஒருங்கிணைப்பு இக் காலத்தில் முழு நிறைவு பெறுகிறது.

சோழர்கள், கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் பேரெழுச்சி கொள்ளும் போதும், மால் வழிபாடு சற்றே குன்ற எங்கும் எதிலும், சிவ வழிபாடு பரப்பப்படுகிறது. இந்நிலை, நாயக்கர்கள் காலம் வரை தொடருகிறது. நாயக்க மன்னர்களில் பெரும்பாலோர் வைணவர்என்பதால் பெருமாள் வழிபாடு புத்தெழுச்சி பெறுகிறது. பல சிவன் கோயில்கள், பெருமாள் கோயில்கள் ஆயின. திருப்பதியில் இருந்த முருகன் கோயில், வேங்கடாசலபதி கோயிலாக உருவம் கொண்டது.

கோயில் என்று பெயர் படைத்த சிதம்பரத்திற்கும், பெரிய கோயில் என்று பெயர் படைத்த தஞ்சாவூருக்கும், இன்ன பிற சிவன் கோயில்களுக்கும் சென்று கொண்டிருந்த மக்கள், திருப்பதி நோக்கித் திருப்பப்பட்டனர். திருத்தணிக் கூட்டம், திருப்பதி மேல் நாட்டங் காட்டியது.

இசுலாம் பரவிய வேளையில், பௌத்த வழிபாட்டிற்குப் பெயர் பெற்றிருந்த நாகப்பட்டினத்தின் பௌத்த விகார், இசுலாமியத் தர்க்காவாக உருவம் பெற்றது. நாகூர் ஆண்டவர் பிறப்பெடுத்தார்.

சிவத் தலங்களுக்கும் வைணவத் தலங்களுக்கும் பெயர் பெற்ற தஞ்சை மாவட்டம் வேளாங்கண்ணியில், புதிய மாதா கோயில் எழுந்தது. பழைய தெய்வங்களை ஒருபுறம் நிறுத்திய மக்கள், திருப்பதி, நாகூர், வேளாங்கண்ணி என்று பல இடங்களுக்கும் செல்லலாயினர்.

இந்து சமய ஒருங்கிணைப்பு முயற்சி இசுலாமியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப் பெற்று, ஐரோப்பியர் காலத்து வளர்க்கப் பெற்றது. கி.பி. 5ஆம் நூற்றாண்டில், வட ஆரியர் வரவால், உருவம் பெற்ற பக்தி இயக்கம், பலவேறு இடையூறுகளைத் தாண்டி, கி.பி. பதினைந்தாம் நூற்றாண் டளவில் வளர்ச்சி பெற்றது. அதன் விளைவாக, 'காசி' தமிழர்க்கு வழிபாட்டுத் தலமாயிற்று. இராமேசுவரமும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குமரியும் வட இந்தியருக்கு முதன்மைத் தலங்கள் ஆயின; அரசியல் ஒருங்கிணைப்பிற்காகச் சமய ஒருங்கிணைப்பு உருவாக்கப்பட்டது.

ஐரோப்பியர் விடைபெறும் 1947 வாக்கில், திருப்பதி, காசி என்பவற்றிற்கு முதன்மை கொடுத்து வந்த தமிழர், குறிப்பாக, 1960 வாக்கில் சற்றே மாறத் தொடங்கினர். சென்னைக்கு அருகில் உள்ள திருவேற்காடு கருமாரியம்மன் புதிய அருள் கொடுக்கும் தெய்வமானாள். ஞயிற்றுக் கிழமை தோறும் கூட்டம்! சில ஆண்டுகளில் திருவேற்காட்டிற்கு வருங் கூட்டம் குறைந்தது. சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள மாங்காட்டம்மன் பெருங் கூட்டத்தைச் சந்திக்கத் தொடங்கினாள். சில திங்களில் மாங்காடும் ஒய்வு பெற்றது. சென்னை-திண்டிவனம் சாலையில் உள்ள மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி முதன்மை பெறத் தொடங்கினாள். தற்போது கர்நாடகத்தில் உள்ள மூகாம்பிகை அம்மன் தலைமைத் தெய்வமாக ஆகத் தொடங்கியுள்ளாள்.

இவையன்றி, சுமார் 1965 முதல், தமிழகம் எங்கும் புது வழிபாடு ஒன்று அறிமுகமாகிக் கிளர்ச்சி பெற்றது. அது ஐயப்ப வழிபாடு ஆகும். முன்பு, குமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும், ஓரளவே கேரளாவிலிருந்தும் அறிமுகமாகி யிருந்த ஐயப்ப வழிபாடு, தற்போது தமிழகத்தில் சிற்றூர், பேரூர் எங்கும் பரவியுள்ளது. படித்தவர், படிக்காதவர் என அனைவரிடமும் பரவியுள்ளது. ஆண்-பெண் சமத்துவம் அனைத்துலகிலும் பெருகி வரும் இந்நாளில், ஐயப்ப வழிபாடு, பெண்ணுக்கு உரிமை யுடையதன்று. ஆணுக்கு உரிமை யுடையதாகும்.

பிள்ளையார் வழிபாடு, தமிழர்தம் முன்னோர் வழிபாடு அன்று. கி.பி 7-ஆம் நூற்றாண்டளவில் பல்லவ மன்னர்களால் தமிழகத்திற்குக் கொண்டு வரப் பெற்றது. அரசையும் வேம்பையும் தலைமுறை தலைமுறையாகத் தமிழர் வழிபட்டு வந்த ஆறு, குளக்கரைகளிலும், சந்திப்புகளிலும் பிள்ளையார் இடம்பெற வைக்கப் பெற்றார். அண்மையில் பம்பாய் முறையைக் கண்மூடிப் போற்றிப் பதினாறு அடி உயரப் பிள்ளையார் செய்யப் பெற்றுச் சென்னை மெரீனா கடற் கரைக் கடலில் கரைக்கப் பெற்றது. புதுவகைச் செல்வாக்கிது (செய்தியும் நிழற்படமும்: தினமணி: 12.09.89).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீன் பார்வை

சைன, பௌத்த, இசுலாமிய, கிறித்துவ வழிபாட்டு வரவுகளை விலக்கி விடலாம். இவையல்லாத வைதிக வழிபாட்டில் பெருநாட்டம் கொண்ட தமிழர்தம் வழிபாட்டு வரலாற்றில் நேர்ந்திருக்கும் (தடு) மாற்றங்களைக் கூர்ந்து காணுக.

1. இயற்கை வழிபாடு
2. தாய்த் தெய்வ வழிபாடு
3. மாரி (மழை) வழிபாடு
4. முருக வழிபாடு
5. சிவ வழிபாடு
6. பெருமாள் வழிபாடு
7. வடபுலத் தல வழிபாடு
8. திருப்பதி வழிபாடு
9. கருமாரி வழிபாடு
10. மாங்காட்டம்மன் வழிபாடு.
11. மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாடு
12. மூகாம்பிகை வழிபாடு
13. நாகூர் ஆண்டவன் வழிபாடு
14. வேளாங்கன்னி மாதா வழிபாடு
15. ஐயப்ப வழிபாடு

இப்படிக் காலந்தோறும், புதுப்புது வழிபாட்டுக் கோலங்களைத் தமிழர் மேற்கொள்வதற்குக் காரணங்கள் எவை?

இந்தியாவிலேயே கோவில்கள் தமிழ் நாட்டில்தான் மிகுதி. இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களில் அச்சாகும் மொத்த லாட்டரிச் சீட்டுகளில் 60—70 சதவீதம் வரை, தமிழ் நாட்டில்தான் விற்பனையாகின்றன. அவற்றுள் கோயில் முன் விற்பனை ஆவன மிகுதி. வெள்ளி, செவ்வாய், ஞாயிற்றுக் கிழமைகளில் விற்பனை மிகுதி. காரணம் அவை சிறப்பு நாள்கள்.

இக்குறிப்புகளிலிருந்து, தமிழரைப் பற்றிப் பொதுவான சில முடிவுகளுக்கு வர முடியும். தமிழர்கள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. உழைப்பை விட அதிருஷ்டத்தில் மிகுந்த நம்பிக்கை உடையவர்கள்.

2. மலிவான பொழுது போக்கில் நாட்டமுடையவர்கள்.

3. மிகுதியான குடிப்பழக்கம் உடையவர்கள்.

4. தன்னம்பிக்கை குறைந்தவர்கள்.

எனவே தன்னம்பிக்கை இன்மையால், உழைத்து வளர முடியும் என்ற நம்பிக்கை இருப்பதில்லை. உழைத்தால் உயர முடியும் என்ற கண்கூடான நடப்பை-நம்பிக்கையை உள் நாட்டு அரசியல், சமூகச் சூழல்கள் தமிழர்களுக்குத் தருவதும் இல்லை. தமிழகத்தில் தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் அரசுகள், இலக்கியங்கள், மரபுகள், மதங்கள், நம்பிக்கைகள், வெற்றி தம்முன்னே இருக்கிறது என்ற உண்மையைப் படிப்பிப்பதற்குப் பதிலாக, வெற்றி வெளியே இருக்கிறது என்றே படிப்பித்து வந்திருக்கின்றன. வெற்றி எங்கே இருக்கிறது? உன் உழைப்பிலா இருக்கிறது? உன் உழைப்பில் மட்டுமா இருக்கிறது; இல்லை, இல்லவே இல்லை. அது, அதிருஷ்டத்தில் இருக்கிறது; அந்தக் கோயிலில் இருக்கிறது; அந்தச் சாமியாரிடத்தில் இருக்கிறது; அந்தத் தலையெழுத்தில் இருக்கிறது! இத்தகு எண்ணங்கள், தமிழர் நெஞ்சில் படிந்து ஊறி உறைந்துவிட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14

இவர்தம் இலக்கியக் கல்வி

ஐரோப்பியர் வரவிற்குப் பிறகு இந்தியாவில் பொதுக்கல்வி நிறுவனங்கள் நிறுவப் பெற்றன. இந்நிறுவனங்கள் நிறுவப் பெறுவதற்கு முன்பு தமிழ் மொழிக் கல்வியும், இலக்கியக் கல்வியும் அரசர்களால் தனியே கற்பிக்கப் பட்டமைக்குச் சான்றுகள் இல்லை. மொழி ஆர்வம் உள்ளோர் தனிப்பட்ட அறிஞர்களை அணுகி அவர் இல்லத்திலேயே தங்கிப் பயின்ற செய்தி தலைமுறை தலைமுறையாகப் பேசப்பெறுகிறது. ஈதன்றித் திண்ணைப் பள்ளிகளும் தமிழ்மொழிக்கல்வியையும், இலக்கியக் கல்வியையும் ஓரளவு வளர்த்து வந்துள்ளன. மற்றபடி கல்வி நிறுவனங்கள் வழியாக இலக்கியப் பாடம் கற்பிக்கப் பெற்றதாகத் தெரியவில்லை.

1898-1905இல் இலார்டு கர்சன் காலத்தில் தமிழ் மொழி வழிப் பாடங்கள் பள்ளிகளில் இடம் பெற்றன. சென்னைப் பல்கலைக் கழகம் உருவான பின்னர்த் தமிழும் சமஸ்கிருதமும் கலந்த வித்துவான் பட்டய வகுப்பு, கற்பிக்கப் பெற்றது. தமிழ் இலக்கியக் கல்வி, பல்கலைக் கழகப் பட்ட வகுப்பு பி.ஏ.ஆனர்சு நிலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முதலான இடங்களில் இடம் பெற்று விரிவடைந்து. பிற்காலத்தில், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முதன்முதலாகப் பி.ஓ.எல் வகுப்புத் தொடங்கப் பெற்றது. பின்னர் அதுவே எம்.ஏ வகுப்பாக வளர்ச்சி பெற்றது.

பள்ளிகளிலும், பல்கலைக் கழக இடைநிலை வகுப்புகளிலும் (Intermediate) தமிழ் மொழி பாடமாக இருந்தமையால் அதனைப் பயிற்றுவிக்க ஆசிரியர்கள் தேவைப்பட்டனர். எனவே, இலக்கியக் கல்வி பல்கலைக் கழகப் பட்ட வகுப்பு களுள் ஒன்றாகத் தொடர்ந்து இடம் பெற்று வந்தது. எனினும் தொடக்க முதலே தமிழ்க் கல்விக்கு வருவோர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. வந்தவரும் வேறு பாடப் பொருள் கள் கிடைக்காத நிலையிலேயே வந்தனர். இதற்கு விதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விலக்காக ஆர்வத்தின் காரணமாக வந்தவர் மிகச் சிலரே. ஆர்வத்தால் வந்தவர் இருபத்தைந்து விழுக்காட்டிற்குக் குறைவாகவே இருந்தனர்.

மேற்கண்ட நிலை 1947இல் விடுதலை பெற்ற பிறகும் நீடிக்கிறது. இன்றும் தமிழ்க் கல்விக்கு வருவோர் எண்ணிக்கை குறைவாக உள்ளது. வருவோர்க்குள் மிகுதியானோர் வேறு வழி இல்லாமல் வந்தவராகவே உள்ளனர். தமிழ்க் கல்வியின் தரக் குறைவிற்கு உரிய காரணங்களுள் இதுவும் ஒன்று. தொடர்ந்து தமிழ்க் கல்வி பெற்று வரும் புறக்கணிப்பை நாம் ஆராய்தல் வேண்டும். புறக்கணிப்பிற்கு உரிய காரணங்கள் ஆவன:

1. இலார்டு கர்சன் காலத்தில் இருந்து ஆங்கில மொழியே முதன்மை பெற்று வருகிறது. ஐரோப்பியர் வரவிற்கு முன்பு சமஸ்கிருதம் முதன்மை பெற்று இருந்தது. சிற்சில இடங்களில் பாரசிகம், இசுலாம் ஆகியவை முதன்மை பெற்று இருந்தன. நாடு உரிமை பெற்ற பிறகு, தமிழ்க் கல்வி அரசு அளவில் முதன்மை பெற்று இருக்க வேண்டும். ஆனால், பெறவில்லை. எனவே, தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் இரண்டாம் மொழி நிலையிலேயே தமிழ், செயல் அளவில் தொடருகிறது.

2. நினைவு தெரிந்த நாளில் இருந்து தமிழர்கள் ஏதேனும் ஒரு மொழியை அண்டியே வாழப் பழகிவிட்டதால், அவர்கள் தம் மொழி பற்றிய தாழ்வுணர்வு கொண்டுள்ளனர். எனவே, தம் மொழிக் கல்வியைவிட வேற்று மொழிக் கல்வியை அரை குறையாகப் பெறுவதில் கூட அன்னோர் மதிப்புக் கொண்டுள் ளனர்; அக்கறை காட்டி வருகின்றனர்.

3. ஒருவர் பயிலும் கல்வியால் அவருடைய வேலை வாய்ப்புத் தீர்மானிக்கப் பெறுகிறது. தமிழ் பேசும் பகுதி களில் தமிழில் படிப்பவரைவிட, ஆங்கில மொழிவழிப் படிப்ப வருக்கே வேலை வாய்ப்புக் கூடுதலாக உள்ளது. எனவே, கூடுதலான வேலை வாய்ப்பைத் தரும் கல்வியை ஒருவர் நாடுதல் தவிர்க்க முடியாதது.

4. தமிழர் தொடர்ந்து அடிமையாக அடங்கியே நூற்றாண்டுகளாக வாழ்ந்தமையால் தம் மொழியின் வளமை பற்றி அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. வாய்ப்பு இருப் பினும் அதனைக் கருத்தில் கொள்வது இல்லை. தாழ்வுணர்ச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சியால் ஏற்படும் பேரிழப்புகளுள் இதுவும் ஒன்று. இதனாலும் இலக்கியக் கல்வி புறக்கணிக்கப்படுகிறது.

5. இலக்கியக் கல்வி புறக்கணிக்கப் பட்டுள்ளமைக்குத் தமிழ்ப் பாட அமைப்பும் பிறிதொரு காரணம் ஆகும். குறிப்பாகப் பல மொழி பேசும் நாட்டில் வாழுகின்ற கட்டாயத்தில் அகப்பட்டுக் கொண்ட தமிழர் வேற்று மொழி அறிவைப் பெறாதபோது பின்னுக்குத் தள்ளப்படுவதுஇயற்கை. ஏனைய பாடங்கள் படிக்கும் மாணவர்களை விடத் தமிழ்க் கல்வி படிக்கும் மாணவர்கள், தமிழ் ஒன்று மட்டுமே அறிந்தவராக உருவாக்கப் பெறுகின்றனர். இவ்வொரு மொழி அறிவு, வேறு மொழி மீது வெறுப்பாகவும், தம் மொழிமீது குருட்டுப் பற்றாகவும் வெளிப்படுகிறது. எனவே, வேறு மொழி தெரிந்தோர் பார்வையில் தமிழ் மொழி மட்டும் கற்றோர் என எளிதில் புறக்கணிப்பிற்குத் தமிழ் மாணாக்கர் உள்ளாகின்றனர்.

6. வேறு துறை அறிவு பெறும் வாயிலாக இருக்கும் வேற்று மொழிக் கல்வி விலக்கப் பெறுவதால், தமிழ்க் கல்வி வெறும் இலக்கியக் கல்வியாக இருந்து வருகிறது. வேற்று மொழியைப் புறக்கணித்ததுபோல இலக்கியக் கல்விக்குமிக உறுதுணையான சமூகவியல், உளவியல், அறிவியல், தர்க்கவியல் முதலான பாடங்களும் தமிழ்க் கல்விப் பாடத்தில் இடம் பெறுவதில்லை. இதனால், தமிழ்க் கல்வி கற்கும் ஒருவர் ஏனைய பாடங்கள் அறிந்தவர்முன்னிலையில் பல துறை ஞானக் குறைவாகஇருக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. புதிய அறிவியலைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பும் அற்றுப் போகிறது. எனவே, தமிழ் கற்றவருக்கு என்ன தெரியும் என்ற மதிப்பீடு உருவாகிவிடுகிறது. வேறுமொழி தெரியாதவர்கள், வேறு பாடப் பொருள்கள் தெரியாதவர்கள் என்ற மதிப்பீட்டை உண்மைப்படுத்தும் படியாகத் தொடர்ந்து தமிழ் இலக்கியப் பாடங்கள் இருந்து வருகின்றன. சமூகப் புறக்கணிப்பிற்கு இதுவும் ஒரு காரணம்.

7. புதிய அறிவியல், பயிற்று முறையை வெகுவாக மாற்றி விட்டது. வகுப்புச் சொற்பொழிவு முறையையே புதிய அறிவியல் முறை மிகக் குறைத்து விட்டது. கரும்பலகைகள், புரிசோதனைக் கூட நிகழ்ச்சிகள், படவில்லைகள், தொலைக் காட்சிகள் என்று கருத்து உருவங்களை எல்லாம் காட்சி உருவங்களாக அண்மைக் கல்வி முறை மாற்றிவிட்டது. எனவே, விளக்கங்களே (Demonstrations) பேரிடம் பெறத் தொடங்கி விட்டன. இந்நிலையில் தமிழ்க் கல்விப் பயிற்று முறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடர்ந்து சொற்பொழிவு முறையிலேயே மேற்கொள்ளப் பெறுகிறது. மேற்கண்ட விளக்க முறைகள் பெரும்பாலும் தமிழில் இடம்பெறுவது இல்லை.

8. விளக்க முறைகள் குறைவானப் பாடங்களில் கூடத் தற்போது சொற்பொழிவு முறை குறைக்கப் பட்டுக் கலந்துரையாடும் முறை வளர்க்கப் பெற்று வருகிறது. ஒரு பொருள் பற்றி ஆசிரியரும், மாணாக்கரும் காட்சிப்படுத்தல் வேண்டும். அப்பொருளை மையமாக வைத்து இருவரும் கலந்துரையாடல் நிகழ்த்துதல் வேண்டும். இக்கலந்துரையாடலில் மாணாக்கரின் பங்களிப்புத் தலைமையானது. வழிப் படுத்தும் பொறுப்பே ஆசிரியருக்கு உரியது. இக்கலந்துரையாடல் முறைக்குத் தமிழ்க் கல்வி இன்னும் தன்னை ஆயத்தம் செய்து கொள்ளவில்லை. இக்காரணங்கள் மாணாக்கர்கள் வழி வெளியே பரவிப் புதிய மாணாக்கர்கள் வரத்துக் குறைகிறது அல்லது புறக்கணிப்பிற்கு உள்ளாகிறது.

9. தமிழ்க் கல்வியைப் பொதுக் கூட்டக் (Mass Education) கல்வியாக அண்மைக் காலத்தில் பல்கலைக் கழகங்கள் மாற்றி விட்டன. வேற்று மொழிப் பாடம் பற்றிய, பொருள் பற்றிய பாடங்கள் குறைவு என்பதாலும், தாய்மொழி மட்டுமே படிக்க வேண்டும் என்பதாலும், யார் வேண்டுமானாலும் முதுநிலை படிக்கலாம் என்ற திறந்த வீட்டு முறையாலும், மூலைக்கு மூலை முதுநிலைக் கல்விப் பாடங்களைத் திறந்து விட்டமையாலும், பல பல்கலைக் கழகங்கள் அஞ்சல் வழிக் கல்வியை நடத்துவதாலும், தமிழ்க் கல்வி, பொதுக்கூட்டக் கல்வியாக மாறிவிட்டது. எண்ணிக்கை மிகுந்தால் தரம் குறைந்து போவது தவிர்க்க முடியாதது; மலிவு என்று பெயர் வாங்குவதும் தவிர்க்க முடியாதது; பெரும் மதிப்பைப் பெற முடியாமல் போவதும் தவிர்க்க முடியாதது. ஏனைய வளர்ந்த நாடுகளைப் போல முதுநிலை இலக்கியக் கல்வி சிறந்த மாணாக்கர்களுக்கு மட்டுமே என்ற நிலை இந்தியாவில் இல்லை. இதன் எதிரிடையாகச் சிறப்பற்ற அல்லது போதிய தகுதியற்ற மாணாக்கர்கள் அனைவரும் எளிதில் புகும் பொதுக்கூடமாகத் தமிழ் இலக்கியக் கல்வி அமைந்து விட்டது. புறக்கணிப்பிற்கு இதுவும் ஒரு காரணம்.

10. இந்தியாவில், குறிப்பாக, தமிழ் நாட்டில் அண்மைக் காலமாக ஆங்கில வழிப் பள்ளிகள் புற்றீசல் போலப் பெருகி விட்டன. எனவே, மழலைக் கல்வி, தொடக்கக் கல்வி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் வழிக்கல்வி அனைத்துமே ஆங்கில மொழி வழியாகக் கற்பிக்கப் பெறுகின்றன. இச்சூழலில் ஆங்கில வழிக் கல்வி தலைமை இடத்தைப் பெற்றுவிட்டது. அதுவும் விடுதலை பெற்ற நாட்டில், வேற்று மொழி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறாமல் இந்நிலை நேர்ந்து விட்டது. எனவே, தாய்மொழிக் கல்வியைப் புறக்கணிப்பதே நாகரிகம் என்ற கருத்தும், மனப்போக்கும் நேர்ந்துவிட்டன. இந்நினைப்புத் தமிழ் மட்டுமே கற்கும் இலக்கியக் கல்வியைப் புறக்கணிப் பதை உறுதியாக்கி விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடைவு

எண்=பக்க எண்

அகவாழ்வு பாவமானது 76
அடக்குதல் (Repression) (மனத்தை) 77
அடிமை விருப்பம் 186
அயல்மொழி மக்களின் வரவு 48
அரசன்-மக்கள் தொடர்பு குறைவு 47
அரசியல் சாசனத்தில் சாதி அங்கீகரிப்பு 53
அரசியல் பேசுதல் கூடாது 23
இசுலாமியப் படையெடுப்பு 19
இந்தியா மதச்சார்புடையது 53
இந்து சமய ஒருங்கிணைப்பு 195
இரத்தல் எதிர்ப்பு 80
இரத்தல்
புலவர் 80
வறிஞர் 80
கலைஞர் 80
இராசிபலன் 124
இராசிபலன் எதிர்ப்பு 130
இராசிபலன் சொற்குறியீடுகள் (சோர்வைத் தருவன) 147 149
இராசிபலன் சோதிடக் கலையாதல் 128
இராசிபலன் தொடர்புகள் 140, 144
இராசி பலன் நோக்கம் 125
இராசி மண்டலத்தின் மனைகள் 150
இராணுவச் செலவு 27
ஈகை 81
ஈகைக் கோட்பாடு 81, 82
உடன்கட்டை யேறுதல் 156
உணர்ச்சிக்கு முன்னுரிமை 109
உணர்ச்சிப் போதை 187
எச்கிமோக்களிடம் தற்கொலை 158
ஐயப்ப வழிபாடு 197
ஒப்பாரி 178
ஒற்றுமையின்மை 45
ஒன்றியமாதல் (Identification) 177
கட்சிகள் 51
கட்டபொம்மன் தூக்கிலிடப்படல் 32
கண்ணகியின் துணிவு 33
கல்விப்பின்னடைவு
கல்வெட்டு-பழைய சுவரொட்டி 109
கருத்துக் குருடாதல் 185
கிரிக்கெட் எனும் போதை 21
கிரேக்கத்தில் சோதிடம் 129
கொத்தடிமைகள் 20
சதி 156
சப்பானியரிடம் தற்கொலை 157
சமுதாயப் பலகீனங்கள் 17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமுதாயப் பின்னடைவு 61
சமூகக் கட்டொருமைப்பாடு 28
சல்லேகனை—155
சாதி 52—63
சாதிக் கொடுமை 21
சாதிச் சலுகைகள் 53
சாதிமதப் பிரிவினைகள் 47
சிஞ்சு=தற்கொலை 157
சிவனடியார் பிச்சை 80
சிறை:
  மொழிச்சிறை—24
  இனச் சிறை —24
  மதச் சிறை —24
  சாதிச் சிறை —24
சுவரில் முட்டிக் கொள்ளுதல் 72
சுவரொட்டிப்பகை 113, 114
சுவரொட்டிப் பண்பாடு 107
சுவரொட்டி விளைவுகள் 109
சென்னை நகரில் மிகுதியான தற்கொலைகள் 20
சொற்பொழிவுக் கல்வி முறை 201
சோதிடக் கலை 128
டெல்பி—கிரேக்கச் சோதிடத்தெய்வம் 129
தடுத்தல் (Inhibition) (மன உணர்வை) 77
தமிழ் இலக்கியக் கல்வித் தளர்ச்சி 201
தமிழ் பற்றிய தாழுணர்வு 201
தமிழ்ப்பாட அமைப்பு 202
தமிழகத்தின்மீது இசுலாமியப் படையெடுப்பு 19
தமிழர்கள் அஞ்சும் குணத்தினர் 19
தமிழர்கள் உணர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்தல் 109
தமிழர் போர்க்குணம் அற்றவர் 18
தமிழர்களிடையே சமுதாய உணர்வு இல்லாமை 29
தமிழரின் தொன்மை இராசி பலன் 127
தமிழரின் தொன்மை விளம்பரச் சாதனங்கள் 115
தமிழிலக்கியத்தில் காலக் கணிப்புகள் 136—139
தமிழுக்கு இரண்டாம் நிலை 201
தலைமை இன்மை 49
தலைமை வழிபாட்டின் கொடூரம் 183
தலைமை வழிபாட்டின் வளர்ச்சி 178
தலைமை வழிபாடு 189—192
தலைமை வழிபாடு நீக்கும் வழிகள் 180, 181
தலைமை வழிபாடு பிரச்சாரம் 179
தலைமை வழிபாடு மாறாமை 178
தற்கொலைக் காரணங்கள்
  அரசியல் 154
  பொருளியல் 154
  மதம் 154
  போர் 155
தன்னுணர்வு 228

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாய்த் தெய்வ வழிபாடு 194
தாழ்வு உணர்வு நோய் 111
தானுணர்வு தற்கொலைக்குக் காரணமாதல் 28
திட்டல் வகைகள் 72, 73
திட்டும் வழக்கம் 71
திராவிட ஆரியத் தெய்வக் கலப்பு 194
திருவள்ளுவத்துக்கு எதிரான போக்குகள் 50
திரைப்படப் போதை 22
நடுகல் வழிபாடு 193
நவகண்டம் 160
நாம் உணர்வு 28
நாமுணர்வு தற்கொலையைத் தடுத்தல் 28
படிப்பின்மை 47
பணநோக்கு 51
பரம்பரைத் தலைமை 186
பரிசுச் சீட்டு 20
பழம்பெருமை 17
பழமை நோய் 18
பிச்சை எடுக்கக் காரணங்கள் 91
பிச்சை எடுத்தல் 79
பிள்ளையார் வழிபாடு 197
பின்பற்றுதல் இல்லாமை 50
புத்திக் குறைவு 185
புலவர் 80
புள்ளி விவரங்கள்:
இராசிபலன் 134 151
சண்டைக்காட்சி 37 44
சாதிவாரி மணமக்கள்
விளம்பரம் 64 70
சுவரொட்டி 119 123
பிச்சைஎடுத்தல் 83 93
விளம்பரங்கள் 101 106
பொது இடத்தில் அவலம் 34
பொதுக் கூட்டக்கல்வி (Mass Education) 202
பொதுமக்கள்—அரசன் தொடர்புகுறைவு 47
பொருளாதாரப் பின்னடைவு 61
பொருளியல் 25
மக்களைத் திசை திருப்புதல் 21
மனமுறிவு 72
முன்னோர் வழிபாடு 191
மேலனேஷியாவில் தற்கொலை 157
வடக்கிருத்தல் 159
வரதட்சணை 21
வறிஞர் இரத்தல் 80
விண்மீன்களுக்குரிய தெய்வங்கள் 135
விண்மீன்களும் பறவைகளும் 134
விதவை 74
விளம்பரச் செலவு ஓர் ஆண்டிற்கு 410 கோடி 98
விளம்பரங்கள் 94
விளம்பர முகவர்கள் 97
விளம்பர வருவாய் 97
வேட்பாளர் தேர்வில் சாதிக்கு முன்னுரிமை 69

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புகளுக்காக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

தமிழர்தம் மறு பக்கம்

க.ப. அறவாணன்

CC-0. In